# சுடர் [redacted]

## பாரதிதாசன் மலர்

1966

விலை 40 காசு



தில்லித்தமிழ்ச் சங்கம்

மலர் • 15

# A. & F. HARVEY LTD.,

MADURAI

S. INDIA

*Managing Agents For*

## MADURA MILLS CO., LTD.,

COTTON YARNS OF ALL DESCRIPTION

TYRE CORD WARP SHEET AND OTHER INDUSTRIAL PRODUCTS

★

## PUNALUR PAPER MILLS LTD.,

ALL VARIETIES OF PAPER

★

## THE INDIAN TEXTILE PAPER TUBE CO., LTD.,

ALL TYPES OF PAPER CONES, TUBES, ETC.,

FOR TEXTILE INDUSTRY

ALL TYPES OF PAPER CONTAINER

★

## FENNER COCKILL LIMITED.

V-BELTS, TEXTILE RUBBER ACCESSORIES

OIL SEALS 'O' RINGS ETC., ETC.

WE

INVITE YOU

A discerning buyer as you are, you would certainly want to be assured of the Quality of the Diamonds you buy besides the excellent workmanship and fine designing of the Jewels you wish to be made. For these you do need the assistance of a trusted Jeweller.

Being foremost in the field for over 50 years now, we invite you to avail of our long experience and trusted assistance. Reasonable prices & prompt Delivery are additional features, you will highly appreciate.

★

**SELECT AT BAPALAL'S WITH CONFIDENCE**

# BAPALAL & CO.,

*Diamond Merchants, Manufacturing Jewellers & Gold and Silversmiths,*

**Rattan Bazaar. :: MADRAS-3.**

Phone: 32396 Grams: NECKLACE

★

By appointment: Valuers of Jewellery to Government of India.

*With Best Compliments From*

**GLOBE AUTO ELECTRICALS LIMITED**

(Mfrs. OF AUTOMOBILE ELECTRICAL EQUIPMENT)

PRODUCTS

★ Ignition Coils
★ Windshield Wiper Motor Assys.
★ Ignition Distributors
★ Voltage Regulators
★ Ignition Switch Assys.
★ Alternators
★ Dynamos
★ Starting Motors

*Selling Agents :* GLOBE INDUSTRIES PRIVATE LTD.,
AGRA ROAD. MULUND, BOMBAY-80.
Phone : 592079, 591885.

*Delhi Branch :* A-355 DEFENCE COLONY
NEW DELHI-3.
Tel. 7 5 2 4 4

*With the best compliments of*

★

**KALINGA TUBES, LIMITED**

**175/1, MOUNT ROAD,**

**MADRAS-2.**

★

TELEPHONE : 8 4 1 8 0

SERVING THE NATION FROM 1932

**UNION DAIRY (Regd)**

97, BAIRD ROAD—NEW DELHI

*WE SELL :*

★ **FRESH BUTTER & GHEE**
★ **PURE GHEE**
★ **RESH CREAM FOR FRUITS**
★ **COOKING CHEESE**
★ **GLACIER SYRUP & SQUASH**

தில்லியில்

உயர்தர வெண்ணெய், நெய், 'கிரீம்'

தயாரிப்பாளர்கள்

**யூனியன் டெய்ரி,**

**97, பேர்டு ரோடு, புதுதில்லி.**

உங்கள் விரலசைப்பில் வீடுதேடி வரும் வெண்ணெய்

இன்றே ஃபோன் செய்யுங்கள் 45263

# ★ கவிதை நூல்கள் ★

**பாரதிதாசன்**

| | |
|---|---|
| பாரதிதாசன் கவிதைகள் 1ம் பாகம் | ரூ. 3—50 |
| பாரதிதாசன் கவிதைகள் 2ம் பாகம் | 2—75 |
| பாரதிதாசன் கவிதைகள் 3ம் பாகம் | 3—50 |
| இளைஞர் இலக்கியம் | 2—25 |
| பாண்டியன் பரிசு | 3—50 |
| குடும்ப விளக்கு | 3—50 |
| எதிர்பாராத முத்தம் | 1—25 |
| மணிமேகலை வெண்பா | 3—00 |
| கண்ணகி புரட்சிக் காப்பியம் | 2—50 |
| அழகின் சிரிப்பு | 1—00 |
| தமிழியக்கம் | 1—00 |
| காதல் நினைவுகள் | 0—75 |
| இருண்ட வீடு | 0—75 |
| இசையமுது 1ம் பாகம் | 0—75 |
| இசையமுது 2ம் பாகம் | 1—00 |
| நல்ல தீர்ப்பு | 0—62 |
| அமைதி | 0—50 |
| சௌமியன் | 1—25 |

**முடியரசன்**

| | |
|---|---|
| முடியரசன் கவிதைகள் | 4—00 |
| காவியப் பாவை | 1—75 |

**சாலை இளந்திரையன்**

| | |
|---|---|
| அன்னை நீ ஆடவேண்டும் | 3—00 |
| சிலம்பின் சிறுநகை | 1—50 |
| காலநதி தீரத்திலே | 2—50 |

**பாரி நிலையம்**

59, பிராட்வே, சென்னை - 1.

Send notices, marriage invitations and horoscopes of eligible bachelors to

**T. G. ANANTASWAMI,**

Regd. Trade Marks Agent,

38, Vth Trust Cross Street, MADRAS-28.

# பா-

கி. வா.

★

செந்தமிழ் வீரமுர சத்தைக் கொட்டித்
தேசபக்திக் கனல் பொங்கச் செய்த கோமான்
விந்தையுறு பெருங் கவிஞன் புதுமைப் பாட்டை
விளைத்திட்ட பாரதியின் தாசன் தன்பேர்
வந்தசுப்பு ரத்தினமென் றிருப்ப மாற்றி
வாய்ந்தபா ரதிதாசன் எனவே கொண்டு
சிந்தைகிளர் தரக்கவிதை வெள்ளம் பாய்ச்சித்
திகழ்ந்துபுகழ் வைத்தமரன் ஆகி விட்டான். (1)

புதுவைநக ரினிற்பிறந்தான் ஆசா னாகிப்
புகழ்பெற்றான் பாரதியோ டளவ ளாவி
மதுவைநிகர் பாப்பாடும் ஆற்றல் மேன்மேல்
வளரளவ ரும்வியப்ப நிமிர்ந்து நின்றான்
கதுவியசீர் திருத்தமெனும் புயல்வ ளர்க்கக்
கவிபாடி னான்தெள்ளத் தெளிந்த நீர்போல்
புதுமைபொலி தருநடையைக் கவியிற் காட்டிப்
பொலிவுற்றான்; தமிழ்த்தாயின் மகனா நின்றான். (2)

சஞ்சீவி மலைச்சார லாதி யாகத்
தழைசுவைசேர் பலபாடல்பாடி ஈந்தான்
நெஞ்சேறும் இனிமைநல்ல தெளிவு தீப்போல்
நிமிர்கருத்துச் சோர்வகற்றும் வீறு நந்தம்

# - வாழ்க !

ஜகந்நாதன்

★

நஞ்சேறும் வறுமையினைத் தாழ்வை நீக்க
நாட்டுகின்ற அறைகூவல் யாவும் கண்டோம்;
பஞ்சேறும் அடிமடவார் மென்மை போன்ற
பதமிக்க பலபாட்டும் அமுதின் ஈந்தான். (3)

அரசியலில் அவன்கொள்கை தனையொப் பாத
அவர்களுமன் னோன்கவிதை யின்பத் தாழ்ந்தார்;
விரசுமெந்தக் கருத்தெனினும் விளக்கெண் ணெய்போல்
மெதுவாக வழவழெனச் சொல்ல மாட்டான்
உரைசெய்யும் வேகத்தில் பகைவர் நெஞ்சம்
உள்நடுங்கக் கவிச்சவுக்கை வீசல் உண்டு
தரைசெய்யும் வாழ்வினிலே கவிகள் சில்லோர்
தரமிருப்பார்; அவருள்ளே சிறந்தான் அம்மா; (4)

நட்புக்குத் தக்கஅன்பன்; தமிழ்த்தாய் அன்பில்
நழுவாத உள்ளத்தான்; இயற்கைக்காட்சி
பெட்புக்குக் கலனான பாடல் ஈந்த
பேராளன்; காப்பியமும் தனிப்பாத் தாமும்
கொட்டிக்கொந் தளிக்கின்ற மழைபோல் பெய்த
கோமான்பா ரதிதாசன் பெருஞ்சீர் வாழ்க;
எட்டுத்திக் கிலும்பரவி அவன்பா வெல்லாம்
எவருளத்தும் அரசோச்சி வாழ்க வாழ்க; (5)

# சுடர்

பராபவ ௵ | மலர் 15 | 1966

பொருளடக்கம்

| | | | |
|---|---|---|---|
| பா வாழ்க ... | 6 | பரவச்செய்வோம் ... | 106 |
| புதுநெறி காட்டிய புலவன் ... | 11 | கல்லாடனார் ... | 109 |
| பொன் மொழிகள் ... | 15 | சறுக்கிய குதிரைகள் ... | 116 |
| எழுக! புலவன் ... | 17 | இருட்டறை ... | 128 |
| பாவின் வேந்தன் ... | 21 | ரயில் வண்டி ... | 135 |
| கவிஞர் இயல்பு ... | 33 | எதற்குத் திருப்தி ... | 138 |
| கவிதைப் பேருருவம் ... | 38 | கௌரவம் ... | 152 |
| பாரதிதாசன் நகைச்சுவை ... | 44 | கற்பனை ஒரு ரஸனை ... | 158 |
| குடும்பத் தலைவர் பாரதிதாசன் | 54 | பத்து ரூபாய் ... | 168 |
| பாரதிதாசனின் புதுமை ... | 65 | பொற்கிழி பெற்றார் ... | 177 |
| கவிதைச் செல்வம் ... | 72 | கவிஞர் பதில் ... | 180 |
| அன்றொரு நாள் ... | 81 | அதிர் வேட்டு ... | 183 |
| சந்தனமும் சகதியும் ... | 89 | வ. வே. சு. ... | 184 |
| அர்ப்பணம் ... | 97 | கவிஞரின் மறைவு ... | 186 |
| பாடும் பணி ... | 105 | | |

# தில்லித் தமிழ்ச் சங்கம்

(சத்தியமூர்த்தி நினைவு இலவச வாசகசாலை)

## ஓர் வேண்டுகோள்

தில்லி தமிழ்ச் சங்கம் 1946-இல் நிறுவப்பட்டது. தொடங்கிய நாளிலிருந்தே, சங்கம், தில்லியில் தமிழ்மணம் பரப்பி வருகிறது. தில்லிவாழ் மக்களும் தமிழர்களும் நெருங்கிப் பழகுவதில் தனிக்கவனம் செலுத்தி பணியாற்றி வருகிறது.

தில்லி நிர்வாகத்தினர் மனமுவந்து அணித்திருக்கும் ஓர் கட்டடத்தில் இது நாள் வரையில் சங்கம் பணியாற்றிற்று. இந்தக் கட்டடத்தை அதி விரைவில் இடித்துத் தள்ளத் தீர்மானித்திருப்பதால் வேறு இடம் தேட வேண்டிய அவசியம் உண்டு. சங்கத்தின் பணி விரிவடைந்து வருவதால் ஏற்ற முறையில் ஓர் இடம் வேண்டும் என்று சங்க நிர்வாகிகள் தீர்மானித்து இந்திய சர்க்காரை அணுகினார்கள். புது தில்லியிலுள்ள ராம கிருஷ்ணபுரத்தில் சங்கத்திற்காக அரை ஏகரா நிலப்பரப்பை, இந்திய சர்க்கார் ஒதுக்கிக் கொடுத்திருக்கிறார்கள் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறோம். இந்த இடத்தில் ஓர் அரங்கு, நூலகம், வகுப்பு அறைகள், கூட்டம் நடத்தும் அறைகள், நூலகம் இன்னோரன்னவை அடங்கிய ஓர் கட்டடத்தை நிர்மாணிக்க உத்தேசித்திருக்கிறோம். நிர்மணப் பணிக்கு 6 லட்சம் ரூபாய்கள் தேவை. சங்கக் கட்டடப் பணிக்காக, சென்னை அரசாங்கம் ஒரு லட்சம் ரூபாய்களை கொடையாக வழங்கியிருக்கிறது என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறோம். ஏறக்குறைய இதே போன்றதோர் தொகையை இந்திய அரசாங்கமும் வழங்கும் என்று எதிர்பார்க்கிறோம். எஞ்சிய தொகையை, தமிழன்பர்கள் மனமுவந்து அளிக்கவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறோம்.

கட்டட நிர்மாணப் பணிக்கு நிதிதிரட்டும் ஓர் முயற்சியாக, சங்கம், நாளது 16—10—66 அன்று புது தில்லியில் திருவாட்டி பத்மினி ராமச்சந்திரன் குழுவினருடைய கண்ணகி நாட்டிய நாடக நிகழ்ச்சியை ஏற்பாடு செய்திருக்கிறது. தமிழன்பர்கள், இந்த வாய்ப்பைப் பயன்படுத்திக் கொண்டு, தாராளமாக நிதி வழங்க வேண்டுகிறோம். சங்கத்திற்கு அளிக்கும் நன்கொடைக்கு வருமான வரி விலக்கு உண்டு.

(அடுத்த பக்கம் பார்க்க)

கே. வி. வெங்கடாசலம்
தலைவர்.

No. JE—3 (20)/62/4351

## OFFICE OF THE COMMISSIONER OF INCOME TAX, DELHI & RAJASTHAN

Dated, New Delhi, the 28th June, 1962
5th Asadha, 1814 (S)

To

The Hon. Secretary,
Delhi Tamil Sangam,
M. G. 1/3038, Parliament Street,
Connaught Circus. New Delhi.

Dear Sir,

Sub : **EXEMPTION UNDER SECTION 11 & 88 OF THE INCOME TAX ACT, 1961, TO THE DELHI TAMIL SANGAM**

Donations made to "The Delhi Tamil Sangam, New Delhi" will be exempt under Section 88 of the Income-Tax Act 1961 in the hands of donors subject to the limits and conditions prescribed in the said section.

Yours faithfully,
Sd. R. N. MUTTOO,
*Commissioner of Income Tax.*

PS. Original of this Certificate bears the seal of the Commissioner of Income Tax, Delhi.

# புதுநெறி காட்டிய புலவன்

தமிழரின் உயிர் நிகர் தமிழ்நிலை தாழ்ந்ததால்
இமைதிறவாமல் இருந்த நிலையில்
தமிழகம், தமிழுக்குத் தகும் உயர்வளிக்கும்
தலைவனை எண்ணித் தவங்கிடக் கையில்
இலகு பாரதிப் புலவன் தோன்றினான்.
பைந்தமிழ்த் தேர்ப்பாகன், அவனொரு
செந்தமிழ்த்தேனீ. சிந்துக்குத் தந்தை!
குவிக்கும் கவிதைக்குயில்! இந்நாட்டினைக்
கவிழ்க்கும் பகையைக் கவிழ்க்கும் கவிமுரசு
நீடு துயில் நீக்கப் பாடிவந்த நிலா
காடுகமழும் கற்பூரச் சொற்கோ!
கற்பனை ஊற்றாம் கவிதையில் புதையல்
திறம்பாட வந்த மறவன் புதிய
அறம்பாட வந்த அறிஞன். நாட்டிற்
படரும் சாதிப்படை மருந்து!
மண்டும் மதங்கள் அண்டா நெருப்பவன்
அயலார் எதிர்ப்புக்கணையா விளக்கவன்
என்னென்று சொல்வேன் என்னென்று சொல்வேன்
தமிழால், பாரதி தகுதி பெற்றதும்,
தமிழ், பாரதியால் தகுதி பெற்றதும்!
எவ்வாறென்பதை எடுத்துரைக்கின்றேன்:
கடவுளைக் குறிப்பதே கவிதை என்றும்
பிறபொருள் குறித்துப் பேசேல் என்றும்
கடவுளைக் குறிக்குமக் கவிதையும் பொருள் விளங்
கிட எழுதுவதும் ஏற்காதென்றும்
பொய்ம்மதம் பிறிதெனப் புளுகுவீர் என்றும்
கொங்கும் என் சாதிக் குண்டுசட்டிதான்
இந்த உலகமென்றெழுதுக என்றும்,
பழமை அனைத்தையும் பற்றுக என்றும்,
புதுமை அனைத்தையும் புதைப்பீர் என்றும்
கொள்ளுமிவ்வுலகம் கூத்தாடி மீசைபோல்
எள்ளத்தனை நிலை இலாததென்றும்
எழிலுறு பெண்கள்பால் இன்புறுபோதும்
அழிவுபெண்ணால் என்றறைக என்றும்,
கலம்பகம் பார்த்தொரு கலம்பகத்தையும்
அந்தாதி பார்த்தோர் அந்தாதிதனையும்
மாலை பார்த்தொரு மாலைதன்னையும்
காவியம் பார்த்தொரு காவியந்தன்னையும்
வரைந்து சாற்றுக்கவி திரிந்து பெற்று
விரைந்து தன்பேரைமேலே எழுதி
இருநூறுசுவடி அருமையாய் அச்சிட்

டொரு நூற்றுண்டில் ஒன்றிரண்டுபரப்பி
வருவதேபுலமை வழக் காறென்றும்
இன்றைய தேவையை எழுதேல் என்றும்
முன்னுள் நிலையிலேமுட்டுக என்றும்
வழக்கா எருழிந்ததை வைத்தெழுதித்தான்
பிழைக்கும் நிலைமைபெறலாம் என்றும்,
புதுச்சொல் புதுநடைபோற்றேல் என்றும்,
நந்தமிழ்ப்புலவர் நவின்றனர் நாளும்
அந்தப்படியே அவரும் ஒழுகினர்.
தமிழனே உன்மொழி சாற்றெனக் கேட்டால்
தமிழ்மொழி என்று சாற்றவும்அறியா
இருள்நிலை யடைந்திருந் திட்டதுஇள்பத்தமிழ் !
செய்யுள்ஏட்டைத் திரும்பியும் பார்த்தல்
செய்யா நிலையைச்சேர்ந்தது தீந்தமிழ்.
விழுந்தார்விழித்தே எழுந்தார் எனஅவன்
மொழிந்த பாங்கு மொழியைக்கேளீர் !
''வில்லினை யெடடா—கையில்
வில்லினை எ டா—அந்தப்
புல்லியர் கூட்டத்தைப் பூழ்திசெய்திடடா''
என்று கூறி, இருக்கும் பகையைப்
பகைத் தெழும்படி பகரலானுன்
''பாருக்குள்ளே நல்ல நாடு – இந்தப் ''பாரதநாடு''
என்பது போன்ற எழிலும் உணர்வும்
இந்நாட்டில் அன்பும் ஏற்றப்பாடினுன் !
இந்நாடு மிக்கத் தொன்மையானது
என்பதைம் பாரதி இயம்புதல் கேட்பீர்:
''தொன்று நிகழ்ந்ததனைத் துமுணர்ந்திடு
சூழ்கலைவாணர்களும் – இவள் என்று பிறந்தவள்
என்றுணராத இயல்பினளாமெங்கள் தாய்''
மக்கள் கணக்கும் வழங்கும் மொழியும்
மிக்குளபண்பையும் விளக்குகின்ற
கற்பனைத் திறத்தைக் காணுவீர்:
''முப்பதுகோடி முகமுடையாள் உயிர்
மொய்ம்புறவொன்றுடையாள் – அவள்
செப்புமொழி பதினெட்டுடை யாள் – எனிற்
சிந்தனையொன்றுடையாள்''
இந் நாட்டின் தெற்கெல்லை இயம்புவான்;
''நீலத்திரைக் கடல் ஓரத்திலே - நின்று
நித்தம் தவம் செய்குமரியெல்லை''
கற்பனைக் கிலக்கியம் காட்டிவிட்டான் !
சுதந்திர ஆர்வம் முதிர்ந்திடுமாறு
மக்களுக்கவன் வழங்குதல் கேட்பீர்;
''இதந்தருமனையினீங்கி இடர் மிகு சிறைப்பட்டாலும்
பதம்திரு இரண்டுமாறிப்பழிமிகுத் திழிவுற்றாலும்

விதம்தரு கோடி இன்னல் விளைத்தெனை யழித்திட்டாலும்
சுதந்திரதேவி நின்னைத் தொழுதிடல் மறக்கிலேனே”
பாரதி பெரிய உள்ளம் பார்த்திடுவீர்கள்.
“எங்கும் சுதந்திரம் என்பதே பேச்சு — நாம்
எல்லோரும் சமமென்பது றுதியாச்சு”
விடுதலை! விடுதலை! விடுதலை!
மனிதர் யாரும் ஒருநிகர்
சமானமாக வாழ்வமே— என்றறைந்தார் அன்றோ?
பன்னீராயிரம் பாடிய கம்பனும்
இப்போது மக்கள்பால் இன்தமிழ் உணர்வை
எழுப்பியதுண்டோ? இல்லவே இல்லை.

அனைத்திந்திய வானொலித் திருச்சி நிலையத்தில் 5-வது கவியரங்கில் (1946 செப். 1-ல்) புரட்சிக்கவிஞர் பாரதிதாசன் அவர்களால் தலைமையுரையாகவும் முன்னுரையாகவும் கூறப்பட்டது]
(“பாரதிதாசன் கவிதைகள்”— II பாகம் பக்-58 – 59)

அனுப்பியது:— சு. பாலகிருஷ்ணன்.


**THE INDIAN OVERSEAS BANK LIMITED**

(Central Office : 151, Mount Road, Madras-2 )
With Branches in India, Ceylon, Hongkong, Malaysia, Singapore and Thailand and with world wide agency arrangements

**THE INDIAN OVERSEAS BANK LIMITED**

*Offers you*

**A COMPREHENSIVE BANKING SERVICE**

Please contact your nearest branch for full particulars regarding our :

★ RECURRING DEPOSITS ★ GIFT CHEQUES
★ TRAVELLERS' CHEQUES ★ PERSONAL LOANS
★ MINORS' SAVINGS

Chairman : M.CT. MUTHIAH General Manager : K.M. NANJAPPA

WHEN OUT SHOPPING LOOK OUT FOR THIS

TRADE MARK

HALL MARK OF QUALITY

*FOR YOUR FULL REQUIREMENTS IN*

WORSTED WOOLLEN SUITINGS
TERRYWOOL SUITINGS
TWEEDS VALOUR
ETC. ETC.

*FABRICATED BY:*

# S. P. WORSTED SPINNING MILLS,

**VERKA.**
(DISTT. AMRITSAR.)

★

*THE PREMIER MANUFACTURERS OF:*

**SUPERFINE WORSTED AND WOOLLEN FABRICS RENOWNED FOR THEIR**

**EXTRA SOFTNESS GUARANTEE STRENGTH SMOOTHNESS**

## அறிஞர் அண்ணாவின் பொன்மொழிகள்

### அது இருக்க இது ஏன்?

அது இருக்க இது ஏன் என்று மேல் நாடுகளிலே கருதியிருப்பார்களானால் ஆளில்லா விமானத்திற்கு அணுக்குண்டு கண்டு பிடித்திருக்க முடியுமா? தொல்காப்பியம் நமக்கு இருக்கும்போது, நமக்கு வேறென்ன வேண்டும் என்றிருந்தால் அகமும் சிலப்பதிகாரமும் கிடைத்திருக்க வழியுண்டா? சிலப்பதிகாரமே போதுமென்றிருந்தால் கலிங்கத்துப்பரணி கிடைத்திருக்குமா? கலிங்கத்துப்பரணியே போதுமென்றிருந்தால் மனோன்மணீயம் தோன்றியிருக்க முடியுமா? மனோன்மணீயமே போதுமென்றிருந்தால் பாரதியாரின் தேசீய கீதங்களைக் கேட்டிருக்க முடியுமா? பாரதியாரின் தேசீய கீதங்களே போதுமென்றிருந்தால் தேசிக விநாயகம் பிள்ளையின் தாயினுமினிய அன்பு குழைத்தூட்டும் பாக்களைப் பாத்திருக்க முடியுமா? தேசிய விநாயகம் பிள்ளையே போதுமென்றிருந்தால் நாமக்கல்லாரின் கத்தியின்றி ரத்தமின்றி என்ற புதுமாதிரியான சண்டைத்தத்துவப் பாடலைக் கண்டிருக்க முடியுமா? அதுபோலத்தான் நாமக்கல்லாரே போதுமென்றிருந்தால் 'கொலைவாளினை எடடா, மிகு கொடியோர் செயலறவே' என்னும் பாரதி தாசனின் உணர்ச்சி மிக்க, புரட்சிகரமான பாடலைக் கேட்டிருக்க முடியாது.

### அச்சமற்ற வாழ்க்கை

அச்ச மற்ற வாழ்க்கை என்றால், அந்நியருக்கு அச்ச மற்ற வாழ்க்கை, அறியாமைக்கு அச்சமற்ற வாழ்க்கை, சமுதாயக் கட்டுப்பாடுகளுக்கு அச்சமற்ற வாழ்க்கை அந்தணை அச்சமற்ற வாழ்க்கையைத்தான் தமிழன் நடாத்த வேண்டும். அதற்கு இடையூறாக எந்தக் கட்டுப்பாடுகள் வந்தபோதிலும் தூள் தூளாக்க வேண்டும்; இதைத் தாயின் மேலாணை, தந்தை மேலாணை, தமிழக மேலாணை, தூய என் தமிழ் மேல் ஆணையிட்டே நான் தோழரே உரைக்கின்றேன் 'என்று அவர் பாட்டில் கூறுகிறார்.


WHERE EVER YOU GO
THE
QUALITY
COUNTS
AVON
CYCLES
Being
exported
to over
10 countries
of the
world
SAS-ACL-1
Manufacturers
AVON CYCLES PRIVATE LTD.
LUDHIANA (INDIA)

பாவேந்தன் பாரதிதாசன்



தோற்றம் 29—4—1891

மறைவு 21—4—1964

# எழுக புலவன்!

— பாரதியார் —

இன்று நமது கடைக்கு ஒரு தமிழ்க் கவிராயர் வந்தார்; கைக்கோள ஜாதி; ஒட்டக்கூத்தப் புலவர் கூட அந்தக் குலந்தானென்று நினைக்கிறேன்.

இவருக்கு இங்கிலீஷ் தெரியாது. நம்முடைய பெயரை வெளிப்படுத்தக் கூடாதென்று சொன்னார். ஆதலால் வெளிப்படுத்தவில்லை.

தராசு முகமலர்ச்சியுடன் சிரித்தது. "இப்படி ஒரு கவிராயன் வந்தால் எனக்கு ஸந்தோஷம். எப்போதும் வீண்வம்பு பேசுவோரே வந்தால் என்ன செய்வேன்?" என்றது. "கவிராயரே, என்ன விஷயம் கேட்க வந்தீர்?" என்று தராசு கேட்டது.

"எனக்குக் கவிராயர் என்பது பரம்பரையாக வந்த பட்டம். என்னுடைய தகுதியால் ஏற்படவில்லை. அத்தகுதி பெற முயற்சி செய்து வருகிறேன். அந்த விஷயமாகச் சில வார்த்தைகள் கேட்க வந்தேன்" என்று கவிராயர் சொன்னார். "இதுவரை பாடின பாட்டுண்டானால் சொல்லும்" என்று தராசு கேட்டது.

'இதுவரை நாற்பது அல்லது ஐம்பதடிகளுக்கு மேல் பாடியது கிடையாது. இப்போதுதான் ஆரம்பம். அது அத்தனை ரஸமில்லை' என்று சொல்லிக் கவிராயர் விழித்தார்.

'மாதிரி சொல்லும்' என்றது தராசு.

புலவர் பாடத் தொடங்கினார். தொண்டை நல்ல தொண்டை,

* 'காளை யொருவன் கவிச்சுவையைக்—கரை
காண நினைத்த முழு நினைப்பில்—அம்மை
தோளசைத் தங்கு நடம் புரிவாள்—இவன்
தொல்லறி வாளர் திறம் பெறுவான்'
ஆ!
எங்கெங்கு காணிலும் சக்தியடா!—தம்பி
ஏழு கடலவள் மேனியடா!

---

*'பாரதிதாசன் கவிதைகள்' முதல் தொகுதியில், இப்பாடல் சில பாட வேறுபாடுகளுடன் காணப்படுகிறது.

தங்கும் வெளியினிற் கோடியண்டம்—எங்கள்
தாயின் கைப்பந்தென வோடுமடா!
கங்குலில் ஏழு முகிலினமும்—வந்து
கர்ச்சனை செய்தது கேட்டதுண்டோ?
மங்கை நகைத்த ஒலியதுவாம்—அவள்
வாயிற் குறுநகை மின்னலடா!

தராசு கேட்டது :— புலவரே தமிழ் யாரிடம் படித்தீர்?

கவிராயர் :— "இன்னும் படிக்கவில்லை; இப்போதுதான் ஆரம்பம் செய்கிறேன்."

தராசு :— "சரிதான். ஆரம்பம் குற்றமில்லை. விடாமுயற்சியும் தெய்வ பக்தியும் அறிவிலே விடுதலையும் ஏறினால் கவிதையிலே வலிமையேறும்..."........

இங்ஙனம் வார்த்தை சொல்லிக்கொண்டிருக்கையில் சீட்டிக்கடை ஸேட் வந்தார்.

"சாமியாரே, தீபாவளி சமீபத்திலிருக்கிறது, ஏதேனும் சீட்டித் துணி செலவுண்டா? என்று ஸேட் கேட்டார்.

"இல்லை" என்று சொன்னேன்.

அப்போது ஸேட் சொல்லுகிறார் :— "நான் அதற்கு மாத்திரம் வரவில்லை. வேறு ஸங்கதி கேட்கவும் வந்தேன். தராசு நடக்கப் போவதை அறிந்து சொல்லுமோ?"

"சொல்லாது" என்று தராசே சொல்லிற்று.

"சொல்ல சம்மதமிருந்தால் சொல்லும்; இல்லாவிட்டால் சொல்லாது, எதற்கும், நீர் கேட்க வந்த விஷயமென்ன? அதை வெளியிடும்." என்று நான் சொல்லப் போனேன்.

தராசு என்னிடம், "காளிதாஸா, அ—" என்றது. இந்த "அ" காரத்துக்கு "அடக்கு" என்றர்த்தம். அதாவது "என்னுடைய கருத்துக்கு விரோதமாக வார்த்தை சொல்லாதே" என்றர்த்தம்.

தராசு "அ'; — என்றவுடனே நான் வருத்தத்துடனே தலைகுனிந்து கொண்டேன்.

ஸேட் :— "தீபாவளி ஸமயத்தில் எங்கள் கடைக்குப் பத்து நூறாகவும், நூறாயிரமாகவும், லாபம் வரும்படி தராசு தன் வாயினால் வாழ்த்த வேண்டும். அப்படி வாழ்த்துவதற்கு ஏதேனும் கூலி வேண்டுமானாலும் கொடுத்து விடுகிறேன்" என்றார்.

தராசு :— "கூலி வேண்டாம் ஸேட்ஜி; இனமாகவே ஆசிர்வாதம் பண்ணிவிடுகிறேன். உமக்கு மேன்மேலும் லாபம் பெருகும் நாட்டுத்துணி வாங்கி விற்றால்" என்றது; ஸேட் விடை பெற்றுக்கொண்டு போனார்......

கவிராயர் தராசை நோக்கி "நம்முடைய ஸம்பாஷணைக்கு நடுவிலே கொஞ்சம் இடையூறுண்டாயிற்று" என்றார்.

தராசு சொல்லுகிறது :— "உமக்கும் அதுதான் காணும் வார்த்தை நெசவிலே நாட்டு நெசவு மேல். விலைக்கு நெய்வதைக் காட்டிலும் புகழுக்கு நெய்வதே மேல். பணம் நல்லது; ஆனால் பணத்தைக் காட்டிலும் தொழிலருமை மேல், காசிப்பட்டுப் போலே பாட்டு நெய்ய வேண்டும். அல்லது உறுதியான, உழவனுக்கு வேண்டிய, கச்சை வேஷ்டி போலே நெய்ய வேண்டும். "மல்" நெசவு கூடாது. "மஸ்லின்" நீடித்து நிற்காது. பாட்டிலே வலிமை, தெளிவு, மேன்மை, ஆழம், நேர்மை இத்தனையுமிருக்க வேண்டும். இதற்கு மேலே நல்ல வர்ணஞ் சேர்த்தால் குற்றமில்லை. சேராமலிருந்தால் விசேஷம்."

அப்போது புலவர் தராசை நோக்கி :— "நீயே எனது குரு" என்று சொல்லி நமஸ்காரம் பண்ணினார்

தராசு :— "எழுக! நீ புலவன்!" என்றது.

குறிப்பு :—பாரதியாரின் 'தராசு' தொகுப்பிலிருந்து எடுக்கப்பட்டது.




பம்பாய், தில்லி, கான்பூர், கல்கத்தாவில் ஏஜெண்டுகள் தேவை.

எங்கள் சேவை

உங்களுக்குத் தேவை

★

# பாலுஸேரி பெனிபிட் சிட்பண்டு பிரைவேட் லிமிடெட்

"பாலுஸேரி பில்டிங்ஸ்"

3, சிங்கராச்சாரி தெரு, திருவல்லிக்கேணி
தபால் பெட்டி நெ. 414
மதராஸ்–5.

தந்தி : "EVERMANS" போன் : 85834

★

தில்லி கிளை அலுவலகங்கள் :

(1) "சான்ஸன் ஹவுஸ்"
1/24, அஸப் அலி ரோட், புது தில்லி–1.

(2) "பாலுஸேரி பில்டிங்"
10174, முதல் மாடி, குருத்துவாரா ரோடு,
கரோல்பாக், புது தில்லி–5

(3) 198, முதல் மாடி, ஜோர்பாக் நர்ஸரி,
புது தில்லி–3.

# பாவின் வேந்தன்

திரு. சாலை இளந்திரையன்

இந்த நூற்றாண்டின் தொடக்கத்தில் தமிழகம் பல துறைகளிலும் ஓர் எழுச்சியும் சுறுசுறுப்பும் பெற்றது. தேசீய எழுச்சியும் சமுதாயச் சீர் திருத்த வீறும், மக்களை எல்லாம் தட்டி எழுப்பி நிமிர்ந்து உட்காரச் செய்தன. இந்தப் புதிய எழுச்சியின் தூதுவர்களாகவும் துணைவர்களாகவும் பல தீரர்கள் தோன்றி, நாட்டுக்கும் மொழிக்கும் நிறைவான தொண்டுகள் செய்தார்.

இந்தப் பின்னணியில் தமிழ் இலக்கிய உலகையும் கவிதை உலகையும் நோக்கும் போது,

இக்காலம் தமிழுக்கு நல்ல காலம்;—
இடருற்று நலிந்ததமிழ் தளிர்த்த காலம்!
தக்கோர்கள் பலதுறையில் தமிழைப் பாய்ச்சித்
தமிழ்மணத்தில் சொக்கின்ற இனிய காலம்!

என்றே பாடத் தோன்றுகிறது. இந்தத் தக்கோர்களின் வரிசையிலே ஒருவராக,—புரட்சிக் கவியாக,—பாவேந்தராக விளங்கித் தமிழ்ப் பாவைக்குப் புதிய கவிதை இலக்கிய நல்லணிகள் பூட்டியவர் கனகசுப்புரத்தினம் என்னும் பாரதிதாசன்......

## 'எனையீன்ற தந்தைக்கும்'

புதுச்சேரியில் கனகசபை என்பவர் பெரிய வணிகராக இருந்தார். அவருடைய குமாரராக, 1891 ஏப்ரல் 29-ம் நாள் பிறந்தார் சுப்புரத்தினம்.

சிறிது காலம் பிரெஞ்சுமொழிப் பள்ளியிலும் பின்னர் தமிழ்ப் பள்ளியிலுமாகக் கல்வி பயின்ற சுப்புரத்தினம் தமது பதினாறுவது வயதில் கல்வே கல்லூரியில் சேர்ந்தார். தமிழ்ப் புலமைப் பட்டத்துக்காக அங்கே பயின்ற நாற்பது பேரில் முதல்வராகத் தேறிய சுப்புரத்தினத்தை, அரசாங்கம் உடனேயே (18-ம் வயதில்) அரசினர் கல்லூரியில் தமிழாசிரியராக நியமித்தது.

## 'தமிழுக்கு அமுதென்று பேர்!'

இளமையில் ஏற்படும் தொடர்புகளும், அமைகின்ற சூழ்நிலையும் மனிதனின் பிற்காலப் போக்கை உருவாக்குவதில் பெரும்பங்கு வகிக்கின்றன

அல்லவா? சுப்புரத்தினம் பாரதிதாசனுகி, தமிழே மூச்சாக வாழ்வதற் குரிய சூழ்நிலே அவருக்கு மிக இளம்பிராயத்திலேயே அமைந்தது. நாட் டுப் பள்ளி என்னும் தமிழ்ப் பள்ளியில் இவருக்கு ஆசிரியராக அமைந்தவர் திருப்புளிசாமி அய்யா என்பவர். தமிழிலும் தெலுங்கிலும் பெரும்புலவ ராக விளங்கிய இப்பெரியாரின் தொடர்பு சுப்புரத்தினத்தின் தமிழ்ப் பேரீடுபாட்டைத் தூண்டி வளர்த்தது. தமிழின் இனிமையையும் அதன் கவிதை வளத்தையும் இவ் ஆசிரியர் மூலமே தம் இளம் நெஞ்சில் ஏற்றுப் பதித்துக் கொண்டார் சுப்புரத்தினம்.

பள்ளியில் பெற்ற இந்த ஆர்வத்தைத் தூண்டி ஊக்கும் வாய்ப்பு ஒன்று இவருக்கு வீட்டிலேயே வந்து கிடைத்தது. வணிகர் கனகசபை யிடம் பூ. அ. பெரியசாமி என்பவர் கணக்குவேலே பார்த்து வந்தார். பெரியசாமி தமிழில் துறைபோகிய நல்லறிஞர். வாழ்க்கையின் பொருள் நிலேக்குக் கணக்குவேலே பார்த்தாலும், தமது தமிழறிவைச் சுப்புரத்தினத் துக்கு அவ்வப்போது ஊட்டுவதில் ஒரு மனநிறைவைக் கண்டார் பெரிய சாமி. இப்பேரறிஞரோடு சுப்புரத்தினத்துக்கு ஏற்பட்ட தொடர்பு நெடுங்காலம் நீடித்தது.

### '...கவிதை தந்தநாள்'

சுப்புரத்தினம் இயல்பிலேயே ஒரு கலேஞர். இயல், இசை, நாடகம் என்னும் மூன்று கலேகளிலும் ஓரளவு ஆர்வமும் தகுதியும் இயல்பாகவே அவரோடு வளர்ந்து வந்தன. பெரியவர்களின் தொடர்பாலும், நண்பர் களின் ஆர்வத்தாலும், பள்ளிக்கூடங்கள் அளித்த வாய்ப்பாலும் தமது கலேத்தகுதியை நன்ருக வளர்த்துப் பெருக்கிக் கொண்டார் சுப்புரத்தினம்.

எடுப்பான தோற்றம், இனிமையான குரல், மிடுக்கான பேச்சு— இவைகளால் பள்ளிநாடகத்தில் தலேமை வேடம் பெரும்பாலும் இவரைத் தேடியே வந்தது. தமிழ் இலக்கியங்களே மனனஞ் செய்தும் பாடி அனுப வித்தும் வந்த பயிற்சியால் அவருடைய எண்ணங்கள் அவ்வப்போது பாட்டுருக் கொண்டன. அவற்றைத் தம் நண்பர்களுக்குப் பாடிக்காட்டி. அவர்களின் மகிழ்ச்சி கண்டு மகிழ்ச்சிகொண்டார் சுப்புரத்தினம்.

### 'நல்லோர் தொடர்பு நலஞ்சேர்க்கும்....'

பதினேழு, பதினெட்டு வயதிலேயே சுப்புரத்தினம் பாண்டிச்சேரி அரசியலிலும் பங்கு கொண்டார். இந்த அரசியல் பற்று விரிவடைந்து, பின்னாளில் இந்திய தேசியக் காங்கிரசில் ஈடுபடவும் சத்தியாக்கிரகத்தில் ஈடுபடவுமாக முதிர்ந்தது. இந்தக் தருணத்திலே தான் (சுமார் 20—22 வயதில்) இந்திய அரசியல் தலேவர்களோடு நெருங்கிப் பழகும் வாய்ப்பு இவருக்குக் கிடைத்தது. பாண்டிச்சேரிக்கு வந்த கோகலே, திலகர், நேரு, காந்தியடிகள் முதலியவர்களேப் பார்த்தும், அவர்களில் சிலரோடு பழகியும் தமது தேசிய உள்ளத்தை வளர்த்துக் கொண்டார். வ.வே.சு. அய்யர்

சுப்பிரமணிய பாரதி, வ.உ.சி., அரவிந்தர் ஆகியோரிடம் இவருக்குப் பல ஆண்டுப் பழக்கமும் நட்பும் உண்டு.

## 'பழமையிலே புதுநினைவு...'

கனகசுப்புரத்தினம் என்னும் தமிழாசிரியர் 'பாரதிதாசன்' என்னும் புதுமைக் கவிஞராக மாறியது ஒரு சுவையான வரலாறு: புதுவையில் நடந்த ஒரு திருமணத்தில், விருந்து முடிந்தபின், எல்லாரும் மகிழ்ந்திருந்த வேளையில், நண்பர்களின் வேண்டுகோளுக்கிணங்க சில பாடல்களைப் பாடினார் சுப்புரத்தினம். பாட்டுக்களின் வரிசையில் சுப்பிரமணியபாரதியின் தேசியப்பாடல் ஒன்றும் இடம்பெற்றது. அப்பாடலை அதன் ஆசிரியராகிய பாரதியும் கூட்டத்தில் இருந்து கேட்கிறார் என்பது இவருக்குத் தெரியாது. தமது பாடலைச் சுப்புரத்தினம் பாடிய தோரணையிலிருந்தே "அவரிடம் ஒரு கவிஞருக்குரிய ஆற்றல் நிறைந்திருக்கிறது" என்று தெரிந்து கொண்டார் பாரதி. ஒரு கவிஞன்தானே, பாடலின் உணர்ச்சி மழுங்காமல், அதன் உயிர் சிதையாமல் பாட்டை இசைப்பான்......

அன்று ஏற்பட்ட அறிமுகம் இருவரையும் நெருக்கிப் பிணைத்தது. பாரதியாருக்குச் சுப்புரத்தினத்தின் மேல் தனியானதோர் அன்பு ஏற்பட்டது; 'சுப்பு'வுக்கும் பாரதியாரிடம் தனியானதொரு மதிப்பு ஏற்பட்டது.

பாரதிக்கவிஞர் ஓர் இன்னிசை நறுங்குயில். அவரைச் சூழ்ந்து எப்போதுமே ஒரு சுவைஞர் கூட்டம் இருக்கும். அந்தக் கூட்டத்தினருக்குத் தமது அன்புக்குரிய இளையகுயிலை அறிமுகம் செய்யச் சமயம் பார்த்திருந்தார் பாரதி. ஒருநாள் பேச்சுவாக்கில், "சுப்புரத்தினமும் ஒரு கவிஞனே" என்றார். அதைக்கேட்ட அன்பர்கள், சற்றே வியப்புடன், "நம்ம சுப்புவா, கவிஞன்?" என்றார்கள்..."ஆமாம்" என்று ஆணித்தரமாகச் சொல்லிவிட்டுச் சுப்புரத்தினத்தை நோக்கினார் பாரதி. உரையாடலில் ஏற்பட்டு வந்த புதிய திருப்பத்தை உணர்ந்துகொண்ட சுப்புரத்தினம் குனிந்திருந்து ஏதோ எழுதிக் கொண்டிருந்தார். அவர் பேனா, சில விநாடிகளுக்குள்ளேயே ஓர் அரிய பாடலை உருவாக்கி முடித்தது. அவர் இசைத்தார்; கூடியிருந்தோர் கேட்டார்கள் :

" எங்கெங்குக் காணினும் சக்தியடா—தம்பி
ஏழுகடல் அவள் வண்ணமடா—அங்குத்
தங்கும் வெளியினில் கோடிஅண்டம்—அந்தத்
தாயின் கைப்பந்தென ஓடுமடா!—ஒரு
கங்குகளில் ஏழு முகிலினமும்—வந்து
கர்ச்சனை செய்வது கண்டதுண்டோ?—எனில்
மங்கை நகைத்த ஒலியெனலாம் அவள்
மந்த நகையங்கு மின்னுதடா...!"

இப்படியே இன்னும் எட்டு அடிகள் சென்று முடிந்தது பாடல். கேட்ட சுவைஞர்கள் திகைப்பும் மகிழ்ச்சியும் அடைந்தார்கள். பாரதியின் பாடலில் நீந்தித் திளைத்த அந்தத் தேனீக்களுக்கு, அவர் பாணியிலேயே அமைந்த இப்புதிய பாடல் பெருவகை அளித்ததில் வியப்பில்லை அல்லவா?

பாரதியாருக்கோ மிகுந்த உற்சாகம். தன் கணிப்புத் தவறவில்லை என்று தெரிந்தால் எந்த மனிதன்தான் உற்சாகம் அடையமாட்டான்? பாடலைப் பாடி எடுக்கச் செய்து, "சுப்பிரமணிய பாரதியின் கவிதா மண்டலத்தைச் சேர்ந்த கனக-சுப்புரத்தினம் எழுதியது" என்ற குறிப்புடன் சுதேசமித்திரன் இதழுக்கு அனுப்பிவைத்தார் பாரதி. அன்று தொடங்கிப் புதிய தமிழ்க் கவிதைப்பண்ணையின் ஓர் உழவராக, சுப்பிரமணியக் கவிஞரின் அணியிலே சேர்ந்தார் சுப்புரத்தினம். கனக-சுப்புரத்தினம் என்ற அவரது இயற்பெயர் மாறி, பாரதிதாசன் என்னும் புனைபெயரே நாளடைவில் அவருடைய பெயராக நிலைபெற்றது.

## 'சோம்பிக் கிடப்பது தீமை'

சுப்புரத்தினம் இளமை முதலே சாதி மத பேதங்களையும் அவற்றின் அடியாகப் பிறந்த மூடப் பழக்கவழக்கங்களையும் வெறுத்து வந்தார். ஆயினும் அவைகளுக்கு எதிராக அவர் பிற்காலத்தில்தான் மிகுதீவிரமாகப் பாட்டிசைக்கத் தொடங்கினார். முதலில் அவர் பாடிய நூல்களில் சுப்பிரமணிய துதியமுது, கதர்ப்பாட்டுக்கள் என்னும் இரண்டு முக்கியமானவை. இவற்றில் உள்ள இசைப்பாடல்கள் மிகச் சிறப்பு வாய்ந்தவை என்று கூறப்படுகிறது.

நாளாக நாளாக பாரதிதாசனின் பார்வை சமுதாயச் சீர்கேடுகளைத் தீவிரமாக ஊடுருவியது. சமுதாயத்தில் உள்ள மேடு பள்ளங்களையும் உயர்வுக்கு ஒவ்வாத பழக்கவழக்கங்களையும் கண்டு அவர் நெஞ்சம் பதைத்தது. நாட்டின் தாய்மொழியாகிய தமிழ் புறக்கணிக்கப்படுவதையும், கல்வியில்லாமல் மக்கள் கண்ணில்லாதவர்களாய்த் திண்டாடுவதையும் உணர்ந்தார். இவற்றுக்குக் காரணமாக சமுதாய மூடப்போக்குகள் அவர் சிந்தையில் வேகத்தையும், கண்களில் அனலையும், பாடல்களில் கொதிப்பையும் ஏற்றின. இந்தச் சமுதாயம் சீர்ப்படாவிடில், எந்த ஆட்சி வந்தாலும் நம் மக்களுக்கு உய்தி இல்லை என்ற முடிவுக்கு வந்தார் பாரதிதாசன்... அந்தத் தேசிய வேதனையை வெளியிடும் பாடல்களிலே ஒன்று இது:

"இன்பம் வந்து நெருங்கிடும் நேரத்தில்,
ஈனர் அஞ்சிக் கிடக்கிற நேரத்தில்
ஒன்றில் ஆயிரம் தர்க்கம் புரிந்து, பின்
உரிமைத் தாய்தனைப் போஎன்று சொல்வதால்

என்னை ஈன்ற நறுந்தாய் நாட்டினை
எண்ணுந் தோறும் உளம்பற்றி வேகுதே,
அன்பிருந்திடில் நாட்டின் சுகத்திலே
ஆயிரம்கதை ஏன்வனர்க் கின்றனர்?"

சமுதாய சூழல், அரசியல் மேடையில் ஏறி நின்று விளைவித்த (அக்காலக்) குழப்பத்தைக் கண்டு நொந்த கவி உள்ளத்தின் தேசியக் குமுறல் இது.

## 'எதிரிகள் கோடி இழைத்தாலும் தொடேன்!'

நாடு அரசியல் விடுதலை பெறப் போகிறது என்று உணர்ந்த பாரதிதாசன் சமுதாயச் சீர்திருத்தத்தில் தீவிரமாக ஈடுபட்டுக் கவிதை இசைக்கத் தொடங்கினர். பக்திப் பாடல் பழந்தடத்தை விட்டு விலகினர்; எதார்த்தவாதச் சமுதாயத் தடத்திலே எக்களித்துப் பாய்ந்தது அவர் கவிதை . .

எதையும் சரியான நோக்கில் பார்ப்பதும், அதை எவருக்கும் அஞ்சாமல் எடுத்துரைப்பதும் பாரதிதாசனின் இயல்புகள். இதற்கு, அவர் வாழ்க்கை நெடுக எத்தனையோ எடுத்துக் காட்டுகள் உண்டு. ஒன்றே ஒன்றை மட்டும் பார்ப்போம்:

ழூயில்பெரி என்னும் பிரெஞ்சுநாட்டுத் தலைவரின் நினைவு விழாவைப் பாண்டிச்சேரியில் அரசாங்கச் சார்பில் கொண்டாடினர்கள். பாராட்டுப் பாடல்கள் இசைப்பவர்கள் வரிசையில் பாரதிதாசனும் இடம்பெற்றூர். அவர் போதிய அளவு பேரும் புகழும் பெற்றிராத காலம் அது. விழாவோ அரசாங்கத்தன் சார்பில் நடந்தது. எனினும், ழூயில் பெரியின் சிறப்பாகத் தாம் உணர்ந்ததை அப்படியே பாடினர் பாரதிதாசன்:

"வறியோர்க் கெல்லாம் கல்வியின் ஓடை
வரவிட வில்லைமதக் குருக்களின் மேடை
நறக்கத் தொலைந்ததந்த நாட்பட்ட பீடை
நாடெல்லாம் பாய்ந்தது கல்வி நீரோடை . ."

மதக்குருக்களும் ஆட்சியாளர்களும் குழுமியிருந்து கேட்க, அத்தலைவனின் உண்மையான சாதனையை, – மதக்குருக்களிடமிருந்த கல்வியைத் தேசியமயமாக்கி எல்லார்க்கும் பாய்ச்சிய சாதனையை, – எடுத்துரைத்தார் பாரதிதாசன். கூடியிருந்த மதக்குருக்களும் அவர்களைச் சார்ந்த அதிகாரிகளும் வெறுத்துக் கண்சிவந்தனர்; சிவப்பார்கள் என்பது கவிஞருக்கு ஏற்கனவே தெரியும். ஆயினும் அவர் உண்மைக்குத் திரையிடவில்லை...அக்கூட்டத்திலும் உண்மையை உவந்து பாராட்ட ஒருவர் இருந்தார். அவர்தான் ஆட்சித் தலைவர். அவர் தெரிவித்த பாராட்டு பிறரை எல்லாம் குனிய வைத்து, கவிஞரை நிமிர்ந்து நிற்க வைத்தது.

ஓர் உண்மைக் கவிஞனுக்கு வேண்டிய இந்த நேர்மையும் திண்மையும் அவருடைய பாடல் ஒவ்வொன்றிலும் மிளிர்வதைக் காண்கிறோம், இச் சிறப்பே அவரைச் சிலருக்கு எதிரியாக்கிற்று; பலருக்கு நண்பராக்கிற்று. கலைஞர்களின் வாழ்வில் இவை இயல்பு. இந்த முரண் இல்லாவிட்டால் தான் ஆச்சரியப்பட வேண்டும்.

## 'காரிருள் அகத்தில் நல்ல கதிரொளி'

வாழ்நாள் முழுவதும் தமிழாசிரியராகவும் தமிழ்ச் சமுதாயத்துக்கு ஆசானாகவுமே திகழ்ந்தார் பாரதிதாசன். 'பாரதிதாசன் கவிதைகள்' முதல் தொகுதி வெளிவந்ததும், தமிழ் உலகம் அவருக்குப் "புரட்சிக் கவிஞர்" என்ற சிறப்பை உவந்தளித்தது. தேசியத் தலைவர்களோடும் சீர்திருத்தச் செம்மல்களோடும் நெருங்கிப் பழகியதால் கவிஞரின் உள்ளம் சமுதாய உள்ளமாக மலர்ச்சி பெற்றது. வ. வே. சு. அய்யர் நடத்திய **தேசபக்தன்** பத்திரிகையில் கட்டுரைகள் எழுதினர். **தேசசேவகன்** என்னும் பத்திரிகையை இவரே ஐந்து ஆண்டுகள் நடத்தினர். தொடர்ந்து **ஆத்மசக்தி, டுப்ளேக்ஸ், தாய்நாடு, புதுவைமுரசு** முதலிய பத்திரிகைகளையும் நடத்தினர். பிற்காலத்தில் நடத்திய **குயில்** போன்றதொரு கவிதைப் பத்திரிகையைத் தொடக்க நாளிலேயே நடத்தினர். அரசியல் கலவாமல் கலைக் காகவே நடத்தப்பட்ட அப்பத்திரிகையின் பெயர் **கவிதாமண்டலம்**... சுத்தானந்தர், தேசிகவிநாயகம் போன்றவர்களெல்லாம் அதில் கவிதை எழுதினர்கள். கவிதாமண்டலத்தில் புத்தக மதிப்புரை கூடக் கவிதையிலே தான் வந்தது!

## 'புதியதோர் உலகு செய்வோம்'

கவிஞர் தமது முப்பதாவது வயதில் பழனியம்மா என்னும் நல்லாரை மணந்தார். இவருக்கு ஆண் ஒன்றும் பெண்கள் மூன்றுமாக நான்கு குழந்தைகள். இவர் குமாரரின் பெயர் கோபதி என்னும் மன்னர் மன்னன்......

பாரதிதாசன் இளமை முதலே சாதிமத பேதங்களை வெறுத்து வந்தவர். பாரதியாரோடு இவருக்கு ஏற்பட்ட தொடர்பு அந்த நோக்கில் இவருக்கு ஒரு தீவிரத்தை ஏற்படுத்தியது.

'சாதி ஒழித்திடல் ஒன்று—நல்ல
தமிழ் வளர்த்தல் மற்றொன்று'

இவை இரண்டுமே பாரதியாரின் கொள்கைகள் என்று பாடியுள்ளார் பாரதிதாசன்.

இந்தக் கொள்கையைப் பொறுத்த வரையில், அக்காலத்திய சுயமரியாதை இயக்கத்தினரின் கருத்துக்களும் இவர் கருத்துக்களை ஒத்திருந்தன.

ஆதலால் சாதி ஒழிப்பு, மூட நம்பிக்கை எதிர்ப்பு போன்றவற்றில பாரதிதாசனும் அந்த இயக்கத்தோடு ஒன்றுபட்டுப் போராடினர். அதன் தொடர்ச்சியாகத் திராவிடர்கழகத்திலும் இவரது பற்றுதல் படர்ந்தது. திராவிட நாடு கோரிக்கையையும் ஒரு காலத்தில் தீவிரமாக ஆதரித்துப் பாட்டு இசைத்தார் பாரதிதாசன்.

### 'உன்னை விற்காதே!'

குறிப்பிட்ட ஓர் இயக்கத்தோடு இவர் கொண்ட தொடர்பு சில கேடுகளையும் அதே சமயம் சில நன்மைகளையும் விளைவித்தது. ஒரு சில இலக்கியவாணர்கள் மட்டுமே படித்துப் பாராட்டியிருக்கக் கூடிய இவர் கவிதை இயக்கத் தொடர்பு காரணமாகப் பல்லாயிரம் பொதுமக்களிடையில் சென்று பரவியது. அதே சமயம், வேறு கட்சியில் உள்ளவர்கள் இவரைச் சுயமரியாதைக் கட்சிக்கே உரியவர் என்று ஒதுக்கினர்கள். ஆயினும் புதுமைப்பித்தன், கு. ப. ராஜகோபாலன், வ. ரா., தி.ஜ.ர, போன்ற (கட்சிச் சார்பற்ற) இலக்கியவாணர்கள் இவரது பாடலை நயந்து போற்றி வரவேற்றிருப்பது குறிப்பிடத்தக்கது.

"பாரதியார் இன்று நமக்கு வைத்துவிட்டுப் போன சொத்துக்கள் பல. அவற்றில் முக்கியமானவற்றைக் குறிப்பிட வேண்டின் ஞானரதம், குயில்பாட்டு, பாஞ்சாலிசபதம், கனகசுப்புரத்தினம் என்ற பாரதிதாசன் என்று சொல்ல வேண்டும்" என்று வானெலியில் விமர்சனம் செய்தார் புதுமைப்பித்தன்.

### 'வாழ்க்கையை வானில் உயர்த்தும் நூல்கள்'

பாரதிதாசனின் முதல் கவிதைத் தொகுதி (குஞ்சிதம் குருசாமி வெளியிட்டது) 1938-ல் வெளிவந்தது. பண்டிதர் உலகம், புதிய இலக்கியவாணர் உலகம், சீர்திருத்த உலகம் முதலிய அனைத்துப்பகுதியினரின் பாராட்டையும் ஒருங்கே பெற்றது, இத்தொகுதி. பெரியார் இராமசாமி, வ.ரா., ஆர். கே. சண்முகம், ந.மு. வேங்கடசாமி நாட்டார், கே. சுவாமிநாதன், மறைமலை அடிகள், வையாபுரிப்பிள்ளை, அண்ணாத்துரை, சாரநாதையங்கார் போன்ற பெருமக்கள் யாவரும் இப்புதிய கவிதைத் தொகுதியைப் பாராட்டி மகிழ்ச்சி தெரிவித்தார்கள். புதிய இலக்கிய உலகில் இக்கவிதைத்தொகுதி ஒரு பரபரப்பை ஏற்படுத்தியது.

இதைத் தொடர்ந்து எதிர்பாராதமுத்தம், தமிழச்சியின் கத்தி, இசையமுது, பாண்டியன்பரிசு, காதலா கடமையா ?, அழகின் சிரிப்பு முதலான கவிதை நூல்கள் வெளி வந்தன. கவிதைக்கென்றே தோன்றிய இவரது குயில் என்னும் ஏடும் சிறப்பாக வெளிவந்தது. குயில் ஏட்டையும் பாரதிதாசனின் மற்றக் கவிதை நூல்களையும் படித்துப் புதிய வீறுகொண்ட கூட்டம் ஒன்றும் தமிழகத்தில் உருவாகி வந்தது.

## 'சுயமரியாதை தோள் தோழா!'

சுயமரியாதை இயக்கத்தோடு தொடர்புகொண்ட கவிஞர் தனித்தமிழ் இயக்கத்திலும் ஈடுபாடு கொண்டார். இவருடைய பிற்காலப் பாடல்களில் பிறமொழிச் சொற்கள் மிகமிகக் குறைவு. இதைப் போற்றி வரவேற்றவர்களும் உண்டு; இதற்காகவே கவிஞரைத் தூற்றுவோரும் உண்டு. ஆனால் கவிஞர் யாரையும் பொருட்படுத்தவில்லை...

நாளடைவில் இவருக்குத் 'திராவிடநாடு' கோரிக்கையில் பற்றுக் குறைந்தது. அந்த அரசியல் சட்டகத்துக்குள் அவரால் சுதந்திரமாக இயங்க முடியவில்லை. தொடக்க காலத்தில் வீறுடன் தமிழ்நலன், சமூக சமத்துவம், உலக சகோதரத்துவம் என்னும் கொள்கைகளிலேயே மீண்டும் பரந்து படர்ந்தது அவர் உள்ளம் இதற்காகப் பழைய அரசியல் கட்சிக்காரர்கள் அவரை வைது வெறுத்தார்கள். அதைக் கண்டும் கவிஞர் கலங்கவில்லை. "வரிமணல் ஞெமரக் கற்பக நடக்கும் பெருமிதப் பகட்டுக்குத் துறையும் உண்டோ?"

## 'தொண்டு செய்யாது கிடப்பவன் ஆமை'

சமுதாயச் சீர்திருத்தத்தை ஏட்டில் மட்டும் பாடிவிட்டுச் சும்மா ஒதுங்கியவரல்ல பாரதிதாசன். அவரே சௌமியன், இரவியன் அல்லது இணையற்ற வீரன் போன்ற நாடகங்களை அமைத்து நடத்திக் காட்டினர். தமிழ் திரைப்படத் துறையில் நடந்து வந்த பயனற்ற முயற்சிகளைத் "தமிழ் நாட்டில் சினிமா" என்ற பாடலில் அழகாக ஏளனம் செய்கிருர் கவிஞர். இவரே காளமேகம், வளையாபதி முதலிய படங்களுக்கு வசனமும் பாடல்களும் எழுதி அத்துறையில் உள்ளவர்களுக்கு வழிகாட்டினர்.

சத்தியாக்கிரகத்தில் இவர் ஈடுபட்டதை முன்பே குறிப்பிட்டோம். ஆசிரியராக வேலைபார்த்து வந்த காலத்தில், அரசியலில் ஈடுபட்டார் என்பதற்காகப், பாண்டிச்சேரி அரசாங்கம் இவரை இரண்டாண்டுக் காலம் வேலையிலிருந்து நீக்கிவைத்தது.

## 'பாரதிக் கவிஞன்'

"பாரதியார் மிக உயர்ந்த கவிஞர். அவருடைய உண்மை வாழ்க்கை மக்களுக்குத் தெரியவேண்டும். பாரதி வாழ்க்கையைப் படம் பிடிக்காதது தமிழ் நாட்டு அறிஞர்களின் தவறு"... இப்படி எண்ணி நீண்ட காலம் வருந்திய பாரதிதாசன், கடைசிக் காலத்தில், தாமே அப்பணியைச் செய்ப முயன்ருர். திரைப்படத் துறையினரும் பிறரும் போதிய ஆதரவு அளிக்காததால் அந்த நன்முயற்சி வெற்றி பெருமல் போய்விட்டது.

பாரதியாரோடு பத்து ஆண்டுகளுக்கும் மேலாக நெருங்கிப் பழகியவர் பாரதிதாசன். பாரதியின் வாழ்க்கை நிகழ்ச்சிகளை இவர் மூலமாகக் கேட்டு மகிழ்ந்தோர் பலர். பல அறிஞர்களின் வேண்டுகோளுக்கிணங்கி, "பாரதியார் வரலாறு" எழுத ஏற்பாடுகள் செய்துவந்த காலத்தில்தான், 21-4-1964-ல், சென்னையில் காலமானார் பாரதிதாசன். ஆதலால் தற்காலத் தலைமைக் கவிஞனின் ஒரு நல்ல வரலாறும் தமிழ் மக்களுக்குக் கிடைக்காமல் போயிற்று.

## 'எளிய நடையில் தமிழ் நூல்கள்'

பாரதியாரின் எழுச்சிக்கும் புதுமைக்கும் தனி வாரிசாக விளங்கியவர் பாரதிதாசன். 'பாடல்கள் எளிய நடையில் அமையவேண்டும், கருத்து வகையால் சமுதாயத்துக்குப் புதிய எழுச்சியை ஊட்டவேண்டும்' என்பவற்றில் இருவரும் ஒரே கருத்து உடையவர்கள். சமுதாயச் சீர்திருத்தக் கருத்துக்கள் பலவற்றல் இருவருக்கும் ஒற்றுமை உண்டு. ஆயினும் சுப்பிரமணியர் துதியமுது பாடித் தொடங்கிய பாரதிதாசன் இடையில் முழு நாத்திகரானார்; பிற்காலத்தில் "ஒரு கடவுள் உண்டென்போம், உரு வணக்கம் ஒப்போம்" என்று பாடினார். சாதியும் மதமும் அரசும் கடந்த சமுதாயமே அவரது இலட்சியமாக விளங்கியது. "எல்லார்க்கும் எல்லாம் என்று இருப்பதான இடம் நோக்கி நடக்கின்றது இந்த வையம்" என்பதில் முழுநம்பிக்கை கொண்டு. அதைப் பல இடங்களில் அய்யத்துக்கிடமின்றி வற்புறுத்தியுள்ளார் பாரதிதாசன்.

அளவிலும் ஆழத்திலும் மிகுந்த கவிதைகள் யாடித்தந்த பாரதிதாசனைத் தமிழ் உலகம் முதலில் புரட்சிக்கவிஞர் என்று போற்றியது; பின்னர் பாவேந்தர் என்று பட்டம் சூட்டி மகிழ்ந்தது. பல கவிஞர்களுக்கு வாய்க்காத ஒருநிலை, தமது காலத்திலேயே மக்களால் பாராட்டப்படும் பெருநிலை இவருக்கு அமைந்தது. மக்கள் நிதிதிரட்டி இவருக்குப் பொற்கிழியும் வழங்கினார்கள். ஆயினும், கலைஞர்களுக்கே உரிய ஒரு பராமுகத்தால் இவர் தமது பொருள்நிலையை ஒழுங்குபடுத்திக் கொள்ளவில்லை.

> "ஓம்பாது உண்டு கூம்பாது வீசி,
> பெற்றது மகிழ்ந்து, சுற்றம் அருத்தி
> வரிசைக்கு வருந்தும் (இப்) பரிசில் வாழ்க்கை"

என்று பழங்காலக் கலைஞர்களின் வாழ்வைக் குறிப்பிடுவார்கள். இவர் வாழ்வும் இறுதிவரை அப்படித்தான் அமைந்தது.

## 'நானோர் தும்பி'

இவரால் தமிழுக்கு ஏற்பட்ட சிறப்புக்கள் பல. பாரதியார் தொடங்கி வைத்த எளியநடை—புதியநடைக் கவிதை இயக்கத்தைத் இவர் நாட்டில்

வலுவாக வேரூன்றிப் படரச் செய்தார். கவிதைச் சுவையும் கருத்துச் சுவையும் கனிந்த புதுத் தமிழ் நூல்கள் பலவற்றை இயற்றி வழங்கினார். அவற்றுள் புரட்சிக்கவி, பாண்டியன் பரிசு, அழகின்சிரிப்பு, குடும்ப விளக்கு என்பவற்றை முக்கியமாகக் குறிப்பிடவேண்டும். அண்மைக் காலத் தமிழில் குடும்பவிளக்குக்கு இணையான ஒரு புதுமைக் காவியம் வேறெதுவும் இல்லை.

இவை யாவற்றுக்கும் மேலாக, இவர் ஒரு புதிய கவிதை இயக்கமாகவே வாழ்ந்து வந்தார். இவரது பாணியைப் பின்பற்றிக் கவிபாடுதற்குத் தமிழ்நாட்டில் ஓர் இளைஞர் பேரணியே உருவாகியுள்ளது. இத்தகையதொரு பரம்பரை ஆக்கம் தான், தமிழ்க்கவிதை உலகில் பாரதிதாசனின் பெரிய சாதனை என்று கூறவேண்டும்.

'மன்னா உலகத்து மன்னுதல் குறித்தோர்
தம்புகழ் நிறீஇத் தாம் மாய்ந்தனரே...'

என்பது, தமிழர்கள் மிக நெடுங்காலத்துக்கு முன்பிருந்தே கண்டறிந்து கடைப்பிடித்து வரும் வாழ்க்கைநெறி. அதை வெற்றிகரமாகக் கடைப்பிடித்த ஒரு தற்காலத் தமிழன், நமது பாரதிதாசன். *



பாவேந்தரின் நண்பர்
திரு நோயல் அவர்கள்.



பாவேந்தரின் நண்பர்
திரு:சிவகுருநாதன் அவர்கள்.



**1963—பாவேந்தர் பிறந்த நாள் விழா**

கவிஞரது வாழ்நாளில் நடைபெற்ற கடைசி பிறந்த நாள் விழா. மேடையில் ஸ்ரீமதி ஸௌந்தரா கைலாஸம், ஸ்ரீ வி பி. ராமன் திரு. மா. பொ. சி. முதலியோர் வீற்றிருக்கிறார்கள்.

*WITH COMPLIMENTS FROM*

# DGL PRIVATE LIMITED

Manufacturers of complete range of Fire Fighting Equipment and Appliances including Fire Engines

★

## SERVICE STATION EQUIPMENT

★

## CENTRALISED LUBRICATION EQUIPMENT

★

## LIGHT ENGINEERING STORES

★

Regd Office : 14-M Block, Connaught Circus, New Delhi-1.

Telephone : 45028 Grams : GARAGE

## BRANCH

10, Shahnajaf Road, Hazrat Ganj, Lucknow.

Telephone : 25253 Grams : GROWMORE

# கவிஞர் இயல்பு

முல்லை - பி. எல். முத்தையா

இருபத்தேழு ஆண்டுகளுக்கு முன், நான் ரங்கூனில் இருந்தேன். தமிழ் இலக்கிய நூல்களை மிக ஆர்வத்தோடு படிக்கத் தொடங்கிய காலம். ஆனால், இப்பொழுதெல்லாம் வெளிவருகின்றதைப் போல் இவ்வளவு புத்தகங்கள் அப்பொழுது வெளி வருவதில்லை. புரட்சிக் கவிஞர் பாரதிதாசனின் கவிதைகள் முதல்பகுதி அப்பொழுது வெளியிடப்பட்டிருந்த சமயம், அதில் "சஞ்சீவி பர்வதத்தின் சாரலி"ல் உள்ள, "வாழ்கின்றார் முப்பத்து முக்கோடி என்றால் சூழ்கின்ற பேதமும் அத்தொகை இருக்கும்........." என்ற கருத்துச் செறிவுள்ள கவிதை வரிகள் என்னை மிகவும் கவர்ந்தது. அந்தக் கவர்ச்சிதான் கவிஞரது நூல்களை வெளியிடும் பெருமையை எனக்கு அளித்தது போலும். கவிஞருடன் நெருங்கிப் பழகிய நாட்களில் நான் தெரிந்து கொண்ட விஷயங்கள் பல. அந்த நாட்கள் என் வாழ்க்கையின் மறக்க முடியாத நாட்கள் என்று கருதுகிறேன்.

கவிஞர் அவர்களிடம் எதற்கும் எப்போதும் விளக்கம் கேட்கலாம். கோபமின்றி கேலியின்றி அழகாக உவமான உவமேயங்களுடன் விளக்குவார்; அப்போது இலக்கியச் சொற்பொழிவு நிகழும் மேடை போலவே தோன்றும். இடைமறித்து எத்தனை கேள்வி கேட்டாலும் சலிப்படையாமல் பதில கூறுவார். ஆனால் அவருக்குக் கோபம் வரும் காரணம் வேறு; என்றாலும், அந்தக் கோபம் உள்ளத்தில் நிலைத்து நின்று வேறுபடுத்தி விடுவதில்லை. அவருடைய கோபத்துக்கு இலக்காகதவர்கள் அவருடன் நெருங்கிப் பழகாதவர்களே. அவருடைய கோபம் பல சமயங்களிலும் அனுதாபமாக மாறி விடுவதும் உண்டு. அது 'கவிஞர் இயல்பு' போலும்!

எந்த ஒரு காரியத்தையும் நாளைக்கு என்று ஒத்திப் போட்டுக் கொண்டு போவது அவருக்கு அறவே பிடிக்காது; எதையும் உடனே நிறைவேற்ற வேண்டும் 'பிறகு செய்கிறேன்' என்ற வார்த்தையைக்கூட அவர் விரும்ப மாட்டார். இரவோ பகலோ, பஸ் ஏறிச் செல்வதோ, நடந்துபோவதோ அவற்றைப்பற்றி எல்லாம் அவருக்குக் கவலை இல்லை. எண்ணிய காரியத்தை நிறைவேற்ற

அப்போதே எழுந்து செல்ல வேண்டும். அவ்வளவு துடிப்பும் ஆர்வமும் அதிகம் அவருக்கு!

எவ்வளவு ரூபாய்களானாலும் சரி, அதைப் பாங்கியில் போட்டு வைத்துத் தேவையானபோது எடுத்துக் கொள்ளும் வழக்கத்தை அவர் விரும்புவதே இல்லை. "அதென்ன? அங்கே நம்முடைய பணத்தை கொண்டுபோய்க் கொடுத்துவிட்டு, அப்புறம் அவர்களிடம் கையெழுத்து போட்டுக் கொடுத்து, ஏன் காத்துக்கொண்டு நிற்க வேண்டும்?" என்று சலிப்போடு கூறுவார். எத்தனை ஆயிரமானாலும் அவற்றைப் பெட்டியில் அப்படியே வைப்பதைத்தான் அவர் விரும்புவார். பெட்டியை பூட்டி வைக்கும் சிரமம் கூட அவர் எடுத்துக்கொள்ள மாட்டார்.

எந்த ஒரு காரியத்திற்காகவும் பலருடைய 'தயவை' நாடிச் சென்று அதை நிறைவேற்றிக் கொள்ளும் முறை அவருக்குப் பிடிக்காதவைகளில் ஒன்று. ஒரு நாள் தம்பியிடம் ஏதோ விஷயமாக [கவிஞர் மகன் மன்னர் மன்னனை தம்பி என்றே அழைப்பார்] சொன்னார். தம்பி, ஸ்ரீதரன் என்பவரிடம் சொன்னார் ஸ்ரீதரன் சுப்பிரமணியம் என்பவரிடம் சொல்லியிருக்கிறார். விஷயம் முடிவாகவில்லை; இதற்கு மத்தியில் ஸ்ரீதரன் வந்தார். அப்பொழுது கவிஞரை அவர் காணநேர்ந்தது. 'அந்த விஷயத்தின் நிலைமையையும், யார் யாரிடம் சொல்லி முயற்சி செய்திருக்கிறது என்பதைத் தெரிவித்தார்.' கவிஞரின் பொறுமை அணைகடந்த வெள்ளம்போல் ஆயிற்று. "அதென்னப்பா நான் தம்பியிடம் சொல்லி தம்பி உன்னிடம் சொல்லி, நீ சுப்பிரமணியத்திடம் சொல்லி, சுப்பிரமணியம் யாரோ ஒரு மயி.........னிடம் சொல்லி இதெல்லாம் ஆகிற காரியமா?" என்று கோபத்தோடு கூறிவிட்டார். இன்னும்கூட எந்த ஒரு நிலைமை ஏற்பட்டால், மேற்படி சம்பவம் உடனே என் நினைவுக்கு வந்துவிடும்.

கவிஞர் கணக்கு விவகாரங்களிலே தலையிடமாட்டார்; வீட்டிலும் சரி, வெளியிடங்களிலும் சரி, கணக்கு என்ன? எவ்வளவு தரவேண்டும்? என்ற விஷயங்களில் கவனம் செலுத்தவே மாட்டார். அவருக்குத் தேவையானபோது பணம் வேண்டும். அது நூறு ரூபாயானாலும், ஆயிரம் ரூபாயானாலும் அவர் விரும்பும்போது கிடைக்க வேண்டும். கைக்கு வந்த ரூபாயை எவ்வளவு இருக்கிறது என்று எண்ணிக்கூட பார்ப்பது கிடையாது. அவரிடம் அப்படி ஒரு இயல்பு.

கவிஞர் பிரயாணம் செய்யும் போது உடன் இருப்பவரிடம் தம் பணப்பையை கொடுத்து விடுவார். ஏனென்றால், அவ்வப்போது பையைத் திறந்து பணத்தை எடுத்துக் கொடுத்து மீதம் வாங்கும் சிரமம் எல்லாம் அவருக்கு அறவே பிடிக்காது.

யாரிடமாவது ஏதேனும் ஒரு பொருளை வாங்கிக்கொண்டு வரச் சொன்னால், "அதன் விலை எவ்வளவு? ஏன் இவ்வளவு அதிகமாகக் கொடுத்தாய்; மீதம் எங்கே?" இம்மாதிரி நச்சரிப்பு எல்லாம் கவிஞரிடம் கிடையாது. ஆனால், வாங்கிக் கொண்டு வந்த பொருள்மட்டும் அவர் விரும்பியபடி இருக்க வேண்டும். அப்படி இருந்துவிட்டால்அதில் லயித்து விடுவார். அதற்கு மாறாக இருந்துவிட்டாலோ, அந்தப் பொருளை வாங்கிக் கொண்டு வந்தவர் கவிஞர் முன் நிற்க முடியாதபடி நேரிடும். சில சமயங்களில், "இதை, இவர் வாங்கிக்கொண்டு வந்திருக்கிறார், பாருங்கள்! என்று அருகில் இருப்பவரிடம் எடுத்துக் காண்பிக்கத் தொடங்கி விடுவார். அப்போது வாங்கிக்கொண்டு வந்தவர் நிலை எப்படி இருக்கும்!

கவிதை, குடும்பவாழ்க்கை, நண்பர்களின் தொடர்பு, குழந்தைகளுடன் விளையாடுதல்இப்படிஎதிலுமே கவிஞருடைய போக்கும் இயல்பும் தனிச்சிறப்புடையன.

கவிஞரின் வாழ்க்கையில் எத்தனையோ நிகழ்ச்சிகள்; அவை அத்தனையும் மறக்க முடியாத காட்சிகள்! *



WITH THE COMPLIMENTS

OF

PRECISION BEARINGS INDIA LIMITED,

BOMBAY ★ BARODA

KEEP COOL WITH

# Rallifan



★ Table

★ Pedestal

and

★ Exhaust

*Sole Distributors for :*

Delhi, Punjab, Rajasthan, U.P., Himachal Pradesh and Jammu & Kashmir.

**RALLIS INDIA LIMITED,**

MARSHALL HOUSE

**1 HANUMAN ROAD,**

**NEW DELHI-1.**

# கவிதைப் பேருருவம்

திரு கா. அப்பாதுரை

கவிஞன் மட்டுமல்லர், ஊழிக் கவிஞர் பாரதியார். ஊழிக் கவிஞரை அடுத்தூர்ந்து வந்த ஊழி படைத்த கவிஞர் பாரதிதாசன். வருங்காலத் தமிழகம் பாரதி இல்லாமல் பாரதிதாசனையோ, பாரதி இல்லாமல் பாரதியையோ முழு அளவில் உணரவோ, நுகரவோ முடியாது.

ஊழிக்கவிஞன் பாரதியின் பாடலொன்றை ஊழிபடைத்த கவிஞன் பாரதிதாசன் பாடக்கேட்டசமயம் நான் இதனை நன்கு உணர முடிந்தது. பாரதியாரின் வீர சுதந்தரப் பாட்டுக்கு பாரதிதாசன் குரலிசை உருவம் கொடுத்த போதுதான். நான் அப்பாட்டின் முழுக்கம் பிரத்தையும் உயிர்த் தடிப்பையும் காண முடிந்தது. மூலநூலுக்கு உரையாசிரியர் உரை கொடுக்கும் கருத்துருவத்தை விட, பாரதி பாட்டுக்கு அவர் குரலும் தோற்றமும் தந்த பாவ உருவம் கண் கொள்ளாக் காட்சியாயமைந்தது.

1943—திருச்சிராப்பள்ளி மாவட்டத்தில் கோநகர் என்ற கோனுபட்டு உயர்நிலைப் பள்ளியில் நான் தமிழாசிரியனாக இருந்தகாலம் அது. நகரில் தமிழுணர்ச்சி இளைஞர் முன்னேற்ற சங்க ஆர்வ உருவில் கொந்தளித்துக் கொண்டிருந்தது. அதற்கு உருவம் கொடுக்க நாட்டின் தலை சிறந்த தலைவர்களுள் எவரையேனும் அந்தப் புறம் போக்கான சிறு நகருக்கு அழைத்து வர இளைஞர்களும் நானும் துடித்துக் கொண்டிருந்தோம். என் இள நண்ப—மாணவர் (தற்போது மலேசியா தமிழ் நேசன் பத்திரிசையாசிரியராயிருக்கும்) முருகு சுப்பிரமணியமும், புலவர் விசு. திருநாவுக்கரசுப் பிறரும் தமிழகக் கடலெங்கும் அரித்துப் பிடித்து முயன்றும் எந்தத் தலைவரையும் அப்பக்கம் கொண்டு வரமுடியவில்லை.

எங்கள் மனக் குமுறலையெல்லாம் பிழிந்தெடுத்து முடங்களில் கொட்டிக்கவிஞர் பாரதிதாசனுக்கு எழுதினோம்!

கவிஞர் உள்ளம் இந்த உள்நாட்டு இளைஞர் உள்ளக்குமுறலுக்கு எதிரலை பாய்ந்து எதிரொலித்தது.

கவிஞர் வந்தார், பேசினார்.

ஒரு மேடையல்ல, ஒன்பது மேடைகளில்.

பட்டினி கிடந்து தவித்தவர்க்கு

அமுதம் கிடைத்தது போல நாங்கள் அவரைச் சுற்றி மொய்த்தோம்.

பொது மேடைகளிடையே இல்ல மேடைகள், பள்ளி, இளைஞர்மன்ற ஏடக மேடைகள் காத்திருந்தன. பலர் வீடுகளில் விருந்து வைத்து விருந்து மேடைகள் உருவாக்கினர்.

ஒரு நாள் பேச்சுக்கு, காத்துக் கிடந்த எங்கட்கு, ஒரு மாத இடைவிடாப் பேச்சரங்குகள், பாட்டரங்குகள், உரையாடல் அரங்குகள் கிடைத்தன.

ஒரு தலைவருக்குப் பதிலாகக் கிடைத்த இந்த ஒரு கவிஞர் உருவில் எங்கள் முன் இடைவிடாது இரு பெரும் கவிஞர்கள், இரு நூறு தலைவர்கள் முழு உருவக் காட்சியளித்தனர்.

நகர அஞ்சல் நிலையத் தலைவர் இல்லத்தில் ஒரு நாள் பாரதி பாடல்பற்றிப் பேச்சு வந்தது. பாரதி பாட்டில் வீரம் உண்டா என்று எவரோ கேட்டுவிட்டார்.

வீர சுதந்திரம் வேண்டி நின்றார்
பின்னர் வேறொன்று கொள்
வாரோ! — தினம் ஆரமுதுண்ணு
தற்கு ஆசை கொண்டார் கள்
ளில் அறிவைச் செலுத்துவாரோ!

நாலடி கொண்ட இப்பாட்டு நாற்றிசை உலகிலும் வேறெதற்கும் இடமில்லாதபடி ஓசை உருவாய் எங்கும்நிறைந்துவிட்டது. பாட்டா, அது! வீர என்ற இரண்டெழுத்திலே பாரதிதாசன் முதன் முதலிலே வீரத்தின் உருவத்தை, துடிப்பை, விழும் வீற்றினைப் படைத்துக் காட்டிவிட்டாரோ என்று தோன்றிற்று!

பாரதியின் பரம்பரையாகப் பாரதிதாசன் விளங்கினர். இருவரின் நீள்பரம்பரையாகப் பாரதிதாசன் பரம்பரை இன்று தழைத்து வருகின்றது. பாரதியின் தாசன் என்று அவர் தம்மை அறிமுகப் படுத்திக்கொண்டதுபோல, கனக சுப்புரத்தினம் என்ற அவரது இயற்பெயரைப் பின்பற்றி இன்றைய கவிஞர் சுரதா தம்மைச் சுப்புரத்தினதாசன் என்று அறிமுகப் படுத்திக்கொள்கிறார்.

பாரதிதாசன் கவிதையுலகம் பெரிது. அவர் கவிதை படிப்பவர்கள் எல்லாரும் அந்தப் பேருலகம் சார்ந்தவர்கள். அதன் அளவும் பரப்பும் ஆழமும் பெருகிக் கொண்டே வருகிறது இன்னும் வரும். ஆனல் கடலருகே ஊறும் சிற்றூறல் கேணி போல அவருக்கு இன்னொரு உலகமும் உண்டு. அது அவருடன் நேரில் பழகி அவர் கவிதை நலங்களை மட்டுமன்றி மற்றும் பல மனிதப் பாசநலங்களைக் கண்டு பாராட்டிய என் போன்றவர் சபலகம் அதில் நான் பெருங்கவிஞரை மட்டுமின்றி, தலைவராகமட்டுமின்றி, மனிதராக பெருமனிதராக, நண்பராக, பெரு நண்பராகக் காட்சியளிக்கிறார்.

கவிஞர்கள் கவிதையுலகில் சிங்கங்களாய், வாழ்க்கையில் எலிக

ளாய் வாழ்வர் என்றுதான் பலர் எதிர்பார்ப்பார்கள். கவிஞர் பாரதிதாசனும்—அவர் திட்டிக் காட்டிய படி அவர் கவிதை ஆசானுகிய பாரதியும்-கவிதையுலகிலும் சிங்கங்கள் தாம், வாழ்க்கையிலும் சிங்கங்கள் தாம்! கவிஞர் என்ற முறையில் மட்டுமன்றி, மனிதர் என்ற முறையிலும் அவர்கள் எளிமையில் பெருமையும், பெருமையில் எளிமையும் உடையவராய் இருந்தனர். இருவருமே தங்கக்கவிதை ஆக்கிய தங்க மனம் படைத்த மனிதர்கள்—குழந்தை உள்ளத்துடன் உலகின் சூது வாதுகள் கடந்த மனிதப்பாசத்துடன். இருவருமே மனிதர்களாய் பெருமனிதர்களாய், நாம் சிறுமை மிக்க உலகில் நம்மிடையே நடந்து சென்று, நம்மையும் நம் உலகையும் புனிதமாக்கிச் சென்றுள்ளார்கள்.

தலைவர் பலரை நான் அறிந்ததுண்டு. ஆனால் என் வாழ்வில் நண்பரிடையே ஒரு தலைவராய், தலைவரிடையே ஒரு நண்பராய் கவிஞர் பாரதிதாசன் விளங்கினர்.

கவிஞரை நேரில் அணுகுமுன்னரே அவர் கவிதையில் நான் ஈடுபட்டிருந்தேன். அவர் கவிதையுரு ஒரு தெய்வ உருவாக என் மனத்தில் நிலைத்திருந்தது. மனிதராக அவரைக் கண்டு பழகி, அவர் எளிமை, அறிவு, விறு ஆகியவற்றைக் கண்டபோது, இத்தனை பெருமையுடன் இனிய கவிதை எப்படி ஒத்துவருமோ என்று கவலையுற்றேன். ஆனல் அவர் பாட்டிலும் முயற்சியற்ற இதே எளிமைதான் உயிர் என்பதை விரைவில் கண்டுகொண்டேன்.

கோநகரில் தமிழ் விழாவில் ஏழு நாட்கள் நான் ஆற்றிய தலைமையுரைகள் 'தமிழ் வாழ்க' என்னும் வடிவில் புத்தகமாக வந்திருக்கிறது. கவிஞர் அதனை வாசித்தார். உரைநடை நூல்ஒருசில மணிநேரத்திற்குள் ஒரு கவிதைநூலாகப் பட்டுச்சிறகு விரித்துப் பறந்தது—'தமிழியக்கம்' என்ற அவர் பாட ஏடே அது!

டை

'அப்பாத்துரை! உன் உரைநடிவ மூல ஏட்டுக்கு என் கவிதை வடிவர் உரை ஏடு இது' என்று அதை என்னிடம் தந்தார்.

பாட்டுக்கு விளக்கமாக உரை எழுதும்புலவரின் பழையபரம்பரையைக்கூட, உரைக்கு விளக்கமாகப் பாட்டு எழுதும் புதுப்பரம்பரை ஆக்கினர் புரட்சிக் கவிஞர் பாரதியார் என்று நான் அப்போது அவரிடம் கூறி, அவர் உரைக்கு மறுமொழி அளித்தேன்.

கவிஞர் வாழ்வில் நான் கொண்ட இடம் சிறிது. ஆனல் என் வாழ்வில் கவிஞர் கொண்ட இடம் பெரிது. உள்நாட்டில் இருந்த என்னைச் சென்னைக்குக் கொண்டுவந்து, மீண்டும் மீண்டும் பணிகளில் அமர்த்திப் பார்த்தவர் அவர். ஒதுங்கித் தொண்டு செய்து தலைவர்கள் கண்களில் படாமல் இருந்த என்னைப் பெருந்தலைவர்களிடையே

இழுத்து வந்து கட்டாயமாக அறிமுகப் படுத்தியவரும் அவரே.

பாரதி, பாரதிதாசன் பரம்பரையில் இடம்பெற எனக்கு ஆசையிருந்ததுண்டு. ஆனால் கவிஞர் என்னை அந்தப் பரம்பரையில் சேர்ந்துக் கொள்ள மறுத்துவிட்டார். கோநகரில் என் இளமைக் காலக் கவிதைகளை அவர் வாசித்துப் பார்க்க வாய்ப்பு ஏற்பட்டது. 'பாட்டுக்கள் நன்றாகத்தான் இருக்கின்றன. ஆனால் இவற்றுக்கு மதிப்பு ஏற்படவேண்டுமானால், நீங்கள் பாரதி பிறப்பதற்குமுன் பிறந்திருக்கவேண்டும். பாரதியின் எளிமை உங்களுக்கெல்லாம் சுட்டுப்போட்டாலும் வராது' என்றார்.

என்பாட்டார்வம் நம்பாரதிபாரதிதாசனைப் பின்பற்றியது. ஆனால் பாட்டு எழுதும் ஆர்வம் கம்பனைப் பின்பற்றியது. கவிஞர் பாரதிதாசனும் பின்னாட்களில் கம்பனின் நாலடி விருத்தத்தை எட்டடியாக்கியே புதுமை மாயம் செய்தார். கம்பர் பாணியைக் குறைசொன்ன அவருக்கு நான் இதை எடுத்துக் காட்டியபோது, உங்கள் கருத்துரை சரிதான்' என்று பாராட்டினார்.

பெண்டிர் தம் தோற்ற மாறுதல்களைக் கண்ணாடி-முன் பதிவு செய்து காண்பது போல, கவிஞர், தம் [illegible] கருத்துகளின் ஒவ்வொரு மாறுதல்களையும், ஒவ்வொரு நினைவலையையும் நண்பர்களிடம் தம்மை மறந்து உரக்கக் கூறிப் பதிவு செய்து காண்பார். அத்தகைய கண்ணாடியாக நான் அடிக்கடி அமைந்ததுண்டு.

கவிஞர் பாரதிதாசன் கவிதைகள் நாடறியும். ஆனால் கவிதையில் குறைந்ததன்று அவர் ஆழ்ந்த கற்ற நூலறிவு, இலக்கிய அறிவு. அவர் திருக்குறளுரை வெளிவந்திருந்தால், உலகம் அதில் ஒரு பெரும் பகுதியைக் கண்டிருக்கும். என் திருக்குறள் மணி விளக்கவுரையில் ஒரு சிறிதளவேனும் அதனைக் கண்டு காட்ட நான் முயன்றிருக்கிறேன். கவிதை, அறிவுஆகிய இந்த இரண்டினுக்கும் ஈடான இரண்டு வேறு பகுதிகளும் அவரிடம் உண்டு. ஒன்று அவர் தமிழ் மொழிவன்மை, நாட்டாரிடம், மனித இன முன்னேற்றம் பற்றிய உளவு! மற்றொன்று அவர் குழந்தை உள்ளம், அன்பும் இனப்பாசமும் நிறைந்த அவர் இதயம்! இவற்றைப் படம்பிடித்துக் காட்ட இன்று அவர் நண்பர்களன்றி, அவர்கள் கருத்தில் நிலவும் அவர் பண்புருவன்றி வேறு எத்தகைய பதிவுச் சின்னமும் கிடையாது.

**வாழ்க பாரதிதாசன் பரம்பரை!**

—★—

# ORIENTAL'S

FOR

## QUALITY & TASTE

★ *Building Construction*

★ *Metal Grille & Aluminium Doors & Windows*

★ *Sanitary Electrical Installation*

★ *Furnishing & Interior Decoration*

(Consult)

**Oriental Building & Furnishing Co. Pvt. Ltd.,**

'M' BLOCK, CONNAUGHT CIRCUS
**NEW DELHI**

Telephones : 48202, 47944, & 48222.

Grams : "DECORATION"

WITH COMPLIMENTS FROM

AUTO BRAKES CORPORATION

4242/27, NO. 2, DARYAGANJ

DELHI

Manufacturers of Hydraulic Brake parts and Components for Automobiles.

# பாரதிதாசன் பாடல்களில் நகைச்சுவை

கவிஞர் - தென்னவன், செம்பொன்னார்கோயில்.

செந்தமிழ் நாட்டு மாகவிஞர் பாரதியார்க்குப் பின்னே பாரதியின் வழித்தோன்றல்கள் பலர் தோன்றினார்கள். அவர்களுக்குள்ளே தலைமைக் கவிஞராகத் திகழ்ந்து மறைந்து போனவர் நமது பாவேந்தர் பாரதிதாசன் ஆவர். அவர் கவிதை புனைவதில் மட்டுமல்ல; முத்தமிழிலும் வல்ல முத்ததமிழ்க் கவிஞராகவும் திகழ்ந்தவர் என்றால் அது முற்றிலும் பொருத்தமானதாகும். ஆம்; அவர் இயல், இசை, நாடகம் ஆகிய முத்துறையிலும் ஈடுபாடு கொண்டு பற்பல இனிய இலக்கியக் கவிதை நூல்களைத் தமிழகத்திற்குத் தந்து, தமிழின் சிறப்பையே உயர்த்திய மாகவிஞர்!

நம் கவிஞர் பெருமகனை எண்ணுகின்றபோது அவரது கவிதைகள் தான் நம் நினைவுக்கு முதற்கண் நல்ல விருந்தாக அடைகின்றன. அதற்குக் காரணம் அவரது கவிதைகள் படிப்போர் உள்ளத்திற்கு உணர்ச்சியையும், கிளர்ச்சியையுக் ஆர்வத்தையும் ஊட்டுகின்ற தன்மை வாய்ந்தவையாக அமைந்தவையே, இவை மட்டுமல்ல; இவரது கவிதைகளில் ஆங்காங்கே நகைச்சுவைகளும் நிறைந்து இன்பம் வருவனவும் ஒரு காரணம் என்றால் அது மிகையன்று.

நம் கவிஞர் எழுதியுள்ள நூல்கள் அனைத்திலுமே தேவையான இடங்களில் எல்லாம் அளவோடுகூடிய நகைச்சுவை அமுதை அள்ளிக் கொடுத்துள்ளார். சிறப்பாக இவர் எழுதிய நகைச்சுவை இலக்கியங்களாக 'இருண்ட வீடு', 'நல்லமுத்துக் கதை' ஆகிய இரு சிறு காவியப் படைப்புக் களையும் குறிப்பிடலாம்.

இக்கட்டுரையில் நம் கவிஞர் அவர்களின் கவிதைகளில் காணப்படும் நகைச்சுவை விருந்துகளில் சிலவற்றை மட்டுமே குறிப்பிட விரும்பு கின்றேன்.

நம் கவிஞர் இயற்றிய "அழகின் சிரிப்பு" என்னும் கவிதை நூல் இயற்கை அழகுகளை எல்லாம் கற்பனை வளத்தொடு வெளிப்படுத்துவது. அந்நூலில் 'ஆல்' என்னும் பகுதியும் ஒன்று. அதில் குரங்கு ஒன்று ஆலமரத்தின் கிளைகள்தோறும் தாவித்தாவி விளையாடுகின்றது. ஒருகிளையில் பாம்பு ஒன்று தொங்குகின்றது. அதனைக் குரங்கு விழுது என்று தொடு கின்றது. தொட்டதும் தான் பாம்பு என்று அறிந்து அஞ்சிகிளைகள்

தோறும் தாவித்தாவி மரத்தின் உச்சிக்குச் செல்லுகிறது. மரத்தின் விழுதுகள் அனைத்தும் அப்போது அதற்கு பாம்புகளாகத் தோன்று கின்றன. உச்சிக்குச் சென்ற குரங்கு தன்னுடைய வாலும் ஒரு பாம்பு தானோ என்று, அஞ்சி நடுங்குகின்றது! இதுதான் பாட்டு:

கிளையினில் பாம்பு தொங்க
விழுதென்று குரங்கு தொட்டு
"விளக்கினைத் தொட்ட பிள்ளை
வெடுக்கெனக் குதித்ததைப் போல்"
கிளைதோறும் குதித்துத் தாவிக்
கீழுள்ள விழுதை எல்லாம்
ஒளிப்பாம்பாய் எண்ணி எண்ணி
உச்சிபோய் தன்வால் பார்க்கும்!

இதில் குரங்கு பாம்பை விழுதென்று தொட்டு அது பாம்பென்று அறிந்ததும், அதன் நிலையைக் கவிஞர் ஓர் உவமையின் மூலமாகச் சொல்வது நமக்கு வியப்பூட்டுகின்றது.

நம் கவிஞர் எழுதிய ஒரு சிறந்த காதல் காவியம் "எதிர் பாராத முத்தம்" இக்காவியத்தில் பொன் முடி என்பானும், பூங்கோதை என்பாளும் உறவு முறைக் காதலர்கள். என்றாலும் இவர்களின் பெற்றோர்கள் இதை ஒப்பவில்லை. இரு குடும்பங்களுக்குள்ளும் அப்போது உறவு முறிந் திருந்தது. பூங்கோதை தன் பெற்றோரால் வீட்டில் தனியறை ஒன்றில் சிறையிடப்பட்டிருந்தாள். பொன்முடி அவளைக் காணக்கூட இயல வில்லை! இந்நிலையில் அவன் பூக்கள் விற்கும் 'பண்டாரம்' ஒருவனை நட்பாகக் கொண்டு அவளுக்குக் கடிதம் ஒன்று கொடுத்துத் தூது அனுப்புகின்றான் பண்டாரம் ஒரு முழு செவிடன்! அவன் பூங்கோதை யைக் கண்டு, பொன்முடியின் கடிதத்தையும் கொடுத்து, அவளோடு பேசுகின்றான். அவள் தன் பெற்றோர்க்குப் பண்டாரத்தின் தூதுச் செய்தி தெரியாமல் இருக்க எண்ணி, அவனை விரைவில் அங்கிருந்து போகச் சொல்கிறாள். அவள் சொல்வது செவிட்டுப் பண்டாரத்திற்கு விளங்கவில்லை. மேலும் மேலும் பண்டாரம் பலப்பல பேசுகிறான். இப்பகுதி காவியத்தின் நகைச்சுவைப் பகுதிகளில் ஒன்று. அது இது:

........மங்கை
"என் அன்னை வருவாளையா
முன்னர் நீர்போதல் வேண்டும்"
என்று தன்முகம் சுருக்கிப்
பின்புறம் திரும்பிப் பார்த்துப்
பேதையும் நடுங்க லுற்றாள்.
"கன்னத்தில் என்ன" என்றான்.

''காயம்'' என்றுரைத்தகள் மங்கை
"தக்கதோர் மருந்துண்டு'' என்றான்
''சரி சரி'' போவீர்'' என்றாள்.
அக்கணம் திரும்பினாள்; பின்
விரல் நொடித் தவனைக் கூவிப்,
''பக்குவ மாய் நடக்க
வேண்டும்நீ'' என்றான். பாவை,
திக்கென்று தீப்பிடித்த
முகம் காட்டச் சென் றொழிந்தாள்.

இங்கு, பூங்கோதை பண்டாரத்திடம், அவன் செவிடு என்பதால் தன்னுடைய அன்னை வந்துவிடுவாள், விரைவில் அகன்றுவிடு என்பதைக் குறிப்பால் உணர்த்த விரும்பி, தன் முகத்தைச் சுருக்கி, பின்புறம் திரும்பிப் பார்த்து நடுங்குவதுபோல நடித்துக் காட்டினாள். அதை உணராத பண்டாரம் ''கன்னத்தில் என்ன'' என்று கேட்பதும், அதற்கு அவள் ''காயம்'' என்று விடை பகர்வதும், மேலும் பண்டாரம் ''காயத்திற்கு என்னிடம் மருந்துண்டு'' என்று பேச்சை நீட்டுவதும், எது சொல்லியும் கேளாத பண்டாரத்தை இறுதியில் அவள், தன் முகத்தில் கனல் கக்கும் சினக்குறி காட்டி ஓடச் செய்ததும் எண்ண எண்ண நமக்கு நகைச்சுவை விருந்து அளிப்பன.

இந்த பண்டாரம் பூங்கோதையிடம் சென்று வந்தச் செய்தியைக் கடையில் கணக்கர்களோடு வீற்றிருந்த பொன்முடியிடம் சென்று சந்தர்ப்பம் அறியாமல் உரைக்கத் தொடங்கினான். பொன்முடி கணக்கர்கள் தன் காதலை அறியக்கூடாது என்று எண்ணிப் பண்டாரத்தை பிடித்து இழுத்துக் கொண்டுபோய்த் தெருவில் நிறுத்தி "குறிப்பறியாமல் இப்படிப் பலர் முன்னிலையில் இது பற்றிப் பேசாதீர்'' என்று கடிந்து கூறவே, மீண்டும் பண்டாரம் கடைக்குள் நுழைகின்றான். பொன்முடி அவனைத் தடுத்து ''ஏன்'' என்று கேட்பதும், பண்டாரம் அதற்குச் சொல்லும் விடையும் நம்மை உடல் குலுங்கச் சிரிக்க வைக்கின்றன. பாட்டு இதுதான்:

பொன்முடி "யாரைப் பார்க்கப்
போகின்றீர்'' என்று கேட்டான்
''பொன்முடி, உனக்கும் அந்தப்
பூங்கோதை தனக்கும், மெய்யாய்
ஒன்றும் சம்மந்த மில்லை
என்று போய் உரைக்க எண்ணம்''
என்று பண்டாரம் சொன்னான்.

இதே பண்டாரம் ஏதோ ஒரு காரியமாக பொன்முடியின் தந்தையான மானநாயகனை அவன் வீட்டில் காணச் சென்றான். அப்போது மான நாயகன் பொன்முடிக்கும், பூங்கோதைக்கும் ஏற்பட்டுள்ள காதலையும், அதனால் பொன்முடி பூங்கோதையின் தந்தையால் சவுக்கடி பட்டதையும் அறிந்து உள்ளம் வெந்து ஆற்றாது தன் மனையாளிடம் சொல்லி வருந்திக் கொண்டிருந்தான். இச்செய்தியும, பண்டாரத்தின் வருகையும், அவன் கூற்றும் கவிஞர் சொற்களால் அறிகின்றபோது நம்மால் சிரிக்காமல் இருக்க முடியவில்லை. கவிஞர் சொற்கள் இவை :

என்று பலவாறு
சொல்லி இருக்கையிலே
நின்றெரியும் செந்தீயில்
நெய்க்குடமும் சாய்ந்ததுபோல்
பண்டாரம் வந்து
பழிப்பதுபோல் பல்லிளிக்கக்
கண்ட அந்நாயகன்
கடிந்த மொழியாக
''நில்லாதே போ'' என்றான்
''என்னால் நிகழ்ந்ததில்லை
சொல்லென்று தங்கள்பிள்ளை
சொன்னபடி போய்ச்சொன்னேன்
பூங்கோதை ஓலைதந்து
போய்க்கொடு என்றாள் ; அதனை
வாங்கிவந்து பிள்ளைவசம்
சேர்த்தேன் வேறென்ன''
என்றுரைத்தான் பண்டாரம்!
கேட்டான் இதை நாயகன்
''சென்றதற்குக் கூலிஎன்ன
சேர்ந்தது உனக்கு''என்றான்
''பத்துவராகன் பணம்
முத்துச் சரத்தையவள்
மூடித்தந்தாள் எனவும்
எந்த மடையன்
இயம்பினான் உங்களிடம்?
அந்தப் பயலை
அழையுங்கள் என்னிடத்தில்!
தாடிஒன்று கேட்டான்
எனக்கென்ன! தந்ததுண்டு
மூடி முக்காடிட்டு
மூஞ்சியிலே தாடிஒட்டி
நான்போதல் போல

நடந்தான் அவனிடத்தில்,
மான்வந்தாற் போல்வந்து
வாய்முத்தம் தந்துவிட்டுப்
போய்விட்டாள் வீட்டுக்குள்
பூங்கோதை; மெய்க்காதல்
ஆய்விட்டாள் பொன்முடிமேல்!
அப்பட்டம்! பொய்யல்ல"
என்று பண்டாரம்
இயம்பவே..................

இதில் பொன்முடி, பூங்கோதைபால் கொண்ட காதலையும், இருவரும் தம்முள் கடிதங்கள் பரிமாறிக் கொண்டதையும், இதற்குப் பண்டாரம் உதவி புரிந்ததற்காக கைக்கூலியாகப் பொன்முடி பத்து வராகனும், பூங்கோதை முத்துச்சரமும் பண்டாரத்திற்குத் தந்ததையும், பொன்முடி அவனிடம் பொய்த்தாடி பெற்று பண்டாரம் போல் மாறுவேடம் பூண்டு பூங்கோதையைக் காணச் சென்றதையும், கவிஞர் பண்டாரத்தின் வாயிலாகவே உள்ளது உள்ளபடி நகைச்சுவையாக வெளிப்படுத்துவது படிப்போர்க்குப் பெருவிருந்து நல்குவதாக அமைந்துகிடக்கின்றது. இதனினும் பெருநகை தருவது பண்டாரம் பொன்முடியைக் கண்டு, தான் அவன் தந்தையிடம் ஏதும் உரைக்கவில்லை என்று கூறும் பகுதி. அது இது:

பண்டாரம் செப்புகின்றான்
"உன் தந்தை யாரும் நானும்
ஒன்றுமே பேசவில்லை
அவளுக்கும் உனக்குமுள்ள
அந்தரங் கத்தை யேனும்
அவன் உன்னை மரத்தில்கட்டி
அடித்ததை யேனும், காதற்
கவலையால் கடை யை நீதான்
கவனியா மையை யேனும்
அவர்கேள்விப் படவே இல்லை
அதற்கவர் அழவு மில்லை
நாளைக்கே அயலூர்க் குன்னை
அனுப்பிடும் நாட்ட மில்லை;
கேளப்பா, தாடிச் சேதி
கேட்கவும் இல்லை" என்றான்

இப்படி "எதிர் பாராத முத்தம்" என்னும் காவியத்தில் பண்டாரம் என்னும் பாத்திரத்தை நகைச்சுவைப் பாத்திரமாகவே படைத்து, அவன்

மூலமாக நமக்குக் கவிஞர் நகைச்சுவை விருந்தை வளமாக அளித்துள்ளார்.

கவிஞர் கல்வியறிவுள்ள குடும்பம் "பல்கலைக்கழகம்" என்றவர், கல்வியறிவில்லாத குடும்பத்தை "இருண்ட வீடு" என்றார். "இருண்ட வீடு" எப்படி இருக்கும் என்பதை அப்பெயர் கொண்ட ஒரு சிறு காவியம் மூலம் நமக்குக் கவிஞர் காட்டுகின்றார்.

கல்வியறிவில்லாத குடும்பம் அது .அக்குடும்பத்தில் வீட்டில்—பெரிய பையன் ஒருவன் அவன் காலையில் எழும்போதே காலை உணவான பிட்டையும் வடையையும் எண்ணிக் கொண்டே எழுகின்றான். அவன் செயலை கவிஞர் இப்படிக் கூறுகிறார் :

பெரிய பையன் பிட்டையும் வடையையும்
கருதி முதலில் கையாள் சாம்பலைத்
தொட்டுப் பல்லையும் தொட்டே, உரலின்
அருகில் இருந்த பால்செம்பை, விரைவில்
தூக்கி முகத்தைச், சுருக்காய்க் கழுவினன்.
பிட்டுக் காரி தட்டினாள் கதவையே
திட்டென்று கதவைத் திறந்தான் பெரியவன்
பிட்டையும் வடையையும் தட்டில் வாங்கினன்
பெட்டி மீதில் இட்டுட் கார்ந்தான்
ஆவலாய் அவற்றை அருந்தத் தொடங்கினன்
நாவில் இடுக்கையில் நடுவயிறு வலித்தது?
வெளிக்குப் போக வேண்டுமென் றுணர்ந்தான்
வடையின் சுவையோ விடேன்விடேன் என்றது
கொல்லை நோக்கிச் செல்லவும் துடித்தான்
மெல்லும் வடையை விழுங்கவும் துடித்தான்
வில்லம்பு போல மிகவிரை வாக
நடுவிற் கிடந்த நாயை மிதித்துப்
படபட வென்று பானையைத் தள்ளி
கன்றின் கயிற்றால் கால்தடுக் குற்று
நின்ற பசுவின் நெற்றியில் மோதி
இரண்டு பற்களை எங்கேயோ போட்டுப்
புரண்டெழுந் தோடிப் போனான் கொல்லைக்கு!

பற்கள் போன பிறகு பையன் செயலையும் கவிஞர் இப்படிக் கூறுகிறார் :

"பெரிய பையன் பிசைந்தான் பிட்டை
ஒருதுளி கூட உண்ண மாட்டாமல்
கொரகொர கொழகொழ கொண கொண என்றான்"

படிக்கின்ற நமக்கு இதன் பொருள் விளங்கவில்லை அல்லவா? அதையும் கவிஞர் இப்படிக் கூறுகிறார் :

"இதன் மொழிப் பெயர்ப்பு என்ன என்றால்
எயிறு வீங்கி இடத்தை மறித்தது
தின்பதற்கு என்ன செய்வேன் என்பதாம்"

பெரிய பையன் செயல் இப்படி! குடும்பத் தலைவி செயல் எப்படி? கவிஞர் கூற்று இது:

வீட்டுத்தலைவி நீட்டிய காலும்
ஆட்டின் கத்தல்போல் அருமைப் பாட்டுமாய்க்
குழந்தையை வைத்துக் குந்தி யிருந்தாள்.

இவற்றைப் படிக்கின்றபோது எவர்தான் சிரிக்காமல் இருக்கமுடியும்! கவிஞர் நகைச்சுவை இலக்கணத்தின் எல்லைக்கே சென்றுவிட்டார் என்று தானே கூற வேண்டும்!

கவிஞர் எழுதிய மற்றொரு நகைச்சுவை கூடிய சிறு காவியம் "நல்ல முத்துக்கதை." இதில் வெள்ளையப்பன் என்பானுக்கு, அம்மாக்கண்ணு என்பாள் ஆசைநாயகி. பல நாளாக வெள்ளையப்பனைக் காணாது ஏங்கித் தவித்த அம்மாக்கண்ணுவின் முன்னால் திடீரென்று ஒருநாள் அவன் வந்து தோன்றுகின்றான். அம்மாக்கண்ணு அவனைப் பார்த்து இப்படிக் கூறுகின்றாள்:

இன்று நீங்கள் இங்கு வராவிடில்
என்றன் உயிரே ஏன் இருக்கும்?
பிரிந்து சென்றீர்! பிசைந்த சோற்றை
கையால் அள்ளினால் வாயோ கசக்கும்
பச்சைத் தண்ணீர் பருகி யறியேன்
ஏக்கம் இருக்கையில் தூக்கமா வரும்?
பூனை உருட்டும் பானையை, அவ்வொலி
நீங்கள் வரும்ஒலி என்று நினைப்பேன்
தெருநாய் குரைக்கும் வருகின்றீரோ
என்று நினைப்பேன் ஏமாந்து போவேன்
கழுதை கத்தும்; கனைத்தீர் என்று
எழுந்து செல்வேன் ஏமாந்து நிற்பேன்
உம்மைஎப் போதும் உள்ளத்தில் வைத்ததால்
அம்மியும் நீங்கள், அடுப்பும் நீங்கள்
சட்டியும் நீங்கள் பானையும் நீங்கள்
வீடும் நீங்கள் மாடும் நீங்கள்
திகைப் படைந்து தெருவில் போனால்
மரமும் நீங்கள் மட்டையும் நீங்கள்
கழுதை நீங்கள் குதிரை நீங்கள்
எல்லாம் நீங்களாய் எனக்குத் தோன்றும்.

இவ்வரிகளைப் படித்துவிட்டு சிரிக்காமல் ஒருவர் இருப்பாரானால் அவரை நாம் மனிதராக ஏற்றுக் கொள்வதுதான் எங்ஙனம்? மனிதன்

தான் சிரிக்க முடியும்! சிரிக்கக் கற்றுக் கொள்ளாதவரையும் சிரிக்க வைக்கக்கூடிய ஆற்றல் இவ்வரிகளுக்கு உண்டே!

தற்போது நகைச்சுவை கலவாத நாடகங்களேயோ அல்லது திரைப் படங்களேயோ மக்கள் அவ்வளவாக விரும்புவதில்லே. இன்னும் சொன்னுல் நகைச்சுவையில்லா மேடைப் பேச்சையும் மக்கள் மிக விரும்பிக் கேட்பதில்லே! அது போலவே நகைச்சுவை இல்லா இலக்கியங்களேயும்—காவியங்களேயும்—மக்கள் புறக்கணிப்பர் என்பதை நன்கு அறிந்தவர் நம் கவிஞர்! எனவேதான் அவர் தம்முடைய பாடல்கள்—கவிதைகள்—காவியங்கள் அனைத்திலும் எங்கெங்கே நகைச்சுவை தேவையோ அங்கெல்லாம் அந்தத் தெள்ளமுதை அளவோடு—நிறைவோடு—பெய்து பாடலுக்கும் கவிதைக்கும், காவியத்திற்கும் மேலும் சுவை கூட்டியுள்ளார்! அவர் தம் காலக் கவிஞர்களில் அவரே நகைச்சுவைக்கு முதலிடம் தந்த முதற் பெரும் கவிஞர்!

நம் கவிஞர் நகைச்சுவையைக் கையாண்ட முறையே தனிச் சிறப்பு உடையதாகும். வீணே சிரித்து மகிழ்வதற்கு என்று மட்டுமே அதனேக் கையாளுவது உண்டு; சிரித்துவிட்டு சிந்திப்பதற்கும் என்றும் அதனேக் கையாளுவது உண்டு! நம் கவிஞர் பின்னே கூறிய முறையைக் கைக் கொண்டவராவர்! அதனுல்தான் அவரது இலக்கியங்கள் மக்கள் உள்ளங்களில் எல்லாம் நடமிடுகின்றன. அவரும் “மக்கள் கவிஞர்” என அழைக்கப்பட்டார்! அவர் புகழ் வாழ்க! அவர் கவிதைகள் வாழ்க! ❋


**குயில்** ★ மாதம் ஒரு புத்தகம் ★

பதிப்பாசிரியர் : மன்னர் மன்னன்

★ ★

❋

புரட்சிக் கவிஞர் பாரதிதாசன் அவர்களின் புதிய கவிதைகள்
நினேவுக் கட்டுரைகள் திறனய்வுக் கட்டுரைகள்
கவிஞர் அரங்கம் திங்கள் தோறும் தித்திக்கும்
தீஞ்சுவை விருந்தாக அமையும்.

**தனிச்சுவடி விலே ரூ 1.**

ஓர் ஆண்டில் வெளியாகும் 12 சுவடிக்கு ரூ 10. அனுப்பி அஞ்சலில் பெறலாம்.

**குயில் நிலேயம்** 95. பெருமாள் கோவில் தெரு,
புதுச்சேரி—1.

தமிழகத்தின் தலைசிறந்த நாவலாசிரியர்களின்
நாவல்களை வெளியிடும் முதன்மையான
பதிப்பகம்: **வானதி பதிப்பகம்**

தமிழில் எந்தப்புத்தகம் வேண்டுமானாலும்
எங்களுக்கு எழுதுங்கள்.

# வானதி பதிப்பகம்

82/11 பாண்டிபசார் :: தி. நகர்.
சென்னை-17.
டெலிபோன்: 42810

தில்லி தமிழ்ச் சங்கத்திற்கு எங்கள் வாழ்த்துக்கள்

★

தி மேட்டூர் கெமிகல் அண்ட் இண்டஸ்டிரியல்
கார்பொரேஷன் லிமிடெட்,
மேட்டூர் அணை ஆர். எஸ். சேலம் ஜில்லா

★

உற்பத்தியாளர்: காஸ்டிக் சோடா, ஸ்திர பிளீச்சிங்
பெளடர், குளோரின் திரவம், ஹைட்ரோ குளோரிக் அமிலம்,
பொடாசியம் குளோரேட், கால்சியம் குளோரைடு,
வனஸ்பதி, சுத்திகரிக்கப்பட்ட தாவர எண்ணெய்,
சோப்பு வகைகள்

★

மேனேஜிங் ஏஜண்ட்ஸ்:

**சேஷஸாயி பிரதர்ஸ் (பிரைவேட்) லிமிடெட்.,**

திருச்சிராப்பள்ளி

★

தில்லி பிரதிநிதி:

ரா. சக்கரவர்த்தி **M.A., B.L.,**
E. 3/1, ஜாண்டிவாலன் எக்ஸ்டென்ஷன்
நியூ லிங்க் ரோடு, தபாற் பெட்டி எண். 89,
புதுதில்லி-1.

தொலைபேசி எண்: 568634 தந்தி: "காமதேனு"

# குடும்பத் தலைவர் பாரதிதாசன்

(கவிஞரின் புதல்வர்
திரு
சு. மன்னர் மன்னன்)



கவிஞர் வாழ்ந்த வீடு

"பெரிய பாப்பா!"

—"இதோ வந்துட்டேம்பா!"

—இது......கொண்டா!

முற்றத்தில், சாய்வு நாற்காலியில் அமர்ந்திருக்கும் கவிஞர் தம் கையில் ஊற்றிறகை நீட்டிப் பிடித்திருக்கிறார்.

"பெரிய பாப்பா" என்று கவிஞர் அழைப்பது என் தமக்கையார் சரஸ்வதியை!

கையில் மைக்கூட்டுடன் வந்து, கவிஞரின் ஊற்றிறகை வாங்கி மை நிரப்பித் தருகிறார் 'பெரிய பாப்பா!' கவிதைப் பணி தொடர்கின்றது.

நீண்ட சட்டங்கள் பொருந்திய சாய்வு நாற்காலி. அச் சட்டங்களின் மீது ஒரு பலகை. அதில் சில தாட்கள்!

தாளை உற்றுநோக்கும் கவிஞரின் கூரிய விழிகள், ஒரு சமயம் வேறு எதையாவது நோக்கினாலும் கருத்துஅதிலே படியாது. பார்வைக்கும் கவிஞருடைய கருத்து ஓட்டத்துக்கும் தொடர்பு இருக்காது. சிந்தை முழுதும் செந்தமிழ்க் கவி புனைவதிலே தோய்ந்திருக்கும்.

இடது காலின் பெரு விரல் அடுத்த விரலோடு இணைந்து தாளமிடும். தம்மை மறந்து கவிதைச் சுவையிலே ஆழ்ந்து போவார். அப்போது இடது கை சில சைகை காட்டும். ஒன்றன்பின் ஒன்றாகச் சிகரெட் புகையும். அதிகமாகப் புகை இழுப்பதில்லை. கையில் சிகரெட் இருந்து கொண்டே இருக்க வேண்டும்.

கவிஞருக்கு எதுவோ தேவை. உடனே 'பெரிய பாப்பா' என்ற குரல் கேட்கும். நேரிடும் சூழ்நிலையும் அறிந்து தேவையை நிறைவேற்ற என் தமக்கையார் ஓடோடி வந்து விடுவார்.

இப்போது ஊற்றிறகில் மை தீர்ந்து போயிற்று. இதைக் குறிப்பதுதான் "இது கொண்டா".

கவிஞர் கருத்து முழுவதும் கவிதையிலே ஆழ்ந்து விட்டது. தமக்கையார் அடுக்களைக்குச் சென்றவர், சிறிது நேரத்தில் திரும்பி வந்து.

"சாப்பாடு போடலாமாப்பா" என்கிறார். எழுதிக்கொண்டிருந்த கையை நிறுத்தி விட்டுத் தலைநிமிர்கிறார். ஒருநொடி நேரம் எதுவும் சொல்லாமல் தம் வேலையிலேயே கருத்தூன்றுகிறார்.

தம் நினைவே இல்லை கவிஞருக்கு! கவிதைப் பெண்ணாளின் மையில் பெருகிவிட்டது போலும்! "பேச்சில்லை மூச்சில்லை, பிறிதொரு செயலில்லை!"



பாவேந்தரும் அவர் துணைவியார் பழனியம்மாளும்

தமக்கையார் திரும்பிச் செல்கிறார். அரைமணி நேரம் கழிகின்றது. கவிஞரின் எதிரில் வந்து, "சாப்பிடலாமாப்பா!" என்கிறார்.

"நான் இன்னும் சாப்பிடவில்லையா!" வியப்போடு கேட்கிறார் கவிஞர்.

"ஊஹூம்" தமக்கையார் பதில் இது. "அட! இதை ஏன் முன்னேயே சொல்லவில்லை?" என்று கேட்டு விட்டு அடுக்களைப் பக்கம் போகிறார்.

அன்று அவருக்கு விருப்பமான மீன் வறுவல். அதையே நிரம்பத் தின்கிறார். குழம்பு, இரசம் இவற்றில் நாட்டம் இல்லை. ஒப்புக்குப் பிசைந்து விட்டு கையை கழுவுகிறார்— அதாவது அவர் முன் நீட்டிய செம்பில் கையை அழுத்தித் துடைத்தபடி முற்றத்துக்கு வருகிறார்.

"கருத்தூற்று மலை யூற்றாய்" விட்ட இடத்திலிருந்து கவிதை பெருக்கெடுக்கிறது.

திடீரென்று ஒரு குரல்: "பாப்பா இது எங்கே?"

தம் கையோடு எடுத்துவந்த தீப்பெட்டியைக் கவிஞரிடம் கொடுத்து விட்டுக் குடிநீர்க் குவளையை சிறு மேசை மீது வைத்துச் செல்கிறார் தமக்கையார்.

பிற்பகல் மணி இரண்டு.

என் தங்கையரும் நானும் பள்ளிக்குப் புறப்பட்டாயிற்று. தெரு

வில் ரிக்ஷா வந்து நிற்கிறது.

துவைத்துப் போட்ட வேட்டி, கவிஞர் எங்கோ எறிந்துவிட்ட மேற்சட்டை, 'கோட்' முதலியவற்ருேடு கவிஞர் முன் வந்து நின்று 'மணி இரண்டாச்சே' என்கிருர் தமக்கையார்.

திடுக்கிட்டு எழுந்த கவிஞர், உடுத்திக் கொள்கிருர்.

"மத்தியானம் வைத்த குழம்பே ராத்திரிக்கும் வச்சுடலாமா என்று அம்மா கேக்கச் சொன்னுங்க என்கிருர் தமக்கையார்.

இந்தக் கேள்விக்குப் பொருள் கவிஞருக்குத் தெரியும்.

இரவு உணவுக்குப் புதிதாக எதுவும் வாங்கக் கையில் காசில்லை என்பதுதான் பொருள்.

கவிஞர் பதில்: 'சரி சரி, அப்போ சிகரெட்டுக்குக் காசு?"

தமக்கையார் தன் கையில் இருந்த ஒன்றே காலணுவை எடுத்துக் தருகிருர் கவிஞரிடம்!

கவிஞருக்குக் கவலை சிகரெட்டைப்பற்றி! ஒன்றே காலணுவுக்கு இருபது சிகரெட் கிடைக்கும் அக் காலத்தில் புதுவையில்!

கவிஞரோடு நாங்கள் பள்ளிக்குப் புறப்பட்டாயிற்று.

இந்தக் குடும்பக் காட்சியில் புரட்சிக் கவிஞரை ஒரு குடும்பத் தலைவராகக் காண்கிறீர்கள்.

அதுமட்டுமல்ல.

1944-ம் ஆண்டுவரை எங்கள் குடும்பத்தின் விளக்காய் ஒளிர்ந்த என் தமக்கையாரின் பொறுப் புணர்ச்சியைக் கண்டு கொள்கிறீர்கள்!

இது கொண்டா, இது எங்கே என்று கவிஞர் குரல் கொடுக்கும் போதெல்லாம், குறிப்பறிந்து அத் தேவையை நிறைவேற்றி வந்த என் தமக்கையார் திருமணமாகித் தன் கணவர் வீட்டுக்குச் சென்றது வரை அவர் காட்டி வந்த நுண்ணறிவும் பொறுப்புணர்ச்சியுமே எங்கட்கெல்லாம் நல்ல பழக்க வழக்கங்களைக் கற்றுத்தந்தன. நுண்ணறிவோடு பழகிக்கொண்டிராவிடில் கவிஞரின் கடுஞ்சினம் எங்களைத் தீய்த்துவிட்டிருக்குமே!

தாம் உணவு அருந்தியதும் அருந்தாததும் கூட நினைவு வைத்திராத இக் 'குடும்பத் தலைவர்தான்' குடும்ப விளக்கைப் படைத்து அளித்திருக்கிருர், பாரோர் புகழும் படி!

'நல்ல குடும்பம் ஓர் பல்கலைக்கழகம்' என்னும் புதுநெறியைப் படம் பிடித்துக் காட்ட வந்த 'குடும்ப விளக்கு', குறள் ஓவியம்.

வேலைக்காரி இல்லை, எங்கள் குடும்பத்தில்!

ஏன் தெரியுமா?

வேலைக்காரி வைத்துக்கொள்ளத் தோது இல்லை—அதாவது அத்துணை வருவாய் இல்லை எங்கள் குடும்பத் துக்கு!

எப்படியோ ஒரு வேலைக்காரி வைத்துக்கொள்ள முடிந்த போதும் நீடிக்க முடியவில்லை. காரணம், கவிஞரின் குரலையும் ஆணை பிறப்பிக்கும் தோரணைகளையும் கண்ட வேலையாட்கள் வெருண்டு ஓடுவர் !

வருவாய் குறைவு — வருவோர் போவார் மிகுதி—செலவு மிக அதிகம்—உறவினர் ஒத்துழைப்பு அற்ற சூழ்நிலை !

இந்த இக்கட்டுகள் நிறைந்த எங்கள் குடும்பத்தின் தலைமகள் என் தமக்கையார் சரசுவதி 15 வயதிலேயே படிப்பை நிறுத்த வேண்டியதாயிற்று. இளமைப் பருவ முதலே கவிஞருக்கு உதவியாளராகப் பணி செய்து பழகியதாலும், சினம் கொண்டு சீறும் கவிஞருக்கும்—நீக்குப்போக்கு அறியாத என் அன்னையாருக்கும் இடையே ஒரு சுமுக உறவை ஏற்படுத்தவேண்டும் என்கிற பொறுப்புணர்ச்சி மேலிட்ட பருவத்திலும் என் தமக்கையார் குடும்பச் சுமையை முற்றாகத் தாமே ஏற்றிருந்தார்.

கவிஞர் வெளியூர் போகப் புறப்படுவார். அச்செய்தி இப்படிவெளிப்படும்.

—பெரிய பாப்பா ! வேட்டி ஏதாவது இருக்கா ?


The THREE
most renowned cycles in the world

Hercules

PHILLIPS

and BSA

Made by T. I. CYCLES OF INDIA, Madras 53. Proprietors: Tube Investments of India Limited, Madras

—ஒண்ணு இருக்கப்பா !

—வெளியூருக்குப் போகணுமே.

—ஆமா ராத்திரிக்குத் தயார் செய்துடறேன்.

—ராத்திரிக்கா ?

—ஆமாம்பா, சத்தம் போடாமல் ஏற்பாடு செய்துடறேன்.

ஊம், ஊம் !

கவிஞர் தலையாட்டிவிட்டுத் தம் வேலையில் மூழ்கி விடுவார்.

இரவு உணவு முடித்து, எல்லா வேலைகளும் தீர்ந்த பின், ஊரே உறக்கத்தில் ஆழ்ந்துபோன சமயம் என் தமக்கையார், கவிஞருக்கு வேண்டிய துணிகளை ஓசையின்றித் துவைத்து உலர்த்தி, அதிகாலையில் ஒரு கிண்ணத்தில் நெருப்பிட்டுப் பெட்டிப்போட்டுத் தேய்த்து வைத்து விடுவார்.

கவிஞர் அதிகாலையில் எழுந்து விடும் பழக்கம் உடையவர். ஊருக்குப் பயணமாக வேண்டும் என்றால் முன் நேரத்திலேயே எழுந்து விடுவார்.

"சீப்புக் கண்ணாடி ஆடை சிறு கத்தி கூந்தல் எண்ணெய் சோப்பு பாட்டரி விளக்குத் தூக்குக் கூஜா தாள் பென்சில் தீப்பெட்டி கவிகை சால்வை செருப்புக் கோவணம் படுக்கை காப்பிட்ட பெட்டி ரூபாய் கைக்கொள்க யாத்திரைக்கே!'' என்றெழுதியவராயிற்றே, எல்லாவற்றையும் தயாரித்து வைத்திருப்பாரா? அதுதானில்லை.

குடை, கூஜா, முதலானவை கவிஞர் கைக்கொள்வதில்லை.

நாங்கள் ஒவ்வொன்றாய்ச் சேர்த்துக் காப்பிட்ட பெட்டியில் வைத்து அனுப்பவேண்டும். திரும்பி வரும் காப்பு உடைக்கப்பட்ட பெட்டியாகவே வரும் சாவி தொலைக்கப்பட்டதால்!

கொடுத்து அனுப்பும் பெரும்பாலான பொருட்கள் காணப்படமாட்டா. கவிஞர் அவற்றை நண்பர்கட்கு அன்பளிப்புச் செய்திருப்பார்.

மேலாடை, பேனா, டார்ச்விளக்கு முகம் பார்க்கும் கண்ணாடி திரும்பி வருவதில்லை. மிகக் குறைந்த விலையில் இவை புதுச்சேரியில் கிடைப்பன. மேலும் மற்ற ஊர்களில் கிடைக்கப் பெறாத வெளி நாட்டுப் பொருட்கள்!

மிகக் குறைந்த விலையில் வாங்கி விடலாம்.

உண்மைதான் !

அடிக்கடி இவற்றிற்கு மூலதனம் இடுவது எங்களால் முடியாதே !

கவிஞருக்கு இவையெல்லாம் கவலை தருவதில்லை.

சிகரெட் வாங்கவும் சில்லறையில்லை என்று அறிவிக்கப் பட்டால் தான் கவிஞர் மனம் வருந்துவார்.

இக்கவலை, ஒரு குறிப்பிட்ட தொகை கிடைத்த உடனே கரைந்து போகும்.

ஆண்டு 1942, இக்கட்டானகாலம்.

புதுவை அரவிந்த ஆசிரமத்தில் தங்கியிருந்து எண்ணற்ற தமிழ் நூற்களை எழுதிக்கொண்டிருந்த திரு. சுத்தானந்த பாரதி அவர்களின் நூற்களைப் புதுவை "பாரத சக்தி நிலையம்" என்ற நிறுவனத்தின் உரிமையாளர் திரு. பாலசுப்பிரமணியம் என்பார், ஒரு நாள் கவிஞரைக் காணவந்தார். தம் நிறுவனத்தைப் பற்றியெல்லாம் எடுத்துக் கூறி, புதிய நூல் ஏதாவது எழுதித் தரு மாறு கேட்டார்.

கவிஞர் தலையசைத்தார், வேண்டா விருப்பாக!

நாட்கள் இரண்டு நகர்ந்தன. கடும் மழை பெய்தபோது நாங்கள் வந்த ரிக்ஷா பழுதாகி விட்டது. உடனே மாற்றியாக வேண்டும். பள்ளிக்குப்போக இன்றியமையாதது ஆயிற்றே!

பாலசுப்பிரமணியத்திடம் ரூ. 25 மட்டும் வாங்கி வர ஆள் அனுப்பினர். பணம் வந்தது. பழுதும் பார்த்தாயிற்று. ரிக்ஷா பற்றிய கவலைவிட்டது. ஆனல் புதிய கவலை: பெற்ற கடனைத் திருப்புவது எப்படி?

கவிஞர் சிந்தனையில் மூழ்கினர்.

அன்று விடுமுறை நாள்!

"பெரிய பாப்பா!" குரல் கொடுத்தார் கவிஞர்.

"நம்ம பாட்டெல்லாம் எழுதி வச்சிருப்பியே, அதை எடுத்தா!"

சுவடி வந்தது. கீழ்வரும் பாடல்களை என் தமக்கையார் குறித்து வைத்திருந்தார்.

1. "வாழ்வினில் செம்மையை... ......!'; 2. துன்பம் நேர்கையில்" 3. "செல்வம் என்று போற்று செந்தமிழ்ச் சொல்லை" 4. "அந்த வாழ்வுதான் எந்த நாள் வரும்?" 5. "இன்பம் தருந்தமிழில் அன்பு பிறந்ததுண்டு" 6. வெண்ணிலாவும் வானும் போல 7. தாயின்மேலாணை—இந்த ஏழு பாடல்களும் கவிஞர் அவர்கள், எங்களுக்காக எழுதிய பாடல்கள். அக்காலத்தில் மிகப் புகழ் வாய்ந்த திரைப்படப் பாடல் (அசோக்குமார் என்ற படத்தில்) தியாகராச பாகவதரின் "பூமியில் மானிட ஜென்மம் எடுத்துமோர்" என்ற பாடலாகும். "சத்வகுண போதன்" என்ற பாடலும் புகழ் பெற்றிருந்தது. அவைகளை நாங்கள் முணுமுணுப்பதைக் கண்ட கவிஞர் "வாழ்வினில் செம்மையைச் செய்பவள்" என்ற பாடலையும், "செல்வம் என்று போற்று" என்ற பாடலையும் எழுதினர்.

திருமதி எம். எஸ். சுப்புலட்சுமி அவர்கள் பாடும் 'எங்கும் நிறைநாத பிரும்மம்' என்ற மெட்டில் இன்பம் தரும் தமிழில்" பாடலும் இயற்றித் தந்தார். பண்ணுருட்டி நா. இராசவேல் அவர்கள் (இப்போது 'நாவரசு' என்ற பெயரில் திரைப்படப் பாடல்கள் இயற்றுபவர்) 'விஜயாம்பிகே விமலாத்மிகே' என்ற பாடலின் இசைக் கேற்ப ஒரு பாடல் கேட்டதற்காக இயற்றப்பட்டது. "அந்த வாழ்வுதான் எந்த நாள் வரும்" என்ற பாடல். புதுக்கோட்

டை சம்பந்தம் என்பார், மதுரைமாரியப்பசாமிகள் பாடும் "துக்கமிலாதுலகத்தினில் எனையே!" எனும் பாட்டைப் பாடிக் காட்டினார். அந்த இசைக்காக எழுந்தது "தாயின் மேலாணை" கவிஞருக்குப் பெரும் புகழ் சேர்த்தன.

பிற் காலத்தில்!

இந்தப் பாடல்களைக் கவிஞர் தம் கையாலேயே பெயர்த்தெழுதினார்.

அடுத்த இரு நாட்களில் பள்ளியிலிருந்து வீடு திரும்பிய போதெல்லாம் புதிய பாடல்களை இயற்றி வந்து ஒன்று சேர்த்து 'இசையமுது' என்ற தலைப்பிட்டு பாலசுப்பிரமணியம் அவர்களிடம் தந்தார். 'இசையமுது' வெளியாகி மிகுந்த வரவேற்புடன் விற்பனையாகிற்று.

முன்பு கடனாகப் பெற்றிருந்த ரூ. 25 போக, ரூ. 75 கொடுத்து, வெளியீட்டு உரிமை பெற்றுக் கொண்ட பாலசுப்பிரமணியம், புது நூல் எழுதித் தருமாறு கேட்டார்.

தமிழாசிரியராக வேலை பார்த்து வந்த கவிஞர் வேறு எந்தவித சொத்தும் இல்லாதவர். வருவாயும் இல்லை. கவிதைகள் எழுதி இதழ்கட்கு





ரின்டான்

தாம்பூல மாத்திரை

அஜீர்ணத்தைத் தடுக்க

UNIVERSAL CHEMICAL INDUSTRIES, MADRAS-7

பம்பாய், தில்லி, கான்பூர், கல்கத்தாவில் ஏஜெண்டுகள் தேவை.

அனுப்பிப் பணம் கேட்பது அவருக்குப் பிடிக்காத சங்கதி! குடும்பப் பொறுப்பு அவருக்கு இல்லை. அது அவருக்கு ஒத்து வராத செய்தி என்பதால்! என் அன்னையாரோ கட்டு செட்டாகக் குடும்பம் நடத்த அல்லல் படுபவர். எல்லாவற்றையும் சுமுகமாகக் கொண்டு செலுத்தி வந்த என் தமக்கையார் ஒருவரே கவிஞரோடு அதிக அளவில் பழகுபவர்.

இதை நன்குணர்ந்தவர் கவிஞர். வயதுக்கு அதிகமான சுமையை என் தமக்கையார் ஏற்றிருந்தார் என்பது தான் உண்மை.

இந்த எண்ணமே கவிஞர் உள்ளத்தில் ஊறி ஒரு கதைத் தலைவி உருவாகியிருந்தாள்.

கவிஞரின் மனத்தில் கருவுற்றிருந்த அந்தக் கதைத் தலைவி இப்போது தமிழ்ச் சமுதாயத் தலைவியாகப் பிறக்கப் போகிறாள்.

'குடும்ப விளக்கு' ஒரு நாள் நிகழ்ச்சியை எழுதி முடித்தார். புதிதாக எது எழுதினாலும் எங்களிடம் படித்துக் காட்டுவார். வழக்கம் போலவே குடும்ப விளக்கைத் தமக்கே உரிய தெளிவோடும் சந்தத்தோடும் படித்துக் காட்டினார்.

என் அன்னையார் ஒரு கேள்வி போட்டார். "இத்தனையும் ஒரு பெண்ணால் ஆகிற காரியமா? அவள் என்ன மாடா!"

கவிஞரின் பதில்: "அவள் தான் பெண்!"

தம் கண் முன்னால் நாள்தோறும் நடந்தேறும் நிகழ்ச்சிகளைக் கருப்பொருளாக்கிக் கவிதைக் கண்ணோட்டத்தில் உருவகப் படுத்தி ஒரு பெருங்க வியத்தினைப் படைத்தளித்த கவிஞரின் பதில் பல்வேறு கருத்துக்களின் திரள் அல்லவா!

குடும்ப விளக்கின் தலைவி தன் துணைவனுக்குற்ற அன்பு மனைவி; துணைவி! குழந்தைகளின் நற்றாய்! மாமன் மாமியர்க்குப் பணியாள். கடைக்கணக்கு, வாணிபம், வீட்டு நிருவாகம், அடுக்களை அலுவல் அத்தனையும் அறிந்தவள். தச்சுவேலை சுண்ணவேலை, தையல்வேலை தெரிந்தவள்.

கணவனுக்கு இன்பந்தரும் அகத்துறைத் தலைவியாக மிளிரும் அந்தக் குடும்ப விளக்குக் கணவனுக்கு ஆசானாகிறாள் பொதுநலத் துறையில்! இத்தனைக்கும் மேலாக அவள் தாய் நாட்டுப் பற்றும் தாய்மொழிப் பற்றும் மிகுந்த தமிழ்ப் பாப்பா!

வேலைக்காரி வேண்டாம் என்கிறார் கவிஞர். வேண்டியது 'சடுகுடு' தையற் பொறி என்று உணர்த்துகிறார். பண்டிதர்கள் பழங்கதையின் ஓட்டைக் கெல்லாம் பணிக்கையிடல் போல்" அனைத்தும் தணிக்கை செய்யும் பொறுப்பைத் தலைவிக்கு அளிக்கிறார்.

சுருக்கமாகக் கூறினால், எங்கள் குடும்பத்தின் தலைவராக பொறுப்பு ஏற்க ஒண்ணாத பாவேந்தர், தமிழ்க் குடும்பங்களின் தலைவராகத் திகழ்

கிறார். குடும்ப விளக்கைப் படைத்த தன் மூலம்!

குடும்ப விளக்கு—குடும்பக்கலைக் கல்லூரியின் பாடத் திட்டம்! குறள் நெறிகட்டுப் புதிய இலக்கியம்! தமிழர் வாழ்வுக்கு உரிய இலக்கணம்.

எங்கள் குடும்பத் தலைவராகப் பொறுப் பேற்று நடத்த இயலாத பாவேந்தர்தான், தமிழுலகே பாராட்டும் தமிழ்ச் சமுதாய மேம்பாட்டுக்குத் தொண்டாற்றி இலக்கியம் சமைத்துக் கொடுத்திருக்கிறார்!

எனவே பாவேந்தர் பாரதிதாசன் ஒரு குடும்பத் தலைவர்தான் என்பதை நான் இப்போது அடக்கத்தோடு ஒப்புக்கொள்ள வேண்டியவனே!

*



[பாவேந்தரின் கையெழுத்து.]

*With the best compliments of :*

# THE NATIONAL ELECTRICAL INDUSTRIES LTD.

*MAKERS OF*

Power Distribution Transformers, Motors, Bench & Pedestal Grinders, Monobloc Pumps, etc. etc.

★

*ASSOCIATES*

## M s. Wandleside National Conductors Ltd.
## M/s. Crescent Iron & Steel Corporation Ltd.
## M/s. Machine Tool Reconditioning Private Ltd.

★

*HEAD OFFICE*

INDUSTRIAL ESTATE, LALBAUG,
B O M B A Y - 12.

★

*DELHI OFFICE*

32 - 34, INDRA PALACE LODGE,
**CONNAUGHT CIRCUS, NEW DELHI-1.**

Grams : NATELIN Phone : 45737

*WITH COMPLIMENTS*

FROM

★

# ZENITH TIN WORKS PRIVATE LTD.

CLERK ROAD, MAHALAKSHMI

**BOMBAY - 34**

Manufacturers of Tin containers, Plain and lithographed,
Collapsible Tubes, P. P. Roll-on Caps
and
O. T. S. Cans

# பாரதிதாசனின் புதுமை

திரு டி. என். சுகி சுப்பிரமணியம்

சிறந்த மனிதர்கள் கவிஞர்களாக மாறுவதில்லை. ஆயினும் கவிதா உணர்ச்சி இவர்களிடம் இருக்கலாம். சிறந்த கவிஞர்கள் மனிதர்களாக வாழ்வதில்லை. ஆனால் மனித உணர்ச்சியும் இவர்களிடம் இருக்கலாம். மனிதனுடைய சிறப்பியல்புகளையும் உள்ளத்து உணர்ச்சிகளையும் துல்லியமாய் சொல்லத் தெரிந்தவர்கள், சிலகால மேனும் மனிதர்களாக வாழமுடியாதவர்கள்! கவிஞர்கள் சிறப்பாக வாழமுடியாத பொருளாதார சமுதாய தமிழகத்தில் மட்டுமன்று; உலகமெங்கணும் ஒன்று போலவே இருக்கிறது. பொருளாதார் அறிவுக்கும் புலமைக்கும் எப்போதும் ஏழாம் பொருத்தம். பாரதிதாசனை நினைக்கும்போது—அவர் உண்ணத்தெரிந்த ரசிகர், பழகத் தெரிந்த பண்பாளர், பேசத் தெரிந்த மேடைப்பேச்சாளி. குடும்பத்தின் மீது பற்றும் பாசமும் உள்ளவர். பொருள் தனைப் போற்றி வாழவும் தேடிச்சேர்க்கவும் தெரிந்த புதுமைக் கவி.

புதுமை என்ற சொல் கொஞ்சம் நம்பகமற்ற சொல். பயனுள்ள பொருள்களைப் புதுமை என்று நான் குறிப்பிடுகிறேன். அவர்களிடமுள்ள புதுமை அழிக்க வரும் புதுமையன்று; ஆக்கம் தரவந்த புதுமை. தமிழை ஏமாற்ற வந்த புதுமையன்று; தமிழுக்கு ஏற்றம் தரவந்த புதுமை.

பாரதியையும் புதுமைக் கவி என்று கூறுகிறார்கள். பாரதி தாசனையும் புதுமைக் கவி என்றால் பொருந்துமா? பாரதியார் எது எதனைச் செய்யவிட்டுப் போனாரோ, அது அதனைச் செய்து முடித்தார் பாரதிதாசன். தமிழன் பெருமையையும் தமிழ்க்குடியின் நாகரிகத்தையும் எழுதி வைத்தார். நாடகங்கள் எழுதினார்; இசைப்பாடல்கள் புனைந்தார், திரைக்கதை—திரைப் பாடல்கள் இயற்றினார் பாரதிதாசன்.

வளர்ந்து வரும் தமிழிலக்கியத்தின் பாதையிலே அவர் வாழ்ந்தார். பலர் வாழ்வதற்கும், வளர்வதற்கும் பாரதிதாசனின் பரம்பரை என்னும் பெயர் உருவாக வழிகாட்டினார்.

தமிழ்ப் புலவன், தமிழ்க் கவிஞன் தனக்கு ஓலைவீடும் ஏட்டுத் தமிழும் சொந்தம் என்று இருந்தனர். தமிழர்கள் வாழ்வு-அரசியல்-

சமுதாயம்-திருமணம்-சீர்திருத்தம்-கதை-கலை-நாடகம்-பத்திரிகை அனைத்திலும் தமிழ்ப்புலவன் பங்கு பெறவேண்டும் என்று வாழ்ந்து காட்டினார். பேசத் தெரிந்தவர்கள் பின்னால் கைகட்டி நிற்பது பண்டிதரின் திறன் அன்று. தானும் பேச வேண்டும் என்பதைச் செய்து காட்டியவர். மக்களோடு ஒட்டி உரவாடிய இனிய குணம் நிரம்பிய குழந்தையுள்ளம் கொண்டவர் பாரதிதாசன்.

கருத்து மாற்றம் கவிகள் அமைப்பில் உருவமாற்றம் சொல் அடுக்கிலே சந்த மாற்றம் செய்தவர். அவர் சொற்களை கவிதையிலே பார்க்கும்போதும் படிக்கும்போதும் அவற்றின்செழுமை ஓர் அழகு. அவற்றின் கொழுமை மற்றோர் வகை அழகு. இத்தனை அழகும் ஏட்டுச்சுரைக்காய் அன்று. 'இதயம் கவரும் வருக்கைப் பலாச்சுளைகள். அடுக்கடுக்காக கண்கவர்ச்சியுடன் புத்தம் புதிய பொற்காசு போன்று சொற்கள் ஓசை நயத்துடனும் உள்ளொளியுடனும் இருக்கக் காணுகின்றேன்.

தமிழர்கள் தங்கள் இலக்கியம் வாழ்வு இரண்டிலும் வீரத்தையும் காதலையும் பதித்துச் சென்றனர். இவ்விரு உணர்ச்சிகளும் பாரதிதாசனின் கவிதைகளில் மிக அதிகம் மிக அதிகம் என்றால் சுவை அதிகம் என்று கூறுகிறேன்.

தமிழின் ஆதி கவி வள்ளுவன் கூறினான்:

கண்ணொடு கண்ணிணை நோக்கொக்கின் [வாய்ச் சொற்கள்
என்ன பயனு மில.

காதல் என்ற உணர்ச்சி, பார்வையைச் சேர்ந்தது. அங்கு பேச்சுக்கு இடமில்லை என்பது வள்ளுவன் கண்ட காதல். நம்முடைய கவிஞர்கள், முன்னோர் கூறிய கூற்றைப் போற்றுவதும் அக்கூற்றினை—புல்லாக உண்ட பசு பாலாகத் தருமாம் போலே—ருசியுடன் சிறப்பாகக் கூற முயல்வதும் மரபு. கவிச் சக்கரவர்த்தி கம்பர், வள்ளுவரின் காதற் சொற்களை உண்டவர்:

" பருகிய நோக்கெனும்
  பாசத்தாற் பிணித்து
ஒருவரை ஒருவர்தம்
  உள்ளம் ஈர்த்தலால்
கண்ணொடு கண்ணினைக்
  கவ்வி ஒன்றையொன்று
உண்ணவும் நிலைபெறாது
  உணர்வும் ஒன்றிட "

கம்பர் காணும் காதல் எப்படிப் பட்டது? கண்ணொடு கண்கவ்வி, ஒன்றை யொன்று உண்ணத் தொடங்குகிறது, உணர்வு பிறந்தது. அதிலே ஒன்றி விட்டனர் காதலர்கள். கண்ணுக்கும் கண்ணுக்கும் அப்பால் பிறக்கும் உணர்வு தான் காதலின் பயன் என்று கம்பர் கூறுகிறார். அதாவது வள்ளுவரின் "வாய்ச்சொற்களை"விட, 'உணர்வு' பெரிதாகப் பட்டது கம்பருக்கு.

எப்படி உணர்வு பிறக்கும்? உண்பது எப்படி? எதனை உண்பது? இந்தக் கேள்விகளை கம்பரிடம் நாம் போய்க் கேட்க முடியாது. கவிஞர்

கள் விட்டுச் செல்லும் ஐயங்களை, கவிஞர்களே பூர்த்தி செய்வார்கள். பல்லாண்டுகளுக்கு அப்பால் வந்து பூர்த்தி செய்வார்கள். கம்பரிடம்– நாம் கேட்க வேண்டிய ஐயங்களை பாரதிதாசனிடம் வந்து தெளிவு பெறுகிறோம்.

கண்ணொடு கண்ணினை நோக் கொக்கின் என்றால் இமையாது நோக்குதல் வேண்டும் என்பது பாரதிதாசன்–இதோ விடை கூறு கிறார்:

**இமையாது நோக்கினான் முழுநிலவை**
**இருவிழியால் தழுவினான் மனத்தால்**
**உண்டான்.**

காதல் உணர்ச்சியே மனத்திற் குள் விளையும் ஆனந்த மயமான ஊற்றுப் பெருக்குத்தான். மனம் சலனமடையாதபோது ரம்பையும் ஊர்வசியும் முழுநிலவாக இருந்தா லும் மோகன சுந்தரியாய் வந்தா லும் அசைக்க முடியாது.

மனம் உணர்வு பெறத் தொடங் கும் காலத்து "மனத்தால் உண் டான்" என்றார். மனத்தால் உண் டால் வருவது என்ன? உவப்பு. அதுவும் சுமை சுமையாய் உவப் பெடுக்குமாம்! உவப்பு சுரக்க ஆரம் பித்தால் உணர்வு வெள்ளமாய்ப் பொங்கும். எந்த வெள்ளப்பெருக் கும் ஆரவாரத்துடன் நகர்ந்து செல் வது இயற்கை. உடனே 'ஆ' 'ஆ' 'ஆ' என்று பேசத்தான் தோன்றும். காதல், பேச்சை உண்டாக்கும், அதாவது உவப்பும் உணர்வும் உண் டாக்கும் என்கிறார் புதுமைக் கவி பாரதிதாசன்.

**இமையாது நோக்கினான் முழுநிலவை**
**இருவிழியால் தழுவினான் மனத்தால்**
**உண்டான்**
**சுமைசுமையாய் உவப்பெடுக்க,**
**உணர்வு வெள்ளம்**
**தூண்டிவிட 'ஆ ஆ ஆ' என்றான்.**

நம்முடைய சமுதாய வாழ்விலே, நம் தாத்தா, தந்தை, பாட்டி, தாய்– கண்ணொடு கண்ணினை நோக்கினர். வாய்ச் சொற்கள் தமக்கு வேண்டா மென இருந்தனர். இந்நாளில் நமது வாழ்வில் காதலர்களாகப் பேசிக் கொண்டிருக்கப் பெரிதும் விரும்பு கிறார்கள். நாம் கண்ணாரப் பார்க் கிறோம். சாலை யெங்கும் கடற்கரை எங்கும் பார்க்கும் காதலர்கள் பேசு கிறார்கள்.

கதாநாயகன் உதாரன் முழுநிலவு போன்ற பெண்மையைக் கண்டு உவப்பு வெள்ளம் பெறுவது போல் பாரதிதாசனின் கவிதைச் சொற் களைக் கேட்டு நாம் உவப்படை கிறோம், மனத்தால் உண்ணு கிறோம். மனத்தால் உண்பதுதான் பேரழகு. அழகை உண்பது பெருங் கலை. விழியால் தழுவுவதுதான் பண்பு. பண்ணைத் தழுவிச் செல் லும் பாடலைக் கேட்பது போன்று பாரதிதாசன் கவிதைகளைப் படிக் கும் நாமும் சுமை சுமையாய் உவப் பெடுக்க உணர்வு வெள்ளம் தூண்டிவிட, 'ஆ, ஆ, ஆ' என்று மகிழ்கிறோம்.

பாரதிதாசன் கவிதை எழுதிய காலத்தே, பாரதிக்கு ஏற்பட்ட அனுபவங்கள் இவருக்கும் ஏற்பட்

டது. தேச விடுதலை, பெண் விடுதலை வீர சுதந்திரம் பற்றி பாரதியார் எழுதிய காலத்தே அவரைப் பார்த்து வியந்தவர் சிலர். வீண் அபவாதம் பேசியவர் பல்லாயிரம் பல்லாயிரம். இதேபோன்று சாதிவெறி கைம்மைநிலை கர்ப்பத்தடை பற்றிய பாரதிதாசன் பாடல்களைப் படித்தவர்கள், கவிதைக்கு உதவாப் பொருள்கள் என்று பரிகாசம் செய்தனர். ஆங்கிலேயருக்கு அடிமைகளாய் வாழ்ந்தவர்கள், புதிய கருத்துக்கு இடம் கொடாத கருத்தடிமைகள், பாரதிக்குச் சிரித்த சிரிப்பை இன்று பாரதிதாசனுக்குச் சிரித்தனர். இன்றைய வாழ்விலே குடும்பக் கட்டுப்பாடு என்ற சொல் சர்வசாதாரணமாகப் பழகிவிட்டதை நாம் உணருகிறோம். புதுமை என்னும் எண்ணங்கள் சிறந்த வாழ்வை அமைக்க உருவாக்க வேண்டும். அவ்வாறு புதிய புதுமை எண்ணங்களை உருவாக்கிய பெருமையுடையவர் பாரதிதாசன்.

சங்க காலப் புலவர்களின் பாவமைப்பையும் சொல்லமைப்பையும் உருவகங்களையும் நினைப்பூட்டும் வண்ணம் பாடல்களை யாத்துள்ளது அவரது புதுமைக்கு மற்றொரு சிறப்பாகும். இயற்கை வர்ணனை அத்தனை எளிமையும் கவர்ச்சியும் சொற்கட்டும் நிரம்பியிருக்கும்.

முன்னாள் கவிதைத் தமிழுக்கு 'கதி' (கம்பனும் திருவள்ளுவரும்) என்று சிறப்பாகக்கூறியதுபோன்று இந்நாள் கவிதைத் தமிழுக்கு கதியானவர் இருவர், பாரதியும் பாரதிதாசனும் என்று துணிந்து கூறலாம். இவர்கள்தாம் நமக்கு மனத் துணிவைத் தந்தவர்கள் சொல்லாற்றலைத் தந்தவர்கள். நமது மொழியும் நாமும் தலைநிமிர்ந்து நடக்க உறுதுணையாக இருந்தவர்கள். நம்முடைய சந்ததி யாருக்கும் உறுதுணையாக இருக்கப் போகிறவர்கள்.



கவிஞர் பாரதிதாசன் கவிதைகளைப் படித்தேன். கதைக்காக ஒரு முறை சுவைக்காக ஒரு முறை, கருத்திற்காக ஒரு முறை, இன்பத்திற்காக ஒரு முறை, எழிலுக்காக ஒரு முறை, கொள்கைக்காக ஒரு முறை, குறிப்பிற்காக ஒரு முறை படித்தேன். ஒவ்வொரு முறையிலும் ஒவ்வொரு படி தேனெனவே இனித்தது.

— முத்தமிழ்க் காவலர் திரு. கி. ஆ. பெ. விசுவநாதம்

AN ALUMINIUM UTENSIL OR AN ALUMINIUM SECTION
OR JUST A PRESENTATION ARTICLE IN ALUMINIUM

*MANUFACTURERS OF*

**CROWN** PURE ALUMINIUM THE CROWN **BRAND**

**ALUMINIUM WARES & ANODISED ARTICLES**

**SUPPLY ALL YOUR REQUIREMENTS**

**JEEWANLAL (1929) LIMITED**

CROWN ALUMINIUM HOUSE
23, BRABOURNE ROAD,
CALCUTTA-1.

ADEN—BOMBAY—DELHI—MADRAS—RAJAHMUNDRY


TEXTOOL
OFFERS
ENTIRE RANGE OF SPINNING MACHINERY
TEXTOOL-KAMITSU CONE WINDERS
TEXTOOL-NIPPON SIGNALLING EQUIPMENT FOR RAILWAYS
DIESEL ENGINES
VARIED RANGE OF MACHINE TOOLS
SPECIAL ALLOY STEELS
TEXTOOL CO.LTD.
COIMBATORE-6
GL.4/65
S

# பாரதிதாசன் கவிதைச் செல்வம்

திரு. க. சி. கமலையா

## தமிழின் தொன்மையும் ஏற்றமும்

தமிழ் ஒரு பண்பட்ட மொழி. பன்னெடுங் காலமாய்ப் பேசப்பட்டு இலக்கிய வளம் பெற்ற தொடர்புடைய—ஒரு தொன்மொழி. கவிதைக் கேற்ற பொன்மொழி. இந்நாட்டுக் கடலையும், மலையையும், மண்ணையும் போல நம் உள்ளத்தில் இன்ப ஊற்றைச் சுரக்கவைக்கும் தென் மொழி.

> "திங்களோடும் செழும்பரிதி தன்னோடும்
> விண்ணோடும் உடுக்களோடும்,
> மங்குல்கடல் இவற்றோடும் பிறந்த
> தமிழுடன் பிறந்தோம் நாங்கள்."

என்று பாரதிதாசன் இதயம் விம்முகிறது. இந்திய நாகரிகத்தையும் பண்பாட்டையும் நாட்டு வரலாற்றையும் சரிவர எடைபோட்டுப் பார்ப்பதற்கு பழந் தமிழ் நூல்கள் ஒரு பெரும் கருவூலம், தமிழன் என்றாலே பழம்பெருமை பேசும் தற்பெருமைக்காரன் என்ற கருத்துத் தமிழரிடமும் பிறரிடமும் நிலவி வருகின்றது. இதில் உண்மையுண்டு. பழந்தமிழ் நூல்கள் எடுத்துரைக்கும் கருத்துக்களும் நீதிகளும் உலகத்தின் பொதுச் சொத்து. அவைகள் மனித இனத்துக்காக எழுதப்பட்டவை. தமிழனுக்கு மட்டும் அவைகளில் ஏகபோக உரிமையில்லை. அப்படியிருந்தும் ஏன் தமிழன், "என்மொழி, என்மொழி," என்று துடிக்கின்றான்? ஒரு மொழியைக்கொண்டு அம்மொழியைப் பேசும் மக்களின் பண்பாட்டைச் சீர்தூக்கிப் பார்த்து விடலாம். மொழி அதைப் பேசும் மக்களின் நாகரிகத்தின் அளவு கோல். மொழி மனிதன் படைப்பே மனிதனை மொழி படைக்கவில்லை, அப்படியிருந்தும் தமிழன் ஏன் தமிழுக்குக் கடவுட் தன்மையை ஏற்றுகின்றான்? நாட்டுப் பற்றுக்குத் தமிழை ஏன் ஓர் அடையாளமாக அமைக்கின்றான்? தமிழ் என்ற மேடையில் உயர்வு தாழ்வின்றி, வேறுபாடு தவிடு படத் தமிழர்கள் ஏன் ஒன்று படுகின்றார்கள்? கண்ணை இமை காப்பது போலத் தமிழன் தமிழைக் காத்த பெரும் பணிதான் தமிழைத் தொடர்புடைய மொழியாகத் தேக்கித் தந்தது. சில மொழிகளில் சில நூறு ஆண்டுகட்கு முன்பு எழுதப்பட்ட நூல்களை இன்றுள்ள மக்கள் படித்துப் புரிந்து கொள்ள முடியவில்லை. ஆனால் தமிழன் நிலை அவ்வாறில்லை. எந்தச்

சொற்களை அவன் மூதாதையர்கள் கையாண்டார்களோ அவைகளை இன்றையத் தமிழனும் கையாண்டு வருகிறான், இரண்டாயிரம் ஆண்டுகட்கு முன்தோன்றிய திருக்குறளில் நமக்குத் தெரியாத — இன்றும் நடைமுறையில் கையாளப்படாத — சொற்கள் மிகச் சிலவே. தமிழின் வளம் மிகுந்த இலக்கியம் பிற்காலத் தமிழர்களுக்கு உதவ வேண்டுமென்றால் தமிழைத் தொடர்புடைய இலக்கியம் படைத்த மொழியாக இயக்க வேண்டுமென்றால் — தொன்று தொட்டு வந்த சொற்களைக் காப்பது தலையாய கடன். தமிழுக்குத் துதிபாடும் இவ்வழக்கம் எப்பொழுது தொடங்கிற்று என்பதை அறிந்து கொள்வது பொருத்தமே. இதற்கு வித்திட்டவர்கள் ஆழ்வார்களும் நாயன்மார்களும்: 'நீண்ட தமிழால் உலகை நேமியின் அளந்தான்', என்று அகஸ்தியரைப் புகழும் வகையில் தமிழுக்கு ஏற்றம் கொடுத்துப் பிற்காலப் புலவர் களுக்குக் கம்பன் வழிகாட்டியாயமைந்தான். பாரதி அச்சம்பிரதாயத்தில் விளைந்த புலவர். பாரதிதாசன் சற்று மாறுபட்ட கருத்துக் கொண்டவர்.

> "தமிழொளியை மதங்களிலே
> சாய்க்காமை வேண்டும்,"

என்ற கருத்துக் கொண்டவர் என்றாலும் பாரதிதாசன் உடல், பொருள், ஆவி எல்லாமே தமிழ்.

### செய்யுளும் உரைநடையும்—கவிதை தோன்றிய விதம்

மொழி வளர்ச்சியை ஆராய்ந்து நோக்குங்கால், கவிதையென்பது காலத்தாற் பிற்பட்டது என்பது தெற்றென விளங்குகின்றது. ஆதிகால மனிதன் மிருக வாழ்க்கையை யொதுக்கித், தனக்கென இருக்க இடம்தேடி வசதிகள் செய்து கொள்ளவேண்டும் என்ற எண்ணம், அவன் மனதில் நின்று நிலைத்தபொழுது, நாகரிகப் பாதையில் முன்னேறும் அவன் பயணம் தொடங்கிற்று. கூட்டங் கூட்டமாக வாழ்ந்தபொழுது மனிதன் ஒழிந்த நேரத்தில் பொருளற்ற இசையொலியை எழுப்பிக் களித்து வந்தான்.

செய்யுளின் மூதாதை தாலாட்டும் அழுகையும். மனிதன் மனப்பக்குவமடைந்து எழுப்பிய ஒலியை வரிவடிவில் படைத்தபொழுது உரைநடை தோன்றிற்று. வரிவடிவில் உரைநடை செய்யுளுக்கு முற்பட்டு விளங்கினாலும் ஒலிவடிவில் செய்யுளும் உரைநடையுடன் சேர்ந்தேயிருந்தது என்று தான் கொள்ள வேண்டும். பழங்கால மனிதன் பொழுதுபோக்கைத் தேடித் தவித்தபொழுது பாடல்கள் தோன்றின. முன்னர் இடுகாட்டிலும் பின்னர் சுடுகாட்டிலும், காலங்கள் மாறும்பொழுதும் குழந்தைகள் பிறந்தபொழுதும் பாடியும் ஆடியும் மனிதன் சில பழக்கங்களை ஏற்படுத்திக் கொண்டான். எழுத வசதி குறைந்திருந்த காலத்தில் மனப்பாடம் செய்வதற்குத் தகுந்த முறையில் செய்யுள் இயற்றப்பட்டது. இது பல

தரப்பட்ட மக்களுக்கும் நாகரிகங்களுக்கும் பொருந்தும். சிறந்த கருத்துக்களை குறைந்த சொற்களில் ஓசை நயம் நிரம்பச் செய்வதால் செய்யுளுக்கு மக்களிடையே ஆதரவு பெரிதுமிருந்தது. அது இன்று வரை நீடித்து வருகின்றது. தமிழிலக்கியத்தில் பத்தொன்பதாம் நூற்றுண்டுவரை பெரும்பாலும் கவிதையே எழுதப்பட்டு வந்தது. இருபதாம் நூற்றுண்டில் இதுவரை வெளிவந்துள்ள தமிழ் உரைநடை நூல்களின் எண்ணிக்கையைப் பார்த்தால் "கவிதை கொழித்த தமிழ்நாடா, இது?" என்று சொல்லத் தோன்றும்.

பாரதியும் பாரதிதாசனும்—பாரதிதாசன் கவிநயம்

தமிழன் மனம் கவிதையை நாடுகிறது என்பதை எடுத்துக் காட்டுவதுபோலக் கோடையிடியென முழங்கிக்கொண்டு வந்தார் சுப்பிரமணிய பாரதி. பாரதியிடம் "சபாஷ்" பெற்று அவரைப்போலவே கவிபாடும் கனக சுப்புரத்தினம் "பாரதிதாசன்" என்ற புனைப் பெயருடன் அவர் பின்னல் வந்தார். கவிமணி தேசிகவிநாயகம் பிள்ளை இதே காலத்தில் வாழ்ந்தவர்தான். இம்மூவரும் தமிழாசிரியர்கள், பின்னவர் இருவரும் பாரதி முறையைப் பின்பற்றிப் பாடல்கள் எழுதிஞலும், பாரதிதாசன் கவிதையும் பாரதி கவிதையும் சொன்னலன்றித் தெரியாதபடி அத்தனை ஒற்றுமையுடன் விளங்குகின்றன.

"எங்கெங்குக் காணினும் சக்தியடா—தம்பி
ஏழ் கடல் அவள் வண்ணமடா—அங்குத்
தங்கும் வெளியினில் கோடியண்டம்—அந்தத்
தாயின் கைப்பந்தென ஓடுமடா!''

பாரதி முன் பாடிய இந்தப் பாடல் மூலம் தமிழ் நாட்டுக்கு அறிமுகமான கனக சுப்புரத்தினம் பாரதிதாசன் என்ற பெயரில் நாற்பதாண்டுகள் தமிழ் மக்களை மகிழ்வித்து வந்தார்.

பாரதியைப் போலவே பாரதிதாசனும் பல துறைகளையும் தொட்டுச் செல்லும் பாடல்களைப் பாடியுள்ளார். இருவருக்கும் இயற்கை, சமூகச் சீர்திருத்தம், பெண்ணுரிமை, தொழிலின் பெருமை, சாதியொழிப்பு ஆகியவைகள் பற்றிக் கருத்து வேற்றுமையில்லை. தேச பக்திப் பாடல்களும் பக்திப் பாடல்களும் பாரதி பாடல்களில் சிறப்பான இடம்பெற்றன. சமூகச் சீர்திருத்தம் பற்றிய பாரதிதாசன் கருத்துக்கள் அவர் கொள்கைக்காகப் போராடும் ஆற்றல் படைத்தவர் என்பதைக் காட்டுகின்றன. சமயத்தைச் சமூகத்தில் புகுத்தி மூட நம்பிக்கைகளுக்கு நிலைக்களனை அமைத்தலை அவர் திவிரமாக எதிர்த்தவர் என்பதை அவருடைய பாடல்களில் காணலாம். பாரதிதாசன் தாம் கொண்ட கொள்கைகளில் திட நம்பிக்கை கொண்டவர்; எனவே, மற்றையோருக்காக அவர் கவலைப்படவில்லை. அவருடைய கருத்துக்களையும் கொள்கைகளையும் ஆதரிப்

போரும் உண்டு; எதிர்ப்போரும் உண்டு. ஆனால் கவிஞனுக்குரிய இதய மேடையில் இவ்விரு சாராருமே பாரதிதாசனை அமரச்செய்யத் தயங்க மாட்டார். பாரதிதாசன் பளிங்கு உள்ளம் படைத்தவர். அவருடைய பாடல்கள் எளிய இனிய தமிழ் நடையில் எழுதப்பட்ட கருத்தாழம் நிறைந்தவை என்பதை அனைவரும் ஒப்புக் கொள்வர்.

### பாரதிதாசனுடைய இயற்கை ஆராதனை

பாரதிதாசன் சமயத்தை யொட்டி வளர்ந்த பழக்கவழக்கங்களை ஏற்றுக் கொண்டவரில்லை, என்றாலும் இயற்கையை ஆராதித்தவர். இயற்கை சிரித்தால் அவருடைய கவிதை அழகும் மணமும் நிறைந்து மலர்கிறது.

"குயில்கூவிக் கொண்டிருக்கும், கோலம்மிகுந்த
மயிலாடிக் கொண்டிருக்கும்; வாசம் உடைய
நற்காற்றுக் குளிர்ந்தடிக்கும்; கண்ணாடிபோன்ற
நீர்ஊற்றுக்கள் உண்டு; கனிமரங்கள் மிக்க உண்டு"

என்று அடுக்கடுக்காய்ச் சொற்சித்திரம் புனையும் பொழுது, சட்டென நிறுத்தி,

"நெஞ்சில் நிறுத்துங்கள்; இந்த இடத்தைத்தான்
சஞ்சீவி பர்வதத்தின் சாரல் என்று சொல்லிடுவார்."

என்று கதைக்கு வரும் பாணியில் நாடகச்சுவை நன்றாக அமைந்திருக்கிறது. தங்க ஞாயிறும் வெள்ளி நிலாவும் கவிஞனுக்குப் போதையூட்டும் புதுமது. எது நிலா? "வானமென்ற நீலப்புடவையுடுத்தி, அதற்குள் மறைத்து வைத்த ஒளியென்ற முகத்தைக் காட்டுவது நிலா", என்பது பாரதிதாசன் விளக்கம்.

நீலவான் ஆடைக்குள் உடல் மறைத்து
நிலாவென்று காட்டுகின்றாய் ஒளி முகத்தை!"
அதுமட்டுமல்ல, இவ்வெண்ணிலா "வானச்
சோலையிலே பூத்த தனிப் பூ, சொக்க
வெள்ளிப் பாற்குடம், அமுத ஊற்று."

தமிழர்கள் மலரை விரும்பினார்கள்; மணத்தை விரும்பினார்கள்; இசையை விரும்பினார்கள்; இயற்கையின் வனப்பை யெல்லாம் சுவைத்தார்கள், முல்லை படரத் தன் தேரை நிறுத்தி பாரி நடந்து சென்றான். ஆண்டாள் முல்லைக்குப் "பிராட்டி" என்று பேர்சூட்டி முல்லையின் முறுவலைக் கண்டாள். பாரதிதாசன் பச்சையுடை பூண்டு படர்ந்து கிடந்த சிரித்த முல்லையைக் கண்டார்.

"சோலை நடுவில் சொக்குப் பச்சை
பட்டுடை பூண்டு படர்ந்து கிடந்து
குலுக்கென்று சிரித்த முல்லை
மலர்க்கொடி கண்டேன், மகிழ்ச்சி கொண்டேனே,

என்ற பாரதிதாசன் வர்ணனை முல்லைக் கொடியைக் கடந்து போகும் பொழுது நம்மை மீண்டும் அதைப் பார்க்கத் தூண்டும்.

## பாரதிதாசன் தொட்டுச் சென்ற சில துறைகள்

பாரதிதாசன் பிரான்ஸ் வசமிருந்த புதுச்சேரியில் வாழ்ந்தாலும் பாரத நாட்டு விடுதலையில் அவருக்கு நாட்டமிருந்தது. பாரதியுடன் நட்பும், பாரதியின் பாடல்களிலே அவர் கொண்ட வேட்கையும் ஒற்றுமையின் இன்றியமையாத் தன்மையை அவருக்கு நினைவூட்டின, இந்தியரைப்பற்றி ஆங்கிலேயன் வாயால்,

"நாவலந்தீவு நமைவிட்டுப் போகாது;
வாழ்கின்றார்கள் முப்பத்து முக்கோடி மக்கள் என்றால்,
சூழ்கின்ற பேதமும் அந்தத்தொகையிருக்கும்.

* * *

சாதிப் பிரிவு, சமயப் பிரிவுகள்,
நீதிப் பிழைகள், நியமப் பிழைகளும்
மூடப் பழக்கங்கள் எல்லாம் முயற்சி செய்தே
ஓடச் செய்தால் நமையும் ஓடச் செய்வோர் என்பேன்."

என்று சொல்லச் செய்து ஒற்றுமையின் அவசியத்தைப் பாரதிதாசன் வற்புறுத்துகின்றார்.

"நாடகத்தில் காவியத்தில் காதலென்றால்
நாட்டினர் தாம் வியப்பெய்தி நன்றுமென்பர்;
ஊடகத்தே வீட்டினுள்ளே கிணற்றோரத்தே
ஊரினிலே காதலென்றால் உறுமுகின்றார்;
பாடைகட்டி அதைக் கொல்ல வழி செய்கின்றார்."

என்று பாரதி பொதுவாகச் சொன்னார். "மாந்தோப்பில் மணம்," "காதற் குற்றவாளிகள்," "காதற் பெருமை," "காதலைத் தீய்த்த கட்டுப்பாடு" என்ற பாரதிதாசன் பாடல்கள் பாரதி வாக்குக்கு விளக்கங்கள் போல் அமைந்துள்ளன.

உலகம் பாட்டாளி மக்களுடையது, பிராஞ்சு மொழியிடமும் பிரான்ஸ் நாட்டினிடமும் கொண்டிருந்த தொடர்பு பாரதிதாசனுடைய புரட்சிகரமான எண்ணங்களுக்கு ஓரளவு காரணமாயிருக்கலாம்.

சிற்றூரும் வரப்பெடுத்த வயலும் ஆறு
தேக்கிய நல்வாய்க்காலும் வகைப்படுத்தி
நெற்சேர உழுதுழுது பயன் விளைக்கும்
நிறையுழைப்புத் தோள்களெலாம் எவரின் தோள்கள்?
கற்பிளந்து மலைபிளந்து கனிகள் வெட்டிக்
கருவியெலாம் செய்து தந்த கைதான் யார் கை?
பொற்றுகளைக் கடல்முத்தை மணிக்குலத்தைப்
போய் எடுக்க அடக்கிய மூச்செவரின் மூச்சு?

இவ்வரிகள் எக்காலத்திலும் மக்களை உணர்ச்சி வெள்ளத்தில் உந்தித்தள்ளும்.

இன்பத் தமிழ்

தமிழ் மொழி பற்றிய பாரதிதாசன் பாடல்கள் அவருடைய பரந்த மனப் மான்மையையும் தமிழ் இலக்கியத்திலும் புரட்சி வேண்டும் என்ற துடி துடிப்பையும் காட்டுகின்றன.

"எங்கள் தமிழ் உயர் வென்று
நாம் சொல்லிச் சொல்லித்
தலை முறைகள் பல கழித்தோம்
குறை களைந்தோமில்லை,"

என்பது தமிழில் பாரதிதாசன் சீர்திருத்தம் வேண்டினர் என்பதைக் காட்டுகிறது. "இன்பத் தமிழ்", "எங்கள் தமிழ்" என்ற பாடல்கள் பாடிப்பாடி நாம் அனுபவிக்க வேண்டியவை.

"தமிழுக்கும் அமுதென்று பேர்!—அந்தத்
தமிழ் இன்பத் தமிழ் எங்கள் உயிருக்கு நேர்!
தமிழுக்கு நிலவென்று பேர்!
தமிழுக்கு மணமென்று பேர்!
தமிழுக்கு மதுவென்று பேர்—இன்பத்
தமிழ் எங்கள் எரிமைச் செம்பயிருக்கு வேர்!

'இன்பத் தமிழ்' என்ற பதினுறு வரிகளுள்ள இப்பாடலில் பதினேழு தடவைகள் 'தமிழ்' என்ற சொல்லை எடுத்தாண்டு எட்டு இடங்களில் இன்பத்தையும் தமிழையும் பிணைத்துக் கவிஞர் தமிழின் இனிமையில் மகுடி முன் கிறங்கும் பாம்பாக நம்மை ஆக்கிவிடுகின்றார்.

பாரதிதாசன் தம்முடைய கவிதையில் பிற மொழிச் சொற்களை அப்படியே எடுத்துக் கையாளுகின்றார். பாரதி வடமொழிச் சொற்களைத் தமிழ் உருவத்துக்குக் கொண்டு வந்த பிறகே பெரும்பாலும் உபயோகித்தார். 'விஷம்,' 'வேஷம்,' 'மானுஷிகம்,' 'அராஜகம்,' 'ஸபாஷ்,'

‘கரகோஷம்’ என்று தமிழ் மக்களுக்குப் பழக்கமான சொற்களைப் பாரதிதாசன் வெகு தாராளமாக உபயோகிக்கிறார்.

சின்னஞ் சிறு கட்டுரையில் பாரதிதாசன் பாடல்களைப் பல கோணங்களில் ஆராய்வது இயலாத காரியம். பாரதிதாசன் பாடல்கள் பற்றிய ஆராய்ச்சி நூல்தான் அதைச் சாதிக்க முடியும்.

## எளிய நடையில் தமிழ்க் கவிதைகள்

இந்திய விடுதலை இயக்கம் பாரதியின் கவிதா உணர்ச்சியைத் தட்டி யெழுப்பியது. மொழிப் பற்று, சம உரிமை, பெண்கள் விடுதலை ஆகியவை அவ்வியக்கத்திலிருந்து கசிந்த ஊற்றுக்கள். பாரதி வகுத்த முறையில் பாரதிதாசனும் தேசிக விநாயகம்பிள்ளையும் கவிதை இயற்றினர். சமூக முன்னேற்றத்தில் மிக்க அக்கறை கொண்ட பாரதிதாசன் குருவையும் மிஞ்சிய சீடனாய் விளங்கினார். பாரதி கவிதையில் ஆண்மையும், மிடுக்கும், வீரமும் சிறந்து விளங்கினவென்றால் தேசிக விநாயகம் பிள்ளையின் பாடல்களில் பெண்மையும், குழைவும், மென்மையும் பூத்துக் குலுங்கின. தாசனும் பிள்ளையும் பாரதி பரம்பரையைச் சேர்ந்தவர்களே, பதினெட்டாவது பத்தொன்பதாவது நூற்றாண்டுகளில் தமிழ் இலக்கியத்தில் இருள் மண்டிக் கிடந்தது என்றும் இருபதாவது நூற்றாண்டில் பாரதி வந்துதான் விளக்கேற்றி வைத்தார் என்றும் சிலர் சொல்லுகின்றனர். அது தவறு, ‘திருக்குற்றாலக் குறவஞ்சி’, ‘முக்கூடற் பள்ளு’, ‘காவடிச் சிந்து ஆகியவைகளெல்லாம் எளிய நடை நூல்களே, இராமலிங்கசுவாமிகளின் ‘திருவருட்பா’வில் காணும் தமிழ் நடையினைக் காட்டினும் எளிய தமிழ் நடைக்கு எங்குபோவது? மேற்சொன்ன நூல்களெல்லாம் எளிய தமிழ் நடையில் அவருடைய கவிதைகளை எழுதப் பெரிதும் தூண்டின. பாரதிதாசன் இன்னும் ஒருபடி மேற்சென்று நடையை மட்டும் எளிதாக வைத்துக்கொண்டு சமயத்துறையை விட்டுப் பிற துறைகளில் தமிழ்க் கவிதையை இட்டுச் சென்றார்.

## தமிழ்ப்பெரு நெருப்பு

தமிழ் இலக்கியம் என்ற பெரு நெருப்பு சுடர்விட்டு எரிந்து கொண்டிருக்கிறது. சங்ககால இலக்கியம் முதல் பாரதிதாசன்வரை அவ்வப்பொழுது தோன்றிய சிதறிய நெருப்புகள் பெரு நெருப்புடன் சேர்ந்து கொழுந்துவிட்டு எரிகின்றன. புதுமை வேண்டும். ஏன்? தமிழ் இலக்கியமே புதுத் துறைகளில் செல்லவேண்டும். இலக்கியம் என்று பெயர் தாங்கிவரும் குப்பை கூளங்கள் அப்பெரு நெருப்பில் பட்டுத்தானே

எரிந்துபோகும். பழமையைக் குறைகூறிப் புதுமை வாழ வழிதேட முடியாது. புதுமை தன் சொந்த உரத்திலேதான் தழைக்க முடியும். புதுமையின்றி வாழ்வே இல்லை. இன்றும், மணங்கமழும் கவிதைகள் தமிழில் பிறக்கின்றன. நெல் மணிகளுடன் சேர்ந்தே பிறக்கும் சாவியைப் பிணையலடித்துத் தூற்றி, பெருஞ்சுளகு கொண்டு புடைத்துக் கழித்துவிடவேண்டும். பாரதி — பாரதிதாசன் பரம்பரை — தமிழ்ப் பரம்பரை பெருகுகிறது, பெருகுகிறது, பெருகிக் கொண்டேயிருக்கிறது.

பாரதிதாசன் விதித்த பணி

பாரதிதாசன் விதித்த பணியொன்று நமக்காகக் காத்து நிற்கிறது.

"தமிழுண்டு, தமிழ் மக்களுண்டு—இன்பத்
தமிழுக்கு நாளும் செய்வோம் நல்ல தொண்டு
தமிழ் என்று தோள் தட்டி ஆடு—நல்ல
தமிழ் வெல்க வெல்க என்றே தினம்பாடு,"

*


*With the Compliments of*

**DALMIA CEMENT (BHARAT) LIMITED**

**DALMIAPURAM**

TRICHY DISTT. (MADRAS STATE)

A DALMIA ENTERPRISE

**H. O.: 4 Scindia House, New Delhi-1.**


இளமையில் சேமிப்பு
முதுமையில் பாதுகாப்பு!
சிறு வயதிலிருந்தே சிறுகச்
சிறுக சேமித்து வைத்தால்...
தி கரூர் வைஸ்யா
பாங்க் லிட்.,
கரூர்.
PASS BOOK
A/C. NO
72629
....வயோதிக காலத்தில் வட்டியைக்
கொண்டே கூட வசதியாக
வாழலாமே!
ACCOUNT WITH
THE KARUR VYSYA
BANK LTD.
தமிழகத்தில் 45 கிளைகளுடன் சிறந்த சேவை செய்து வருகிறோம்!
தி கரூர் வைஸ்யா பாங்க் லிட்.,
பதிவு பெற்ற அலுவலகம்: கரூர்.
உங்கள் தேவைக்கு அணுகவும்
C. ராமநாத செட்டி - செகரடரி
PARAMOUNT

# அன்றொரு நாள்

வி. ஜி. சீனிவாசன், மதுரை

*26-12-1954*

அன்று, ஒருநாள்! ஏனெனில், பாவேந்தர் அவர்களைக் கண்டதோடல்லாமல், அவரிடமிருந்து யான் கலைவிளக்கம் பெற்ற நன்னாள்! அந்த நாளைக்கு முன்னே பின்னே சந்தித்திருப்பினும் அன்று நான் அவருடன் நெடுநேரம் பழக முடிந்தது; தவிர, கருத்துக்கள் பலவற்றைக் கேட்டுத் தெளிவு பெற வாய்ப்புக் கிடைத்தது. ஆகலின், மறக்க முடியாத சிறந்த நாளது!

மாலையம்போது சிறுமலைப்பழங்கள் சிலவற்றுடன் சென்று கவிஞரவர்களைக் கண்டேன். பழங்கள் கொடுத்தது யான்; ஆனல், பெரும் பலன் பெற்றதும் யானே தான்! பாவேந்தர் வழங்கிய நற்றமிழ்ச் சுவைக் கீடாக எச்சுவை தான் அமைய முடியும்? கனிச்சுவை, கரும்புச்சுவை ஆகியவற்றுக்கெல்லாம் மேலானதல்லவா செந்தமிழ்க் கவியின் சுவை! நாச்சுவை ஆறெனில், செவிச்சுவை ஒன்பதல்லவா?

"வாருங்கள்; இப்படிப் பக்கத்திலே உட்காருங்கள்", என்றது கவிச்சிங்கம். உட்கார்ந்தேன், பழங்களைக் கொடுத்த பின்னர்.

"என்ன, இதெல்லாம்? நீங்களெல்லாம் ஏதாவது கொண்டு வர வேண்டுமா, என்ன?"

"அப்படியல்ல, தெய்வங்கள், பெரியவர்கள், குழந்தைகள் இருக்கின்ற இடங்கட்குச் செல்லும் போது வெறுங்கையோடு போகக் கூடாது; சிறு கற்கண்டுப் பொட்டலமாவது கொண்டு செல்ல வேண்டுமென்பது என் தந்தையார் எனக்குச் சொல்லியிருக்கிருர்கள்", என்றேன்.

"உங்கள் பாட்டனர் தான் எங்களுக்கெல்லாம் நல்ல விருந்து வைத்திருக்கிருரே; அது போதாதோ?" எனக் குறிப்பிட்டு வாயாரச் சிரித்திட்டார் பாரதிதாசனர். அவர் குறிப்பிட்டது "பாவலர் விருந்து" எனும் நூல் பற்றித்தான். என் பாட்டனர் என்ருல்? "பரிதிமாற் கலைஞன்" எனும் புனைவு பெயர் கண்டு கொண்ட செந்தமிழ்ச் செம்மல் வி.கோ. சூரிய நாராயண சாத்திரியார் தான். ஆனந்தவல்லியார் என்ற எனது அருமைத் தாயாரின் தந்தையாவார். கலைஞரின் பெண் வழிப் பேரன் யான்.

"தான் வாழ்ந்த முப்பத்து மூன்று ஆண்டுகட்குள்ளாக எவ்வளவு சீரிய முறையிலே நற்றமிழ்ப்

யணி புரிந்து விட்டார் கலைஞரவர்கள். தமிழ்மொழியை 'உயர்தனிச் செம்மொழி' எனக் கண்டு, கொண்டு ஆண்ட பெருந்தகையல்லவா! அவருக்குத் தான் எவ்வளவு தமிழார்வம்! 'தமிழ்மொழியின் வரலாறு' எனும் நூலிலே பல கருத்துக்களை மிகவும் தெளிவாக விளக்கியுள்ளார்; எவ்வளவு துணிச்சல் ஐயா, இந்தக் கலைஞருக்கு. 'பாவலர் விருந்து' எனக்கு மிகவும் பிடித்த நூல். 'நாடகவியல்' என்பது அவர் செய்த ஆராய்ச்சியின் விளைவு, தமிழுக்குக் கிடைத்துள்ள நாடக இலக்கண நன்னூலல்லவா, அது! அவரது, 'தனிப்பாசுரத்தொகை'யைத் தானே போப்பையர் ஆங்கிலத்தில் மொழி பெயர்த்துள்ளார்? தமிழுக்குத் தகுதி கொடுத்து, அதனை ஏற்றிப் போற்றிய புலவர் மணியும் செந்தமிழ்ச் செம்மலுமாவார், அவர்!'' என்றார் கவிஞர்.

அவரது உள்ளத்தின் நிறைவை அவரது குரல் கள்ளமில்லாமல் காட்டியது, நான் பெரிதும் உவகையுற்றேன்.

சிறிது நேரம் சிந்தனையில் ஆழ்ந்த வண்ணமிருந்தார் கவிஞர் பெருமான், 'ஈசிசேரி'லே சாய்ந்த படியே சட்டென்று எழுந்தமர்ந்தார்.

"எழுதிக்கொள்ளுங்கள்,'' என்றார். பாவேந்தர் பாடினார்; அழகாகப் பாடினார்; கலியாணிப் பண்ணிலே, ஆதி தாளத்திற்கு அமையப் பாடினார்; நல்ல மணிக்குரல் பாடிய முறை சம்பிரதாயமாக, கர்நாடக சுத்தமாக இருந்தது! வயது அவர்க்கு அறுபத்து மூன்று; எனது வயது முப்பத்தைந்து. பாரதியார்—பாரதிதாசன், பரிதி மாற்கலைஞர்—அவர்தன் பேரன், இவர்கட்குள்ளே உயிர் நாடியாக விளங்கி வாழவைக்கும் தமிழுணர்ச்சி எங்களை இசைத்து வைத்தது.

"புணர்ச்சி பழகுதல் வேண்டா உணர்ச்சிதான்
நட்பாம் கிழமை தரும்,"

எனும் வள்ளுவர் வாய்மொழி சான்றாகி நிற்கிறது. வேறு எவ்வாறு விளக்கம் தருவது? பாவேந்தர் எங்கே, பார்ப்பனக் குலத்தில் தோன்றிய நானெங்கே? நன்மையெல்லாம் ஒருங்கு பிணைக்கின்ற தமிழுணர்ச்சி வாழ்க, வெல்க!

கவிஞர் நிதானமாகப் பாடினார்; எழுதினேன் நான்.

இந்த நூற்றாண்டில் இருவர் பார்ப்பனர்
செந்தமிழ்ப் பற்றுடை யார்கள்
இந்த நூற்றாண்டில்......

முந்து பாவலன் பாரதி மற்றவன்
முத்தமிழ் வல்லவன் பரிதிமாற் கலைஞன்
இந்த நூற்றாண்டில்......

நாடகத் தமிழ் இலக்கணம் மறைந்ததே
நாடகத் தமிழ் இலக்கியம் மறைந்ததே
ஈடுசெய்வேனே என்று துடித்தான்
இயன்ற மட்டும் சிற்சில கொடுத்தான்
இந்த நூற்றாண்டில்

சூரியநாராயண சாத்திரி என்ற
தூய்மையற்றதன் ஆரியப் பெயரை




மிடுக்கான தோற்றத்துடன் பிரயாணத்திற்கு உதவும்

# பின்னியின் மார்ல்பரோ

'டெரினும்' பருத்தியும் கலந்த ஆடைகளில் சிறந்தது.

அடிக்கடி பிரயாணம் செய்பவர் மார்ல்பரோ அணிகிருர். அவை குளுமை, கசங்காத்தன்மை, எப்போதும் புதுமைத்தோற்றம் கொண்டவை. மார்ல்பரோ விலையில் சிக்கனமாகவும் பாது காப்பதற்கு எளிதாகவும் உள்ளது. பல அழகிய வண்ணங்களிலும், செக் டிசைன்களிலும் பின்னியின் புகழ் பெற்ற பக்ளின் 'ட்ரிப்-டினை' முறையில் தயாரானவை.

காபர்டீன் மற்றும் புஷ்ஷர்ட்டிங் மோஸ்தர் களில் கிடைக்கின்றன.

**மார்ல்பரோ—தோற்றத்தில் கவர்ச்சி அணிவதில் சுகம்**

பக்கிங்ஹாம் & கர்னடிக் கம்பெனி லிமிடெட், பின்னி & கம்பெனி லிமிடெட்.
மதராஸ் ஸ்தாபனத்தின் ஒரு கிளை

JWT-BY-3559

ஏர்பெறு தமிழாற் பரிதிமாற் கலைஞன்
என்று மாற்றிய நற்றமிழ் அறிஞன்
இந்த நூற்றாண்டில்
வாழிய பரிதிமாற் கலைஞன் எனும்பெயர்
வாழிய அன்னோன் வாரிய பெரும்புகழ்
ஊழிபெயரினும் தன்சீர் பெயரா
உயர்தனிச் செந்தமிழ் அன்னை வாழியவே
இந்த நூற்றாண்டில்

பாடல் 'தேனருவி' யாகப் பரந்தது; மிகவும் இனித்தது. நான் பெரும் பேறு பெற்றவன் ஆனேன்! பாடிய முறையிலே எவ்வளவு நயம், என்ன உறுதி, எத்தகைய 'ரக்தி'! வியப்பில் ஆழ்ந்தேன்.

பாடலை ஏழுங்குலத்திற்கு நாலங்குலமுள்ள சிறு காகிதத்திலே எழுதிக் கொண்டேன்; பின்புறம் 'டைப்' வேறு அடிக்கப்பட்டிருந்தது. ஏதோ, கிடைத்த காகிதத் துணுக்கிலே எழுதிவிட்டேன். நான் எழுதிய அந்தத் துணுக்கிலாவது கவிஞரது கையெழுத்தை எழுதி வாங்கியிருக்கலாம்! அப்படிச் செய்யாது போனேன், நிற்க.

இந்த அழகிய பாடல், 'பரிதிமாற் கலைஞன்' எனும் தலைப்புடன் பாவேந்தரது 'தேனருவிப் பாடல்' நூலிலே 'உயர்ந்தோர்' பகுதியிலே இடம் கண்டுள்ளது–(பக்கம் 99, பாடல் 61–ஏப்ரல், 1956 பதிப்பு)

அங்கு நின்றிருந்த ஒருவர் சும்மா இராமல், "பாரதிதாசன் என்று ஏன் பெயர் வைத்துக்கொண்டிருக்கிறீர்கள்?" என வினவிவிட்டார். கவிஞரருக்குச் சற்றே சினம் வந்துவிட்டது; உணர்ச்சி வசப்பட்டவராகப் பேசலானார்.

"உங்களது வினாவின் நோக்கம் எனக்குப் புரிகிறது. இது குறும்புத்தனமான வினா. 'ஐயருக்கு நீங்கள் அடிமையா?' என்று கேட்பது போலத்தான். நான் என்றென்றும் உளமாரப் போற்றி வழிபட்டு வருகிற தெய்வம் இந்த 'ஐயர்'. பாரதியார் அன்பும், பண்பும், தமிழுணர்ச்சியும் ஒருங்கு சேர்ந்த பொன்னுருவம். பாரதியார்க்கு நான் தாசனாக இருப்பதில் உங்களுக்கென்ன ஆட்சேபணை? இந்த வினா யார் விடுத்தாலும் எனக்குக் கோபம் வரும். ஏனெனில், கழகத்தவர்களோ, முன்னேற்றம் காணத் துடித்தவர்களோ யாராயிருந்தாலும் சரி, 'சீர்திருத்தம்' எனும் சொல்லை எழுத்துக்கூட்டிப் படிக்கக் கற்றுக் கொள்ளத் தெரிந்து கொள்வதற்குப் பல நாள்களுக்கு முன்னதாகவே தமது வாழ்க்கையிலே சீர்திருத்தச் செயல்கள் பலவற்றைச் செய்து காட்டியவர், பாரதியார். ஐயரோடு புதுச்சேரியிலே பத்து ஆண்டுகட்கு ஒட்டிப் பழகியதுடன் அவரைக் கட்டிக் காத்த பணியும் செய்தவன் நான். அவரது சீரிய இயல்புகளையும் பரந்த மனப்பாங்கையும், சிறுமை கண்டு சாடும் தன்மையையும் கண்கூடாகப் பார்த்து மகிழ்ந்து வியந்தவன்... தமிழ் மொழியைத் தனது மூச்சாகக் கொண்டு உலாவியவர். பிற மாதர்களைக் கண்ணெடுத்தும் பாராததோடு அவர்களையெல்லாம்

# there's Something Special about

## ALIND·KER·AL·LITE

Comprising high-conductivity aluminium conductor, polythene insulation and polyvinyl-chloride (pvc) sheathing, ALIND KER-AL-LITE building wire is manufactured to appropriate British and Indian Standards. And the cable is subjected, during manufacture, to continuous spark testing at voltages ranging from 6,000 to 12,000 depending upon the size of the core.

ALIND KER-AL-LITE is highly resistant to oxygen, ozone, most corrosive acids, alkalies and other chemicals. It is flexible and flame-retardant ... and its electrical and mechanical properties are virtually unaffected by moisture.

The pvc sheath in ALIND KER-AL-LITE renders it impervious to oils. Another reason why this cable is preferred to a rubber insulated equivalent for workshop and similar use.

There's something special about this cable.

*Approved by the Fire Sectional Committee, Insurance Association of India, Bombay and D. G. S. & D.*

*Carries I S I Certification Mark*



**ALIND**

*where forward thinking is a force of habit*

**THE ALUMINIUM INDUSTRIES LTD.**

*India's largest manufacturers of aluminium conductors and accessories*

Registered Office : Kundara (Kerala)

Plants : Kundara • Hirakud • Hyderabad

*Managing Agents :*

SESHASAYEE BROS. (TRAV.) PRIVATE LIMITED


ஊக்கமிக்கோருக்கு -
பரமதிருப்தி!
W.D. & H.O. WILLS
SCISSORS
Diamond Jubilee
MADE IN INDIA
10 சிகரெட்டுகள்
38 பைசா
அதற்கே உரிய
அற்புதச்சுவையுடன் —
சிசர்ஸ் எப்போதுமே திருப்தியளிக்கிறது
JWTS 3237

தெய்வங்களாக—பராசக்தி வடிவங்களாக வழிபட்டவர் ஐயர்! ஆண்மை தவறாத புண்ணிய சீலர் அடடா! ஐயர் பாடினால், உடல் சிலிர்க்கும்; உள்ளம் கிளர்ச்சியுறும். எத்தகைய கம்பீரமான, இனிய, மணியான குரல் அவருடையது. பாரதியாரது பாடல்களை அவரே பாடக் கேட்டிருப்பவர்கள் பெறும் பாக்கியவான்கள்; நிரம்பக் கொடுத்து வைத்தவர்கள். உணர்ச்சிப் பிழம்பு அவர். பாடும் பொழுது, பாட்டுக்குரிய பொருள்கள் நமது கண்முன்னே காட்சியாக விரியும்! என்ன அதிசயம்! இப்படி யாரால், ஐயா, பாட முடியும்?''.........

பிறகு, கவிஞர் கோமகன் பாரதியாரது பாடல்களாகிய ''பாருக்குள்ளே நல்ல நாடு'' என்பதிலே மூன்று கண்ணிகளையும், ''வேண்டுமடி யெப்போதும் விடுதலை'' எனத் தொடங்கும் பாடலின் முதற் பகுதியையும் பாரதியார் பாடிய அந்த 'அசல்' மெட்டுக்களிலேயே பாடிக் காண்பித்தார்! நாங்கள் மிகவும் கொடுத்து வைத்தவர்கள் ஆனோம். பாரதிதாசனாரே இந்த வயதில் இப்படிப் பாடுவாரானால் அந்தப் பாரதியார் எப்படித்தான் பாடியிருப்பாரோ! வேறு என்ன சொல்வது மறக்க முடியாத அனுபவம்!

'இன்பத் தேன் வந்து பாயுது காதினிலே' என நான் அன்றிருந்தேனானால், 'அன்று நான் கேட்ட குமரர் தாங்கேட்பாரே?' என்ற நிலையில்தான் புதுவை பாரதிதாசனார் இருந்திருப்பார்; ஐயமில்லை.

''சரி, விடை பெற்றுக் கொள்கிறேன்; அலுவல்கள் பல தங்களுக்கிருக்கும்'', என்றேன்.

''அழகின் சிரிப்பு'' எனும் அழகாயமைந்த தமது கவிதைத் தொகுப்பை எனக்கு ஈந்தார் பாவேந்தர். அந்தக் கவி மலர்ச்சி நூலிலே,

தோழர் V. G. சீனிவாசன்,
பாரதிதாசன்
26–12–54

எனவும் எழுதி வழங்கினார்.

கையெழுத்துப் பெறும் சிறு 'நோட்'டை நீட்டினேன் அதிலே,

தமிழின் முன்னேற்றம்
தமிழர் முன்னேற்றம்

என எழுதியதோடு கையெழுத்தும் இட்டீந்தார்!

நிரம்பிய உள்ளத்தோடு வீடு திரும்பினேன்.

அன்றொரு நாள்—என்றும் மறவேன். *

> தற்காலத் தமிழ் மக்கள் கருத்திற்குத்தக அவர் தம் முன்னேற்றத்துக்கு அடிப்படையாக உதவும் வகையில் கவியியாற்றுபவர்களில் தலை சிறந்து விளங்குபவர் பாரதிதாசன் அவர்கள்.
>
> —டாக்டர். அ. சிதம்பரநாதன்.

# அழகிய தமிழகம்

கலைகளும், இயற்கை அழகும் நிறைந்தது தமிழ்நாடு.
விதவித மனோபாவங்களுக்கு இங்கே விருந்து உண்டு.

★

| | |
|---|---|
| ★ தெய்வீகக் கலை உணர்ச்சி மிக்கவர்களுக்கு | மாமல்லபுரத்தில் கடற்கோயில்கள்: மதுரை, தஞ்சை, சிதம்பரம், ராமேஸ்வரம் ஆகிய திருத்தலங்களில் உள்ள ஆலயங்கள். |
| ★ உடல் நலத்தோடு உல்லாசம் தேடுபவர்களுக்கு | உதகை, கொடைக்கானல், குற்றாலம் ஆகிய கோடை வாசஸ்தலங்கள். |
| ★ இயற்கை அழகைக் காண விரும்புபவர்களுக்கு | வேடந்தாங்கல் பறவைகள் புகலிடம் முதுமலை வனவிலங்குப் புகலிடம். |
| ★ பொருளாதாரச் சிந்தனையாளர்களுக்கு | நெய்வேலி நிலக்கரித் திட்டம் போன்ற மாபெரும் திட்டங்கள். |

★

காட்சி இன்பம் தேடி.
இவைகளைக் காண வருவோர் கோடி:

(தமிழ்நாடு அரசாங்கச் செய்தித்துறை
நெறியாளர் வெளியிட்டது)

MAHAMAHOPADHYAYA
Dr. U. V. SWAMINATHAIYAR LIBRARY
THIRUVANMIYUR, MADRAS-4

# சந்தணமும் - சகதியும்

"தூள்"

சைநிலான் க்ஷவர பிரஷ் போன்று நிரைகண்ட கிராப்பை சசிவதனம் கோதி விட்டுக் கொண்டு நிலைக் கண்ணாடி முன் தன் முகத்தைப் பார்த்துக் கொண்டார். பறக்கும் தலைமயிரைக் கோதிப்படிய வைக்க லாம்: நெற்றியில் நவீனக் கலப்பை யில் கவலை, நோய் இரு எருதுகள் பூட்டி காலம் உழுதுவிட்ட சால் களை எப்படி நிரவமுடியும்.

தான் இனி எத்தனை ஆண்டுகள் உயிருடன் இருபபோம் என்று அறியவேண்டும் என்ற ஆவல் அவ ருக்குப் பிறந்தது.

அதிக ஆண்டுகள் இருக்க முடி யாது என்றும் அவருக்கு ஏனோ பட் டது.

"தாத்தா எனக்கு பிஸ்கோத்து" என்று கேட்டுக் கொண்டே பேரன் வாசு உள்ளே ஓடிக் கொண்டே நுழைந்தான். படியில் கால் இடறி விழுந்து அடிபட்டு அலர ஆரம்பித் தான்.

சசிவதனத்துக்குத் தன் ஆயுள் வரம்பினைப் பற்றிய கவலை மறைந் தது. விழுந்த பேரனை எடுத்தார். அவனைச் சமாதானப் படுத்தினார். இரண்டு பிஸ்கோத்துகளை பீரோவி லிருந்த பிஸ்கோத்து தகரத்திலி ருந்து எடுத்துக் கொடுத்தார்.

வருங்காலம் இறந்த கால வாகன மேறி வருவதுபோல வாசுவைத் தூக்கிக் கொண்டு சசிவதனம் தெருப்பக்கம் வந்து வாசலில் போகும் வண்டிகளை வேடிக்கை காட்டினார்.

பிஸ்கோத்தாசை வெறிமறந்து விழுந்த வலியும் மறந்ததும் வாசு தாத்தாவை கீழே இறக்கிவிடச் சொல்லி விளையாடப் போய்விட் டான்.

குழந்தையின் உடல் ஸ்பரிசத் தால் முதுமை நினைவை மறந்திருந்த கிழவருக்கு மறுபடி தன்னுடைய ஆயுள் கெடுவைப் பற்றிய எண் ணம் திரும்பியது.

கொஞ்சநாள் தான் இருப்போம் நினைவு எத்தனை நாள் இருந்தோம் என்ற கணக்கை வாசித்துக்காட்டி யது.

வாழ்க்கையைப் பின் பக்கமாகப் பார்க்கும்போது தான் அது எப்படி வியர்த்தமாகி விட்டது என்பது புலப்படும். வீணை வருடங்களை எப்படியெல்லாம் பயன்படுத்தியிருந்

*Remedia*

»HOECHST«

**A great tradition in medicine**

SERVICE IN THE
CAUSE OF MEDICINE

HOECHST

HOECHST
PHARMACEUTICALS LTD
Backbay Reclamation, Bombay 1

Branches at Ahmedabad, Bombay, Calcutta, Madras and New Delhi. Depots at Cuttack and Gauhati.
HOECHST generally pronounced HEXT

தால் எப்படியெல்லாம் இருந்திருக்க லாம் என்று ஆத்ம சிந்தனை செய்து கொண்டார்.

அடுத்த ஜென்மம் இப்படி வீணுகக் கூடாது என்று தீர்மானத்துக்கு வந்தார் சசிவதனம். நல்லவேளை நம் மதத்தில் அடுத்த ஜென்மம் என்று ஒன்று வைத்திருப்பது ஒரு ஜென் மத்தை வீணடித்தவர்களுக்கு எவ்வளவு பெரிய நன்மை என்று மதத்துக்கு ஒரு சபாஷ் கொடுத்தார்.

அடுத்த ஜன்மம் என்னவென்று தெரிய வேண்டுமே என்று ஆலோசித்தார். "எடுத்த சன்மம் கணக்கெழுதத் தொலையாது, இரங்கி மகிழ்ந்து தேவரீர் கொடுத்த மானிட ஜன்மம் வீணுகிப்போச்சே" என்று ரேடியோ பாடியது.

"ஒரு சமயம் அடுத்த ஜன்மம் மனிதப் பிறவியாக இல்லாவிட்டால்..." அப்படி ஒரு பீதி சசிவதனத்துக்கு ஏற்பட்டது.

அவ்வளவுதான், எப்படியும் தன் அடுத்த ஜன்மம் என்னவென்று தெரிந்து கொண்டு விடுவது என்று கங்கணம் கட்டிக் கொண்டார்.

இந்த விஷயத்தை; நாடிசோதிடர் தான் கூறமுடியும் என்று கேள்விப் பட்டிருக்கிருர்.

நாடி சோதிடனை தேடிப்பிடிப்பது எளிதில் கூடிவிடும் காரியமாக இல்லை. அத்திப் பூவையும், குதிரைக் கொம்பையும் தேடுவதுபோல இருந்தது சசிவதனத்துக்கு.

கடைசியில் ஒரு நாடி சோசியர் கபைப்பட்டார். ஆள் வாடி வதங்கியிருந்தார். தெருத் திண்ணையில் உட்கார்ந்திருந்த அவர் சசிவதனத்தை வரவேற்க எழுந்தபோது மக்கிப் போன கூறையிலிருந்து மடித்துப் போன தென்னையோலை ஒன்று அவர் தலையில் விழுந்தது. ஜோஸ்யர் அதை தட்டிவிட்டுக் கொண்டார்.

"நீங்கள் வரும் ஜன்மம் என்ன என்று பார்த்துச் சொல்வீர்களாமே?" என்று சசிவதனம் கேட்டார்.

இரண்டு மூன்று ஜன்மங்களாகச் சிரிப்பு என்பதையே மறந்துபோன அவர் முகம் 'ஆமாம்' என்ற குறியை அசக்கிக் காட்டியது.

"அப்படியானல் என்னுடைய அடுத்த ஜன்மம் என்ன எப்போது என்று பார்த்துச் சொல்ல வேண்டுமே."

"பெயர்"

"சசிவதனம்"

நாடி ஜோஸ்யர் நெற்றி நரம்புகளை நெறித்துக் கொண்டார்.

"காலம் பிடிக்குமே" என்ருர் சோதிடர்.

"காத்திருக்கிறேன்"

"உலக மக்களின் ஒவ்வொரு ஜன்ம விபரமும் உள்ள ஓலைகள் என்னிடம் குவியலாகக் கிடக்கிறது. இதை தேடி உங்கள் ஓலையை எடுக்க ஒரு மாசம் வேண்டுமே ஒரு மாசம்..."

சசிவதனத்துக்கு ஒரு சந்தேகம்! சோதிடர் எலும்புக்கூடைக் கண்



*Whatever the season...*
*it's always Basant*
*on board my Boeings!*

**AIR-INDIA**

டால் ஒரு மாசம் என்ற கெடுவை நம்பலாமா என்ற சந்தேகம்! தன் ஓலையைத் தேடுவதற்கு முன் கால தேவன் அவர் ஓலையை கிழித்துப் போட்டுவிட்டாலோ...?

"கவலையே படாதீர்கள். ஒரு மாசம் நான் இருப்பேன்" என்றார் சோதிடர் சசிவதனத்தின் சந்தேகத்தை எழுத்து எழுத்தாகப் படித்து விட்டவர்போல.

ஒரு மாதம் வரை சசிவதனுத்துக்கு நல்ல தூக்கமில்லை. ஒருநாள் ராஜாவாகப் பிறப்பதுபோல கனவு. மறுநாள் குடியாட்சி புகுந்து முடியிழப்பதுபோல கனவு. இன்னும் ஒருநாள் மேதையாகப் பிறப்பது போல சொப்பனம். அடுத்த நாள் சன்னியாசிக் கோலம்...அது பிடிக்கவே இல்லை. தன் தகப்பனார் சன்னியாசியாக போயிருக்கலாமே என்று தோன்றியது அப்போது;

ஒரு மாத கெடு முடிந்தது. சசிவதனம் நாடி சோதிடர் வீடு சென்றார். கூறையில் இன்னும் கொஞ்சம் கீற்றுப் பொத்தல்கள் அதிகமாகியிருந்தன. சுவற்றிலும் திண்ணையிலும் புதிய பொன் பொக்கைகள் பிறந்திருந்தன.

"ஓலை கிடைத்ததா?"—இது சசிவதனம்

"கிடைக்காமல்?"

"என்ன ஜென்மம்?"

"போன ஜென்மத்தில் ஒரு தொழில் அதிபர்."

"அடுத்த ஜன்மத்தைப்பற்றி கேட்கிறேன்."

"போன சன்மம் வீண் அதனால் இந்த சன்மம் இப்படி. இதுவும் வீண்."

"அடுத்தது என்ன?"

"தெரியாமல் இருப்பது நல்லது"

"தெரிய வேண்டும். அதையாவது கடைத்தேற்ற வேண்டும்."

"அப்படியென்றால்"

"நன்றாக சம்பாதித்து, அனுபவித்து..."

"இது தான் கடைத்தேறலா?"

"உழைப்பு, சம்பாத்தியம், இன்பம், இதுதான் கடைத்தேறல் இந்த ஜன்மத்தில் அது கிடைக்கவில்லை."

"உழைப்பில்லை, உழலல் உண்டு"

"அப்படியென்றால்"

"சசிவதனம் அடுத்த சன்மத்தில் நீங்கள் உங்கள் ஊர் பக்கத்தில் வராகபேட்டை பன்றிப் பண்ணையில் வெள்ளை நெற்றியுடன் பன்றியாகப் பிறப்பீர்கள் நான்கு வருஷத்தில்."

நாடி சோதிடர் சட்டென்று எழுந்து பழய கதவு கிரீச்சிட்டு ஒலமிட சாத்திக் கொண்டு உள்ளே சென்று விட்டார்.

சசிவதனம் வீடு வந்தார். மகனைக் கூப்பிட்டார்.

"டேய், இது பிதுரு வாக்கியம் இன்றிலிருந்து நான்காம் வருஷத்தில் வராகப்பேட்டை பன்றி பண்ணையில் நெற்றி வெள்ளைப் பன்றி ஒன்று பிறக்கும். அதை அது பிறந்த உடனே வாங்கிக் கொன்று


Tata-Fison and Ralli
are happy to be with you
on this occassion
TATA-FISON RALLIS

விடு, நான் உயிரோடு இருந்தாலும் இருக்காவிட்டாலும்" என்று ஆணையிட்டார் சசிவதனம்.

தான் பிறக்கப் போவதாகச் சொன்னால் கொல்லாமல் விட்டுவிடுவானோ என்ற பயம்! எப்படியும் பன்றி சன்மத்தை குறைத்துக் கொண்டுவிட வேண்டும் என்ற ஆசை சசிவதனத்துக்கு. "சரி அப்பா" என்றான் மகன் அக்ஷயம்.

சசிவதனம் தான் நாடி சோதிடரிடம் சென்றது பற்றியோ தன் அடுத்த ஜன்மவராகாவதாரம் பற்றியோ யாரிடமும் சொல்லவில்லை.

ஆனால் அக்ஷயத்துக்கு தகப்பன் ஆஞ்ஞை விசித்திரமாக இருந்தது. ஆனாலும் கூடிய மட்டும் அவன் தகப்பன் சொன்னதை தட்டியதில்லை.

மூன்றாண்டுகளுக்குப் பிறகு சசிவதனம் இறந்து போனார். உள்ளூர் பத்திரிகை 'புகழுடல் எய்தினார்' என்று ஒரு மூலையில் அவருடைய மரணச் செய்தியைப்பற்றி எழுதியிருந்தது. இதர நாடுகளில் எத்தனை பெரிய மனுஷன், அரசன், தலைவன் மாண்டாலும் இறந்தான் என்றுதான் பிரசுரமாகும். நம் நாட்டில் 'சுண்டைக்காயன்' செத்தாலும் 'அமரனானான்' புகழுடல் எய்தினான் என்று பத்திரிகைகள் எழுதுவானேன் என்று சிலர் ஆச்சரியப்பட்டனர்.

அக்ஷயம் தகப்பனார் சொன்னதை மறக்கவில்லை. அவர் கூறின தினத்திலிருந்து நான்காம் ஆண்டு பிறந்த தினம் அவன் வராகப்பேட்டை பன்றிப் பண்ணைக்குப் போயிருந்தான். வெள்ளை நெற்றிக் குட்டி ஒன்று போட்டிருந்தது. அதை வாங்கி வந்தான்.

அதைக் கொல்ல அவன் ஒரு பெரிய கட்டையை ஓங்கினான். எங்கே இருந்தோ ஒரு குரல் அது மிகத் தெரிந்த குரல். அசரீரியாக தகப்பன் குரல் போல கேட்டது.

"என்னைக் கொல்லாதே அந்த அந்த ஜன்மத்தில் அந்த அந்த உடல் இன்பம் தான் காணுகிறது. வாழத்தான் நினைக்கிறது. மனிதனுக்கு சந்தணத்தில் உள்ள இன்பம் பன்றிக்குச் சகதியில் உண்டு. சந்தணம் சகதி; மனிதன் பன்றி எல்லாம் ஒன்று என்ற ஞானம் வந்ததால் இதற்குப் பின் எனக்கு சன்மமில்லை."

அக்ஷயத்தின் கைத்தடி தளர்ந்து விழுந்தது.

*

---

முகலை கழித்து வெளிக்கிளம்பும் ஒரு முழுமதிபோல, தமிழ் நாட்டில் தோழர் பாரதிதாசன் கவிதை தோன்றியுள்ளது. புரட்சிக் கருத்துக்கள் அவரது உள்ளத்தில் பொங்கிப் பூரித்துப் புதுமைக் கவிகளாக வெளிவருகின்றன இயற்கையின் எழில், கலை நுணுக்கம் முதலியவைபற்றி அவர் இயற்றியுள்ள கவிதைகள் படிப்போரைக் களிப்புக் கடலில் ஆழ்த்தும்.

—C, N: அண்ணதுரை M. A.

# எங்கள் புதிய ரெக்கரிங் டெப்பாஸிட் சேமிப்புத் திட்டம்



பிரதிமாத சுலப டேபாஸிட்டின் மூலம் உங்கள் திட்டமிட்ட குறிக்கோள் நிறைவேறுவதற்கு தேவையான கணிசமான பெரும் தோகையை சேமிப்பதற்கு ஊக்கமளிக்கிறது.



| மாதாந்திரத் தவணைத் தொகை | திருப்பியளிக்கப்படும் தொகை | | | | |
|---|---|---|---|---|---|
| | 12 மாதங்கள் | 24 மாதங்கள் | 36 மாதங்கள் | 48 மாதங்கள் | 60 மாதங்கள் |
| ரூ. | ரூ. | ரூ. | ரூ. | ரூ. | ரூ. |
| 10 | 123-50 | 255-00 | 395-00 | 543-00 | 709-00 |
| 25 | 308-75 | 637-50 | 987-50 | 1357-50 | 1772-50 |
| 100 | 1235-00 | 2550-00 | 3950-00 | 5430-00 | 7090-00 |
| 250 | 3087-50 | 6375-00 | 9875-00 | 13575-00 | 17725-00 |
| 500 | 6175-00 | 12750-00 | 19750-00 | 27150-00 | 35450-00 |

மாதாந்திரத் தவணைகள் குறைந்த பட்சம் ரூ. 10
ரூ. 5-ன் கூட்டுத் தொகை — ரூ. 500 வரையில் எற்றுக்கொள்ளப்படும்.

ELEGANT

## இந்தியன் பாங்க் லிட்.

சென்னை - 1

# அர்ப்பணம்

திரு. கி. சந்திரசேகரன்

அன்று மண்டபத்தில் நல்ல கூட்டம். நாட்டியம் பார்க்கவந்தவர்களில் ரசிகர்களின் எண்ணிக்கையும் குறைவென்று சொல்ல முடியாது.

மேடையின் பக்கத்து அறையில் அலங்காரம் செய்துகொள்ளுர் இருவரில் ஒருத்தியினிடமிருந்து கிளம்பிய வார்த்தைகள் இவை:

'சோபா, என்னவோ எனக்கு பயமாயிருக்கிறது. திரை இடுக்கு வழியாய் உட்கார்ந்திருப்பவர்களைப் பார்த்தேன். முதல் வரிசையிலிருப்பவர்களில் இரண்டொருவரை விட்டுவிட்டால், அநேகமாக மற்றவர்களெல்லோரும்! விஷயமறிந்தவர்கள். என்னமாய் இன்று கரையேறப் போகிறேனோ!'

"போடி, உனக்கு பயமில்லாத நாளே இல்லை. போன மாதம் பங்களூரில் பெரிய ஹாலில் அமர்ந்திருந்தவர்களைப்பற்றியும் இப்படித்தான் நீ சொல்லி, சொல்லி உன்னோடு நிறுத்திக்கொள்ளாமல், என்னையும் கதிகலங்கச் செய்துவிட்டாய். இனி உன்னோடு சேர்ந்து நாட்டியமாடுவதை விட்டுவிடவேண்டியதுதான்".

இந்த பதிலைக்கேட்டு ஜோதியின் முகம் சற்று வாடியது. அதற்குள் அவர்களிருவருடைய தாய், எட்டி நின்று அழகு பார்த்திருந்தவள், "என்ன ஆரம்பமாகிறது கலகம்? ஜோதி, உன் வாயை மூடிக்கொண்டிருக்க மாட்டாய்! சோபாவின் அலங்காரம் அமைந்திருப்பதைப் பார்த்தால் திருஷ்டி கழிக்கவே தோன்றுகிறது. நீயும், உன் பேச்சை முடித்துக்கொண்டு செய்துகொள்ள வேண்டிய இதர அலங்காரங்களைப் பண்ணிக்கொண்டு தயாராக இரு. மணி இன்னும் பதினைந்தே நிமிஷங்கள் தாம் உள்ளன. போ, போ, உள்ளே நிலைக்கண்ணாடியில் பார்த்துக்கொள். முன் மயிரை தள்ளியே தலை சாமானை அணியவேண்டும். இல்லாவிட்டால் உன் பேச்சைப் போலவே அவையும் முந்திக்கொள்ளும்".

ஜோதியின் உருவமும், முகப்பொலிவும் சோபாவின் பக்கத்தில் சற்று மங்கியே எப்பொழுதும் தோன்றும். இரண்டே வயசு வித்தியாசத்தில் பிறந்த சகோதரிகளாயினும், மூத்தவளான சோபாவின் நிறமும், முகத்தின் வசீகரமும், அலங்காரங்கள் சேர்ந்த

வுடன் இன்னும் அதிகமாகவே சோபித்தன. ஜோதியின் உடலமைப்பு அவ்வளவு கச்சிதமாய் இல்லை என்றேதான் அழகுணர்ச்சி பெற்றவர்கள் கருதினார்கள். மேலும் அவளது நிறம் சற்று குறைவு என்பதும் ஒரு காரணம், நாட்டியம் பார்ப்பவர்களின் விழிகளில் அவளுடைய ஆட்டத்திற்குக் கூட சிறிது குறைவு காணப்பட்டதற்கு.

தன்னை நாட்டிய மாடுகையில் ஒரேவிதமாய் பலரும் ரசிப்பதில்லை என்பதைஉணர்ந்தவள் தான்ஜோதி இருப்பினும், அபிநயம் தொடங்கியவுடன் எங்கிருந்தோ அவளுடைய வதனத்தில் விசித்திர விசித்திரமான பாவங்கள் நான், நீ என்று போட்டியில் முத்திக்கொண்டு தோன்றும். அவள் கைகளில் விரல்கள் தாமா அவை அல்லது இதயங்களை யெல்லாம் பின்னிப்பின்னி இழுக்கும் பிறம்புகள் தாமா என்றே ரசிகர்களில் தேர்ந்தவர்கள் கருதுவார்கள். விசாலமான கண்கள் அவளுக்குப் பரமன் அருளவில்லை. இருப்பினும், 'நல்ல காலம் இவ்வளவுடன் நிற்கின்றனவே;இன்னும் பெரியவைகளாயிருந்திருந்தால் என்னவெல்லாம் அவை செய்து தம்மையே அவைகளினுள் முழுக வைத்து விடுமோ' என்று பயப்படுபவர்களும் இல்லாமலில்லை. மொத்தத்தில், சோபாவின் திறமையைப் புகழாதாரில்லை. சாமான்ய ஜனங்களும்-நாட்டியத்தின் உத்திகள் ஒன்றையுமே அறியாதவர்களும்—சோபாவின் ஆடலைக்கண்டு பிரமிப்பார்கள். ஜோதியின் நடனத்தை சோபாவின் சேர்க்கையால் பொறுத்தவர்களு முண்டு.

இருவரும் மேடையில் தோன்றவுமே கலகலப்பு ஜனங்களிடம் ஏற்பட்டது. சோபா, அலரிப்பு முடிந்ததும் சட்டென உள்ளே சென்றாள், ஜோதிக்கு உள்ளே சென்று வரவேண்டிய அவசியமே இருப்பதாகப்படவில்லை, இருப்பினும், தனியாக மேடையில் ஆடாமல் நிற்பதற்கு முடியாமல் சிறிது தயங்கியே அவளும் உட்பக்கம் கூடவே நகர்ந்தாள்.

இதற்குள் அவள்தாய் சற்றுக் கடுமையான குரலில்' "வா ஜோதி! ஏன் தயங்கறே! வந்து மூஞ்சியைத் துடைத்து, பௌடர் போட்டுக் கொள்' என்றாள். ஜோதிக்கு உள்ளே சென்று வருவது அவசியமில்லாத தாமதமாகவே தோன்றியதால். 'எனக்கு பௌடர் வேண்டாம். நான் பிற்பாடு செய்து கொள்ளுகிறேன். நாழிகை ஆகிவிட்டது" என்று சொல்லி வேகமாய் சோபா கிளம்பத் தயாராக நிற்பதைக் கவனித்தவளாய், அவளுடன் அரங்கத்தில் வந்துநின்றாள்.

அடுத்தது ஜதிஸ்வரம், சப்தம். சோபாவின் ஒயில் பார்த்தவர்களின் கண்களைக் கவர்ந்தாலும், ஜோதியின் திருத்தமான அடவுகளும், முகபாவங்களும் தனியான கலைக்

களிவுடன் விளங்கியதை கவனியாதவர்கள் ரசிகர்களாயில்லாதவர்களே. ஜதிகள் ஆனவுடன், மறுபடியும் உள்ளே செல்வதற்கு முயன்ற சோபாவை ஜோதி தடுத்துவிட்டு, சப்தத்தைத் தொடங்கிவிட்டாள். சோபாவுக்கு அதில் சிறிது எதிர் பாராத மன ஆயாசம் உண்டான போதிலும், தாளங்களைத்தட்ட கட்டுவனர்களும், சங்கீதம் இழைத்தவர்களும் ஆரம்பித்து விட்டதால் தன் சுய அபிப்பிராயத்தை நிறைவேற்றிக்கொள்ள முயலவில்லை. அடுத்தது வர்ணம். மறுபடியும் சோபாவின் உள்ளே செல்லும் யோசனையைத் தடுத்துவிட்டாள் ஜோதி. வர்ணம் வெகுநேரம் தொடர்ந்து ஆடியாக வேண்டியிருப்பதால் இடையே ஒன்றும் செய்ய வகையற்று சோபா தனது தங்கையின் ஆணைக்கு அடிபணிய வேண்டி உள்ளே மனம் தவித்தாள். அவள் தாயாருக்கும் சோபாவின் கருத்தில் சம்மதம் இருந்ததால், ஜோதியின் அடங்காத செயலை நினைத்து உள்ளே பொறுமினாள்.

வர்ணம் விரிவாய் நடிக்கப் பெற்றது. எத்தனையோ கதிபேதங்களும் பாவவிந்நியாசங்களும் அலை அலையாய் ஒன்றை ஒன்று வென்று கொண்டு வெளியாயின. ஜோதியின் லயக்கட்டும் சங்கீத அபிமானிகளைப் பரவசப் படுத்திவிட்டன. அனால் சோபான்வி ஆட்டத்தையே கண் கொட்டாமல் பார்த்து வியந்தவர்களில் ஒருவர்கூட பாக்கியில்லை, சிலவேளைகளில் அதிகமாகவே சோபாதனது உடலை ஒடித்துக் கொண்டு சிரம சாத்தியமானதுகளையும் ஓட்டங்களையும் காட்டி விட்டாள், ஜோதியின் கட்டுக்குள் அடங்கிய ஹஸ்தங்களும், முத்திரைகளும் துளியும் ரசிகர்களின் சலிப்பைக் கிளப்பாமல் கலையைப் பாதுகாத்தன.

வர்ணம் முடிந்து, இருவரும் இடைவேளைக்காக உள்ளே நுழைந்ததுமே, கூறையைப் பிய்த்துக் கொண்டு கரகோஷங்கள் எழுந்தன. சிலர் மேடையின் அருகில் வந்து எட்டிப் பார்த்துத் தங்கள் நன்றியையும், பாராட்டையும் முகபாவங்களாலும், வாய்ச்சொற்களாலும் வெளியிட்டனர்.

சோபாவின் கோபம் எல்லையை எட்டிப்பிடித்தது. "இதோ பார், ஜோதி, இனிமேல் நான் உன்னோடு சேர்ந்து ஆடப்போவதில்லை. இன்று முற்றுப்புள்ளி தம் ஜோடி நாட்டியத்திற்கு என்று அறிந்து கொள்' என்ருள். ஜோதி, நன்கு சோபாவின் ஏமாற்றத்தையும், எதிர்பாராது தனக்கேற்பட்ட தடங்கல்களை பொறுக்க மாட்டாமல் அவள் தவிப்பதையும் உணர்ந்தவளானதால், நிதானமாய் 'ஏன் சோபா, உனக்கு இவ்வளவு கோபம்? நீயே பார், இடை இடையே நாம் உள்ளே வந்து போனல், பார்க்கும் கூட்டம் தடைகளால் தங்கள் உத்சாகத்தை இழப்பார்கள். நாட்டியம் பார்ப்பதும் ஒரு தனி யோக

மல்லவா? எதை கவனிக்க வேண்டுமோ அதை சிறிது கவனியாமல் இழந்து விட்டாலும், பின்னல் வரும் பாவங்களை முழுவதும் அனுபவிக்க இயலாது ஆகிவிடுமல்லவா? நாம் ஆடினுல் மட்டும் போதுமா? எதிரே உள்ளவர்களின் இதயங்களும் நம்முடன் ஒத்துழைத்தாலல்லால் எவ்விதம் நம்முடைய பயிற்சி ஓரளவாவது முழுமையின் சமீபம் நெருங்க இயலும்?" என்று கேட்டாள்.

"உன் முழுமையும், அழுர்பும் எனக்குத் தெரியாது! என் இஷ்டப்படி நான் வேண்டிய மட்டும் உள்ளே வந்து என் முகத்தையும் வேர்வையையும் துடைத்து மறுபடியும் ஒழுங்கு செய்து கொண்டே தான் அரங்கத்தில் தென்படுவேன். இனிமேல் சட்டம் வகுக்க உனக்கு அதிகாரம் நான் தரமாட்டேன்!' அவள் கோபம் மூர்ச்சையை அடைந்து விட்டது.

இடைவேளையும் முடியுந் தருவாயில் அவர்களின் தர்க்கம் எங்கு முடியுமோ என்று பயந்தவளாய் அவர்களின் தாயார், "ஜோதி, உன்னைவிடப் பெரியவளுக்கு நீ படிந்துபோனுல் என்னவாம்! எதுவானுலும், இரண்டுபேரும் அபிநயம் தொடங்குவதற்கு முன் இப்படி முகங்களை வைத்துக்கொண்டு சென்முல் கூட்டத்தில் நிச்சயம் பலர் குறை கூற நேரும்" என்முள்.

ஜோதி பதிலொன்றும் கூறவில்லை. வாஸ்தவத்தில் அவளுக்கு சோபாவின் செயலில் வேறுவிதமான கருத்தே கூடவில்லை. ஆனுலும் ரசிகர்களின் மனம் தளர்ச்சி பெறக்கூடாது. என்ற ஒரே எண்ணம் மேலிட்டதால், பிற்பாடு தங்களுக்குள் தர்க்கம் வளருவதையும் எதர்ப்பார்த்தே சமயத்தில் எப்படியும் தனது செயல் லாபமாகவே விளையும் என்ற நம்பிக்கையால் அவ்விதம் சோபாவை உள்ளே போகவிடாமல் தடுத்திருந்தாள்.

பதங்களை அபிநயம் பிடிப்பதற்கான அவகாசம் கிட்டவே இன்னும் வேதனை உள்ளே புரள ஜோதி சிந்தனையில் தோய்ந்த முகத்துடன் நின்றுள். சோபாவினிடம் துளியும் கவலையே இல்லை. பாடுகிறவர்களை மட்டும் சரியானபடி பிகு சொகுசுடன் கார்வை குலையாமல் சாரீர வாய்ப்புடன் குரலை எழுப்பவேண்டியதுதான், தனது உடல் நெளியத் தயாராகயிருப்பதை நினைந்து அவள் எதிர்பார்த்துக் கொண்டிருந்தாள்.

கருத்தை முகபாவங்களுடன் இணைத்து, லயத்தை உடல் முழுவதும் பரவச்செய்து, முத்திரைகளைத் துளியும் பிசிறின்றி உருவாக்கி, கற்பனையையும் குறையாமல் காட்டி, அபிநயம் செய்வதின் சிரமத்தை அறியாமல்தான் சோபா தனது எழிலையே நம்பி இருந்தாள்.

ஜோதியின் மனசு சுநாதத்தில் ஒருமைப்பட்டு பரவசநிலையில் நின்

றிருந்தது. அதற்காகத் தனது ஸ்தானத்தையும் இழக்கவில்லை, க்ஷேத்திரக்ஞருடைய பதங்களில் சிருங்காரம் மிளிர்ந்தது. வெகு லாகவமாய் கண்ணிமை யொன்றை சாய்த்து, குறும்புப் பார்வையை மற்றக் கண்ணினால் விளக்கி, புன் முறுவல் பூத்து காதலனை அவள் வரவேற்றது, தனி இன்பத்தைப் பார்த்தவர்களின் இதயங்களில் ஊட்டியது. காதலன் கடவுளாகவே விளைத்ததால் மாறிய உணர்ச்சியை பக்தியில் ஈடுபடுத்திய விந்தையை ரசிகர்கள் அனுபவித்தார்கள்.

அடுத்தது 'வருகலாமோ ஐயா' என்ற நந்தன் சரித்திரகீர்த்தனையை அபிநயம் பிடித்துக்காட்ட இருவரும் முனைந்தார்கள். தைன்யம் உருக் கொண்டவிதம் புலையன் நிற்பதும், அவனது நெஞ்சம் மறக்காதுதேடும் தெய்வம் கோவிலில் கர்ப்பக்கிரஹத் தில் அமர்ந்திருப்பதும், தேரடி தூரத்தில்அவன் நிற்கவேண்டியிருப் பதும் ஆனால் அவன் மனம் இடை யுறாது வழிபடும் கடவுள் உண்மை யைத் தவிர வேறல்ல என்ற திட நம்பிக்கையும், இப்படிப் பலப் பல பாவங்களை ஆடி அபிநயித்துக் காட்டினார்கள். மற்றவர்களெல் லாம் ரசித்தார்களோ என்னவோ இரண்டொருவர் ஜோதியின் தனிப் பட்ட சில பாவங்களைக் கவனியா திருக்கவில்லை.

பாட்டின் சரணத்தில், "பூமியில் புலையனாய்ப் பிறந்தேனே; புண்ணி யம் செய்யாமலிருந்தேனே! சாமி யுன் சந்நிதிவந்தேனே சரணமடைந் தேனே!" என்ற அடிகளை இசை யில் வெகு உருக்கமாய் பாடிக் கொண்டிருந்தன ஒன்றோ டொன்று நன்கு இணைந்த சாரீ ரங்கள். ரசிகர்களின் இதயங்களும் இசையுடன் இயங்கிக்கொண்டிருந் தன, ஜோதியின் அபிநயத்தில் 'புண்ணியம்செய்யாமலிருந்தேனே!', என்ற அடியை அவள் விந்நியாசப் படுத்துகையில் முன்னால் இரண்டு மூன்று அடிகள் வைப்பதும், பின் னால் அதே விதம் இரண்டு, மூன்று அடிகள் நகருவதும், கண்களை எங்கோ வெகு தூரத்திலுள்ள தொன்றைத் தேடுவதும் இரு கைக ளையும் சேர்த்து மார்பகத்தே வைப் பதும், எல்லாமாக நந்தன்படும் மன ஊசலாட்டை தெள்ளென விளக் கின. அதிலும் ரசிகர்களில் பாவங் களை ஊன்றிப் பார்த்தவர்களில் ஒருவரிருவர், சமூகம் தள்ளியவன் என்பதைப் பின்னால் செல்லமுடி யாத நிலையிலும், 'கடவுள் இன்னும் தன்னை ஏற்கவில்லை என்பதை முன் னால் ஏற்பட்ட தடையைக் காட்டி யதிலும்; வெகு சூட்சுமமாய் கருத்தை விளக்கியதாக புரிந்து கொண்டபொழுது, மிகுந்தகலையின் பத்தில் திளைத்தார்கள்.

ஜோதி அபிநயத்தை முடித்துக் கொண்டு அடுத்து வந்த தில்லானா வுக்குத் தன்னை உடனே தயா ராக்கிக்கொள்ள முடியாமல் தவித் துத்தான் நின்றாள். சோபாவின் அபிநயத்தில் எந்தவிதவிதமான

,ாவங்களின் கற்பனை எழிலும் இல்லாமலிருந்ததை கூடியிருந்த ஜனங்கள் பொருட்படுத்தவே இல்லை. 'சபாஷ்! சபாஷ்' என்று தில்லானாவில் இருவரும் சுற்றி, சுற்றி வந்து பலவித கதிகளில் ஆடியும், துள்ளியும் காலடிகளில் பல விதமாய் மாற்றி மாற்றி அடித்து நகர்ந்ததையும், எல்லோருமே பாராட்டினார்கள்.

ஆட்டம் முடிந்தவுடன், பெரிய கரகோஷம் ஏற்பட்டு கட்டடமே இடிந்து விழுவதற்கொப்ப சப்தம் எங்கும் பரவியது. ஆயாசம் மேலிட்டவர்களாய் சகோதரிகளிருவரும் உள்ளே சென்று அமர்ந்தார்கள். பலர் பாராட்டைத் தனியேயும் அவர்களிடம் வழங்கினர்கள். சோபா நினைத்தவிதம் ஜோதி நினைக்கவில்லை. சோபா வெற்றி வாகை சூடியவிதம் பெருமிதத்துடன், இடையில் ஏற்பட்ட மனத்தாங்கலையும் மறந்துதான். "ஜோதி, நீ கூட இன்று துளியும் குறையாமல் முழுவதுமே களைகட்ட ஆடிவிட்டாய். நீ எங்காவது தயங்கி விடுவாயோ என்றே பயந்தேன். ஒரே ஒரு இடத்தில் அந்த நந்தன் சரித்திர கீர்த்தனையில் நீ ஆடத் தவறி நின்றுவிடுவாயோ என்றுகூட பயந்துவிட்டேன்! ஆனல் சமாளித்துவிட்டாய். ஒருவரும் அந்த இடத்தை கவனிக்கவில்லை என்றே நினைக்கிறேன்." என்ருள், ஜோதியைப்பார்த்து முகத்தில் ஒளியுடன். ஜோதி ஒன்றுமே கூறவில்லை; கூருததுடன் முகத்தையும் திருப்பிக் கொண்டுவிட்டாள்.

'என்ன! நான் சொன்னதில் உனக்கு திருப்தி இல்லையா? கேள் வேண்டுமானல் நமது நண்பர்களை" என்று மறுபடியும் அவள் ஆரம்பித்தாள்.

சட்டென ஜோதி "போதுமே சோபா, உனக்குப் பிடித்திருந்தால் எனக்கும் திருப்திதான் ஆனல், நாம் நினைப்பது மட்டும் போதாது. பார்த்தவர்கள் நன்ருய் ரசிக்க முடிந்ததா என்று அறிய வேண்டும், கலையை வழங்குவதில் ரசிகர்களும் (ஸஹிருதயர்களும்)சேரும்பொழுது தான் பூரணத்துவம் ஏற்படும் நமக்கல்ல கலைக்கு" என்ருள்.

'நீ சொல்வது உனக்குத்தான் விளங்கும்; வேறொருவரும் உன்னோடு சேர முடியாது' என்று சோபா சொல்லி சலித்துக்கொண்டாள்.

ஆனல் வந்திருந்த ரசிகர்களில் ஒருவன் முன்னல்வந்து, "உங்களிருவருடைய சம்பாஷணையும் நான் கேட்டுக்கொண்டுதான் நின்றிருந்தேன். ஒரே ஒரு விஷயம் எனக்குப்பட்டது. ஜோதியின் அபிநயத்தைநான்பார்த்தேனே அல்லது நந்தனையே, நெருப்பில் விழுந்த புழுவெனத் துடிப்பதைக் கண்டேனே தெரியாது. சமூகம் வேண்டாமென வெறுக்கவும் கடவுள் அங்கீகரிக்க சட்டென இணங்காது இருப்பதையும் கோவிலின்

நுழையமாட்டாமல் அவன் தவித்தநிலை புலனுக்கியது. பரிசுத்தி எய்தியது எங்கள் உள்ளங்களும்; அவ்வளவே. கலையைக்கற்பது வெகு மலிவாகிவிடலாம்; கலைக்கு அற்பணம் வெகு விலையுள்ளது, அம்மா! ஒரு ஆயுசுமுழுவதும், அதில் விழுங்கப்பட்டுவிடுமே சரியானபடி அர்ப்பணம் மட்டும் செய்வதாயின்" என்றான்.

அவனு பேசினன். அவன் உள்ளம் உரைத்தது. ஜோதியின் விழிகளில் என்றுமில்லாத ஒளி பிரகாசித்தது.

"அர்ப்பணம் செய்யவேண்டியவை வாழ்க்கை, கலை, உள்ளம் எல்லாமே இந்த யோக நிலைக்கு" என்று முணு முணுத்தன அவளது உதடுகள்.


# வாரியர் நீலீ பிருங்காதி தைலம்

காந்தி மிக்க கருங்கூந்தல் செழிப்பாக வளருவதற்கும், கொட்டிப்போகாமல் இருப்பதற்கும் கொட்டிப்போன இடங்களில் மறுபடி முளைப்பதற்கும் மிகச் சிறந்தது

## குளிர்ச்சிமிக்க ஸ்நான தைலமும்கூட

500 ML, 250 ML, 125 ML, புட்டிகளில் கிடைக்கும்

சாஸ்திரோக்தமாக தயார் செய்யப்பட்ட எல்லா ஆயுர்வேத மருந்துகளும் எங்களிடம் கிடைக்கும்

**விலை ஜாபிதாவுக்கு 15 ந.பை. ஸ்டாம்புடன் எழுதவும்**

ஆரிய வைத்தியர் கெ. எஸ். வாரியர் அவர்களின்

# அஷ்டாங்க ஆயுர்வேத சாலா

(நிறுவனம்: 1936)

N. S. B. ரோடு, திருச்சிராப்பள்ளி-2

DELHI STOCKISTS:-M/s Madras Stores, 96, Baird Road, NEW DELHI.

PHONES : Society : 2433
President : 2933
Dyehouse : 3204
Colony : 3437

Tel : "SOCIETY"
Estd : 1938

Patronise Handloom Fabrics — Provide Work For Millions

Always Insist Upon

# THE SALEM AMMAPET SOCIETY'S PRODUCTS

★ LATEST DESIGN SAREES
★ CHOLI PIECES
★ DHOTIES, BHAVANCHU, GUNDANCHU
★ LACED DHOTIES & ANGAVASTRAMS
★ BEDSHEETS KERCHIEVES ETC.

*PLEASE VISIT OUR DEPOT AT:*

*Whole Sale Depot,*

**55, 2nd Agraharam,**
**SALEM-1.**

*OUR SALES DEPOTS*

1. Salem Sales Depot, 69-B, Ist Agraharam, Salem-1.
2. Shevapet Sales Depot, 85-B, Kannara Street, Salem-2.
3. Attur Sales Depot, 257, Bazaar Street, Attur.
4. Trichy Sales Depot, 35-B, Chinnakadai St., Trichy-2.
5. Karur Sales Depot, 151, Bazaar Street, Karur.
6. Erode Sales Depot, 292, Agraharam Street, Erode.
7. Tirunelveli Sales Depot, 103/87. West Car Street, Thirunelvely Town.
8. Thirupathur Sales Depot, 22, Jinnah Road, Thirupathur N. A. Dt.
9. Neyveli Township Sales Depot, Central Bazaar, Block No. 19, Shop No. 6, Neyveli-3.
10. Scooter M S W. 5602.
11. Push Cart No. 1 & 2.

*Thiagarayanagar Sales Depot:*
No 9, Usman Road,
T. Nagar, Madras-17.
Phone : No. 41723

*Silver Jubilee Depot:*
Thiru. V. Ka. Pathai,
Ammapet,
Salem-3.

Our Products can be had from Our Sales Depots, All Co-optex Units, Handloom Houses and Our Agents.

**A. Mariappan,**
*President.*

## The Ammmapet Handloom Weaver's Co-operative Production & Sale Society S. 532

**AMMAPET - SALEM-3. (Tamil Nadu)**

# பாடும் பணி!

**சந்தக் கவிமணி திரு. தமிழழகன்**

மனிதனைப் பாடுவேன்;
மனிதனைப் பாடுவேன்!—அம்

மனிதனும் தெய்வமாய்
மாறுவன் என்பதால்,

மனிதனைப் பாடுவேன்;
மனிதனைப் பாடுவேன்!

மண்ணினைப் பாடுவேன்;
மண்ணினைப் பாடுவேன்!—அம்

மண்ணிலும் விண்ணகம்
மலர்ந்திடக் கூடுமால்

மண்ணினைப் பாடுவேன்;
மண்ணினைப் பாடுவேன்!

வாழ்வினைப் பாடுவேன்;
வாழ்வினைப் பாடுவேன்!—அவ்

வாழ்விலும் தியாகமே
வேள்வியென் றிறையுமால்

வாழ்வினைப் பாடுவேன்;
வாழ்வினைப் பாடுவேன்!

என்னையும் பாடுவேன்;
என்னையும் பாடுவேன்!—அவ்

என்னையும் தான்பிறர்க்(கு)
ஈவதன் தன்மையால்

என்னையும் பாடுவேன்;
என்னையும் பாடுவேன்!
பாடும் பணியிதே;
பாடும் பணியிதே!—நான்

பாடும் இவையெலாம்
பரமனின் பூசையால்

பாடும் பணியிதே;
பாடும் பணியிதே!

# பரவச் செய்

திரு. கோவை. அ.

தமிழ்வாழத் தமிழ்நாட்டின் தகைமைவாழத்
தன்வாழ்வைத் தந்திட்ட தமிழர்கோமான்
தமிழுயர்வை தமிழ்மரபைத் தரணிகாணத்
தமுக்கடித்துச் சாற்றியவன் சென்றதெங்கே?

பொன்நாடிப் புகழ்நாடிப் பதவிநாடித்
தன்வாழ்வில் தடுமாறித் தவித்தானில்லை
தன்னுட்டுத் தன்மானம் அல்லால்வேறு
சன்மானம் தேடியவன் துடித்தானில்லை.

வளமான தமிழ்நாட்டின் வரம்புமீறி
வடநாட்டின் இந்தியெனு மரக்கிவந்தால்
களமேறிக் கடைசிவரை வெற்றிவாளைக்
கரமேந்திக் காத்திடுவேன் என்ருனன்ருே?

தாய்தாந்தை தந்தபெயர் தன்னைமாற்றித்
தான்பயின்ற பாரதியின் பெயரைப்போற்றி
வாய்ந்தபுகழ் வரவனைத்தும் அவனுக்கீந்த
வஞ்சமிலாப் பாரதியின் தாசனன்ருே?

புன்படையாய்ப் பலகெடுதல் புகுந்தநாட்டைப்
பொன்னுகப் புதுக்கிவிடத் துடித்தவீரன்
தன்கடனைத் தீர்க்குமுனர் சென்றதெங்கே?—
தமிழன்னை யுறுங்கவலை தீர்ப்பார்யாரே?

அன்புநெறி ராமலிங்கன் கம்பன்போன்றும்
அறமுறைத்த வள்ளுவனுர் இளங்கோபோன்றும்

# வோம்!

அய்யாமுத்து

இன்பமதுப் பாட்டிசைத்தே இந்நாட்டில்
எவரவனைப் போலெமக்கு இன்பமீவார்?

தென்குமரித் தேவிதினந் தேடினளா?
தேனூர்ந்த வேங்கடத்தான் கூவினனா?
தன்மனைவி பழனியம்மாள் தூற்றினளா?
தனையன்கோ பதியவன்சொல் தாண்டினனா?

என்னகுறை கனகசுப்புக் கிடறுமிங்கே?—
ஏன்புதுவை விட்டகன்றான் சென்னைக்கங்கே?
பொன்மானைப் பொய்மானை இராமன்தேடிப்
போனகதை படித்திருந்தும் போனதென்னே!

குடும்பவிளக் கேற்றியதும் அவன்தானன்றோ?
குடும்பவிருள் சூழ்கவெனச் சென்றதென்னே!
இடும்பைதருந் தீநெறிகள் எரித்துத்தள்ள
இனியெமக்கு யார்துணையாய் இருப்பாரிங்கே?

அழகுதமிழ்க் கவிபாடும் கனகசுப்பின்
அழகுமுகப் பொலிவினையாம் காண்பதெங்கே?
பழகுதமிழ்ப் பெரும்புரட்சிக் கவிதைபாடிப்
பைந்தமிழர் வாழ்வினுக்கு வளமார்காண்பார்?

கோவேந்தர் கோட்டைபல கட்டினர்கள்—
குவலயத்துள் அவையெல்லாம் நிலைத்ததில்லை
பாவேந்தன் பாரதிதா சன்பாத்தேனைப்
பன்மொழியில் பலநாட்டில் பரவச்செய்வோம்!

# THE MADRAS ALUMINIUM COMPANY LIMITED

The Biggest Basic Industry in Madras State
with the Technical Collaboration and
Finance Participation of

**Soc. Montecatini, Italy**

| | | |
|---|---|---|
| AUTHORISED CAPITAL | — | Rs. 10 Crores |
| ISSUED CAPITAL | — | Rs. 6 Crores |

*Factory at:*

Mettur Dam : : Salem District

RAW MATERIAL BAUXITE ORE FROM THE MINES OWNED BY
THE COMPANY AT

SHEVAROY HILLS : : **YERCAUD**

*COMMISSIONED IN FEBRUARY 1965*

Inaugurated by Dr. S. RADHAKRISHNAN, President of India
*On 2nd July 1965*

Registered Office:

**"Jayalakshmi"**

RACE COURSE, COIMBATORE-18.

Managing Agents:

***Messrs SALCOE & COMPANY, Coimbatore.***

# கல்லாடனார்

திரு. மயிலை. சீனி. வேங்கடசாமி

பரணர் கபிலர்களுக்குப் பிறகு இருந்தவர் கல்லாடனார். இவரும் இவருடைய குடும்பத்தினரும் வேங்கடமலைக்கு அப்பால் வேங்கடநாட்டில் இருந்தவர்கள் என்பது இவருடைய செய்யுளினால் அறிகிறோம். பொறையாற்றுக்கிழான் என்னும் குறுநில மன்னனைப் பாடிய இப்புலவர், தமது ஊரில் வற்கடம் நேர்ந்து பசி கூர்ந்த படியினால் தமது சுற்றத்துடன் தெற்கே வந்ததாகக் கூறுகிறார்.

‘வேங்கட வரைப்பின் வடபுலம் பசித்தென
ஈங்குவந் திறத்தவென் இரும்பேரொக்கல்’

என்று (புறம். 391: 7-8) இவர் கூறுகிறார்.

இவர் தமது செய்யுட்களில் வேங்கட நாட்டையாண்ட புல்லி என்னும் அரசனைக் கூறுகிறார். புல்லியினுடைய வீரர்கள் காட்டிலிருந்து யானைக் கன்றுகளைப் பிடித்து வந்து தங்கள் ஊர்க் கள்ளுக்கடையில் கொடுத்து அதற்கு விலையாகக் கள்ளைக் குடித்து மகிழ்ந்த செய்தியைக் கூறுகிறார்:

‘வலஞ்சுரி மராஅத்துக் சுரங்கமழ் புதுவீச்
சுரியா ருளைத்தலை பொலியச் சூடிக்
கறையடி மடப்பிடி கானத் தலறக்
களிற்றுக்கன் றொழித்த உவகையர் கலிசிறந்து
கருங்கால் மராஅத்துக் கொழுங்கொம்பு பிளந்து
பெரும்பொழி வெண்ணார் அழுந்துபடப் பூட்டி
நெடுங்கொடி அடங்கு நியம மூதூர்
நறவுநொடை நல்லிற் புதவுமுதற் பிணிக்கும்
கல்லா இளையர் பெருமகன் புல்லி
வியன்தலை நன்னாட்டு வேங்கடம்.,

(அகம். 83: 1-10)

பொருள் சேர்ப்பதற்காக வெளிநாடு சென்ற ஒருவன் வேங்கட மலையைக் கடந்து அதற்கு அப்பால் உள்ள நாட்டுக்குச் சென்றதைக் கூறுகிறார். அவ்வாறு கூறுகிறவர் புல்லியையும் கூறுகிறார்:

'மாஅல் யானை மறப்போர்ப் புல்லி
காம்புடை நெடுவரை வேங்கடத்து உம்பர்
அறையிறந் தகன்றனர் .........'

(அகம். 209 8-10)

இப்புலவர், சோழநாட்டுக் காவிரிக்கரையிலிருந்த அம்பர் என்னும் ஊரின் அரசனை அருவந்தையிடஞ் சென்றார். அவ்வள்ளல் இவரை ஆதரித்து விருந்தளித்தான். அவனைப் புகழ்ந்து வாழ்த்தினர் இப்புலவர். வேங்கட நாட்டு அரசன் புல்லியினுடைய வேங்கடமலையில் பொழியும் மழைத்துளிகளைவிட அதிக காலம் வாழ்வாயாக என்று வாழ்த்தித் தன்னுடைய நாட்டையும் தன்னுடைய அரசனையும் நினைவுகூர்கிறார். இதனால் இவருடைய நாட்டுப் பற்றும் அரச பக்தியும் விளங்குகிறது. இவர், அம்பர்கிழான் அருவந்தையைப் பாடிய செய்யுட் பகுதி இது:

"வறன்யான் நீங்கல் வேண்டி என்னரை
நீவிறச் சிதாஅர் களைந்து
வெள்ளிய துடீஇயென் பசிகளைத் தோனே
காவிரி யணையுந் தாழ்நீர்ப் படப்பை
நெல்விளை கழனி **யம்பர் கிழவோன்**
நல்லரு வந்தை வாழியர், **புல்லிய**
**வேங்கட விறல்வரைப்** பட்ட
ஓங்கல் **வானத்து உறையினும் பலவே.**"

(புறம். 385: 5-12)

தொல்காப்பிய இலக்கண நூலில், வேங்கடமலை தமிழகத்தின் வட எல்லையாகக் கூறப்பட்டுள்ளது. ஆனால், சரியான வட எல்லை, வேங்கடத்துக்கு அப்பால் உள்ள வடபெண்ணையாற்றின் தென்கரையாகும். வட பெண்ணையாற்றிலிருந்து அக்காலத்துத் தமிழ்நாடு தொடங்கியது. இதற்குச் சில சான்றுகள் உள்ளன. கல்லாடனர் வேங்கடமலைக்கு வடக்கில் ஒரு ஊரில் இருந்தவர் என்பதே இதற்குரிய சான்றுகளில் ஒன்றாகும். இதுபற்றி இங்கு விரிவாகக் கூறுவது மற்றொன்று விரித்தலாக முடியுமாகலின் விரிவாகக் கூறாமல் விடுகிறோம்.

கல்லாடனர் என்னும் இப்புலவர் பெயரை நோக்கும்போது இப்பெயர் இவருடைய இயற்பெயராகத் தோன்றுவில்லை; ஊர்ப்பெயராகத்

தோன்றுகிறது. கல்லாடம் என்பது இவர் இருந்த ஊரின் பெயராக இருக்கலாம் என்று தோன்றுகிறது. ஆனால், இதுபற்றி உறுதியாகக் கூறமுடியவில்லை. ஆராய்ந்து முடிவு செய்யவேண்டும்.

தலையாலங்கானம் என்னும் இடத்தில் நிகழ்ந்த போரிலே சோழனையும் சேரனையும் அவர்களுக்குத் துணையாக வந்த வேளிர்களையும் வென்று புகழ்பெற்ற **பாண்டியன் நெடுஞ்செழியனைக்** கல்லாடனார் நேரில் சென்று பாடியிருக்கிறார். (புறம்–23)

'ஞாலம் நெளிய ஈண்டிய வியன்படை
ஆலங் கானத் தமர்கடந் தட்ட
காலமுன்ப! நிற் கண்டனென் வருவல்.'

(புறம்-23: 15-17)

என்று முன்னிலையில் வைத்து இவர் கூறுவது காண்க. இச்செய்யுளின் கீழ்க் குறிப்பு, 'பாண்டியன் தலையாலங்கானத்துச் செருவென்ற நெடுஞ் செழியனைப் பாடியது' என்று கூறுகிறது.

'உடலருந் துப்பின் ஒன்றுமொழி வேந்தரை
அணங்கரும் பறந்தலை யுலங்கப் பண்ணிப்
பிணியுறு முரசங் கொண்ட காலை
நிலைதிரி பெறியத் திண்மடை கலங்கிச்
சிதைதலுய்ந் தன்றோ நின்வேல், செழிய'!

(புறம்–25: 5-9)

என்று மேலும் இப்புலவர் அப்பாண்டியனை விளித்துக் கூறுகிறார். மீண்டும் புறம் 371-ஆம் செய்யுளிலும் இவர் அப்பாண்டியனைப் பாடியுள்ளார்.

தலையாலங்கானத்துச் செருவென்ற நெடுஞ்செழியன், வெற்றிவேற் செழியனுக்குப் பின்னர் பாண்டி நாட்டையரசாண்டவன். கோவலனைக் கொலை செய்வித்துக் கண்ணகியிடம் வழக்குத் தோற்று அரசுகட்டிலிற் றுஞ்சியவனும் ஆரியப்படை கடந்தவனுமாகிய நெடுஞ்செழியனுக்குப் பிறகு கொற்கையிலிருந்த வெற்றிவேற் செழியன் பாண்டிய நாட்டையரசாண்டான். வெற்றிவேற் செழியனுக்குப் பிறகு முடிசூடியவன் தலையாலங்கானத்துச் செருவென்ற நெடுஞ்செழியன். எனவே, சேரன் செங்குட்டுவனுக்குப் பிறகு இப்பாண்டியன் இருந்தான் என்பது தெளிவாகிறது. தலையாலங்கானத்துச் செருவென்ற பாண்டியன் நெடுஞ்செழியனைக் கல்லாடனார் நேரிலே முன்னிலைப்படுத்திப் பாடியிருப்பதனாலே இப்புலவர் அப்பாண்டியன் காலத்தவர் ஆவார். அதாவது ஏறக்குறைய கி.பி. 200 இல் இவன் இருந்திருக்க வேண்டும் என்று கொள்ளலாம்.

அப்பாண்டியனால் போற்றப்பட்டவரும், அப்பாண்டியன் மீது **மதுரைக்காஞ்சி** பாடியவரும் ஆகிய மாங்குடி மருதனாரும் கல்லாடனாரும் சமகாலத்தவர் ஆவர். இந்தப் பாண்டியன்மேல் **நெடுநல்வாடை** பாடிய **நக்கீரனாரும்** கல்லாடனார் காலத்தில் இருந்தவர்.

தம்முடைய காலத்தில் இருந்த தலையாலங்கானத்துச் செருவென்ற நெடுஞ்செழியனையும், அம்பர்கிழான் அருவந்தையையும் பொறையாற்றுக் கிழானையும் வில்லியையும் பாடிய கல்லாடனார் தம் காலத்துக்கு முன்பு நிகழ்ந்த நிகழ்ச்சிகளையும் தமக்கு முன்பு இருந்த அரசர்களையும் தமது செய்யுட்களில் குறிப்பிடுகிறார். இதனால், இவர் அவர்கள் காலத்திலிருந்தவர் என்று கருதக்கூடாது. இவர் குறிப்பிடுகிற பழைய அரசர்கள் யாவர் என்பதைப் பார்ப்போம்.

களங்காய்க்கண்ணி நார்முடிச்சேரல், துருநாட்டு நன்னனுடன் போர் செய்து அவன் கைப்பற்றியிருந்த பூழிநாட்டை மீட்டுக் கொண்ட செய்தியைக் கல்லாடனார் கூறுகிறார்.

> "குடாஅது
> இரும்பொன் வாகைப் பெருந்துறைச் செருவில்
> பொலம்பூண் நன்னன் பொருதுகளத் தொழிய
> வலம்படு கொற்றந் தந்த வாய்வாள்
> களங்காய்க் கண்ணி நார்முடிச் சேரல்
> இழந்த நாடுதந் தன்ன, வளம்,"
>
> (அகம்-199: 18-24)

இந்தக் களங்காய்க்கணணி நார்முடிச்சேரல், இமயவரம்பன் நெடுஞ்சேரலாதனின் மகன் ஆவன். சேரன் செங்குட்டுவனுக்கும் பல்யானைச் செல்கெழு குட்டுவனுக்கும் இளங்கோவடிகளுக்கும் தமயன் ஆவன். எனவே, இவன் கல்லாடனார் காலத்துக்கு ஏறத்தாழ ஒரு தலைமுறைக்கு முன் இருந்தவன்.

முள்ளூர் மன்னனாகிய மலையமான் திருமுடிக்காரி (இவன் ஒரு வள்ளல்) என்னும் சிற்றரசன் கொங்கு நாட்டிலிருந்த ஓரி என்பவனுடன் (இவனும் ஒரு வள்ளல்) போர் செய்து அவனுடைய கொல்லிப்பாவையிருந்த கொல்லிமலையையும் கொல்லிக்கூற்றம் என்னும் நாட்டினையும் வென்று அந்நாட்டைச் சேரனுக்குக் கொடுத்த செய்தியைக் கல்லாடனார் கூறுகிறார்,

> 'செவ்வேல்
> முள்ளூர் மன்னன் கழல்தொடிக் காரி
> செல்லா நல்லிசை நிறுத்த வல்வில்

ஓரிக் கொன்று சேரவர்க் கீத்த
செவ்வேர்ப் பலவின் பயங்கெழு கொல்லி
நிலைபெறு கடவு ளாக்கிய
பலர்புகழ் பாவை'

(அகம்-209: 11-17)

இதில், காரி, ஓரியனுடைய கொல்லிநாட்டை வென்று சேரலனுக்குக் கொடுத்தான் என்று கூறுகிறார். இந்தச் சேரலன், (களங்காய்க்கண்ணி நார் முடிச்சேரலினுடையவும் சேரன் செங்குட்டுவனுடையவும் தந்தையாகிய) இமயவரம்பன் நெடுஞ்சேரலாதன் காலத்தில் சேரநாட்டின் ஒரு பகுதியை யரசாண்ட பொறையன் என்னும் அரசன் ஆவன். எனவே இதுவும் கல்லாடனார் காலத்துக்கு முன்பு நிகழ்ந்த நிகழ்ச்சியாகும்.

எனவே இந்நிகழ்ச்சிகள் கல்லாடனார் இருந்த காலத்துக்குச் சற்று முன்பு நிகழ்ந்தவையாம்.

இப்புலவர், தமிழ் நாட்டின் வடக்கே எல்லைப்புற நாடாக இருந்த பாணன் நன்னாட்டைக் கூறுகிறார் (அகம்–113: 17). பாணன் நாடு என்பது வாணாதியரையர் ஆண்ட நாடு. இந்நாட்டுக்கப்பால் வடுகநாடு இருந்தது. அஃதை என்பவனுக்குரியதும் கோசர் இருந்ததுமான 'நெய் தலஞ்செறு' என்னும் ஊரைக் கூறுகிறார் (அகம். 113: 3-6). இந்த 'நெய் தலஞ்செறு' துருநாட்டில் கடற்கரையோரமாக இருந்திருக்கவேண்டும் என்று தோன்றுகிறது. தொண்டையோர் வாழ்ந்த தொண்டை நாட்டைக் கூறுகிறார் (குறும். 260: 5-6) வேங்கடமலையைத் திருமாலுக்கு ஒப்பிடுகிறார். **'விண்டு வனைய விண்தோய் பிறங்கல்'** (புறம். 391: 2). எனவே இவர் காலத்திலே வேங்கட மலையிலே விண்டு (விஷ்ணு-திருமால்) கோயில் கொண்டு இருந்தார் என்பது தெரிகிறது.

கல்லாடனார் இயற்றிய செய்யுட்கள், அகநானூற்றில் (அகம். 9, 83, 113, 171, 199, 209, 333) ஏழும், குறுந்தொகையில் (குறும். 260, 269) இரண்டும், புறநானூற்றில் (புறம். 23, 25, 371, 385, 391) ஐந்தும் ஆகப் பதினான்கு செய்யுட்கள் தொகுக்கப்பட்டுள்ளன.

மேலே கூறிய மாங்குடி மருதனார், நக்கீரனார் இவர்களைத் தவிர இடைக் குன்றூர் கிழாரும், குறுங்கோழியூர் கிழாரும், பொதும்பில் கிழார் மகனார் வெண்கண்ணியாரும், கல்லாடனார் காலத்தில் இருந்த புலவர் ஆவர்.

★

*With best compliments*

*from*

INDIA'S LARGEST
HEAT EXCHANGER MANUFACTURERS
AND PIONEER MANUFACTURERS OF
LOW - PRESSURE HOSES

★

# TEKSONS PRIVATE LTD.

KOLSHET ROAD, THANA.

★

WITH COMPLIMENTS FROM

★

# ORIENTAL POWER CABLES LTD.

**P. O. CABLE-NAGAR**

KOTA (RAJ.)

★

MANUFACTURER OF

PAPER INSULATED AND PVC POWER CABLES

UP TO AND INCLUDING 33 KV.

*Registered Office*

*& Works :*

**P. O. CABLENAGAR,**

Distt. **KOTA (RAJ.)**

(Phone No. 434)

*Bombay Office :*

Warden House,

Sir P. M. Road.

**BOMBAY-1.**

(Phone No. 254440)

# சறுக்கிய குதிரைகள் நொண்டும்

திரு. 'ஆதவன்'

"ஹை! ஹை! குதிரை, சலோ! சலோ!" என்று அப்பாவின் முதுகின் மேல் உட்கார்ந்திருந்த அசோக் தன் பிஞ்சுக்கரங்களால் அப்பாவின் மேல் தட்டியவாறே கூவினன். தரை மீது கால்களை மடித்துக் கைகளை ஊன்றி நகர்ந்து கொண்டிருந்த ஜகந்நாதன் குதிரை போலக் கனைத்துக்கொண்டு, அடிக்குப் பயந்து வேகமாகப் போவது போலப் பாசாங்கு செய்தான். "ஜல்தி! ஜல்தி!" என்றான் அசோக்.

சமையலறையிலிருந்து வந்த பூமா சற்று நேரம் இந்தக் குதிரை விளையாட்டை ரசித்தாள். பிறகு, "சாதம் போட்டாச்சு, வாங்கோ" என்று கணவனைக் கூப்பிட்டாள். குதிரை உடனே அவள் காலடியில் வந்து நின்றது.

"இன்னும் போகணும் அப்பா!"

"கீழே இறங்கு, அசோக். அப்பாவுக்கு நேரமாச்சு."

"மாத்தேன், போ!"

அசோக்கை அம்படியே தூக்கிக்கொண்டு, "உப்பு மூட்டை வேணுமா!" என்று ஜகந்நாதன் சமையலறையை நோக்கி நடந்தான்.

"குழம்பிலே புளி ஒரு துளி ஜாஸ்தி. ரசம்-இஸ்ஸ், ஆகா! ஏ கிளாஸ்!" என்று விமரிசனம் செய்தவாறு பூமாவிடமிருந்து புன்னகையை வரவழைத்துக் கொண்டே ஜகந்நாதன் சாப்பிட்டான். கையலம்பி விட்டு, அவளருகில் வந்து புடவைத் தலைப்பில் கையையும் வாயையும் துடைத்துக் கொண்டான். "பச்சைக் குழந்தை!" என்று அவள் சிரித்தாள்.

சலவைச் சட்டையைப் பிரித்து அணியும்போது பித்தான் ஒன்று கையோடு வந்தது. "பூமி!"

"என்னவாம்?"

"பித்தான்!"

அவள் பித்தானையும் ஊசி நூலையும் எடுத்து வந்து அவன் நின்றிருந்த நிலையிலேயே அவன் அணிந்திருந்த சட்டையில் பித்தானை வைத்துத் தைக்கத் தொடங்கினாள். அவன் ராகம் இழுத்துக்கொண்டே அவள் தலை மீது தாளம் போடத் தொடங்கினன்.

"இப்படி அசக்கினால் எப்படித் தைக்கிறது?"

"இல்லை யில்லை, அசக்கவில்லை"

தைத்து முடிந்ததும் அவள் முகத்தை அவன் மார்பருகே கொண்டு வந்து நூலைப் பல்லால் கடித்து அறுத்தபோது அவன் சட்டென்று அவளை அணைத்துக் கொள்ள முயன்றான். "உம்ம்! என்ன இது?" என்று அவள் விலகிச் சென்றாள்.

டிரஸ் செய்துகொண்டு கிளம்பத் தயாராக அவன் ஹாலுக்கு வந்த போது அசோக் மரக் குதிரையில் உட்கார்ந்து ஆடிக் கொண்டிருந்தான். நல்ல குதிரைப் பைத்தியம்!

"அசோக் டாடா!" என்று ஜகந்நாதன் அவனருகில் வந்து குனிந்து கொண்டான். "இச்!" என்று அசோக அப்பாவுக்கு 'முத்தா' கொடுத்தான். வராந்தாவில் நிறுத்தியிருந்த ஸ்கூட்டரை வாசலுக்குத் தள்ளிச் சென்று ஜகந்நாதன் ஏறி உட்கார்ந்தவுடன் அசோக் மறுபடி "டாடா, டாடா!" என்று ஓடி வந்தான், ஜகந்நாதன் புன்னகையுடன் கையை உயர்த்தி வீசி ஆட்டி விட்டு ஸ்கூட்டரைக் கிளப்பினான்.

ஸ்கூட்டரில் போய்க்கொண்டிருந்த ஜகந்நாதன் எம். டெக். (அமெரிக்கா ரிடர்ன்டு) கர்வமாகச் சிரித்துக்கொண்டான். அவன் ஒரு சந்தோஷமான மனிதன், சிலரைப் போல வாழ்க்கையில் அதிருப்தியும் சலிப்பும் கொண்டவனல்ல வாழ்க்கையை நன்றாக அனுபவித்து வாழும் ரகசியம் அவனுக்குத் தெரிந்திருந்தது. அவனுக்கு என்ன குறை? அன்பு மனைவி. அருமையான குழந்தை......

ஆபீஸில் அவன் தன் அறையை நெருங்கும்போது வெளியே யிருந்த ஸ்டெனோ மேரி "குட்மார்னிங்!" என்று முறுவலித்தாள். அவன் "கம் இன்!" என்று அழைத்தவாறு உள்ளே நுழைந்தான்.

அன்பு மனைவி, அருமையான குழந்தை, ஆசைக் காதலி மேரி...

அவனுக்கு என்ன குறை, உண்மையில்?

ஜகந்நாதன் திருப்தியாக புன்னகை செய்தான்.

"இன்று ரொம்பச் சந்தோஷமான 'மூடில்' இருக்கிறீர்கள் போலிருக்கிறதே!" என்றாள் மேரி.

"உன்னைப் பார்க்கும்போதெல்லாம் எனக்குச் சந்தோஷம் பொங்கிப் பெருகுகிறது" என்று சொல்லிக்கொண்டே அவளை மேலும் கீழுமாகப் பார்த்த ஜகந்நாதன், "மேலும் நீ இன்று புது டிரஸ் வேறு அணிந்திருக்கிறாய்—பார்ப்பதற்கு ஜோராக இருக்கிறாய்!" என்றான்,

"ஓ! ரியலி?" என்று தலையை ஒய்யாரமாகச் சாய்த்து, அவள் கவர்ச்சிகரமாகப் புன்னகை செய்த அழகு! அவளுடைய பேச்சிலும் அங்க அசைவுகளிலும்—என்ன காந்தச் கவர்ச்சி!

"இன்று எனக்குப் பிறந்த நாள்." என்றாள் மேரி. "கங்க்ராஜு-

லேஷன்ஸ்! என் பிறந்த நாள் வாழ்த்துகள். இந்தச் சந்தோஷமான வைபவத்தைக் கொண்டாட வேண்டாமா? இன்று மாலை—ஒரு நல்ல ஹோட்டலுக்குப் போய் டின்னர் சாப்பிடலாம்.''

''எனக்கு நீங்கள் பரிசு ஒன்றும் கொடுக்கப் போவதில்லையா?''

''கட்டாயமாக ஒரு நல்ல பிறந்த நாள்.....'' என்றவாறு அவன் அவளருகில் நெருங்கி முகத்தை நோக்கிக் குனிந்தான்.

''நோ, நோ, டோண்ட் பீ ஸில்லி ஜக்!'' என்று அவள் பரபரப்புடன் எழுந்தாள்.'' நீங்கள் ஜாக்கிரதையாக இருக்க வேண்டும். இப்படி ஆபீசில் விளையாடினால் யாராவது ஒரு நாள் நம்மைப் பார்க்கப் போகிறார்கள்.

''நீ ஒரு பயந்தாங்கொள்ளி!'' என்று ஜகந்நாதன் சிரித்தான்.

தன்னைத் தவிர மற்றவர்கள் எல்லாரும் பயந்தாங்கொள்ளிகள் என்பதுதான் அவன் அபிப்பிராயம். வாழ்க்கையை அனுபவிக்கத் தெரியாத அசடுகள். சந்தோஷமாக வாழ்வது இவ்வளவு சுலபமாக இருக்கும்போது, தர்மம், நியாயம் என்று பயந்து கொண்டு கஷ்டங்களிலும் கவலைகளிலும் உழலும் பேதைகள்! முதுகெலும்பு இல்லாத கோழை ஜனங்கள் நிறைந்த இந்தத் தேசம் எப்போது, எப்படி முன்னேறப் போகிறது? இப்படி நினைத்தவாறு அவன் இகழ்ச்சியாகவும் மிடுக்காகவும் புன்னகை செய்து கொள்வான்—ஆமாம், தைரியமற்ற முட்டாள்கள், எல்லாரும், ஒவ்வொரு மனிதனும்!

அவன் ஒரு தைரியசாலி தான். அதில் அவனுக்குச் சந்தேகமே கிடையாது. அவன் எதற்கும் தயங்கியதில்லை, தனக்கு வேண்டியது எதுவாயினும், அதை எப்படியாவது அடைந்தே தீருவான். 'யோசனையே கூடாது; செயலில் குதிக்க வேண்டும்' என்பது அவன் சித்தாந்தம். வாய்ப்புகளை நழுவ விடாத புத்திசாலி அவன். வாழ்க்கையின் ஒவ்வொரு கட்டத்திலும் ஒவ்வொரு அம்சத்திலும் அவனுக்கு வெற்றி, வெற்றி, வெற்றிதான்,

சந்தோஷம், தைரியம் இவற்றுடன் கர்வமும் இருந்தது. இருக்க வேண்டியதுதானே? அவனுக்குத் தன் அழகிலே கர்வம். பணத்திலே கர்வம். அந்தஸ்திலே கர்வம். அமைதியான குடும்ப வாழ்க்கையிலே கர்வம். உலகத்தின் கண்களில் மண்ணைத் தூவி மேரியுடன் தான் வெற்றிகரமாக நடத்தி வந்த அந்த இன்னொரு வாழ்க்கையிலே கர்வம்...

ஒரு வாழ்க்கையையே சரியாக வாழத் தெரியாமல் விழி பிதுங்குபவர்கள் நிறைந்த இந்த உலகத்தில் ஒருவாழ்க்கை இன்னொரு வாழ்க்கை என்று சிக்கில்லாமல் இரட்டை வாழ்க்கை நடத்திவந்த அவன் ஏன் கர்வப்படக் கூடாது?

ஆகவே சந்தோஷத்துடனும் தைரி

யத்துடனும் கர்வத்துடனும் அவன் இரட்டை வாழ்க்கை வாழ்ந்து வந்தான். வீட்டிலே பாசமும் அன்பும் நிறைந்த, 'குழந்தைக்குச் சரியாக விளையாடும்' நல்ல சமர்த்து அப்பா. மனைவி மேல் அன்பைச் சொரிந்து திக்குமுக்காடச் செய்யும் உல்லாச கணவன்—ஆபீஸுக்கு கிளம்பும் வரையில்.

பிறகு வீட்டுக்கு வரும் வரை அவன் மேரியின் விஷமப் பாப்பா, ("நீங்கள் ஒரு விஷமப் பாப்பா!" என்று அவள் அடிக்கடி சொல்லிச் சிரிப்பது வழக்கம்.) ஆபீசிலிருந்து கிளம்பும்போது ஒரு குறிப்பிட்ட இடத்தில் சந்திப்பதாக அவர்கள் பேசிக் கொள்வார்கள். பிறகு தனித் தனியாக-அவன் ஸ்கூட்டரிலும் அவள் பஸ்ஸிலும்—அந்த இடத்துக்குப் போய்ச் சந்தித்துக்கொள்வார்கள். ஆகவே ஆபீஸிலும் தெரியாது. வீட்டிலும் தெரியாது; எனக்குத் தான் எவ்வளவு புத்திசாலித்தனம்!' என்பதில் அவனுக்கு ரொம்பப் பெருமை.

மாலையில் ஹோட்டலில் மேரியுடன் உட்கார்ந்திருந்தபோது அவன் ஷூலேஸ் கட்டிக்கொள்வது போலக் குனிந்து அவளுடைய வாளிப்பான காலிலே கிள்ளினான். "விஷமப் பாப்பா!" என்று அவள் கிளுகிளுத்துச் சிரித்தாள்.

"முத்து மாலை உனக்கு நன்றாக இருக்கிறது."

"உங்கள் பிறந்த நாள் பரிசுக்கு நன்றி."

"நீ தேவதை போல இருக்கிறாய்!"

"ஓ, கேலி பண்ண வேண்டாம்!"

* * *

"கேலி பண்ணவில்லை, நிஜமாகவே இந்தப் புடவை உனக்கு ரொம்ப நன்றாக இருக்கிறது." என்றான் ஜகந்நாதன். இப்போது அவன் வீட்டிலிருந்தான். மனைவியிடம் பேச்சு. மேரிக்குப் பிறகு பூமாகவுன் போச்சு, புடவை வந்தது, டும் டும் டும்.

"இன்றைக்கு நான் ஏன் புதுப் புடவை கட்டிக்கொண்டிருக்கிறேன் தெரியுமோ?"

"தெரியுமே"

"எதற்கு?"

"என்னை மயக்குவதற்கு."

"போறுமே விளையாட்டு. இன்றைக்கு எனக்குப் பிறந்த நாள்."

ஜகந்நாதன் திகைத்துப் போனான். இதிலென்ன அதிசய ஒற்றுமை! இன்று என்ன பிறந்த நாள் மயமாக இருக்கிறது' என்று முணுமுணுத்துக்கொண்டான்.

"எனக்கு என்ன பரிசு கொடுக்கப்போகிறீர்கள்?" என்று கேட்டாள் பூமா.

ஜகந்நாதன் ஒரு கணம் பேசாமலிருந்தான் "இன்று உனக்குப் பிறந்தநாளென்றே எனக்குத் தெரியாது" என்றான்.

"உங்களுக்கு ஒன்றும் தெரியாது"

"உம்ம்...சரி நீ கண்ணை மூடிக் கொள்."

"எதற்காக?"

"பரிசு வேண்டுமென்றால் கண்ணை மூடிக்கொள்."

பூமா கண்களை மூடிக்கொண்டாள். அவன் மெல்ல அவளருகில் வந்து சட்டென்று அவளுடைய மூடிய இமைகள் மேல் முத்தமிட்டான். அது அவளை அவ்வளவு கோபமடையச் செய்யுமென்று அவன் எதிர்பார்க்கவில்லை— திகைப்புடனும் ஏமாற்றத்துடனும் அவள் சரேலென்று விலகி நின்று அவனை உஷ்ணமாக முறைத்துப் பார்த்தாள்— "சே, சே, என்ன விளையாட்டு எப்போதும்!"

ஜகந்நாதன் பயந்து போனான். "கோபித்துக்கொள்ளாதே பூமா என்னால் இப்போது வேறென்ன பரிசு கொடுக்க முடியும்? நாளைக்கு உனக்கு என்ன வேணுமோ சொல்லு, வாங்கித் தரேன்." என்றான் பரிதாபமான குரலில். அவ்வளவுதான்—பூமாவின் கோபம் நைந்து துவண்டது.

"நான் சும்மா விளையாட்டுக்கு அல்லவா சொன்னேன், நீங்கள் எனக்குப் பரிசு வாங்கித் தந்தால்தானா? என்றைக்கும் இப்படி உங்கள் அன்பு கிடைச்சிண்டேயிருந்தாலே போதும். வேறே பரிசு எதற்கு?" என்று உணர்ச்சி வசப்பட்டு அவள் கூறியபோது ஜகந்நாதனுக்கு நெஞ்சில் ஏதோ குறுகுறுவென்றது. குற்றமுள்ள நெஞ்சு.

இரவில் அவன் மெல்ல அவள் வயிற்றிலே கிள்ளினான். "பூமி, பூமி! நீ ஏன் இப்படி வழவழவென்று இருக்கிறாய் வெண்ணெய்க் கட்டி மாதிரி. எனக்கு அப்படியே உன்னை கடித்துத் தின்னலாம் போல இருக்கு," என்றான்.

"அம்மாடி! எனக்கு பயமா இருக்கு. வெண்ணெயைக் கடித்தால் வெண்ணெய்க்கு வலிக்கும்."

"நான் கடித்தால் வலிக்காது."

"ஊஹூம்?"

"ஊஹூம்!"

* * *

இப்படியே அவனுடைய இரட்டை வாழ்க்கை கழிந்து கொண்டிருந்தது. மழை நீரில் சிறுவர்கள் செய்துவிடுவது போன்ற ஒரு இரட்டைக் கப்பலில் அமர்ந்து அவன் வாழ்க்கைச் சாகரத்தில் சுகமாக மிதந்து சென்றுகொண்டிருந்தான். ஒரு பக்கம் ஐரோப்பிய கிரிம்—லிப்ஸ்டிக், லாவெண்டர், ஹைஹீல் முரசொலி மறுபக்கம் அவனுடைய வெண்ணெய்க்கட்டி— குங்குமம், மல்லிகைச் சரம், புடவையின் சலசலப்பு 'ஷாம்பெய்ன்' சாயங்காலங்களும் தாம்பூல இரவுகளும் ஒரு பக்கம் ஹோட்டல், கிளப், டின்னர், டான்ஸ். மறுபக்கம் வீடு, கோவில், பண்டிகை, பாட்டுக் கச்சேரி. 'கிழக்கும் மேற்கும் என்னிடத்தில் சங்கமமாகின்றன' என்று அவன் வேடிக்கையாக நினைத்தான். கிழக்குக் கலாசாரம், மேற்குக் கலாசாரம், இவ்விரண்

டின் ஒரு லட்சியக் கலவையின் பிரதிநித்துவமாக அவன் திகழ்ந்தான். அவனுக்கு அவ்வளவு சந்தோஷம், எவ்வளவு கர்வம்.

ஆனுல், வாழ்க்கையில் எதுவுமே என்றைக்கும் நீடிப்பதில்லே. ஜகந்நாதனுடைய இரட்டை வாழ்க்கையிலும் ஒரு நாள் புயல் வீசத் தொடங்கியது. சுகமாக மிதந்த அவனுடைய இரட்டைக் கப்பல் ஆட்டம் கண்டது.

ஒரு நாள் அவன் ஆபீஸிலிருந்து வந்தபோது பூமா உற்சாகமிழந்து காணப்பட்டாள். வாய் பேசாமல் டிபனேயும் காப்பியையும் வைத்து விட்டு முகத்தைத் திருப்பிக் கொண்டு போன மாதிரியில் கோப ஜ்வாலேயின் பொறிகள் தெறிப்பதை அவன் உணர்ந்தான், "பூமிக்கு என்ன கோபம்? ஏதோ மாதிரியாக இருக்கிறயே பூமி?" என்று அவன் கேட்ட போது பதிலே சொல்லாமல் சென்று விட்டாள்.

அவன் மெல்ல அவளேத் தேடிச் சென்றுன். பூமியின் கோபத்தை எப்படிப் போக்குவதென்று அவனுக்குத் தெரியாதா என்ன? "உடம்பு சரியாக இல்லேயா உனக்கு?"; என்று பரிவுடன் அவள் நெற்றியில் கை வைத்துப் பார்த்தான். அவள் வெறுப்புடன் அவன் கையை விலக்கி ஒதுக்கினுள்.

"என் உடம்பெல்லாம் சரியாகத்தான் இருக்கு" என்றுள் உஷ்ணமான குரலில்.

அவளுடைய சினமும் வெறுப்பும் அவனுக்குப் புரியவில்லே. "பின்னே மூஞ்சியை ஏதோ வருத்தமா வச்சிண்டிருக்கியே!"

"வருத்தமா வைச்சுக்கலே. என் முஞ்சியே அப்படித்தான் இருக்கு. எனக்கு வெளிவேஷமெல்லாம் போடத் தெரியாது."

"எதுக்காக இப்போ வருத்தம்?"

"உங்களுக்குத் தெரியாதா என்ன?"

"எனக்கு எப்படித் தெரியும்?"

"தெரியும். நன்ருகத் தெரியும்."

"நீ பேசுவதே எனக்குப் புரியவில்லே."

"நான் பேசினுல் உங்களுக்குப் புரியாது. நான் உங்களேப் போல அமெரிக்காவுக்குப் போய்ப் படிச்சவளா என்ன? உங்களுக்குப் புரியும்படியாக எனக்குப் பேசத் தெரியாது. அப்படிப் பேசத்தான் உங்களுக்கு வேறே ஆள் இருக்காளே......!

தன்னேயுமறியாமல் மளமளவென்று வார்த்தைகளேக் கொட்டி விட்டுச் சட்டென்று நிறுத்திக் கொண்டாள் அவள். ஜகந்நாதன் திடுக்கிட்டான். பூமாவுக்குத் தெரிந்து விட்டதா?.

ஆனுல் அவன் அவ்வளவு எளிதில் தோல்வியை ஒப்புக்கொள்கிறவனு என்ன? முதலில் அவளுக்கு எவ்வளவு தெரியுமென்று ஆழம் பார்க்க வேண்டும். "பூமா......நீ

ஏதோ தவருக நினைத்துக் கொண்டிருக்கிருய்......'' என்று சாந்தமான குரலில் தொடங்கினுன்.

அவள் அவனைப்பார்த்த பார்வை! "நினைத்துக்கொள்ள வில்லை; என் கண்ணுலே பார்த்தேன்.'' என்று சீறினுள்.

"என்ன பார்த்தாய்?''

"அதை நான் சொல்லித்தான் நீங்கள் தெரிஞ்சுக்கணுமா? சீச்சீ ......உங்களை ஏதோ நினைச்சேன் ......என் சிநேகிதிக்கு முன்னுலே —எனக்கு எவ்வளவு அவமானம் ...'' என்று சொல்லிக்கொண்டே அவள் விம்மியழத் தொடங்கினுள்.

ஜகந்நாதன் பொறுமையிழந்து கொண்டிருந்தான். எரிச்சலுடன் அவளுக்கு நாலு அறை விடலாமா என்று கூட நினைத்தான். மிகவும் முயற்சி செய்து சிதறிப் பறக்க விருந்த பொறுமையைக் கட்டிப் பிடித்து வைத்துக் கொண்டான்.

"அழாதே பூமா.........ப்ளீஸ்! நடந்ததைச் சொல்லாமல் இப்படி அழுதாயாஞல் என்ன அர்த்தம்?''

"அழாமல் சிரிக்கவா சொல்கிறீர்கள்? சிநேகிதி வீட்டுக்குப்போய் விட்டுப் பஸ் ஸ்டாண்டில் நின்று கொண்டிருந்தேன் ...... அப்போது நீங்கள் ஸ்கூட்டரில் வேகமாகப் போனீர்கள். பின்னுலே உங்களைக் கட்டிக்கொண்டு ........சீ! எனக்கு ஒரு நிமிஷம் திக்கென்றது. தலை சுற்றி விழுந்திருப்பேன். சிநேகிதி யாஞல், யாருடி, உங்க ஆத்துக் காரர் போலிருந்ததே — பின்னுலே யாரு? என்று கேட்கிருள். எனக்குப் பதில் சொல்ல நா எழும்பினுல் தானே......'' மறுபடி மேலே பேச முடியாமல் அவளுக்குத் தொண்டையை அடைத்துக் கொண்டது.

ஜகந்நாதன் பெருமூச்சு விட்டான். ஒரு வழியாக விஷயம் என்னவென்று தெரிந்தது!—சே, வழக்கத்தை மீறி மேரி ஸ்கூட்டரில் வந்து தொலைத்தாள்— அவன் கடகடவென்று சிரிக்கத் தொடங்கினுன். "இவ்வளவுதானு' அடேயப்பா! இதற்குத்தானு இவ்வளவு பாடுபடுத்திஞய்!'' என்று சிரித்தான்.

பூமா வெறுப்புடனும் கோபத்துடனும் அவனை முறைத்துப் பார்த்தாள்.

"பூமா! அவள் பெயர் மேரி, என் ஆபீஸில் ஸ்டெனேவாக இருக்கிருள்.........''

"ஓ! எவ்வளவு சௌகரியம்!''

"ஐயோ, பூமா, நீ நினைப்பது போலெல்லாம் இல்லவே இல்லை. அவளுக்கு ஒரு கால் சரியில்லை. நொண்டித்தான் நடப்பாள். நாங்கள் யாராவது அவளைத்தினம் வீட்டில் கொண்டு விடுவது வழக்கம் .........'' தன் சாமர்த்தியமான புளுகைக் கேட்டு அவனுக்கே ஆச்சரியமாக இருந்தது.

அவளுக்கும் ஆச்சரியமாகத்தான் இருந்தது. "நிஜமாகவா?''

"பின்னே நான் பொய்யா சொல்கிறேன். நாளைக்கே நான் அவளை

வீட்டுக்குக் கூட்டி வருகிறேன். நீயே பார்த்துக் கொள்ளலாம்.''

''அந்தப் பெண் நொண்டியா? நான் ஏதேதோ நினைத்தேன்...''

''ஆமாம்! என்ன பாடுபடுத்தி விட்டாய். என் மேலே உனக்கு இவ்வளவு நம்பிக்கை இல்லாமல் போய் விட்டது பார்த்தாயா? ஹூம்!'' என்று உடைந்த குரலில் முணுமுணுத்துக்கொண்டே அவன் அங்கிருந்து கிளம்பினான்.

எதிர்பார்த்தது போலவே அவள் ஓடி வந்து அவன் மார்பிலே சாய்ந்து கொண்டாள். ''என்னை மன்னித்து விடுங்கள்'' என்று விம்மினாள்.

''அசடே! இதற்கு என்ன அழுகை? நீ சந்தேகப்பட்டதும் நியாயந்தானே! உனக்கு என்மேலே எவ்வளவு ஆசை என்பதை அது காட்டுகிறது......அழாதே......உம். சிரி''

அவள் நிமிர்ந்து அவனைப் பார்த்து மழைத்துளி படிந்த மலர் வெய்யிலில் பளபளப்பது போலச் சிரித்தாள். 'இந்தப் பெண்களே முட்டாள்கள். எவ்வளவு சுலபத்தில் ஏமாந்து விடுகிறார்கள்!' என்று நினைத்தவாறு ஜகந்நாதனும் புன்கை செய்தான்.

* * *

மறுநாள் மாலை ஜகந்நாதன் ஆபீஸிலிருந்து வீடு திரும்பியபோது மேரியையும் அழைத்து வந்திருந்தான்.

''நமஸ்தே!'' என்று கதவைத் திறந்த பூமாவைப் பார்த்து மேரி கைகூப்பினாள். ''நமஸ்தே! உள்ளே வாருங்கள்!'' என்றாள் பூமா புன்முறுவலுடன். மேரி நொண்டி நொண்டி நடந்தவாறு உள்ளே வந்தாள்.

எல்லாருமாக ஹாலில் உட்கார்ந்து பேசிக் கொண்டிருந்தார்கள். அசோக் அம்மா அருகில் ஒளிந்து நின்று கொண்டு புதுமாமியைத் தயக்கத்துடன் பார்த்தான்.

''பேபி...உன் பேர் இன்னா?'' என்று மேரி கொச்சைத் தமிழில் கேட்டாள்.

அசோக் பதில் சொல்லாமல் அம்மாவின் மடியில் தலையைப் புதைத்துக் கொண்டான்.

''சொல்லுடா! மாமி உன் பெயரைக் கேட்கிறாள் பாரு'' என்றான் ஜகந்நாதன்.

''சமர்த்து இல்லியா? மாமிக்கு உன் பெயரைச் சொல்லு'' என்று பூமா அவன் தலையை மெல்லத் தூக்கினாள்.

அவன் வாயில் விரலைக் கடித்துத் கொண்டே மேரியைத் தயக்கத்துடன் பார்த்து, ''அசோக்'' என்றான்,

''வெரி ஷை பாய்!'' என்று மேரி அவனைப் பார்த்துப் புன்னகை செய்தாள்.

''அவனுடைய அம்மாவைப் போல.'' என்றான் ஜகந்நாதன்

பூமா வெட்கத்துடன் சிரித்தாள்.

பிறகு பூமா மேரிக்கு வீட்டைச் சுற்றிக் காண்பித்தாள். பூஜை அறை வாசலில் மேரி வியந்து நின்றாள். "இவளுக்குக் கடவுளென்றால் பைத்தியம்" என்றான் ஜகந்நாதன். மேரி பதில் பேசாமல் சுவாமி படங்களையே பார்த்துக் கொண்டிருந்தாள்.

ஹால் சுவரில் மாட்டியிருந்த புகைப் படங்களைப் பார்க்கத் தொடங்கினாள். ஜகந்நாதனின் கல்யாண போட்டோவைக் கண்டு, பக்கத்திலே சென்று பார்ப்பதற்காக அடியெடுத்து வைத்தாள். அப்போது கீழே படுத்துக்கிடந்த மரக் குதிரை மேல் காலை வைத்து விட்டாள். படக்கென்று குதிரையின் கால் உடைந்தது. அவள் திடுக்கிட்டுக் காலை எடுத்துக் கொண்டாள்.

"காலில் அடி ஒன்றுமில்லையே!" என்று ஜகந்நாதன் பரபரப்புடன் அருகில் வந்தான்.

"நோ, நோ! ஐ ஆம் ஆல் ரைட். ஆனால் குழந்தையின் மரக்குதிரையை உடைத்து விட்டேன்......... பாவம்!" என்றாள் மேரி.

"ஓ, பரவாயில்லை" என்றான் ஜகந்நாதன்.

"ஐ ஆம் ஸாரி அசோக். நான் புது குதிரே வாங்கித்தரேன்" என்றாள் மேரி.

அசோக் அம்மாவின் புடவைக்குப் பின்னால் மறைந்து கொண்டான். "ஓ, என்மேலே கோபம் அவனுக்கு!" என்று மேரி சிரித்தாள்.

மேரி கிளம்பியபோது "டாடா சொல்லுடா!" என்று பலமுறை கெஞ்சியும் அசோக் மசியவில்லை. மேரியை வீட்டில் விட்டு வருவதாக ஜகந்நாதன் ஸ்கூட்டரில் கிளம்பினான்.

"கங்க்ராஜுலேஷன்ஸ் மேரி! நொண்டி நடிப்பு பிரமாதம்!" என்றான் ஜகந்நாதன்.

"எனக்கு என்னவோ போல இருக்கிறது" என்றாள் மேரி. "உங்கள் மனைவி ரொம்ப நல்லவள். அவளை ஏமாற்றுகிறோமே என்று சங்கடமாக இருக்கிறது."

"ஸில்லி கேர்ல்! அனாவசிய கவலையெல்லாம் படாதே"

"இல்லை ஜக். இது இப்படியே என்றைக்கும் நடக்கமுடியாது. இதற்கு ஒரு முடிவு கட்டுவதுதான் நல்லது".

"பைத்தியம் போல உளறுதே!"

"ஜக்! அந்த அறையில் சுவாமி படத்தைப் பார்த்தபோது, அந்தப் படம் என்னை உற்றுப்பார்த்துக் குற்றஞ்சாட்டுவது போலிருந்தது ......பிறகு உங்கள் மாரியேஜ் போட்டோவைப் பார்த்தேன்...... எவ்வளவு அழகாக இருக்கிறது! அழகான மனைவி, அழகான வீடு... ஜக்! நான் இவற்றை 'ஸ்பாயில்' பண்ண விரும்பவில்லை."

"மேரி, மேரி! என்ன ஆயிற்று உனக்கு திடீரென்று?" என்று அவன் அவளைத் திரும்பிப் பார்த்தான். "ஒன்றுக்கும் கவலைப்படாதே!" என்று ஹாண்டிலிலிருந்து ஒரு கையை எடுத்து அவளைத் தட்டிக் கொடுத்தான்.

"ஜக்! முன்னாலே பாருங்கள்!" என்று அவள் அலறினாள். ஆனால் நெருங்கிக்கொண்டிருந்த அபாயத்தை அவன் மிகவும் தாமதமாகக் கவனித்தான். கிளைச்சாலை ஒன்றிலிருந்து மெயின்ரோடில் வேகமாகத் திரும்பிச் சீறிக்கொண்டு வந்த லாரியிடமிருந்து தப்பிக்க ஸ்கூட்டரை ஒடித்துத் திருப்பியபோது இன்னொரு பக்கமாக வந்த காரில் மோதி......

"ஓ காட்!" என்று மேரியின் தொண்டையிலிருந்து எழுந்த பயங்கரக் கூச்சல்—சிவப்பு-ரத்தம்—பெட்ரோல் நெடி—

பிறகு எதுவுமே நினைவில்லை.

* * *

**வி**ழிப்பு வந்தபோது வெள்ளைத் தலையணையும் பச்சை டிஸ்டெம்பர் சுவர்களும் நாசியில் புகுந்து கிளுகிளுத்த மருந்துகளின் நெடியும்—

அவன் பரபரப்புடன் எழுந்து உட்கார்ந்தான். பார்வை மிரண்டு அலைந்தது. இதோ இந்த ஆசாமி டாக்டர் போலிருக்கிறதே! எதற்காக அவனைப் பார்த்துப் புன்னகை செய்கிறார்? தொலைந்து போன நினைவுகளைத் தேடுபவனைப்போல அவன் நெற்றியைத் தடவிக்கொண்டான். கையிலே பிளாஸ்திரி இடரியது.

"அதிர்ஷ்டசாலி நீங்கள்!" என்றார் டாக்டர் உங்களுக்கு அடி பலமில்லை, ஆனால் உங்களுடன் வந்த பெண் மணி..."

பெண்மணி! ஸ்கூட்டர்! விபத்து—ஜகந்நாதனுக்குப் புயல் வேகத்தில் நினைவு திரும்பியது "எங்கே அவள்? மேரிக்கு என்ன ஆயிற்று?" என்று கூவினான்.

"அவளுக்குக் காலில் பலமான அடி ஆம்புடேட் செய்யப்போகிறோம்"

ஜகந்நாதனின் விழிகள் அதிர்ச்சியுடன் டாக்டரின் முகத்தின்மேல் நிலைகுத்தி நின்றன. ஆவேசத்துடன் கட்டிலிலிருந்து கீழே குதித்தான் 'டாக்டர்' நான் அவளைப் பார்க்க வேண்டும்!';

'ஐ ஆம்ஸாரி நாளைக் காலையில் தான்"

டாக்டரின் உறுதியை அவன் அசைக்க முயன்றான்; பலிக்கவில்லை இன்று அவனுக்குத் தோல்விதினம்.

விபத்து ஸ்தலதிலிருந்து அவனை ஆஸ்பத்திரிக்குக் கொண்டுவந்தவர் காரிலேயே அவன் வீட்டுக்குப் போய்ச் சேர்ந்தான். அவருக்குநன்றி தெரிவிக்கக்கூட தோன்றவில்லை. என்ன இது ஏனிந்தவிபத்து என்று தடுமாறிக் கலங்கினான். மரக் குதிரையின் உடைந்தக்கால்...... நொண்டி மேரி...சுவாமி படம்...

வீட்டுக்குள் அவன் நுழைந்தவுடன் "அப்பா வந்தாச்சு!" என்று அசோக் கூவினுன்.

"ஏ குதிரை! உள்ளே வா! கீழே உட்காரு." என்ருன்.

"மரக்குதிரை உடைஞ்சாச்சு. இனிமேல் உனக்கு அப்பாக் குதிரை தான்..." என்று சொல்லிக் கொண்டே வந்த பூமா, அவன் தலையிலிருந்த பிளாஸ்திரிகளைப் பார்த்துத் திடுக்கிட்டாள். "என்ன ஆச்சு உங்களுக்கு?" என்று பதறினுள்.

"ஒண்ணுமில்லை... இருட்டிலே கண் தெரியாமல் ஏதோ குழியில் சறுக்கிவிட்டது..." என்றவன், அவள் கவலைப்படுவதைப் பார்த்து, "நொண்டிக் குதிரைக்குச் சறுக்கின சாக்கு!" என்று கண்ணைச் சிமிட்டிச் சிரிக்கப் பார்த்தான்,

அதே சமயம் திடீரென்று அவனையுமறியாமல் அவன் வாயிலிருந்து உதிர்ந்த இந்தச் சொற்கள் அவன் சிந்தனையில் சுழன்று பைசாச நடனமாடத் தொடங்கின—

நொண்டிக்குதிரை! சறுக்கின சாக்கு! நொண்டி மேரி!

குதிரை சறுக்கினுல், நொண்டும். மனிதன் சறுக்கினுல்?

நொண்டி மேரி......

மரக்குதிரையின் உடைந்த கால், சுவாமி படம்—பூமாவின் கடவுள் உண்மை தானு? நான்தான் குற்றவாளி; மேரிக்கு ஏன் தண்டனை?

"அப்பா! குதிரை!" என்று அசோக் கையை நீட்டினுன். ஜகந்நாதனின் கண்களில் கண்ணீர் துளிர்த்துப் பொங்கியது. அப்படியே அவனைத் தூக்கி அணைத்துக் கொண்டான்.

"அப்பா! குதிரையை மாமி உடைச்சுட்டா!"

"நான் ரிப்பேர் பண்ணித் தரேண்டா கண்ணு!" என்று குழந்தையின் முதுகைப் பாசத்துடன் வருடினுன். அவன் 'உனக்காகத் தான் அவர் என்னை மன்னித்து விட்டார். உனக்காகவும் அம்மாவுக் காகவும்தான், கண்ணே!

ஜகந்நாதன் கீழே உட்கார்ந்து, மரக்குதிரையின் உடைந்த காலைச் சரிப்படுத்தத் தொடங்கினுன். ✻

---

இக்காலத்தில் பல துறைகளிலும் சீர்திருத்தம் வேண்டி நிற்கும் நம் தமிழ் மக்கட்குப் புதுமுறையில் பாடப்பட்டிருக்கும் இத்தமிழ்ப் பாடல்கள் (பாரதிதாசன் கவிதைகள்) கிளர்ச்சியினையும் மகிழ்ச்சியினையும் பயந்து சீர்திருத்தங்கள் பலவற்றிற்கு வழிகாட்டுமெனக் கருதுகிறேன்.

—பேராசிரியர், மறைமலையடிகளார்.

*INCREASE PRODUCTION*

★ GROW MORE

★ SAVE MORE

★ STAND FIRM BESIDES THE JAWANS

INSERTED BY AN INDUSTRY AT MADRAS

# இருட்டறை

டாக்டர் மு. வரதராசன்

ஒரு சமுதாயத்தில் போட்டியுணர்ச்சி தோன்றுமானால் அதனால் நன்மையும் விளையும் தீமையும் விளையும். ஒருவரைவிட மற்றொருவர் முன்னேற வேண்டும் என்ற ஆர்வத்தால், ஊக்கத்தோடு முயல்வதால் நன்மை ஏற்படும். ஒருவர் மேல் மற்றொருவர்க்குப் பொறாமை ஏற்பட்டு அவரைக் கெடுக்க இவரும் இவரைக் கெடுக்க அவரும் முயன்று பூசலும் போருமாய் முடிவதால் தீமை விளையும். பழங்காலத்தில் இந்த நாட்டில் வாழ்ந்த முன்னோர் சிலர் போட்டியால் விளைந்த தீமையைத் தடுப்பதற்காகத் தொழிலை ஒட்டிச் சாதியை அமைத்தார்கள் அந்தந்தச் சாதியார் அந்தந்த குடும்பத் தொழிலைச்செய்து போட்டியில்லாமல் கூட்டுறவாக வாழ வழி ஏற்படுத்தினார்கள் அப்படி ஏற்பட்ட சாதி முறை தொழிலளவில் நின்றிருந்தால் நன்றாக இருந்திருக்கும் ஆனால் அது பிறப்பளவில் வந்து முடிந்தது. இன்ன தொழிலைச் செய்தால் இன்ன சாதி என்று இல்லாமல் இன்னாருக்குப் பிறந்த காரணத்தால் இந்தச் சாதி என்று ஏற்படத்தொடங்கியது. இவ்வாறு பிறப்பால் சாதி ஏற்படுவதை முதல் முதலில் பெருந்தீமை என்று உணர்ந்து கடிந்த ஞானி திருவள்ளுவர், மனிதர்க்குள் வேறுபாடு பிறப்பால் இருக்கக்கூடாது தொழிலளவில் இருந்துபோகட்டும் என்று அறிவுறுத்தினார், 'பிறப்பொக்கும் எல்லா உயிர்க்கும் சிறப்பொவ்வா செய் தொழில் வேற்றுமையான்' என்று தெளிவாக ஓதினார். அவருடைய அறிவுரையை அன்று நாடு கேட்டு நடந்திருந்தால், இன்று காணும் எவ்வளவோ தொல்லைகள் தோன்றாமல்போயிருக்கக் கூடும.

இடைக்காலத்தே தோன்றிய ஆழ்வார்களும் நாயன்மார்களும் அந்தச் சாதி முறையை நேராக எதிர்க்காவிட்டாலும் புறக்கணித்துவாழ்ந்திருக்கிறார்கள். அவர்களுள் ஒருவராகிய திருநாவுக்கரசர் சாதிமுறை உலகியலில் இருந்து தொலைந்தாலும் சமயத்துறையில் இருத்தல் கூடாது என்று விரும்பினார்.

மாணிக்கவாசகர், தம்முடைய சமய வாழ்க்கைக்கு அது இடையூறாக இருந்ததை உணர்ந்து அந்தச் சுழியில் விழுந்து தடுமாறிய நிலையிலிருந்து தம்மை இறைவன்காப்பாற்றியதாகக் கூறியுள்ளார்,

"சாதிகுலம் பிறப்பென்னும் சுழி பட்டுத்தடுமாறும் ஆதமிலிநாயேனை அல்லலறுத் தாட்கொண்டு"...

(திருவாசகம் கண்ட பத்து, 5)

இராமாநுஜர் அந்த வேறுபாட்டைத் தலை தூக்காதபடி செய்வதற்காக எவ்வளவோ முயன்றிருக்கிறார். பிற்காலத்தில் சமயநெறிகொண்டு சமுதாய ஒற்றுமையை ஏற்படுத்த முயன்ற சான்றோர்கள் பலரும் இதைக்கடிந்திருக்கிறார்கள். இந்தியாவில் பல பகுதிகளில் வாழ்ந்த சான்றோர்களும் அத் தீமையைப் போக்க தம்தம் மொழியில் விளக்கி எழுதி அறிவுறுத்தியிருக்கிறார்கள்.

சாதி இரண்டொழிய வேறில்லை என்ற ஔவையாரும் சாதி முறையை எதிர்த்த சான்றோரே ஆவர். சென்ற நூற்றாண்டில் தமிழ் நாட்டில் ராமலிங்கசுவாமிகள் சாதி முறையை உறுதியாகக்கடிந்து பாடியுள்ளார், சமுதாய ஒற்றுமைக்கு அது இடையூறு என்பதைச் சமுதாய சீர்திருத்த அறிஞர் பலர் உணர்ந்து பலவாறு ஒவ்வொரு மாநிலத்திலும் அதை ஒழிக்கப் பாடுபட்டுள்ளனர்.

ஆனால், அழிக்கும் முயற்சியை எதிர்த்து அந்தச் சாதிமுறை மேன்மேலும் வளர்ந்துகொண்டேவந்தது சமய வாழ்வுக்கும் சமுதாய ஒற்றுமைக்கும் இடையூறானது என்று உணர்ந்த நிலைக்கு மேலாக இந்த நூற்றாண்டில் நாட்டு விடுதலைக்கே சுதந்தரப் போராட்டத்திற்கே அது இடையூறு என்று உரிமைப்போர்த் தலைவர் பலர் உணர்ந்தார்கள். அவர்களுள் பாரதியார் ஒருவர் "சாதி முறை இங்கே எவ்வாறு இருந்த போதிலும் அதனால் அன்னியர் ஆட்சிக்கு இடந்தரக் கூடாது" என்று அவர் அறிவுறுத்தினர்.

ஆயிரம் உண்டிங்குச் சாதி - எனில்
அந்நியர் வந்து புகல் என்ன நீதி

என்று முழங்கினர். அவருடைய சொந்த வாழ்விலும் சாதிமுறையைப் பாராட்டாமல், சாதி முறையை எதிர்த்தும் வாழ்க்கை நடத்தினர். வளர்ந்த பெரியவர்களின் நெஞ்சில் சாதிமுறை வேரூன்றிவிட்ட கொடுமையை வருத்தத்தோடு உணர்ந்த அவர், குழந்தைகளின் மனத்திலாவது அந்த நஞ்சு புகாமல் தடுக்கவேண்டும் என்று முயன்றார்.

சாதிகள் இல்லையடி பாப்பா - குலத்
தாழ்ச்சி உயர்ச்சி சொல்லல் பாவம்

என்று வன்மையாக எடுத்துரைத்துப் பாடினர்.

சாதி முறை நீங்கவில்லை; ஆனல் பாடுபட்ட சான்றோர்களின் நன் முயற்சியால் சுதந்தரம் கிடைத்துவிட்டது. இன்றுஉள்ள நிலைஎன்ன? சமயலறையிலும் சமுதாய விருந்துகளிலும் உணவுக் கடைகளிலும் இருந்துவந்த சாதி அங்கெல்லாம் விட்டகன்று தொழிற் கூடங்களையும் அலுவலகங்களையும் தேர்தல் களங்களையும் பற்றிக் கொண்டுள்ளது. பிறப்பிலேயே இயற்கையாகவே அமைந்துள்ள ஒன்று அது என்ற நம்பிக்கை தளர்ந்துபோய்

அந்தந்தக் குழுவினர் வாழ்வுக்கே தேவையான ஒன்று என்ற ஆர்வம் வளர்ந்திருக்கிறது. சாதிமுறையின் பழைய வடிவமும் ஆட்சிப் பீடமும் மாறிய போதிலும், வேறு வடிவில் வேறு அரியணையில் அது நாட்டில் ஆட்சி புரிந்து வருகிறது.

இன்று சமய வாழ்வுக்கு இடையூறானது என்று அதைக் குறித்துக் கவலைப்படுவோர் இல்லை. நாட்டு விடுதலை பெற்றுவிட்டோம் ஆகையால், விடுதலை இயக்கத்துக்கு இடையூறாக இருந்து வந்ததும் பழங்கதை ஆகிவிட்டது. சமுதாய ஒற்றுமைக்கு இடையூறாக உள்ளதே என்ற வருந்தத்தக்க நிலை இன்றும் உள்ளது. ஆனால் அதைவிட முதன்மையானது, பெற்ற நாட்டுரிமையைக் காத்து முன்னேறுவதற்கு இடையூறாக உள்ளதே என்ற கவலைதான். பெற்ற சுதந்தரத்தைக் காக்க வேண்டுமே என்று முயலும் முயற்சிகளுக்கெல்லாம் இடையூறு செய்துவிடுமோ என்ற கவலை அறிஞர் பலர்க்கு உள்ளது. எல்லைகளில் தொல்லை நேரும்போதெல்லாம், பகைவர்களின் படையெடுப்பைக் கண்டு சீறி எழும்போதெல்லாம், சாதி வேறுபாடுகளைக் கடந்து மக்கள் திரண்டெழுகிறார்கள் என்பது மகிழத் தக்கது. ஆனால், பாசி படிந்த குளத்தில் கை வைக்கும்போது மட்டும் பாசி விலகுவதுபோல், பகைவர்களின் கொடுமையை எதிர்த்து எழும்போது மட்டும், சாதிப்பாசி விலகிச் செல்கிறது. ஆனால், அந்த எழுச்சி அடங்கியவுடனே, மறுபடியும் சமுதாயத்தைச் சாதிப்பாசி மூடி மறைக்கிறது. நாட்டுப் பற்றை விடச் சாதிப்பற்று மிகுந்திருக்கிறதோ என்று எண்ணவும் செய்கிறது. இவ்வாறு பாசி படிந்து மூடிய குளமாக உள்ள இந்த நாடு, என்று பாசியற்ற தெளிவு பெறுமோ?

வடக்கெல்லையில் இந்த நாட்டுக்குப் பகைவர்களாக உள்ளவர்கள் யார்? சாதிமுறை அறியாதவர்கள்; மதத்தின் பெயராலும் அரசியல் கொள்கையின் பெயராலும் ஒரே இனமாக உள்ளவர்கள். சாதியின் பெயரால் பிளந்து பல்வேறு வகைப்பட்டுள்ள இந்தச் சமுதாயத்தைத் தட்டி எழுப்பிச் சீர்திருத்துவதற்காகவே, ஓர் இனமாக ஒன்றுபட்டு வாழும் மக்களைக் கடவுள் பகைவர்களாக அனுப்பியுள்ளாரோ என்றும் எண்ணுவோர் உண்டு. அந்தப் பகைவர்களின் தொல்லைகளை ஒழிப்பதற்காகவாவது இந்த நாட்டு மக்கள் சாதிமுறையை ஒழித்து ஒன்றுபட்டே ஆகவேண்டும். ஒற்றுமையை விடச் சிறந்த வலிமை வேறு இல்லை என்ற உண்மையை உணரவேண்டிய நெருக்கடியான நிலை இது.

இந்நிலையில் இன்று சாதி முறையை வன்மையாகக் கடிந்து உணர்ச்சியோடு இடித்துரைக்கின்ற எழுத்துத் தேவை; பாட்டுத் தேவை. திருநாவுக்கரசர் முதலா

ஞேர் ஒரு துறையில் அதற்கு இடம் கொடுத்து மற்ருெரு துறையில் அது வேண்டா என்று கடிந்தார்கள். ஔவையார் முதலான சான்ருேர்கள் அதை வேறு வழியில் திருப்பித் திருத்த முயன்ருர்கள். இந்த நூற்ருண்டில் தோன்றிய அறிஞர்களே அதன் தீமையை நன்ருக உணர்ந்து அதை அடியோடு ஒழிக்க முயன்ருர்கள். சமுதாய ஒற்றுமைக்கு மட்டும் அல்லாமல், நாட்டு உரிமையுணர்ச்சிக்கும் அது இடையூருக இருத்தலை நன்ருக உணர்ந்து கடிந்தார் பாரதியார், அவர் வழியில் வந்த பாரதிதாசன், மற்றக் காரணங்களை விட்டு, மனிதப் பண்பாட்டுக்கே அது மாருனது என்று உணர்ந்து அழுத்தந் திருத்தமாக மிக வன்மையாகக் கடிந்துரைத்தார். சாதி முறை தொடக்க காலத்தில் நன்மைக்கே தோன்றியது என்பது பாரதியாரின் நெஞ்சில் இருந்த காரணத்தால், அதை எதிர்த்துப் பாடிய போதும், அவ்வளவு வன்மையாகக் கடியவில்லை. பாரதிதாசனே, தொடக்க காலத்திலும் அது தீமை கருதியே தோன்றியது என்று அந்தப் பழமையையும் வெறுத்தவராதலால், அவருடைய சாதி எதிர்ப்பு பாடலில் மிக்க வன்மையும் ஆத்திரமும் காண்கிருேம்.

எவ்வளவோ அறிவியல் முன்னேற்றங்களும் அரசியல் அமைப்புக்களும் கண்ட இந்த நூற்ருண்டில் உலகத்தின் ஒரு மூலையில் சாதி முறை இருப்பதையும் அவரால் பொறுத்துக்கொண்டிருக்க முடியவில்லை. இந்த நாட்டில் அவர் சாதி முறை இருக்கக் கண்டதும், இந்த உலகமே இன்றும் முன்னேறவில்லை என்று பழிக்கின்ருர். உலகமே இருட்டறையில் உள்ளது, இன்னும் ஒளிபெறவில்லை என்கின்ருர். உலகில் அறிவின் ஒளி உண்மையாகப் பரவியிருந்தால், இப்படிப்பட்ட கீழான அறியாமையில் பிறந்த சாதிமுறை இந்த நாட்டில் இருக்க முடியாதே என்று பெருமூச்செறிகின்ருர். "இருட்டறையில் உள்ளதடா உலகம்" என்கின்ருர்.

அவருடைய ஆத்திரத்தைக் கண்ட நாம், "கவிஞரே! நீங்கள் எண்ணுவதுபோல், இந்த நாட்டு மக்கள் எல்லாரும் சாதிப் பித்தர்கள் அல்லர்; நம் மக்களில் பெரும்பாலும் சாதி நம்பிக்கை அற்றவர்கள், சாதி வெறியே பழைய கதை ஆகிவிட்டது, யாராவது பழம்பசலிகள் ஒரு சிலர் மட்டுமே இன்னும் சாதிப் பற்றுடன் இருக்கிருர்கள். அவர்கள் இருந்து போகட்டும், தொலையட்டும்" என்று அவர்க்கு அமைதி கூற முற்படுகிருேம் அதையும் அவரால் பொறுக்க முடியவில்லை. "ஒரு சிலரா? ஒருவனே இருந்தாலும் அநாகரிகம்தான். சாதிமுறையில் நம்பிக்கை உள்ளவன் ஒரே ஒருவன் இருந்தாலும், அவன் இந்த உலக நாகரிகத்திற்கே மாசுதான்" என்கின்ருர்.

"இவ்வளவு வேகமாக முன்னேறி வரும் இந்த உலகத்தில் சாதி பற்றிப் பேசுவோரும் பழங் கதையாய் மறைந்துபோயிருக்க வேண்டுமே. அப்படிப்பட்டவனுக்கு இன்றைய அறிவியல் உலகத்தில் இடமே இருக்கக் கூடாது" என்கின்றார். "சாதி இருக்கின்றது என்பவனும் இருக்கின்றானே" என்று அவ்வளவு வெறுப்போடு பழித்துரைக்கின்றார்.

"இருட்டறையில் உள்ளதடா
உலகம்—சாதி
இருக்கின்றதென்பவனும்
இருக்கின்றானே"

என்ற அவருடைய பாட்டில், சாதி எதிர்ப்புணர்ச்சி வீறிட்டு முழங்கக் கேட்கின்றோம்.


## MAN MADE FIBRES
## FOR QUALITY YOU CAN COUNT ON
## SOUTH INDIA VISCOSE PRODUCTS

| | |
|---|---|
| RAYON YARN | Rated among the best–comparable to imported yarn. Available in 75, 100, 120 & 150 Deniers Bright. Cones, Hanks & Cakes. |
| STAPLE FIBRE | Superb in quality 1.5 D x 1.5" |

The uniform excellence of South India Viscose products is the result of collaboration with one of the World renowned producers, SNIA VISCOSA, ITALY : up-to-date machinery; and latest manufacturing technique.

*For further particulars contact :*

## SOUTH INDIA VISCOSE LIMITED

Race Course — Coimbatore-1.
Grams: "VISCOSE" Phone: 3206, 3207 & 3208.
Telex: No. 042-210 'VISCOSE CB'


கவியுள்ளமும் இயற்புலமைத் திறனும் பாரதிதாசரிடம் அமைந்திருப்பதைப் பல பாடல்களிற் கண்டு களித்தேன். உள்ளத்துறையும் புதிய பல எண்ணங்களையும் உணர்ச்சிகளையும் இனிய எளிய நடையில் வருந்தாமல் புனைந்து கூறும் திறன் இவரிடம் இயற்கையில் அமைந்திருப்பது பாராட்டத்தக்கது.

நாவலர் ச. சோமசுந்தர பாரதியார்.

# தத்துவக் கனியமுதம்

— திரு. வீர. அருணாசலம் —

இராகம் : கரகரப்பிரியா　　　　தாளம் : ஆதி

பல்லவி

தத்துவக் கனியமுதம் தித்திக்கும் தமிழென்று
முத்தமிழ் வளர்த்தாரடி மூவேந்தர்கள் (தத்துவக்)

அ. பல்லவி

தித்திக்கும் பொருள்யாவும் பத்துப் பாட்டின் சுவையில்
தொத்தி வந்து நின்றே தத்துவம் பேசுதடி (தத்துவக்)

சரணம்

எத்திக்கும் இசை மணக்கத் தனித்திருவாசகமும்
பக்திக்கிசைந்த அருணகிரி திருப்புகழும்
சக்திக்குகந்தது சரவணபவ நாமம்
தத்திவரும் மழலையும் தயவுடன் விரும்பும் (தத்துவக்)
ஆடல்தனை விளக்கும் சேக்கிழாரின் பாடலும்—திருவினை
ஆடல்தனை விளக்கும் சேக்கிழாரின் பாடலும்
பாடல்களில் சிறந்த நால்வர் அடங்கன்—முறையும்
ஊடல்களை வழங்கும் அகநாநூற்றுப் பாடல்களும்—வீரர்க்கு
இடலைகளை நவிலும் புறநானூறும் கொண்ட (தத்துவக்)


★ PILOT PEN ★ PILOT PEN ★ PILOT PEN ★ PILOT PEN ★

*With the*

*best*

*Compliments of*

**THE PILOT PEN COMPANY INDIA PTE., LTD.,**

"CATHOLIC CENTRE" ARMENIAN ST.,

**MADRAS-1.**

★ PILOT PEN ★ PILOT PEN ★ PILOT PEN ★ PILOT PEN ★

*With best compliments of*

# Gladstone Lyall & Company Limited

HEAD OFFICE : 4, FAIRLIE PLACE
CALCUTTA-1.

★

*Branches at :*

★ **NEW DELHI,**

★ **BOMBAY,**

★ **MADRAS,**

★ **HYDERABAD,**

★ **SILIGURI,**

★ **GAUHATI,**

★ **ROURKELA,**

★ **ASANSOL,**

★ **RANCHI.**

★

***Specialist in Structural Waterproofing***

# ரயில் வண்டி



— வண்ணமுத்து —

அப்பா தந்த ரயில் வண்டி
ஆறு சக்கர மெயில் வண்டி
குப்குப் பென்றே புகை யாது
கூவிக் கொண்டே ஓடாது

கூட்டம் ஏற்றிச் செல்லாது
குறுக்கே நின்ருல் கொல்லாது
ஆட்டம் ஆடிச் செல்லாது
ஆற்றில் நம்மைத் தள்ளாது

தண்ட வாளம் வேண்டாது
தானே ஓட அறியாது
கண்ட கண்ட இடமெல்லாம்
கையைக் கண்டே நில்லாது

கண்ணீர் கொட்டச் செய்யாது
கரியை முகத்தில் தூவாது
தண்ணீர்க் காக நில்லாது
தாளம் போட்டும் ஓடாது

வெய்யில் மழையில் போகாது
வீட்டில் ஓடும் என் வண்டி
கயிற்றைக் கட்டி இழுத்தாலே
கணக்காய் வருமே பின்னுலே



*PREVENT CHAPPING OF*

PRETTY FACE !

LOVELY HANDS !!

★

USE

**ALMOND BENZOIN**

**GLYCERINE**

**HAND LOTION**

★

**BLISS & COTTON**

DISPENSING & FAMILY CHEMISTS,
12-E, CONNAUGHT PLACE,
**NEW DELHI.**
PHONE : 42170

# PUDUMJEE PULP AND PAPER MILLS LIMITED.

60, FORBES STREET,
BOMBAY-1.

TEL : **254607**

*MANUFACTURERS OF :*

**GREASEPROOF, WATERPROOF, AMMUNITION AND OTHER SPECIALITY PAPERS.**

# எதற்குத் திருப்தி?

கண்ணன்

தெரு திரும்பியதும் ஜன்னல் வழியே பார்த்துக் கொண்டு காத்திருந்த கமலியைக் கவனித்தவாறே நடந்து வீட்டுக்குள் நுழைந்தேன். தினமும் தவறாமல் கடந்த மூன்று மாத காலமாக தெருமூலை வந்தவுடன் இப்படி ஜன்னலை நோக்கி என் கண்கள் தானாகவே செல்லும். சாயந்திரம் ஆபீஸிலிருந்து திரும்புவதும் சற்று நேரமாகிவிட்டால் கூட முகத்தைத் தூக்கிக் கொள்ளும் கமலியோடு பேச்சுக்கொடுத்து சமாதானம் பேசுவதும் பழக்கமாகி விட்டது. இந்த டில்லிக்கு வந்த பிறகுதான் எங்கள் தாம்பத்ய வாழ்வில் மறுமலர்ச்சி ஒன்று ஏற்பட்டுவிட்டிருக்கிறது. சென்னையிலிருக்கும்போது வேறு தினுசு. அவளைத் தேடுவதற்கு குழந்தைகளை விரட்டியனுப்பிக்கும் வழக்கம் போய், இப்போது என் வரவுக்காக ஒவ்வொரு க்ஷணத்தையும் எண்ணிக் கொண்டிருக்கிறாள்.

மைலாப்பூர் மாடவீதியில் வருஷக் கணக்கில் ஒண்டுக்குடித்தனம் பண்ணிவிட்டு திடீரென்று சைதாப்பேட்டைக்கு இடம் மாற்றினால் கூட சற்றுக் கஷ்டம்தான். மாட வீதியை விடமாட்டேனென்று பிடிவாதம் செய்துகொண்டிருந்த சகதர்மிணி கமலி என்னை டில்லிக்கு மாற்றிவிட்டார்களென்றதும் நிலை கொள்ளாமல் பூரித்துப்போனாள். குதித்துக் கொண்டே பிரயாணத்துக்கு மூட்டை கட்டினாள். சந்தோஷம் பொங்க பின்கட்டு மேல்கட்டு குடித்தனக்காரர்களிடம் அடிக்கொருதரம் பேசிப்பேசி டில்லியைப் பற்றி வம்பளந்துகொண்டிருந்தாள். பார்க்கப்போனால் உத்தியோக உயர்வு ஒன்றும் இல்லை. இடம்தான் மாற்றம். டில்லிக்கும் வந்து கரோல்பாக் ஐந்தாம் பிளாக்கில் ஒரு வீட்டில் முதல் மெத்தையில் மூன்று அறைபோர்ஷனும் கிடைத்துக் குடியேறின பின்புதான் கமலிக்குக் கவலை என்பது ஒவ்வொன்றாகத் தோன்ற ஆரம்பித்தது. புருஷனுக்குக் கவலையில்லை. வீடுவிட்டால் ஆபீஸ். அவளுக்குத்தான் பொழுது போவது கஷ்டம். குழந்தைகளையும் பட்டணத்தில் அவளுடைய அம்மாவின் வீட்டிலேயே விட்டு வந்தது பெரிய முட்டாள்தனம் என்று தன்னுடைய அபிப்பிராயத்தை சமயம் வந்த

போதெல்லாம் வெளியிட்டுக் கொண்டிருந்தாள். என்னுலான உதவி ஆபீஸில் ஐந்துமணியான தும் அலறிப்புடைத்துக் கொண்டு ஓடிவந்து க்யூவில் நின்று முதல் பஸ்ஸில் ஏறி கமலியை அடைவதையே தினசரி வாழ்க்கையின் லட்சியமாகக் கொண்டிருப்பது.

அன்று சாயந்திரம் கமலியின் முகத்தில் என்றுமில்லாத ஒரு துடிப்பு காணவே ஏதோ விஷயம் இருக்கிறது என்று எண்ணிக் கொண்டு நாற்காலியில் சாய்ந்த என் பக்கத்தில் உட்கார்ந்து கொண்டு பேச ஆரம்பித்தாள்.

"ஒரு நல்ல சமாசாரம். நம்ப வீட்டு பர்சாத்திக்கு நாளைக்கு குடி வருகிறுர்கள்."

"ஹ~ம்." எனக்கு நம்பிக்கை யில்லை.

"என்ன, ம்-போடுகிறீர்கள், பெரிய கவலைவிட்டது. இல்லையா? யாரோ ஒரு பெரியவர் வந்து பார்த்துட்டுப் போயிருக்கார். பிடித்திருக்கென்று சொல்லியும் விட்டார்."

நம்பிக்கை ஏற்படவில்லைதான். எல்லா மெத்தைக்கும் மேல் மழை பெய்தால் ஒதுங்குவதற்கென்று ஒரு சிறிய அறையைக் கட்டிவிட்டு வாடகைக்கும் கொடுத்துப் பணத்தைப் பறிக்கிறுர்கள் இந்த ஊர் வீட்டுச் சொந்தக்காரர்கள். இந்த இடத்துக்குப் பெயர் பர்சாத்தி, வெளியூரிலிருந்து பிழைப்புக்கு வரும் பிரம்மச்சாரிப் பையன்களுக்கு டில்லியில் முதன் முதலில் சுலபமாகக் கிடைக்கும் இடம் இது தான். எங்களுக்குக் கிடைத்த வீட்டின் பர்சாத்திக்குப்போக நாங்கள் இருந்த போர்ஷனில் கதவைத் திறந்து கொண்டுதான் மேலே போக முடியும், எங்களுடைய இஷ்டப்படி யாரையாவது குடிக்கு அமர்த்திக்கொள்ளும்படி வீட்டுக்காரன் தாராள சிந்தையுடன் பொறுப்புக் கொடுத்துவிட்டான், இல்லாவிட்டால் நாங்களே வாடகைமாத்திரம் கொடுத்துவிட்டால் போதுமாம், குடிவருவோரின் சுகதுக்கங்களை வெகுதூரம் பகிர்ந்து கொண்டு அவர்கள் ஏறி இறங்கும்போதெல்லாம் கதவைத் திறந்து விட்டுக் கொண்டிருப்பதே டில்லியில் முதல் நூதன அனுபவம் எங்களுக்கு, கமலிக்குக் கொஞ்ச நாள் இது வேடிக்கையாகக்கூட இருந்தது. இந்த மூன்று மாதத்தில் நாலைந்து புது முகங்கள் குடியேறி வெளியேறியும் விடவே அவள் முணுமுணுக்க ஆரம்பித்துவிட்டிருந்தாள்.

"ஆமாம், இந்தத் தனிமரங்கள் இனிமேல் நம் வீட்டிற்கு லாயக்கில்லை. குடும்பத்தோடு இருக்கும் பொறுப்புள்ள நம் ஊர் மனுஷாள் யாராவது இருந்தால் தேவலை." என்ற முடிவுக்கும் வந்திருந்தாள். இந்த நிபந்தனைக்கு உட்பட்டு ஒரு பெரிய மனிதர் வருவதாகச் சொல்லவே எனக்கும் கொஞ்சம் கவலை விட்டதுபோல் தோன்றிற்று.

"வருகிறவர் பெண்டாட்டி பிள்ளைகளோடு தானே வருகிறார்? விசாரித்தாயா?"

"ஏன்னா, அதெல்லாம் எப்படி அவரை எடுத்த எடுப்பிலேயே கேட்கிறது. அவரைப் பார்த்தாலே சித்தக் கஷ்டப்படுபவர்போலிருக்கு, தெம்பாகத்தான் இருக்கிறார்."

"என்ன உத்தியோகமோ? வாடகைக்காகச் சொல்லவில்லை. பொம்மனாட்டி ஆத்தில் இருந்தால் உனக்கும் துணை."

"அவர் பேர் மணிராவாம். அவரே சொன்னார். இங்கே கரோல் பாக்கிலேயே நம்ப பக்கத்துக்காராள் நிறைய ஓட்டல் வைத்திருக்காளாமே, அந்த மாதிரி ஓட்டல் எதிலேயோ வேலை பார்க்கிறாராம். பெண்டாட்டி இல்லை போலிருக்கு, அவர் அக்காளும் அக்காவின் பெண்ணும் கூட வந்து இருக்கப் போறானாம்."

"சரிதான். எடுத்த எடுப்பில் நீ கேட்காமலேயே அவரே எல்லாத்தையும் சொல்லிட்டார் போலிருக்கு. தெரிஞ்சுக்க வேண்டியது ஒண்ணையும் நீ விடல்லே. வாடகையைப்பத்திச் சொன்னியா?"

"ஏதோ கொடுங்கோளேன், நாற்பது ரூபாய். மனுஷாள்தான் பெரிசு அப்படின்னு சொன்னேன்.'

"சரிதான் விடு. ஓட்டலில் சமையல், எனக்கும் சௌகரியம்தான். நீ ஸ்ட்ரைக் பண்ற போதெல்லாம் அவரை சித்தக் கூப்பிட்டு..."

"பேச்சுக் கொண்ணும் குறைச்சல் இல்லே, நீங்க எப்ப கஷ்டப் பட்டேளாம்? அப்பப்ப எங்க அம்மா புரசவாக்கத்திலேருந்து வந்துண்டுதான் இருந்தாள்."

பெரிய தலைபாரம் விட்டது போலிருந்தது. பர்சாத்திக்கு ஒரு குடும்பம், கமலிக்குத்துணை, வீட்டில் சற்று பெரிய காரியங்களுக்கு மணி ராவைக் கூப்பிட்டுக் கொள்ளலாம்.

## (2)

மணிராவும் அவருடைய மருமாளும்தான் இப்போதைக்கு. அவருடைய அக்கா வருவதற்கு தற்சமயம் சௌகரியம் இல்லே. தஞ்சாவூரில் வக்கீல் ஒருவர் வீட்டில் சமையல் செய்து கொண்டிருக்கிறாள், திடீரென்று விட்டு வரமுடியாததால் பெண்ணை மாத்திரம் தம்பியிடம் அனுப்பித்திருக்கிறாள். அவளுடைய புருஷன் தெற்கு வீதியில் ஓட்டல் வைத்துக் கைநிறைய சம்பாதித்துச் செலவும் செய்துவிட்டுக் கடையை மூடின மூன்றாம் நாள் கண்ணையும் மூடிவிட்டார். பெண்டாட்டியும் பெண்ணும் தான் விட்டுப்போன அவருடைய ஆஸ்தி, தினசரி இரவு வெளியாகும் கமலியின் செய்தி இதழ்களிலிருந்து சில குறிப்புக்கள் இவை.

அந்தப் பெண்—பெயர் ஜெகம்—அடிக்கடி "கமலி மாமி, கமலி மாமி" என்று கூவிக் கொண்டே கீழே

இறங்கிவரும் பாணியே தனி. அங்கள் அனைத்தையும் கவனித்து விடுகிருள். மாமியை உட்காரச் சொல்லிவிட்டு. புரு புருவென்ற சுபாவம். கமலி அதிர்ஷ்டக் காரி தான். நாள் பூராவும் இவர்கள் பிரிவதேயில்லை போலிருக்கிறது. ஜெகம் வராவிட்டால் கமலி மேலே போய் விடுகிருள்.

ஏழ்மையில் வளர்ந்ததின் அடையாளம் தன்னுடைய வயதை மறந்து வித்தியாசமில்லாமல் முதல் நாளிலிருந்தே என்னேடு பழக ஆரம்பித்துவிட்டது. கலீரென்று சிரித்து என்னுடைய ஹாஸ்யத் துணுக்குகளை அவள் அனுபவிப்பதைக் கண்டாலே எனக்கு ஒரு ஆனந்தம். பாவம், நல்ல பெண். வறுமையின் பேச்சைக் கேளாமல் பருவத்தில் தழைத்திருந்த அவளுடைய உடலைப்பழி வாங்கும் நோக்கத்தோடோ என்னவோ அந்த நாசமாய்ப்போகிற வறுமை மாற்றுக்குக்கூட ஒரு நல்ல மேலாடை இல்லாமல் செய்துவிட்டிருந்தது. அங்கலாய்த்துக்கொண்டது நானும் கமலியும்தான், அந்தப் பெண் அதைப்பற்றி நினைப்பதாகவே தெரியவில்லை. இல்லாமையின் நிறைவுக்கும் ஒரு பூரிப்பு.

குடிவந்த ஒரு வாரத்திற்குள் ஒரு ஞாயிற்றுக்கிழமை காலை மணி ராவ் என்னைத் தேடிக்கொண்டு வந்துவிட்டார். சுமார் ஐம்பது வயது இருக்கலாம். தூண்கள் போன்ற காலும் கையும் பார்ப்பதற்கு ஒரு நாலுகால் கல்மண்டபம் எழுந்து நடப்பதுபோலிருந்தது. தளராத தேகக்கட்டு, நரைத்துப் போன தலை மயிர்தான் அவருடைய வயதைத் துரோகம் பண்ணி காட்டிக் கொடுத்தது. இல்லாவிட்டால் முப்பத்தைந்து தாண்டியிருக்கலாம் என்று மதிக்கக்கூடிய தோற்றம்.

"சாருடைய நேரமும் என் நேரமும் ஒத்துவரதில்லை. இன்னிக்கி மாத்திரம் காலையில் சித்த ஓய்வு, உங்களுக்கெல்லாம் லீவுதானே?" என்று பீடி கையுடன் ரொம்பநாள் பழகியவர்போல் ஆரம்பித்தார். வெற்றிலைக்காவி மண்டிக் கிடந்த பல்லில் வானவில் போட்டது போல் ஏகப்பட்ட நிறம். பத்து நாள் க்ஷவரம் வேறு பாக்கி, இவையில்லாமல் ஓட்டலில் வேலை செய்ய முடியாதா? பழக்கமான பிறகு கேட்க வேண்டிய கேள்வி என்று நினைவில் குறித்துக்கொண்டேன்.

"ஆமாம், உட்காருங்கோ." உபசாரம் செய்வதை சட்டை செய்யாமல் பேசிக் கொண்டே போனர்.

"காலையில் அஞ்சு மணிக்கு எழுந்து ஓட்டலுக்குப் போகிற வன் மத்தியான்னம் இரண்டு மணிக்குத் திரும்பறேன், சார், மறுபடியும் நாலு மணியிலிருந்து ராத்திரி பத்து மணிவரை வேலை. நம்ப தலையில்அப்படி எழுதியிருக்கு. உங்களைப் பார்க்கணும்னு வந்ததுலே

ருந்து பிரயத்தினம் பண்றேன். ஜெகம் உங்களைப்பத்தி ரொம்ப சொல்ருள், சார்.''

''ஏன் நின்னுண்டேயிருக்கேளே?'' நான் சொல்வதைக் கேட்டதாகத் தெரியவில்லை, புகையிலையைக் குதப்பிக் கொண்டே பேச்சு சுவாரஸ்யத்திலிருந்தார்.

''நாற்பது ரூபாயில் இடமும் கிடைத்து உங்கமாதிரி மனுஷாளுக்குப் பக்கத்திலிருக்கும்படி இருக்கும்னு நான் சொப்பனத்தில் கூட நினைத்ததில்லை, சார்.''

''நீங்க என்ன டில்லிக்கு வந்து ரொம்ப நாளாகிறதோ?'' என்று கேட்டு வைத்தேன். நான் கேட்காவிட்டாலும் அதையெல்லாம் சொல்லப்போகிறவர் தான்.

''பதினெட்டு வயசில் வீட்டைவிட்டுக்கிளம்பினவன் இருபத்தஞ்சு வருஷம் பம்பாயில் இருந்தேன். நான் வேலை செய்யாத ஓட்டல் பம்பாயிலேயே கிடையாது, சார், இன்னிக்கும் என் பேரைச்சொல்லி மாதுங்காவில் எந்த மதருஸி ஓட்டலிலும் சாப்பிடலாம். பெருமைக்குச் சொல்லிக்கலை, இந்த ஊருக்கு வந்து ஆறு வருஷம் ஆகிறது. வந்ததுலேருந்து இந்த பாலக்காட்டு அய்யர் ஓட்டலில் தான் வேலை, நூறுரூபாய் சம்பளம் அக்கா ஒருத்தி தஞ்சாவூரில் கஷ்டப்பட்டுண்டு இருக்காள், அவளும் என்னோடே வந்துடுவாள். எத்தனை நாளைக்கு ஓட்டல் சாப்பாடு, சார்? பெண்டாட்டி போய் பத்து வருஷம் ஆச்சு, குழந்தை குட்டிப்பிடுங்கல் ஒண்ணும் இல்லை, அக்காவையாவது அழைச்சுண்டு வந்தால் தள்ளாத காலத்தில் எனக்கு மட்டும் சமைச்சுப்போட்டுண்டு இருக்கலாம், ஜெகத்துக்கும் ஒரு நல்ல இடமாகப் பார்த்துக் கொடுத்துட்டால்...''

''அப்படின்னு பெண்ணுக் மாப்பிள்ளை மும்முரமாகப் பார்த்துண்டிருக்கேள்னு சொல்லுங்கோ'' ஜெகத்தைப்பற்றிப் பேச்சு திரும்பவே எனக்கும் அவர் பேசுவதில் சிரத்தை உண்டாயிற்று.

''அழகுக்கும் குணத்துக்குமா, சார், பிள்ளைகள் இந்தக்காலத்தில் கல்யாணம் பண்ணிக்கிருங்கள். ஓட்டலில் வேலை செய்கிற பசங்கள் கூட நானூறு ஐநூறு என்று வாய் கூசாமல் கேட்கிருங்கள். பணம் கொட்டியா வைச்சிருக்கு, தஞ்சாவூரில் அக்கா சல்லடை போட்டு தேடிவிட்டாள். பண்ணிக்கிறேன் என்று பையன் வந்தால் கூட நம்ப ஜெகம், அப்பப்பா, என்ன நொடிக்கிருளாம்? இவள் அம்மா வேலை செய்கிற வக்கில் வீட்டிலேயே ஜெகத்தை இருக்கச் சொன்னுளாம். வக்கீலின் பெண்ணுக்குக் குழந்தை பிறந்திருக்கு. ஒரு வருஷம் குழந்தையைப் பார்த்துண்டு வீட்டோடே இருக்கட்டுமே, கல்யாணம் நானே பண்ணி வைச்சுடறேன் என்று வக்கில் சொன்னுராம். அக்கா பெண்ணிடம்

மன்னுடிஞள். கேட்டால்தானே? வயது வந்தும் புத்தியில்லே. ஊரில் உள்ள உதவாக்கரைப் பசங்களோடு ஆற்றங்கரையிலும் கடைத் தெருவிலும் சரிசமமாக நின்னுண்டு வம்புக்கிழுத்து அரட்டையடிக்கிருளாம். அக்காவுக்குப் பொறுக்கல்லே ஊர்வாய்க்குப் பயந்துண்டு இங்கே அனுப்பிச்சுட்டாள்.''

மணிராவின் பேச்சு மடை திறந்தது போல் பொழிந்தது. ''சிறிசுதானே. இன்னும் பதினெட்டுகூட இருக்காது, இல்லையா? ஆனுலும் கண்டிப்பு இருக்க வேண்டியதுதான்'' என்று அவர் சொல்வதையும் கொஞ்சம் ஆமோதித்து வைத்தேன். எனக்கு மட்டும் சரீரென்றது. ஜெகத்தைப் பற்றிக் குறை சொல்லுவது கமலிக்குக் கட்டோடு பிடிக்காது. ஆனல் அவருக்கென்ன துவேஷமா? ஆதங்கத்தோடுதானே சொல்கிருர். என்னுடைய ஆதரவு வாய் வார்த்தையோடு, ஒரே மூச்சில் முனைந்து நின்று கல்யாணம் பண்ணிவைக்கப் போகிறேனு? நெருங்கிப்போனுல் கமலிகூட ஒரு புடவைக்குப்பதில் இரண்டாக வாங்கிக் கொடுக்கலாமே என்று சொல்லலாம். அதற்குமேல்கொட்டி வைத்திருக்கிறதா என்று கேட்டு விடுவாள். அவர் சொல்வதிலும் தப்பில்லே. பயம் என்பதே தெரியாமல் தளதளவென்று வளர்ந்திருந்தாள் ஜெகம். அவள் மேலே வீசியிருந்த கந்தல் மேலாக்கு அவளுடைய வளர்ச்சிக்குப் பயந்துபோய் ஒடுங்கிக் கிடந்தது போல் இருந்தது. முகக்ஷவரம் செய்யும்போது ஒருநாள் கத்திபட்டு ரத்தம் வரவே கமலியை அவசரப்படுத்திக் கூப்பிட்டேன், சமையலறையிலிருந்து அவள் வருவதற்குள் ஓடோடி வந்த ஜெகம் என் கழுத்தைப் பிடித்துக்கொண்டு, ''மாமா, இப்படி காட்டுங்கோ. அப்படி நகருங்கோ'' என்று சுண்ணும்பை காயத்தில் தடவி துடைக்க ஆரம்பித்து விட்டாள், இதைப்பார்த்துக் கொண்டிருந்த கமலி களுக்கென்று சிரித்துவிட்டாள். இது சட்டென்று நினைவுக்கு வரவே உள்ளூர சிரித்துக்கொண்டேன்.

''சார், நான் வரேன்'' என்று மேலே எறக்கிளம்பியவர் மறந்தது ஞாபகத்துக்கு வந்ததுபோல்,''நான் சொன்னது மட்டும் மனசில் இருக்கட்டும், சார், யாராவது பையன் கண்ணில் பட்டால் ஒரு வார்த்தை சொல்லுங்கோ, பிராப்தம் இருந்தால் அதுக்கும் அதிர்ஷ்டம் இருந்தால் நடக்கட்டும்'' என்று சொல்லிவிட்டுப் போனுர்.

## (3)

கமலியின் முகத்தில் ஏற்பட்ட வாட்டத்துக்குக் காரணம் விளங்கவில்லே. இரண்டு நாளாக ஜெகத்தின் நடமாட்டமும் அதிகமாக இல்லே. நான் கேட்டுத் தெரிந்து கொள்வதற்கு முன்னுல் அவளே சொல்லிவிட்டாள்.

"ஜெகத்துக்கு உடம்பு சரியா யல்லே. அதோடு அவருக்கு சமை யல் பண்ணிப்போடுகிறது."

"மனுஷன் இரண்டு நாள் ஓட்ட லில்தான் சாப்பிடட்டுமே. ஜெகத்தை இங்கே வந்து இருக்கச் சொல்லேன். நம்மாலான ஒத்தாசை அவ்வளவுதான்."

"எல்லாம் சொன்னேன், அந்தப் பெண் கேக்கல்லே. ஒண்ணுமில்லே, மாமி, உங்களுக்கேன் சிரமம் - அப் படின்னுட்டு அழறது, பாவம்."

"ஏன், என்ன ஆச்சாம்? நான் வேணு ராவைக் கேட்கட்டுமா?"

"சரி சரி. பேசாமல் இருங்கோ. அதுவேற தொல்லே." கமலியின் பேச்சு எனக்கே ஆச்சரியமாக இருந்தது. "விஷயத்தைத்தான் சொல்லேன்" என்று வற்புறுத் தவே சொன்னுள். "அம்மிக் குழவி கையில் விழுந்து வீங்கிக் கிடக்கு. நான் பத்து அரைச்சுப் போடுகி றேன், இப்போ சித்த தேவலே."

"இப்படியா அஜாக்கிரதையாக ஒரு பெண் வேலே செய்யும், சுத்த அவசரம்". எனக்கு உண்டான இரக்கத்தில் கோபம்தான் வந்தது.

"ஆமாம்னு, ஒருத்தர் கையைப் பிடிச்சுண்டு குழவியை மேலே போட்டால்..." என்று அடக்கிய ஆத்திரத்தில் பொருமினுள்.

தூக்கி வாரிப்போட்டது எனக்கு "என்ன சொல்றே? மணிராவா அப்படிப்பண்ணுர்? நம்பமுடியல்லி யே, அடபாவி மனுஷா?"

"நீ என் பெண்மாதிரி, ஜெகம். என்ன நடந்தது, சொல்லுன்னு கெஞ்சிக்கேட்டேன். வாயைத் திறக்கணுமே."

"நானே அவரைக் கேட்கிறேன், கண் தெரியாமல் அடிச்சிருக்கா ரே?"

"ஐயோ, பேசாமல் இருங்கோ, நானு விடுபவள், குடைந்து கேட் டால் அழ ஆரம்பிக்கிருள், இவ் வளவு வயசாச்சே, அழலாமான்னு கோச்சுண்டேன். அப்புறம் சொன் னுள். இவர் வேலே செய்கிற ஓட்டலில் இருக்கிற ஒருத்தருக்கு இரண்டாந்தரமாக கல்யாணம் பண்ணி வைச்சுடலாம் என்று பார்க்கிருர் போலிருக்கு. எனக்கு அதுக்குள்ளே கல்யாணம் என்ன, மாமி, அவசரம் என்று அழுகிறது. கோபத்தில் அடிச்சுட்டார். நீங்க மட்டும் அவரிடம் இதைப்பத்திப் பேசவே பேசாதேங்கோ, ஜெகத் தையும் ஒண்ணும் கேட்க வேண் டாம். ஆமாம், தெரிஞ்சுதா?"

கதவைத் தட்டும் சத்தம் கேட் டது. மணி பத்தரை. ராவ்தான். கமலி கதவைத் திறந்துவிட்டு வந் தாள். "நுணுக்காய் மாதிரி மூஞ்சி யை வைச்சுண்டு போருர் எல்லாம் அவர்தான்."

"இந்தா கமலி. உனக்கேன் இந்த வம்பெல்லாம்? அவா அவா கஷ்டம் உனக்குத் தெரியுமா?" மணிராவ் பக்கம்தான் ஒரு நிமிஷம் பேசிப் பாரேன் என்று மனச்சாட்சி தூண் டியது.

"சரி. உங்களுக்கு மட்டும் தெரியுமாக்கும்." "பெண்ணைப் பெத்துட்டு தள்ளக் காத்துண்டு இருக்கிறவாளைக் கேட்டால் தெரியும்" என்றேன். "சரி சரி. தூங்குங்கோ" இந்த விஷயத்தில் மாத்திரம் என்னுடைய எதிர்வாதம் அவளுக்குக் கட்டோடு பிடிக்கவில்லை என்று எனக்குத் தெரியும்.

மணிராவ் போன அரை மணிக்குள் மாடியிலிருந்து கட்டில் காலை தரதரவென்று நகர்த்தும் சத்தமும் பாத்திரம் விழுந்து உருளும் ஓசையும் கேட்டது. அதைத் தொடர்ந்து அடக்க முடியாமல் திமிறி வெளி வரும் அழுகையும் விம்மலும் வந்தன. கமலி எழுந்து விட்டாள். அரைத் தூக்கத்திலிருந்த எனக்கும் இருப்புக் கொள்ளவில்லை. என்ன தோன்றிற்றோ, அரைவேஷ்டியை இறுக்கிக் கட்டிக்கொண்டு மேல் துண்டுகூட இல்லாமல் ஓடினேன். மணிராவ் விசுவாமித்திரராகிவிட்டிருந்தார்.

"என்னங்காணும், ஓய்?" என்று மெதுவாகத்தான் கேட்டேன். குரலைக் கேட்டுத், திரும்பியவர் என்னைப் பார்க்கப் பிடிக்காமலோ என்னவோ ஆகாயத்தைப் பார்த்தார். இதயம் படபடத்தது எனக்கு, மூலையில் ஜெகம் குப்புறக் கிடந்தாள். வெறிச்சென்று வறுமையில் துடைத்துக்கிடந்த கழுத்தில் வியர்வை முத்துமுத்தாக வழிந்து அவள் விடும் மூச்சின் அதிர்ச்சியில் சிதறித் தரையில் விழுந்துகொண்டிருந்தது. மின்சார வெளிச்சத்தில் அந்தக் காட்சி சகிக்கவில்லை.

"வாருமய்யா, வாரும்" என்று அவரைக் கீழே இழுத்துக்கொண்டு வந்துவிட்டேன். கமலி ஜெகத்தைப் பார்க்க மேலே போய் விட்டாள்.

## (4)

கமலிக்கு மறுபடியும் கவலை. ஜெகம் அடுத்த ஞாயிற்றுக்கிழமை ஊருக்குப் போகிறாள். தஞ்சாவூரிலேயே உறவுப் பையன் ஒருவனைப் பார்த்துவைத்திருக்கிறாள் அக்கா. பெண்ணுக்குக் கல்யாணத்தை செய்துவிட்டு தம்பியோடு டில்லியில் இருக்க வந்துவிடப்போகிறாள். இந்தச் சேதியை மணிராவே வந்து சொன்னார்.

"சார், பார்க்கிறவாளுக்கெல்லாம் நான் ஈவிரக்கம் இல்லாத முரடன்னுதான் படும், அவாளைச் சொல்லிக் குத்தமில்லை, நீங்களும்தான் அப்படி நினைச்சிண்டிருப்பேள், சொன்னால் நம்பிக்கைப்படாது. மனச்சாட்சியறிய யாருக்கும் நான் கஷ்டம் உண்டுபண்ணது கிடையாது. இருக்கிற நிலை தெரியாமல் தாம்தூம் என்று சிறிசுகள் பேசினால் பொறுக்க முடிகிறதில்லை, உங்காத்து மாமியிடம் சொல்லுங்கோ, எனக்கு ஒன்றும் மனசில் கல்மஷமில்லை, இப்படிப் பேசிக்கொண்டே போனார், எனக்கு என்னவோ மனம் இளகியது. "எது எப்படியிருந்தாலும், அது நல்ல இடத்தில் போய்ச்சேர்ந்து கண்ணைக்கசக்கா

மல் இருந்தால் சரி, வேறே என்ன உங்களுக்கு வேணும்?'' என்றேன்.

மணிராவ் தொடர்ந்தார். "சார், நான் உங்களுக்கு ரொம்ப கடமைப் பட்டிருக்கேன். ஒரு மாதத்தில் அக்காவைக் கூட்டிண்டு திருப்பிட றேன், இதே இடம்தான். வேறே எங்கே போவேன், சார். என் அக்கா இருக்காளே, அவள் நன்ளுக வாழ்ந்தவள். இப்ப கஷ்டப்படருள், அவள் ஒரேகவலே இந்தப்பெண். அதுக்கும் கல்யாணம் ஆய்விட்டால் அவளுக்கு என்ன? எனக்குத்தான் என்ன? சொல்லுங்கோ, சார், பேசாம இருக்கிங்களே?''

முப்பது வருஷமாக இட்டலிக்கும் தோசைக்கும் மாவு அறைத்து உருண்டு திரண்ட கைகளுக்கு இடையே விரிந்து அறுவடையான வயல் போல் பிளந்து கிடந்த கரடு முரடான அந்த மார்பின் அடியி லுள்ள இதய யந்திரத்தில் ஈரப் பசை கொஞ்சம் இருக்கிறது என்று நான் பூரணமாக நம்பினேன், கமலி அங்கே இதயமேயில்லே என்றுள். முரட்டுத் தோற்றத்தையும் மென் மை குணத்தையும் சேர்த்து நினைக் கவே பெண் மனம் தயங்குகிறது. ஆனல் என்னுடைய தர்க்க புத்திக்கு அவ்வாறு சேர்த்து நினைப் பதில் முரண் ஒன்றும் இருப்ப தாகத் தெரியவில்லை.

ஊருக்குப் போகிற நாளும் வந்து விட்டது. கமலி ஜெகத்துக்குத் தலே வாரிப் பின்னிவிட்டு கன்னத்தில் விரலே வைத்து திருஷ்டி தோஷம் கழித்தாள். கலீரென்று சிரித்தாள் ஜெகம். சிதறி வெடிக்கும் குழந் தைச் சிரிப்பு, "என்மாமி, என்னைப் பார்த்து யார் கண் வைக்கப் போருள்?'' என்று சொல்லிவிட்டு மறுபடியும் சிரிக்க ஆரம்பித்தாள்.

"போடி அசடு, கல்யாணம் பண்ணிண்டு சமத்தாக இருக்க வேண்டாமோ?''

"அட்படின்னு இப்ப சமத்து இல்லேங்கறேள். இல்லேயா?'' என்று வெடுக்கென்று திருப்பிக் கேட்டாள்.

"விளேயாடிண்டே இருக்காதே, உனக்கு வயசாகல்லேயா? அப்ப டின்னு இரண்டு வார்த்தை சொல் லுங்கோ'' இது மணிராவ், ஒரு கையில் பெட்டியும் மற்றதில் கூடை யொன்றையும் சுமந்து கொண்டு கீழே இறங்கியவர் இதைச் சொல்லிக்கொண்டே வந்தார்.

"வரேன், மாமா'' என்று நமஸ் காரம் பண்ணிஞள் ஜெகம். புரியாத துக்கம் என் நெஞ்சத்தில் படர்ந்தது. கமலி ஒரு சொட்டு கண்ணீர் விட்டாள்.

"போனதும் கடுதாசி எழுது. கல்யாணத்துக்கு பத்திரிக்கை அனுப்ப மறந்துடாதே'' என்று விடை கொடுப்பதில் ஹாஸ்யத் தைக் கலந்து பேசிஞள் கமலி, எனக்குப் பேசத் தெரியவில்லே, அந்தப்பெண் யாரோ? நான் யாரோ? என் இந்த அசட்டு மனம் இப்படி நெகிழ்கிறது?

## (5)

கமலி டெலிபோனில் பேசினாள். சாயந்திரம் நான் ஆபீஸிலிருந்து திரும்பும் வரை காத்திருக்க முடியாதபடி அவசரம் இருந்தாலொழிய பக்கத்து வீட்டுக்குப் போய் அந்த பஞ்சாபிப் பெண்ணிடம் "போன் சித்த பண்ணலாமா?" என்று கொச்சை இத்தியில் கேட்க தைரியம் வராது அவளுக்கு. நான் ஆபீஸில் என் அறையை அடைந்த சமயம் இந்தஅவசர போன் வந்தது. பரபரப்புடன் கேட்டாள்.

"ஏன்ன, நீங்கதானே, அவாளெல்லாம் வந்துட்டார்கள். இப்பத்தான் ஜி.டி. வந்ததாம், அந்த ஜெகம், கிழவி மணிராவ் எல்லாரும் தான்."

"ஒரு கடுதாசியில்லே, கிணத்தில் கல் போட்டதுபோல் இருந்துட்டு இப்படி திடீரென்று குதிக்கிறார்களே பாவம், கல்யாணம் ஒன்றும் நிச்சயமாகவில்லை போலிருக்கு, என்ன ஆச்சாம்?"

"டாக்ஸியிலிருந்து இறங்கினதும் அந்தப்பெண் அம்மாவை அழைச்சுண்டு நம்பாத்துக்குள்ளேதான் வந்தது. அவர் சாவியை வாங்கிண்டு மேலே போய் விட்டார்"

"விஷயத்தைச் சொல்லேன். பணத்தடங்கலினால் நடக்கவில்லையாமா?"

"இல்லேன்ன, ஏன் அந்த வயித்தெரிச்சலைக் கேட்கறேள்? மாமாக்காரர் மணிராவே ஜெகத்தைக் கல்யாணம் பண்ணிண்டுட்டார். என்னை வந்து நமஸ்காரம் பண்ணிட்டுச் சித்தச் சிரிக்கக்கூட சிரித்தது."

"அட பாவி!"

"ஏன் இப்படி வாழ்த்தறேள்? பெண் மஞ்சக்கயிரோடு தீர்காயுஷியாக இருக்கட்டும். அது விதி அப்படிப் போட்டிருக்கு"

"நீயும் அவள் கக்ஷிதானா?" வெறுப்போடு கேட்டேன். என்ன பேசுவதென்று தெரியவில்லை. இதயத்தை யாரோ திடீரென்று அழுத்தி ரத்த ஓட்டத்தையே நிறுத்துவதற்கு முயற்சிப்பது போலிருந்தது.

"இப்படி நடக்கும்னு எனக்கு மட்டும் தோணித்து நடந்தது ஒரு விதத்துக்கு நல்லதுதான்" என்று பெருமூச்சு விட்டுக் கொண்டே படபடப்பில்லாமல் பேசினாள். அவளுடைய புதிர்ப்பேச்சு என் மூளைக்கு எட்டவில்லை.

"என்ன என்ன சொல்றே?" என்று இரைந்து கத்தினேன்.

கமலி ஒரே மூச்சில் தொடர்ந்தாள். "இன்னிக்கு உங்களிடம் சொல்கிறேன், சொல்ல வேண்டாம்னுதான் இருந்தேன், அந்த மனுஷனுக்கு ஜெகத்தை ஒரு நல்ல பையனைப்பார்த்துக் கொடுக்க வேணுமென்ற எண்ணம் கொஞ்சம் கூட இருந்ததில்லை. பாவம், அந்தப் பெண்ணை அடித்துத் தொந்தரவு

பண்ணதெல்லாம் காரணத்துக்குத் தான், ஒரு நாள் அது என்னிடம் சொல்லி அழுதது. உங்களோடுகூட சொல்லக்கூடாது என்று கெஞ்சித்து, ராத்திரி அடிக்கடி இமிசைப் படுத்து வாராம். இழே கமலி மாமியாத்தில் படுத்துக் கொள்றேன்னு சொன்னதுக்காக ஒரு தடவை அடித்து நொறுக்கிவிட்டாராம். ஊருக்குப்போவதற்கு ஒரு வாரம் மூந்தி ஒருநாள், 'மாமி, தப்பு நடந்துடுத்து, பெரிய பாவம் பண்ணி விட்டேன் மாமி, மன்னிச்சுடுங்கோ'ன்னு தேம்பித் தேம்பி அழுதுண்டே சொல்லித்து. இதையெல்லாம் அப்பவே உங்களிடத்தில் சொல்லப் பிடிக்கவில்லே. அது என்ன பண்ணும்? முரடனிடத்தில் ......" பேச்சு நின்றது. டெலிபோனை நடுவில் யாரோ கத்தரித்து விட்டார்கள்.

ஒரே நிமிஷத்தில் பைத்தியம் பிடித்துவிட்டது போல் ஆகி விட்டது எனக்கு, பேச நா எழவில்லே, உலர்ந்துபோன உதட்டைக் கடித்துக் கொண்டேன், விழுங்கப் போன எச்சில் உள்ளே செல்லாமல் தொண்டையில் தடைபட்டது. உள்ளத்தில் எங்கேயோ தடதடவென்று ஏதோ சரிவது போன்ற உணர்ச்சி.

## (6)

மனம் நிலே கொள்ளாமல் வீடு திரும்பிய என்னை கமலி எச்சரித்தாள்; "நீங்கள் ஒண்ணும் வாயைத் திறக்க வேண்டாம்" என்று, திறப்பதற்கே அவசியமில்லாமல் போய் விட்டது. அந்த மனுஷனைப் பார்க்கவே எனக்கு வெட்கமாயிருந்தது. பார்க்கக்கூடாதென்று தீர்மானம் செய்து கொண்டேன். வெட்கப்படகடமைப்பட்டவர் "சார், இருக்காரா?" என்று கதவைத்தள்ளிக் கொண்டு புன்னகையுடன் உள்ளே நுழைந்தார். வறட்டுச் சிரிப்புடன் மாப்பிள்ளையை வரவேற்றேன்.

"மாமி எல்லாம் சொல்லியிருப்பாள். ஹிஹி"

"ம், சொன்னுள்"

"என்ன பண்ணறது, சார், இந்தக்காலத்துப் பையன்கள் புத்தியில்லாமல் பெண்ணைப் பெத்தவனை சித்திரவதை பண்றதற்கே கங்கணம் கட்டியிருக்காங்கள், அந்த உறவுப்பிள்ளையும் கடைசியில் ஏமாத்திப்பிட்டான். இவர்களுக்கு இடம் கொடுத்துண்டே போனல் எங்கேதான் முடியும்? நான் தனிக்கட்டை, எனக்கு என்ன வேண்டிக்கிடக்கு, அதுக்காக் கூடப் பிறந்தவள் கஷ்டப்பட்டால் மனசு கேட்கிறதா? யோசனை பண்ணித் தான் இந்தக் கல்யாணத்துக்கு ஒப்புக் கொண்டேன். அந்தப் பெண் கண் கலங்கக்கூடாதே என்ற ஒரே நினைவுதான். நாலு பேருக்கு நான் செய்தது பிடிக்காமல் இருக்கலாம். சிரிச்சுக் கேலியும் பண்ணுவார்கள். பண்ணட்டும், அவர்கள் ஏதாவது ஒத்தாசை செய்யக்கூடியவாளோ? உலகத்தைக் கண்டு பயந்து போய் நான்

என் சுயநலத்தையும் கௌரவத்தையும் பார்த்துண்டு நாலுபேருக்கு நல்லவனாக இருக்க ஆசைப்படறது நன்னாயிருக்குமா? நான் பெரிய காரியம் ஒண்ணும் செய்துவிடவில்லை. பெண்ணுக்கு ஒரு வழி பிறந்து அக்காவின் கவலையும் நிவிருத்தியாச்சு. இதில்தான் என் ஆத்மாவுக்குத் திருப்தி. வேறே எனக்கு என்ன வேணும், சார்...... அது கண்ணைக் கசக்காமல் இருந்தால் சரி என்று நீங்களே சொல்லல்லையா? என்ன, சார், பேசாமல் இருந்தால்......" மணிராவ் பேசிக்கொண்டே போனார். நான் என்னத்தைப் பேசுகிறது? அவர் அடைந்த திருப்தி ஆத்மாவுக்கா என்றுதான் விளங்கவில்லை. அக்காவுக்காக பெரிய தியாகம் செய்துவிட்டார் அவர் நினைக்க நினைக்க உள்ளம் வெடித்தது. உள்ளூற குமுறினேன். எதுவும் சொல்லத்தோன்றவில்லை. *


**KERALA SOAPS AND OILS LTD.**

*Regd. Office*

**WEST HILL, CALICUT–5**

| | |
|---|---|
| HYDROGENATION FACTORY DIVISION Calicut-5 | Manufacturers of Sudha Vanaspati and Vimala Refined Vegetable Oil |
| SOAP INSTITUTE DIVISION Calicut-11 | Manufacturers of Quality Soaps: Sandalwood, Rose, Willingdon, Vep, Coaltar, Washwell, Shaving, etc. |
| OIL FACTORY DIVISION Calicut-1 | Pioneers in the manufacture of Vitamin Oils: Adamin, Seagold, Stayfit and Veterinary Vitamin Oils: Univax, Trivax. |

**(A KERALA GOVERNMENT UNDERTAKINGS)**

ரிஜிஸ்டர்டு நெ.
111866.

தந்தி : ஸ்வஸ்திக்
போன் : நெ. 22

எல்லோரும் விரும்புவது

## ஸ்வஸ்திக் வேதாரண்யம்

ஸ்பெஷல்

**15 நயாபைசா பிளாஸ்டிக் பொட்டலங்கள்**

ஜி. டி. ஈரண்ணு,
ஸ்வஸ்திக் புகையிலை கேன்வாஸிங் ஏஜண்டு,
மைசூர் ஸ்டோர்ஸ்,
நெ. 20 நியூ முனிசிபல் மார்க்கெட்,
லோடி காலனி நியூ டெல்லி - 3.

சேல்ஸ் டெப்போ,
559 பூந்தமல்லி ஹைரோடு,
மதராஸ் - 3.

போன் : நெ. 34913.



*With Best Compliments*
from

## ESCORTS LIMITED
AUTOMOTIVE DIVISION
NEW DELHI-1.

WITH COMPLIMENTS FROM

SANDOZ INDIA LIMITED

NEW DELHI

# கௌரவம்

வெ. செயப்பிரகாசன்

மருத்துவர் சந்திரன் நெடுநேரமாகச் சிந்தித்துக் கொண்டிருந்தார். அவர் மனதில் இரக்கம் சற்று பிறந்தது. இருப்பினும் கௌரவம் அவரைத் தடுத்தது. அவர் நண்பர் ராமசாமி அருகில் அமர்ந்திருந்தார்.

"நான் எழுந்து அவனுக்கு இடம் கொடுத்தால் ராமசாமி என்ன நினைப்பார்!" என்று எண்ணிப் பேசாமலிருந்தார் சந்திரன்.

பாவம்! கடும் வேகத்தில் ஓடுகின்ற அந்தப் "பஸ்"ஸில் ஒருவராவது ராமனுக்கு இடம் கொடுக்கக் கூடாதா? பஸ் குலுங்கிச் சென்றப்போது கையில் வேதனை அதிகரிப்பதை அவன் முகம் காட்டியது. சற்று முன்னர்தான் அவன் மருத்துவர் சந்திரனின் மருத்துவ நிலையத்தில், வலதுகரத்தில் கட்டுப் போட்டுக் கொண்டு வந்தான். விளையாடிக் கொண்டிருந்தப் போது கீழே விழுந்து விட்டதால் வலதுகையில் பலமாக அடிப்பட்டிருந்தது ராமனுக்கு.

மருத்துவர் சந்திரன் கையை அசைக்கக்கூடாது என்றும், கையை அப்படியே ஒரே நிலையில் வைத்திருக்கவேண்டுமென்றும் அறிவுரை பகர்ந்திருந்தார்.

மருத்துவர் சந்திரனும், ராமன் ஏறிய "பஸ்"ஸிலே செல்லவேண்டியிருந்தது. அவர் தனக்குப்பின் வந்ததை அவன் அறியவில்லை.

எப்பொழுது வீடுபோய் சேருவோம்! என்று துன்புற்றான், அவன் வலியினால் ஏற்பட்ட துன்பம் அதிகரித்தது.

மருத்துவர் சந்திரன் தன் இடத்தை ராமனுக்குக் கொடுத்திருக்கலாம் அமர்வதற்கு. ஆனால் ஏதோ ஒரு போலிக் கௌரவம் அவரைத் தடுத்தது. ஏன்? அவருக்கே அது தெரியவில்லை.

நின்றுகொண்டேயிருந்ததால்ராமனின் கால்களும் வலிக்கத் தொடங்கின. அவனால் கைவலியைப் பொறுக்க முடியவில்லை,

"என்னப்பா, தம்பி! கையில் அடிபட்டிருக்கிறதா!"

பெரியவர் ஒருவரின் குரல் கேட்டுத் திரும்பிப் பார்த்தான் ராமன். ஒரு வழுக்கைத்தலை மனிதர் அவ்வளவு வயதானவரல்லர். அவர் ராமனை தன் இடத்தில் இருக்கச் சொல்லிவிட்டு தான் எழுந்து கம்பியைப் பிடித்துக் கொண்டு நின்றார். இவர் இரக்கம் உள்ளவர் போலும்!

பஸ் வேகமாக ஓடியது. குலுங்கியபடி. மருத்துவர் சந்திரனின் உள்ளம் நாணமுற்றது. யாரோ ஒருவர் அந்த ஏழைச் சிறுவனுக்கு இடம் கொடுத்து விட்டாரே! அவரைப் பார்த்தால் பெரிய செல்வர் போல் தெரிகிறதே! அவர் ஏன் கந்தலாடை அணிந்துள்ள இந்த ஏழைச் சிறுவனுக்கு இரக்கப்பட்டார். தன் கௌரவம் பாதிக்கப்படுவதை அவர் எண்ண வில்லையா! என்று நினைந்தார் அவர்.

அவர் மன விளம்பில் எண்ணக் குமிழிகளுக்கிடையே மனச்சான்று உறுத்தியது.

"என்னய்யா! மனிதனா நீ! மருத்துவனும்! மருத்துவன்! கையில் காயம் பட்டு உன்னிடம் வந்தப் பையனுக்கு அறிவுரை கூறிய நீயே இப்படி அவன் துன்புற்றதைக் கண்டு பேசாமல் இருந்தாயே என்று அவர் மனச்சான்று குத்தியது.

அவன் யார்? நான் உதவி செய்வதற்கு. என் வேலை காயத்தை ஆற்றுவதற்குத் தக்க வழிகளைச் சொல்வது தானே! பஸ்ஸில் இவனுக்கு நான் என்ன செய்ய வேண்டும். என்ற எண்ணமும் மேலிட அவர் சற்றுச் சாந்தியும் அடைந்தார் ஆயின்—

அந்த அமைதி நிலைக்கவில்லை. பூந்தோட்ட பஸ் நிலயத்தில் பஸ் நின்ற போது. ஒரு வயதானக் கிழவர் ஏறினார். அவருக்கு பஸ்ஸில் நிற்கும் பாக்கியம்தான் கிட்டியது. பஸ்ஸில் உட்கார வழியில்லை. மேலும் நெரிசலாகவே தொடங்கியது.

ராமன் வலிமையற்ற அக் கிழவரைக்கண்டான். அவன் உடல் முழுதும் வியர்வையால் நனைந்து விட்டிருந்தது. உடலில் கந்தையான வேட்டி ஓட்டிக் கொண்டிருந்தது. அவர் நின்று கொண்டிருந்த நிலையைப் பார்த்தால் "பஸ் போகிற வேகத்தில் எங்கே விழுந்து விடுவாரோ" என்ற கவலையை ஏற்படுத்தியது. அவருக்கு இரக்கப்பட்டுத் தங்கள் இடத்தைத் தியாகம் செய்வார் யாருமில்லையா?

கிழவரின் தோற்றம் சாப்பிட்டு பத்து நாட்கள் ஆகிய மனிதரின் தோற்றம் போல் இருந்தது. பஸ் குலுங்கிச் சென்றபோது அருகிலே அமர்ந்திருந்தவர்மேல் தள்ளாடி விழப்பார்த்தார் கிழவர்.

மருத்துவர் சந்திரனும் கிழவரின் இந்நிலையைப் பார்த்துக் கொண்டு தான் இருந்தார். அவர் மனத்திலும் கிழவருக்கு இடங்கொடுக்க வேண்டுமா? என்ற போராட்டம்.

மற்றப் பிரயாணிகள்......?
இரக்கமற்றவர்கள்தான் போலும் ராமனுக்கு இடம் கொடுத்த ஒருவர் எங்கோ இறங்கி விட்டிருந்தார்.

ராமன் துன்பத்துடன் எழுந்தான்.

"தாத்தா! உட்காருங்கள்" கிழவருக்கு விடுதலை! நெருக்கடியிலிருந்து! உடனே பொத்தென்று விழுந்தபடி உட்கார்ந்தார். அவர்

சிறிது நிம்மதியடைந்தார். ராமனை அன்புக்கண்களுடன் நோக்கினர். "கடவுள் உன்னைக் காப்பாத்துவாரப்பா" என்றார் அக்கிழவர். அவர் அவனது வலது கையைக் கவனிக்கவில்லை.

அந்தப் பஸ்ஸில் இருந்த அனைவரும் ராமனின் செயல் கண்டு மௌனிகளாய் இருந்தனர். சிலருக்கு உள்ளூற நாணமாயும் இருந்தது.

சந்திரனின் உள்ளம் வெட்கியது. நெஞ்சம் மனச்சான்றால் அரிக்கப்பட்டது.

சீ நானும் நல்லவனு! ஒரு மருத்துவனு! என்று அலறியது அவர் மனம்.

பிறருக்கு— அதுவும்— நான் நல்லுரை பகர்ந்த நோயாளி, இடர்ப்படும் போது உதவி செய்யாத நானும் ஒரு மனிதனு! அந்தச் சிறுவனுக்கு இருக்கும் இரக்க நெஞ்சம் என்னிடமில்லையே! என்று அவர் உள்ளம் ஓங்காரக் கூச்சலிட்டது!

நின்று கொண்டிருந்த ராமனை உட்காரச் சொல்வதற்கு. தன் இடத்தைக் கொடுக்க எழுந்தார் அவர்.

ஆனல்!—மற்ருருவர் ராமனைத் தன்னிடத்தில் அமரச்சொல்லி எழுந்து விட்டார் முந்திக்கொண்டு. ஆனல் பஸ் எல்லோருக்கும் முந்தி விட்டது.

கடைசிப் பஸ் நிலையம்!

வள்ளுவர் முனை வந்துவிட்டது. ராமன் மற்றப் பிரயாணிகளுடன் இறங்கினன்.

மருத்துவர் சந்திரன் பஸ்ஸிலிருந்த படிகளில் கால் வைத்து இறங்கினர் மிகவும் மெதுவாக.

அவர் மனதில் போலிக்கௌரவம் மறைந்து விட்டது. இருப்பினும் வாழ்க்கைப் பண்பிலிருந்து இரண்டு படிகள் இறங்கி விட்டதைப் போல் உணர்ந்தார் அவர்.


**VISITING DELHI ?**

★

*THEN*
*REMEMBER US FOR*

Excellent Boarding and Lodging in
SOUTH INDIAN STYLE

The South Indian
Boarding House

*AND FOR*

**Clean, Wholesome, Delicious
North and South Indian Dishes**

★

Modern Coffee House

(Opp. TELEPHONE EXCHANGE)
**Connaught Circus, New Delhi.**
Phone No. 48188 Grams: "SIBHOUSE"


எனக்குக் குயிலின் பாடலும்,
மயிலின் ஆடலும்,
வண்டின் யாழும்,
அருவியின் முழவும் இனிக்கும்
பாரதிதாசன் பாட்டும் இனிக்கும்.
—திரு. வி. க.

## நவராத்திரி - தீபாவளி,

## நன்னாளைக் கொண்டாட

**உயர்ந்த ரகங்களில் நியாயமான விலையில் பட்டுச் சேலைகள்,
பாவாடைகள், சோளி பீஸ்கள் மற்றும் ஆர்ட் க்ரேப்
கைத்தறி நூல் ஜவுளிகளும் கிடைக்கும்.**

★

## காஞ்சீபுரம் ஸில்க் ஹவுஸ்

பட்டு, ஜவுளி வியாபாரம்

**5/28-29, W. E. A. KAROLBAGH—NEW DELHI-5.**

PHONE: 53981



★ தில்லித் தமிழ்ச் சங்கத்திற்கு ★

# நல்வாழ்த்துக்கள்

★

## நியூ மதராஸ் ஹோட்டல்

*190, சரோஜினி மார்க்கட்*

*புது தில்லி-3.*

THE HOUSE OF REPUTE THAT SERVED YOU
FOR OVER 35 YEARS OFFERS YOU THE
FOLLOWING PRESTIGE PRODUCTS

MURPHY Radio
KAMCOS 16mm Projectors & Water Heaters
KHIRA Steel & Wooden Furniture
EVEREST Sewing Machines
DUNLOPILLOW Cushions & Mattresses
Electrical Appliances
Mecom Intercom sets

AHUJA Amplifiers
FOLDELUXE Steel Folding Furniture
RALLIS Fans
PRESTIGE Pressure Cookers
HIMALUX Refrigerators
Gramophones and Records
Radio Parts

**MAHOMED EBRAHIM & Co. Pvt. Ltd.**

7/8, Mount Road, MADRAS-2.
113-H, Brigade Road, BANGALORE.
Abid Road, HYDERABAD.

Air Mail Edition of
HINDU and SWADESAMITRAN
now available in Delhi
on the evening of the publication
HOME DELIVERY ARRANGED

*Local Agents*

**CENTRAL NEWS AGENCY**

*Head Office* :
23/90, CONNAUGHT CIRCUS,
NEW DELHI - 1.
Phone : 44762
46312

*Branch Office* :
15A/55, W. E. A., Karolbagh,
NEW DELHI 5.
Phone : 57340

## The Somasundaram Mills (P) Ltd.,

POST BOX NO. 134
COIMBATORE.

Grams : "Somsundram" Phone : 4041, 4042 & 4043

★

*Branch Unit at :*

Spindles 30, 124

SOMANATHAPURAM
MUTHANENDAL
RAMANAD DISTRICT

Looms 382

★

*Manufacturers of :*

QUALITY YARN AND DURABLE CLOTH

*Managing Director :*

**P. S. S. SOMASUNDARAM CHETTIAR.**

## The Sree Meenakshi Mills, Ltd.,

Madurai, Manaparai and Paravai.

*Manufacturers of :*

SINGLE YARN IN COUNTS 16S TO 80S AND CONE YARNS FOR WEAVING AND HOSIERY FACTORIES AND MULLS, LONGCLOTH, GADA, etc.

CAPITAL

Authorised — — — — Rs. 60,00,000
Subscribed & Paid-up — — — Rs. 48,81,240

SPINDLES :

| | |
|---|---|
| Madurai | 40,084 |
| Manaparai | 30,140 |
| Paravai | 37,900 |
| Power Looms at Madurai | 144 |

Managing Agents :

THIAGARAJA CHETTY & Co.,

Tirupparankundram Road, Madurai.
South India.

Phone No. 3211 (5 Lines) Post Box No. 1 Telegrams : KARUMUTTU

# கற்பனை ஒரு ரஸனை

ஏ. ஆர். ராஜாமணி

என் நண்பர் ரஸாயன நிபுணர் ஒருவர், ஆராய்ச்சியிலேயே உயிரை வைத்திருப்பவர், அவர் மனைவியை யும் மறந்திருப்பவர், மனைவியின் வாழ்க்கையில் ஸந்தோஷம் அனுபவிக்க இடம் கொடுக்காதவர், தில்லியிலே வாழ்கின்றார். ஒருநாள் அவர் மனைவி கண்ணீர் விட்டழுதாள். "என் அழுகையும் வருத்தமும் உம் நெஞ்சைத் தொடவில்லையா? என் கண்ணீரைப் பாருங்கள்—என் மனோவேதனையைக் கற்பனை செய்து கொள்ளுங்கள்'' என்று சொல்லடி கொடுத்தாள். நிபுணரோ, நிதானமாக "கற்பனை செய்து காலத்தை வீணுக்குவானேன்? கண்ணீர் உப்பும், நீரும், கரியமிலவாயுவும் 1, 2, 3, பங்கு வீதம் சேர்க்கைப் பெற்றது தானே?'' என்று நெஞ்சில் ஈரம் படாமலே பதிலளித்தார்.

கற்பனையை எல்லாருமே ஆவலுடன் வரவேற்பதில்லை. நம்முடைய ரஸாயன நண்பரைப் போன்ற, கற்பனைக்கே மதிப்பு வைக்காத கடும் பிரத்யக்ஷவாதிகளும் இந்த உலகத்தில் தென்படத்தான் செய்கிறார்கள் என்பதைச் சுட்டிக் காட்டவே இதை எழுத நேர்ந்தது!

பழங்காலக் கவிகள், கற்பனையைத் தேடிக்கொண்டு சோலைக்கும் குளக்கரைக்கும், காட்டுக்கும், மேட்டுக்கும் ஓடினார்கள். இந்த காலக்கவிகளோ, கற்பனையைக் காணும் நோக்கத்துடன் மேல்மாடியில் உலாவுவதும், ('சிலேடை' புரிகிறதா?) புகைப்போக்கியை உற்றுப் பார்ப்பதும், சினிமா விளம்பரப் படங்களை ஆராய்வதும், மோட்டார்கார் நெம்பர்களைக் குறித்துக் கொள்வதுமாய் கற்பனை வேட்டை ஆடுகிறார்கள். ஆனால், கணித சாஸ்திரிகள் மட்டும் கற்பனை யென்றால் கசப்பாகவே கருதினார்கள். 133 என்கிற எண்,"134'' ஆகியிருந்தால்...! என்றெல்லாம் அவர்கள் கற்பனை செய்து பார்ப்பதில்லே! 133 '133' தான் என்பதே அவர்களுடைய 'சித்தாந்தம்'. கற்பனை என்றால் பயப்படுகிறவர்கள் பலர் பரவசமடைகிறவர்களும் பலர்! பிரச்சார இயல்புள்ளவர்களுக்கு கற்பனைத் திறன் உறுதுணை! ஆனால், அந்தப் பிரச்சாரத்திற்கு இலக்காகயிருப்பவர்களுக்கோ, கற்பனையை நினைத்தாலே அடிவயிற்றைப் பிசையும்! சில

நாட்களுக்கு முன்பு, என் இனிய நண்பரொருவர், எனக்குத் தன் கவிதை ஒன்றை அனுப்பி வைத்திருந்தார். அவர் தன்னை மறுமலர்ச்சி எழுத்தாளர் என்று வெளிச்சம் போட்டுக் காட்டிக் கொள்வதற்குக் கூசாதவர். அவருடைய கற்பனையைப் பற்றி அவரே ஒரு குறிப்பு எழுதி இணைத்திருந்தார்! "என் கற்பனையின் தன்மையை, தரத்தை உள்ளது உள்ளபடியே எடுத்துச் சொல்ல நம்முடையப் பாஷையில் வார்த்தைகள் கிடையாது; படித்தால்தான் அதன் அருமை தெரியும்!" என அந்தக் கடிதம் முடிக்கப்பட்டிருந்தது. அந்தக் கவிதையோ, எதுகை மோனையிலிருந்து தப்பித்துக் கொள்ள வழி செய்து கொடுக்கும். 'ப்ளாங்க்வெர்ஸ்' என்ற வகையைச் சேர்ந்தது, எதுகையும்—மோனையும் கற்பனையைக் கடிவாளம் கட்டி இழுக்கின்றன. அந்தக் கடிவாளங்கள் கூடவே கூடாது. அவை கவிஞனின் கற்பனை வீச்சையும், தீர்க்க தரிசன ஆற்றலையும் குறைத்து, கவிதையின் ஜீவனைச் சாரமற்றதாகச் செய்து விடுகின்றன என்பது இந்த நவீன கவிஞர் குழாமினரது கூற்று! இனி நண்பர் அனுப்பியிருந்த கவிதையைப் பார்ப்போம்:

> "இதயக் கனலில் சிந்தனை விறகை இட்டேன், அதுவோ 'குப்'பென்று தாவி எண்ணப் பொறிகள் துள்ளியே வீச மின்னலோ என்று நான் கண்ணவிந்து நிற்க..."

இப்படிப்போகிறது அவருடைய மொட்டைக் கவிதை; அதாவது 'ப்ளாங்க்வெர்ஸ்.' மறுமலர்ச்சியென்ற பேரால் இப்படி ஆனை வெருட்டும் கற்பனைகள் உதயமாவதாகயிருந்தால், அந்த மறுமலர்ச்சியே வேண்டாம் என்று எவ்வளவோ பேர் கதறுகிறார்கள்! எப்பொழுதோ,

> எழுத்துக்கு எழுத்து மோனை,
> வார்த்தைக்கு வார்த்தை
> கற்பனை !

என்று யாரோ ஒரு கற்றுக் குட்டி வாய் தவறிச் சொல்லி விட்டார். உடனே அந்த பலனை நவீன வெளியீடுகளில் பிரத்யக்ஷமாகக் காணுகிறோம்.

> "தபால்காரனின் 'தந்தி' என்ற கோரக்குரல், என் செவிகளில் சாவு மணி அடித்ததும், என் இதயச் சுழலில் ஒரு புயல் வேகம் ஏற்பட்டு, என் உள்ளம் அண்டத்தைத் தாண்டிப் போவதுபோல், பயங்கரப் பிரமையொன்று என்னை செயலிழக்கச் செய்துவிட்டது."

எப்படிக் கற்பனை! "தபால்காரன் 'தந்தி' என்றதும் எனக்குத் தூக்கி வாரிப் போட்டது!" என்று தெளிவாக, சுருக்கமாகச் சொல்லிவிட்டுப் போகாமல், இப்படி நக்ஷத்திர மண்டலத்திற்கு யாத்திரை கிளம்பினுல், ஏன் நமக்கு கற்பனு சக்தியின் மேல் ஆத்திரம் உண்டாகாது ? !

கவிஞரும், கதைஞரும் தான் இப்

படிக் கற்பனைப் பேய் பிடித்து ஆடுகிறார்கள் என்று கணக்குப் போட்டு விட வேண்டாம். வேறு ஒரு இடத்திலும் இந்தக் 'கற்பனை மாரீசனின்' திருவிளையாடல், மனித குலத்தைத் திக்கு முக்காடச் செய்து விடுகிறது!

மேல் நாட்டில் ஒரு பத்திரிகையாளர், அவர் அப்பழுக்கற்ற நாத்திகவாதி! ஆனால், அப்படிப்பட்டவருங் கூட, தன் வாழ்நாளில் ஒரேயொரு முறை பிரார்த்தனை செய்தாராம்! என்ன பிரார்த்தனை தெரியுமா? "கவிஞர்களிடமாவது கற்பனை இருந்துவிட்டுப் போகட்டும்; ஆனால், மறந்தும் இந்த பெண்களுக்கு மட்டும் அந்த சக்தியைக் கொடுத்து விடாதே!" என்றாராம்! அலுவலகத்திற்குச் சென்றிருக்கும் கணவன், மாலையில் நேரங்கழித்து 'வீட்டுக்கு வருகிறான் என்று வைத்துக் கொள்ளுங்கள்; மனைவியின் மூளை என்ன வேகத்தில் வேலை செய்யும் தெரியுமா? 'கணவன் எங்கு போயிருப்பான்?' என்று மனம் கேள்வி கேட்கும். அந்தக் கேள்விக்கு கற்பனை ஆயிரம் காட்சிகளை மனக் கண்முன் கொண்டு நிறுத்தும். ஒவ்வொரு காட்சியிலும் ஒரு பெண். இவ்வாறு கற்பனையும், சந்தேகமும் கூடி, மனைவியை பூரண ஆயுத பாணியாக்கி, ஓயாத உழைப்பினால் அலுத்துச் சலித்து வீடு திரும்பும் கணவனுடன் மல் யுத்தம் ஆயத்தமாக்கி வைக்கும்!

கற்பனையும்-சந்தேகமும் ஆப்த நண்பர்கள், ஒருவரையொருவர் எக்காலத்திலும், எதற்காகவும் விட்டுக் கொடுக்கவே மாட்டார்கள் என்பது அனுபவம்! இருட்டின பிறகும் எழுத்து வேலை செய்துவிட்டு, சிவந்த கண்களுடன் உடல் சோர, வீடு வந்து சேரும் கணவனை 'சினிமாவுக்குத்தானே போனாய்?' என்று மனைவியின் கற்பனை குற்றம் சாட்டுகிறது! அது மட்டுமா? 'உனக்குப் பிடித்த வேறு யாரோ ஒரு பெண்ணுடன் ஸல்லாபமாகப் பேசிவிட்டு வருகிறாய்' என்றும் ஒரு Napalm bomb திக்குண்டைத் தூக்கி போடவும் மனைவியின் கற்பனை அஞ்சுவதில்லை!

சில வேளைகளில் இந்த கற்பனை சக்தி மிதமிஞ்சி இயங்குவது, மனித இனத்திற்கேத் தீராதத் தீமையையும் விளைவித்து விடுகிறது. ஒரு உதாரணம் பார்ப்போம்; குதிரைப் பந்தயத்தில் பணம் கட்டிவிட்டு, தான் பணம் கட்டின குதிரைதான் பந்தயத்தில் நாலுகால் பாய்ச்சலில் வந்து கொண்டிருப்பதாகக் கற்பனை செய்கிறான். அந்த மயக்கத்தில் லயித்துப்போன அவன் மனக் கண்முன் ஒரு கத்தை கரன்ஸி நோட்டுக்களும், அதன் பின் பங்களாவும், காரும், இன்ன பிற நவீன சுக சாதனங்களும் ஒன்றன் பின் ஒன்றாகக் காட்சி அளிக்கின்றன. ஆனால் உண்மையில், அந்தக் கற்பனைக் குதிரை, வழியில் கால் தடுக்கி விழுந்து விடுகிறது! பிறகு என்ன! அதிர்ச்சி தாங்கா

மல் அந்தக் கட்டத்தில் மனிதக் கும்பலுக்கு மாரடைத்துப் போவதும் உண்டு! இவ்வாறு "அசுவமேத யாகத்திலும், களத்திலும், பலியான ஆட்கள் எத்தனை யெத்தனையோ! அதற்காக எதற்கய்யா மனிதனுக்கு கற்பனு சக்தி என்று கேட்டுவிடலாமா என்ன?

கற்பனு சக்தியின் முழு வீச்சை, துரித கதியைக் காண வேண்டுமானுல், பிணியினுல் கஷ்டப்படும் மனிதர்களைப் போய்ப் பாருங்கள். அவர்களுடைய கற்பனைத் திறன், அவர்களுடைய [நோயின்] வேதனையை அதிகமாக்கும் அற்புதத்தைக் கண்ணுரக் காணலாம்! டாக்டர் எழுதிக் கொடுத்திருந்த மருந்துக் குறிப்புகளுடன் தன் பணியாளைக் கடை வீதிக்கு அனுப்புகிறுர், வியாதியால் அவஸ்தைப்படும் முதலாளி. அந்த ஆள், வீட்டு வாசற்படி கூடத் தாண்டியிருக்கமாட்டான். அதற்குள், அவருடைய வேதனை விபரீதக் கற்பனைகளை உண்டாக்கி விடுகிறது." "அவன் அவசரமாகப் போகிருனே; வழியில் அவன்மேல் கார் சக்கரம் ஏறிவிட்டால்...... ஐயோ! உடனே அவனை ஆஸ்பத்திரிக்கு எடுத்துச் சொல்வார்கள். அவனிடம் விலாஸம் கேட்டு எனக்கு டெலிபோன் செய்வார்கள்!" இப்படியெல்லாம் வீட்டு எஜமானனின் கற்பனை வாயுவேக மனேவேகமாக ஓடுகிறது. இந்தக் கற்பனை மயக்கத்தில், அவர் மருந்து சீசாவுடன் பணியாளை எதிர்ப்பார்ப்பதற்குப்பதிலாக அவன் அடிபட்டு ஆஸ்பத்திரியில் கிடப்பதாக வரும் டெலிபோன் செய்தியை எதிர்ப்பார்க்க ஆரம்பித்துவிடுகிருர்! எப்படியிருக்கிறது விநோதக் கற்பனையின் விபரீதக் கூத்து! "இதெல்லாம் கற்பனையல்ல. மனிதனின் மனப்போக்கு" என்று உங்களில் யாராவது கற்பனைக்கு பரிந்து கொண்டு தாக்குப் பிடிக்க முயற்சிக்கக்கூடும்! அவர்களுக்கு ஒரு சொல்! அந்த மனப் போக்கிற்குத் தான் கற்பனை என்று பெயரய்யா! மனமானது, இறக்கைக் கட்டிக் கொண்டு ஆகாயத்தில் சஞ்சரித்தால் அதுவே கற்பனை யெனப்படும்! அவ்வாறின்றி பூமியில் தடி ஊன்றி நடந்தால் அது மனப்போக்காம். எண்ணக் குழப்பமாம், சிந்தனைச் சுழலாம்! இப்படி ஏதாவது 'வசன கவிதை' பாணியில் வார்த்தைகளைக் கோர்த்துவிடுகிருர்கள் சிந்தனைச் சித்தர்கள்! இந்தக் கற்பனையினுல் இதுவரை விளைந்துள்ள விபரீதங்களை, எவ்வளவு வேண்டுமானுலும் கணக்கிட்டுக் கொண்டு போகலாம். கற்பனை பொங்கித் ததும்பும் உள்ளங்கள் மட்டுமல்ல. அந்த கற்பனு சக்தியைப் பெற அதிர்ஷ்டம் செய்யாத உள்ளங்களும் தவியாய்த் தவிக்கின்றன என்பதே கற்பனைக்குள்ள தனி மதிப்பு!

சிலருக்குக் கட்டுரை எழுத வேண்டும் என்று பேராசை. ஆனுல், எழுதவோ— 'ப்ளாட்' கிடைப்பதில்லை! எழுத்து நடையோ

தள்ளாட்டம் தான்! என்ன செய்வது? பணம் கொடுத்துப் பல்வேறு கட்டுரைப் புத்தகங்களை வாங்கி அவைகளில் உள்ள கருத்துக்களையும் இரவல் வாங்கி, வான் - கோழியும் கான மயில்போல் சிறகை விரித்தாடின கதையாக எப்படியோ ஒரு கட்டுரையை எழுதி விடுகிறார்கள்! வெட்கக் கேடு! இவர்களுக்கெல்லாம் கற்பனை இல்லாத குறையினால், பிறர் கருத்து விந்தில் சுய சிருஷ்டியைப் பதியம் போடத் துணிந்து விடுகிறார்கள். பாவம், கற்பனை இருந்தாலும் ஆபத்து; இல்லாவிட்டாலும் ஆபத்து!

இந்தக் கற்பனை இலக்கியத் துறையில் மட்டுமல்ல; மற்ற துறைகளிலும் புகுந்து மனிதனை வாட்டி வருத்துகிறது. வர்த்தகத் துறையில் வியாபார இலாக்காவைவிட விளம்பர இலாக்காவிற்குத்தான் மௌஸ் அதிகம். விளம்பர இலாக்காவில் உத்தியோகம் கிடைக்க வேண்டுமானால், அதற்குக் கற்பனை சக்தியின் ஊட்டம் மிக மிக முக்கியம்! "ஒரு துட்டுக்கு மிளகு; இரண்டு தம்பிடிக்கு சுக்கு" என்றெல்லாம் சரக்கைக் கண்ணால் பார்த்து, வாங்கின காலமெல்லாம் போய்விட்டது. கடுகு வாங்கப் போனாலும், அங்கு அதற்காகவேப் ப்ரத்யேகமான ஒரு விளம்பரம், "கடுகு சிறுத்தாலும் காரம் போகுமோ?" என்ற பழமொழியுடன் நம் கண்ணை உறுத்தும்!

விளம்பரத்தில் ஒரு சித்திரம்; சித்திரத்தில் ஒரு கடுகு. அந்தச் சிறிய—சித்திரக் கடுகைச் சுற்றிலும் ஜ்வாலை போல் ஒன்று சிவப்பு வர்ணத்தில் தீட்டப் பெற்றிருக்கிறது. அந்த ஜ்வாலைதான் கடுகின் காரத்தையும், தரத்தையும் உணர்த்தும் உருவகமாம்! எனவே, இப்பொழுதெல்லாம் 'வியாபாரம் என்றால் விளம்பரம்!' என்றாகிவிட்டது. வெளிப்படை! விளம்பரம் என்றால் அப்பட்டமானக் கற்பனை தானே! ஆகவே, கற்பனை சஞ்சரிக்காத இடமே இந்நிலவுலகில் இல்லை என்றாகிவிட்டது.

கணித சாஸ்திரிகளின் மண்டலத்தைத் தவிர, எங்கும் நீக்கமற நிறைந்திருக்கும் சர்வ வியாபிதான் அது! இந்தக் கற்பனை சக்தியை நாம் கவிஞர்களின் ஆவேசத்துடிப்பில் காண்கிறோம்; மனோதர்பத்தின் எழுச்சிக்காகத் துடி துடித்து, காலையும், கையையும் ஆட்டி, ஆட்டி அவஸ்தைப்படும் ஸங்கீத வித்வான்களிடமும், பார்க்கிறோம்! வார்த்தைகளின் டாம்பீகத்தில்; இரைச்சலில் மதிமயங்கி நிற்கும் பயங்கர இயக்கத்தைச் சார்ந்த 'முற்போக்கு' எழுத்தாளர்களிடமும் சந்திக்கிறோம். அர்த்தமில்லாத உபமான—உபமேயங்களை ஒழுங்கற்ற முறையில் ஒன்று கூட்டி 'மெய்ப்பாடு' 'பொய்ப்பாடு,' 'பண்பு,' 'பறம்பு,' 'புயல்,' 'சுழல்,' என்றெல்லாம் வெறும் சவ வார்த்தைகளை வைத்துக் கொண்டு, இராவணன் கோட்டை கட்ட முயற்சிக்கும் மறு

மலர்ச்சி எழுத்தாளர்களைக் கண்டு, இன்றைக்குப் பகுத்தறிவும் சிந்தனைத் திறனும் உள்ள வாசகர் உலகம் முழுவதுமே நடு நடுங்குகிறது என்றால் அது வெறும் ஆதாரமற்றப் பழிச் சொல் அல்ல!

"...ஏதோ எழுதுகிறார்;
ஏடென்று சொல்லுகிறார்;
கோது கழித்துக்
குணங் காணப் போகையிலே,
பேரடித்த அட்டையிரண்டு
அல்லால் பிறிதொன்றும்
சீரெடுத்த தென்றுரைக்கத்
தேறவில்லை......!"

என்பது, இன்றைய உண்மைக் கவிஞர்களில் ஒருவரான திரு. சாலை இளந்திரையன் அவர்களின் வேதனை நிறைந்த மனக்குமுறல்!

எவ்வளவு மோசமான நிலையை நோக்கி தற்காலக் கற்பனுவாதிகள் கீழிறங்கிவிட்டிருக்கிறார்கள் என்பதைக் கவிஞரின் கடுஞ்சீற்றம் உணர்த்துகிறது என்பதை ஏற்காமலிருக்க முடியவில்லை!

இனிமேல், இந்தப் பயங்கர-எழுத்தாளர் - இயக்கத்தைச் சாடநாமும் திரு. சாலை இளந்திரையன் அவர்களைப் போல் உள்ளொளி மிகுந்த, கவிதையாற்றலை கைவரப் பெற்றாக வேண்டியது அவசியந்தான்; ஆயினும், கேவலம் வாசகக் கும்பலாகிய நமக்கெங்கே அவ்வளவு சமூகப் பற்றும், மனவளமும், கவிதை நலமும் ஏற்படப் போகிறது? எனவே, நாம் எல்லோருக்கும் பொது உடைமையாகிவிட்ட சத்யாக்ரக முறையைத்தான் இந்த விஷயத்தில் நாடவேண்டியவர்களாகயிருக்கிறோம்! உள்ளக் கடலில் உணர்ச்சிக் கொப்பளிப்பதையும் வேதனைப் புயலில் சோதனைச் சுழல் குறுக்கிடுவதையும் சிந்தனைக் கதிர்களை வாழ்வின் துன்பக் கனல் எரிப்பதையும் படிக்காமல் சத்யாக்ரகம் செய்ய வாசகர்கள் கற்றுக் கொண்டுவிட்டால், மீண்டும் ஒரு முறை திரு. சாலையைப் போன்ற கவிஞர்களின் இதயக் கனலின் வெம்மையிலிருந்து தப்பித்துக் கொள்ளும் சூழ்நிலையை நமக்கும், அடுத்து வரும் தலைமுறையினருக்கும் உருவாக்கிக் கொண்ட தலையாயத் தொண்டைச் செய்தவர்களாவோம்!

புதுமைக் கலையை ஆதரிப்பதாகக் கூறிக்கொண்டு, விண்மனப் பிரமையில் தன்னையும் இவன் ஆதரிக்கும் அந்த பயங்கர - மறுமலர்ச்சி எழுத்தாளனையும் 'காலப்போக்கின் நியாய உணர்ச்சி' எனும் சிலுவையில் அறையப்படுவதைத் தொடர்ந்து அனுமதிப்பதற்கு இல்லை என்பதினாலேயே இவ்வளவும் எழுதினேன். சித்தத் தெளிவற்றப் பைத்தியங்கள். சாதாரண அசல் - பைத்தியங்களாகவே இருந்து விட்டுப் போகட்டும்; இழுக்கொன்றுமில்லை! ஆனால், அவைகள் தம்மை இலக்கியப் புரட்சியாளர்கள் என்று 'வீர விருது' சூட்டிக்கொள்வதை மட்டும் எந்தக் காரணத்தைக் கொண்டும் அங்கிகரிப்பதற்கில்லை! அடாடாவோ! யானையைப் பூனையாக்கி,

பூனையைத் தேனீயாக்கி, சந்திரனைச் சந்தியில் இழுத்து, சமுத்திரத்தை சம்சாரத்தில் பாயச்செய்து மொட்டைத் தலைக்கும்—முழங்காலுக்குமாக, தமது படைப்புக்களை முடித்து வைக்கும் இந்தச் சிந்தனைச் செல்வர்களின் பொருத்தமும், தரமும்—பயனுமற்றக் கற்பனைக் கூத்துக்களை எழுதிமாளாது!

இந்தக் கற்பனை வாடையே படாத இடமொன்றும் இருப்பதாகத் தெரிகிறது. அதுதான், "முற்றும் துறந்த ஞானிகளின்" ஆத்ம உலகமாம்!" அதில், 'மனத்தை அடக்கு' என்று மனம் அடங்கும் சட்டமொன்றை, மரணகால பரியந்தம் அமுலுக்குக் கொண்டுவரப் பார்க்கிறார் ஒரு ஞானி. "சும்மாயிருந்தால் சுகம் வருமே!" என்று ஆசிரியப்பா பாடுகிறார், ஒரு யோகி! 'மனத்தை அலையவிடாதே' என்று எச்சரிக்கை செய்கிறார், போகியாம் இருந்து யோகியான மற்றொரு போகி!. "கற்பனையைக் கொல்; உன் வினையைக்கொன்றவனாவாய்!" என்று சந்தவிருத்தம் பாடுகிறார் ஒரு சித்தர்! இவர்களின் சித்தாந்தங்களைப் பார்க்கும்போது, ஆத்மஉலகத்திற்கு மட்டுமே உரிய இந்தக் கோட்பாடுகளை நம்முடைய அனுதாபத்திற்குரிய 'சோதனை' எழுத்தாளர்களும் கடைப்பிடித்து ஏன் உய்வடையக் கூடாது என்று தோன்றுகிறதல்லவா! ஆத்ம உலகத்தைச் சார்ந்த அடியாளர்களில் ஒரு பிரிவினர் கற்பனையின் பேரில் படையெடுப்புத் தொடுத்தனர் என்றாலும் அவர்களிலேயே மற்றொரு சாரார் சற்று மிதவாதிகளாகயிருந்ததையும் மறுப்பதற்கில்லை. 'மனத்தில நல்லெண்ணம் வேண்டும்; நல்ல கற்பனை வேண்டும்!'' என்று தயங்கித் தயங்கிச் சொன்னவர்கள் 'மிதவாத' ஆத்மஞானிகள் தாம்! மற்றவர்களுக்கோ கற்பனைச் சபலமே கிஞ்சித்தும் கிடையாது! மனத்தை அடக்கு; சும்மாயிரு! என்பது போன்றவைகளே அவர்களின் தீவிர உபதேச சாரமாகயிருந்தன! ஆனால் அதையும் இப்படி நறுக்குத் தெறித்தாற்போல்' ஒரே வார்த்தையில் சொல்லிவிட்டிருக்கிறார்கள் என்று நினைக்கிறீர்களா? அதுதான் இல்லை! ஒவ்வொருவரும்குறைந்தது நானூறு பாட்டுக்களில் உபமான உபமேயங்களுடனும், எதுகை, மோனை, பிருதுகளுடனும் தான் அவர்களும் நீள நெடுக நீட்டி முழக்கினார்கள். ஆயினும் கற்பனை வேண்டாம் என்று கற்பனை ததும்பச் சொல்லிப் போன அவர்களுடையக் கற்பனை நயத்திலும், திறனிலும் அடிப்படை லட்சியமொன்று "மக்களின் மனத்தூய்மை பற்றிய அக்கறையென்ற" நல்ல நோக்கம் - ஆதார சுருதியாக அமைந்திருந்தது! அதனால்தான், அந்த ஆத்ம உலகத்து அருளாளர்களின் அறநெறிச் சாரங்கள், பல நூறாயிரத்தாண்டுகளை தொடர்ந்து இன்றளவும் வாழ்வாங்கு வாழ்ந்து நம்மை, இந்த நானிலத்தை, நல்வழிப்படுத்தி வருகின்றன!

காவியம் பாடிய கம்பன்
வாழ்க்கை ஓவியம் தீட்டிய வள்ளுவர்
அறம் உரைத்த ஔவை
அன்பின் திறம் பரப்பிய இராமலிங்கம்...

ஆகிய இவர்கள் இன்றும், என்றும் இருப்பவர்கள் என்பதின் தத்துவமும் இதுதான்! அலைபாடும் மாமல்லபுரத்தில் கலைபாடும் சிற்பக் கோவில்களை உருவாக்கியப் பல்லவ பேரரசர்களின் புகழை மலையாக்கியதும் அவர்களது கற்பனை சக்தியின் வீர்யமும், அதைப் பயன்படுத்திய விதரணையுந்தான் அல்லவா? இவ்வாறு, உலகில் ஒளி செய்ய ஈசன் மனிதகுலத்திற்கு மட்டும் அளித்துள்ள நிகரற்றக் செல்வமாக இந்தக் கற்பனை சக்தியைப் பயன்படுத்தியவர்களின் பேராண்மை மிக்கச் சாதனைகளை ஒரு புறமும், மற்றொரு புறம் மானுடப் புழுக்களின் அழுகியச் சிந்தனைக் காற்றுப் பட்டு உருவாகும் நச்சுப் படைப்புகளையும், நபுஞ்சகச் சிருஷ்டிகளையும் பார்க்கும்போது........

ஐய நின் மகிமை யெல்லாம்
ஆருரை செய்ய வல்லார்
ஐய நின் மாயமெல்லாம்
யாவரே அறியவல்லார்!

என கற்பனைக் கலையின் திட்டவட்டமான இயல்புகளை அறிய முடியாமல் திகைத்து நிற்பதைத் தவிர நமக்கு வேறெதுவும் செய்யத் தோன்றுவதில்லை! *





**NEW Janta 302 Tricolor— the flashlight with flashy heads!**

This new model has all the plus features—a sturdy barrel—dependable switch—and an optically perfect beam—which have made JANTA the household name. The soothing colours—red, yellow and white enhance its streamlined look.

**Remember there is a JANTA 302 to suit your taste and purse.**

**GEEP FLASHLIGHT INDUSTRIES LTD., ALLAHABAD-1**

WITH BEST COMPLIMENTS

FROM

TATA INDUSTRIES PIRVATE LIMITED.

தில்லித் தமிழ்ச்சங்கத்திற்கு

எங்கள் வாழ்த்துக்கள்

★

"சுதேசமித்திரன்"

மவுண்ட்ரோடு சென்னை—2

★

இன்று சுதேசமித்திரன் வாசித்தீர்களா ?

# பத்து ரூபாய்

லட்சுமி ரமணன்

சிறிய தொகையாக இருந்திருந்தால் ஒரு வேளை தெரிந்திருக்காதோ என்னவோ பத்து ரூபாய், அதுவும் அந்தப் பத்து ரூபாய்!

மாதக் கடைசி வேறு.

யார் எடுத்திருப்பார்கள்?

மனைவி காமுவைக் கேட்கத் துணிவில்லை. கேட்பேனானால், அவள் எடுக்கவில்லை என்றால் புயலாகச் சீறுவாள். அதனால் விளையப் போகும் பலாபலன்களை நான் எதிர்த்து நிற்கத் தயாராக இருக்க வேண்டும்! அவள் என் உத்தரவின்றி பர்ஸையோ பணத்தையோ ஒருநாளும் தொட்டவளல்ல. அதையும் சொல்ல வேண்டுமல்லவா?

பின்... எங்கே போய்விடும்?

அடுத்தபடியாக மகன் சோமுவின் மீது தான் என் சந்தேகம் விழுந்தது. என் மனைவிக்கும் எனக்கும் தெரியாமல் சொற்பமான சில்லறைகளை 'பாக்கெட்' செய்து விடும் பழக்கம் அவனிடம் உண்டு, என்பதை இரண்டு மூன்று முறை உணரநேர்ந்தது. அவனைப் பல முறைகளில் கண்டித்துப் பார்த்தாகி விட்டது.

மேலும் பள்ளியிலிருந்து மாலை திரும்பியவன் என்னைப் பார்த்தும் காபிகூட சாப்பிடாமல் நழுவ முற்பட்டதிலிருந்து என் சந்தேகம் வலுத்தது.

விடுவேனா, பிடித்துக் கொண்டேன்! "என்னடா நழுவறே. காபி சாப்பிட்டு விட்டுவா. உன்னோடே கொஞ்சம் பேசணும்." வாசலில் நின்று கொண்டு நான் நந்தி போல் மறைப்பேன் என்று அவன் எதிர் பார்க்கவில்லையா? அவன் முகம் வெளிறிக் களை இழந்தது. "இல்லேப்பா எனக்கு காபி வேண்டாம் நேரமாயிடுத்து கிரிக்கெட் மாட்ச் விளையாடப் போகணும்" அவன் தயங்கினான். "ஆமாம் பெரிய டெஸ்ட் மாட்ச் தலை போகிறது. இவர் போகாவிட்டால் குடி முழுகி விடும். போடா நான் சொல்கிறபடி செய்," நான் அதட்டினேன். அவன் தயங்கியவாறே உள்ளே போனான். அவன் திரும்புவதற்குள் முன்னெச்சரிக்கையாகவே அவன் புத்தகப் பையை எடுத்துக் கையில் வைத்துக் கொண்டுவிட்டேன். ஒருவேளை பணத்தை அதற்குள் வைத்திருந்து வேறு இடத்துக்கு அவசரமாக மாற்றிவிட்டால் என்ன செய்வது என்ற ஐயம்.

திரும்பிவந்த சோமுவின் முகம் என் கையில் பையைக் கண்டதும் பேயறைந்தது போல் மாறியது. இவன்தான் தன் கைவரிசையைக் காட்டி இருக்கிறான். இல்லைஎன்றால் இப்படிக் கலங்குவானேன் என்றது மனம். எனக்கு வந்த கோபத்தில் பையைத் தலைகீழாகக் கவிழ்த்தேன். பாட புத்தகங்கள், நோட்டுகள், பேனா பென்ஸில், இரண்டு மாங்காய் கள் இத்யாதிகளுடன் கீழே விழுந் தது உள்ளங்கை அகலமுள்ள புத்த கம் ஒன்று. அதைத் தவிர ஒரு பை சாவைக் கூட காணோம்.

புத்தகத்தைப் பிரித்தேன். அது அவனுடைய 'ப்ராக்ரஸ் ரிப்போர்ட்' அரைவருடப் பரீட்சையில் அவன் ஆங்கிலத்திலும், விஞ்ஞான பாடத் திலும் தேர்வுபெறவில்லை என்பதை அந்த மார்க்குகளைச் சுற்றி இழுக்கப் பட்ட சிவப்புக் கோடு தெளிவு படுத் தியது. இன்னும் உழைத்துப்படித் தால்தான் பெரிய பரீட்சையில் தேற முடியும் என்று வகுப்பு ஆசிரியர் குறிப்பும் எழுதி இருந்தார்.

நான் சோமுவைப் பார்த்தேன் அவன் பயத்துடன் நின்றிருந்தான். அவன் தயக்கத்திற்கும் முகபாவத் திற்கும் காரணம் அப்போது எனக் குப் புரிந்து விட்டது. இருந்தாலும் நான் என் தோல்வியை வெளிக்காட் டிக்கொள்ள விரும்பவில்லை.

"எங்கேயடா பத்து ரூபாய்?" என்றேன்.

"எதப்பா?"

"பாசாங்கு பண்ணாதே"

"சத்தியமாய் நான் எடுக்கவில்லை"

"நீ பெரிய அரிச்சந்திரன். நீ சத்தியம் செய்தால் நான் நம்பிவிட வேண்டும். அப்படித்தானே?"

"எப்பவோ ரெண்டுதடவை சில் லறை எடுத்தது நிஜம். அதுக்காக என்ன காணாமே போனாலும் நான் தான் எடுப்பேன்னு அர்த்தமா?"

சோமு பட்டென்று பதில் சொன் னது முகத்திலறைந்தது போல் இருந்தது. அதற்கு மேலும் தூண்டித் துருவுவதில் பயனில்லை. அவன் ஏன் பாடங்களை ஒழுங்காகப் படிக்கவில்லை என்று நான் கேட்கும் வரையில் அவன் காத்திருக்கவில்லை ஓடிவிட்டான்.

வெள்ளிக்கிழமையன்று பணத் தைத் தொலைக்கக் கூடாது என்பார் கள். மூட நம்பிக்கை என்றில்லா விட்டாலும் அதற்கு அப்போ விருந்த மதிப்பு..? சாதாரண குமாஸ்தாவான என் மாதக்கடைசி முடையை விளக்கத் தேவையில்லை. எங்கே மறைந்திருக்கும் என்ற மர்மத்திற்கு விடை கிடைக்கவில்லை. வழக்கம் போல் காமாட்சி (காமு) கோயிலுக்குக் கிளம்பி விட்டாள்.

வேலைக்காரன் வீரப்பன் எடுத் திருந்தால்...சே...சே... அப்படி நினைப்பதுகூடப் பாவம். கடந்த மூன்று ஆண்டுகளாய்த் தொடர்ந்து எங்கள் வீட்டில் வேலைபார்த்து வரு கிறான், ஒரு முறை கூட நாணயம் பிழன்றது கிடையாது. அவனை எப் படி சந்தேகிப்பது? என்னவோ யார் கண்டது. அவசரத் தேவை ஏதா

வது ஏற்பட்டு அவன் அப்படிச் செய்திருந்தால்...' மனம் எதை எதையோ எண்ணிக் குழம்பியது. வழக்கமாக இரவு எட்டு மணிக்கு மேல் வந்து பாத்திரங்களைத் துலக்கி வைத்துவிட்டுப் போவான் அவன். அவன் வீடு பக்கத்தில் இருந்தது அந்த விஷயத்திற்கு சௌகரியமாக இருந்தது.

ஆயின்... அன்றைக்கென்று வீரப்பன் வேலைக்கு ஏன் சீக்கிரம் வந்தான்? ஏன் அவன் முகம் அப்படி வாடி இருக்கிறது? கண்வலிக் காரனுக்கு எதைக் கண்டாலும் கூசுமாம் அந்த நிலைதானே? வேலை முடிந்து அவன் திரும்புமுன் மடக்கினேன்.

என்னைக் கண்டதும் செய்யக் கூடாதது எதையோ செய்துவிட்டதுபோல் அவன் கலங்கினான்.

''வீரப்பா!''

நான் அழைத்ததும் அவன் உடல் முழுவதும் நடுங்கியது. அவன் கையிலிருந்து ஏதோ ஒன்று நழுவிக் கீழே விழுந்தது. ''மன்னிச்சிடுங்க எசமான் எம் பெண் ஜாதிக்கு உடம்பு சரியில்லே அதனால் ஏதோ தப்பில்லேன்னு நினைச்சு...''

அப்படி என்றால் என்பிரச்னைக்கு முடிவு காணப்போகிறேனா? பத்து ரூபாயை வீரப்பனா எடுத்தான்?

கீழே கிடந்த பொட்டலத்தை எடுத்துப் பிரித்தேன் பொல பொல வென்று ஏதோ கீழே விழுந்து சிதறியது, குனிந்து பார்த்தேன் கொஞ்சம் தேயிலைத் தூளும்...சர்க்கரையும்! உங்களையாவது கேட்டு அப்புறம் எடுத்துகிட்டுஇருக்கணும் சீக்காளிக்கு கொஞ்சம் சாயா கொடுத்தால் தெம்பாக இருக்குமேன்னு...ஏதோ பழகிய உரிமையிலே நானே கொஞ்சம் எடுத்துண்டேன்...மன்னியுங்க எசமான்' அவன் தொண்டையடைக்க கண்களில் நீர் முட்ட நின்றான்.

என்ன ஏமாற்றம்!

அதையா நான் எதிர் பார்த்தேன் வீரப்பனின் கலக்கமெல்லாம் இதற்குத்தானா? 'அது' எங்கே போயிருக்கும்?

அப்போதைய மன நிலையில் வீரப்பனுடன் தொடர்ந்து பேச்சுக் கொடுக்க விரும்பவில்லை, ''இவ்வளவுதானே, எடுத்துப்போ இதுக்கெல்லாம் எதுக்கு மன்னிப்பு கேக்கறே'' என்று சொல்லி அவனை அனுப்பி வைத்தேன். அவன் நன்றிப்பெருக்குடன் கும்பிடுபோட்டு விட்டு நகர்ந்தான்,

கீழே சிதறிக்கிடந்த தேயிலைத் துகள் என்னை ஏளனமாகப் பார்த்தது.

என் இரண்டாவது முயற்சியும் தோல்வியா? ஒரு வேளை... காமு அவசரச் செலவுக்கென்று எடுத்துக் கொண்டுவிட்டு என்னிடம் சொல்ல மறந்திருப்பாளோ? அவளும் இல்லை என்றால் இந்த வீட்டில் அன்றாடம் புழங்குபவர்கள் வேறு ஒருவரும் இல்லையே அவள் கோயிலிலிருந்து

திரும்புவதற்குள் அந்தச் சோதனை யையும் நடத்திவிட்டால் என்ன? மனத்தில் கிடைத்துவிடும் என்ற ஏதோ ஒரு நம்பிக்கை கோடிட்டது.

நான் சமயலறைக்கு விரைந்தேன் அவளுடைய கஜானுவான அஞ்சறைப் பெட்டியிலிருந்து கரண்டி மாட்டும் ஸ்டாண்ட் வரை அத்தனை யும்துழாவியாகிவிட்டது. பயனில்லை கடைசி முயற்சியாக வலை பீரோ வைத் திறந்தபொழுது... சின்ன பெருங்காயப் பெட டிக்குள் ஏழு புது ஒற்றை ரூபாம் நோட்டுகள் மின்னின!

'கடைசியில் காமாட்சி எடுத்து செலவழித்திருக்கிருள்! அது தெரி யாமல் எவ்வளவு அமர்க்களப்படுத் திவிட்டேன்...'

பின்னுலிருந்து காலடியோசை திரும்பிப் பார்த்தபொழுது காமு நின்றுகொண்டிருந்தாள்.

'என்ன, செய்கிறீர்கள்?'' அவள் குரலில் வழிந்தது சந்தேகமா அல்லது கலவரமா? ''ஒன்றுமில்லை என் பர்ஸிலிருந்த பத்து ரூபாய் நோட் டைக் காணும். தேடினேன் பதில் கிடைத்துவிட்டது.'' பெருங்காயப் பெட்டியை அவளுக்கு எதிரில் உயர்த்திக் காட்டினேன். ''நன்ருய் இருக்கு, உங்களைக்கேட்காமல் நான் எதற்கு எடுக்கிறேன்... கையிலிருப் பதைக் கொடுத்துவிடுங்கள், அது வேறு பணம்...''

''வேறு... என்ருல் ஏது...?''

''...'' அவள் பேசவில்லை.

''ஏது...... சொல்லப்போகிருயா இல்லையா?'' நான் சற்று அதட்ட லாகவே கேட்டேன். ''வந்து... அது உங்கள் சம்பளப் பணத்தில் சேர்த்துவைத்தது, ஒவ்வொரு மாசக் கடைசியிலும் புடவைச் சீட் டுக்காக ஏழு ரூபாய் கட்டுகிறேன். உங்களுக்குத் தெரிந்தால் ஏதாவது சொல்லுவீர்களோ என்று பயமாக இருந்தது...''

விசாரணைக் கூண்டில் நிற்கும் குற்றவாளியைப் போன்று காமு தலைகுனிந்து நின்ருள்.

எனக்கு சப்பென்று ஆகிவிட்டது. அப்படி என்ருல் அதைநானே எங்காவது தொலைத்துவிட்டிருப்பேனே? என் குழப்பம் தெளிவதாக இல்லை. ஏமாற்றத்துடன் பெட்டியை எறிந்துவிட்டு நடந்தேன். கால்போன போக்கெல்லாம் நடந்துவிட்டு வீட் டை அடைந்தபொழுது இரவு ஒன்ப தரைமணிக்குமேல் இருக்கும்.

அப்போது... வண்ணன் சின்னை யன் எதிர்ப்பட்டான். அவன் எங்கே அங்குவந்தான்... அந்த நேரத்தில்? அவன் கையில் நான் தேடியலைந்த பத்து ரூபாய் நோட்டு! எனக்கு விளங்கிவிட்டது.

''காலையிலே சலவை எடுத்துவந்த உங்க பான்டுக்குள்ளே இருந்துச் சாம். என் மவன் சொன்னுன். கடையை மூடிட்டு கொண்டுவந்து குடுக்கலாம்ங்கறத்துக்குள்ளே இந் நேரமாயிடுச்சு''

சத்தியத்தின் உருவமாய் நின்ற அவனைக் கண்டதும் என் உடல்

சிலிர்த்தது. உலகத்தின் 'ஏதோ ஒரு மூலையிலாவது உண்மையின் பிரதிநிதிகள் வாழத்தான் செய்கிறார்கள்' என்று எங்கோ படித்தது நினைவுக்கு வந்தது, அவனைப் பாராட்டி நானளிக்கமுன் வந்த அன்பளிப்பைக் கூட அவன் பெற்றுக்கொள்ள முடியாதென்று கண்டிப்பாக மறுத்துவிட்டுப்போய்விட்டான் அவன். 'உண்மை'யாக இருக்க 'கூலி' அவசியமில்லை என்பது அவன் கருத்து அவன் சென்றபின்னரும் மனத்தினுள் பாயாய் விரிந்த எண்ணங்கள் ஒவ்வொன்றாய்த் தோன்றி மறைந்த அன்றைய நிகழ்ச்சிகள் அவற்றைத் துழாவும்போது வெளிப்பட்ட உண்மைகள் அதாவது என் பார்வையிலிருந்து மற்றவர்கள் மறைக்க முயன்ற குற்றங்கள்,

சோமுவின் பரிட்சை முடிவு, பழகிய உரிமை என்பதைக்கொண்டு வீரப்பன் புரிந்த செய்கை, எனக்குத் தெரியாமல் பணம் சேர்த்து சீட்டுக் கட்ட முனைந்த என் மனைவியின் செயல்.. அவற்றுக்கிடையில் உண்மையின் ஒளியாய் பிறர் பொருளை நெருப்பாக மதிக்கும் சின்னையனின் பெருங்குணம்.

ஒரு பத்து ரூபாய் நோட்டு...அது சில மணி நேரங்கள் காணாமற்போய் அதை நான் தேடப் போக எனக்குக் கிடைத்த அனுபவங்கள் கூடவே நினைவில் தேங்கிய ஒன்று...அது தான் அந்தப் பத்து ரூபாய் எனக்குக் கிடைத்த விதம்! முதல்நாள்...நான் ஆபீஸிலிருந்து திரும்பும்பொழுது பஸ்ஸில் அமர்ந்திருக்கிறேன் பக்கத்தில் உட்கார்ந்திருக்கும் வயதான பெரியவரொருவர் ஏதோ ஒரு ஸ்டாப்பில் இறங்க முற்படுகிறார். பத்து ரூபாய் நோட்டொன்று அவர் இருந்த இடத்தில் கிடக்கிறது. அது அவருடையதாகத் தான் இருக்க வேண்டும். அவர் டிக்கட் வாங்க சில்லறை எடுத்த பொழுது பர்ஸிலிருந்து விழுந்ததை கவனிக்கவில்லை போலும், நான் அவரை அழைத்துக் கொடுத்திருக்கலாம். இல்லை கண்டக்டரிடமாவது சொல்லி இருக்கலாம். நான் செய்யவில்லை. ஒரு கணம் அந்த நொடிப்பொழுதில் ஆசையின் அசுரவேகம், பேயாட்டம் மனச்சாட்சியின் குரலை எட்டி உதைத்துக்கொண்டு நோட்டு என் கால்சட்டைப் பைக்குள் தஞ்சம் புகுகிறது. அது நாகரீகத் திருட்டு... மற்ற உண்மைகளை உணர்ந்து கொண்டவன் அந்த உண்மையான பொய்யை மனத்துள் அமிழ்த்தி ஜீரணித்துவிட்டது அந்த ஆண்டவனைத் தவிர யாருக்குத் தெரியும்?

சாத்தானாக வந்து என்னைப் பாவ வழிக்குத் தூண்டிய அந்தப் பத்து ரூபாயைப் பார்த்து நெஞ்சம் கலங்கி நின்றேன்! *

*FRITZ FILTERS FILTER FINEST*

# FRITZ AND SINGH PRIVATE LTD.

*MANUFACTURERS OF*

OIL, AIR AND FUEL FILTERS
FOR ALL TYPES OF INTERNAL
COMBUSTION ENGINES

★

*HEAD OFFICE:*

**"FRITZ HOUSE"**
227, Netaji Subhas Bose Road,
TOLLYGUNGE, CALCUTTA-47.

★

*BRANCH OFFICE:*

B-29 B, Kailash Colony,
NEW DELHI-14.

Tel. Address :
"RUKMILL" Madurai.

Telephone :
Registered Office : 3211 (5 Lines)
Factory : (2375)

# RUKMINI MILLS LIMITED,

*Registered Office :*
***"Meenakshi Nilayam",***
***Tirupparankundram Road,***
***MADURAI.***

Factory : SILAIMAN. Ramanathapuram Dist.
Total Spindles : 22,000

Our Nf 50 to Nf 84 fine count yarns bearing RUKMINI WEDDING Mark is extensively used for exquisite and Super Handloom cloths.

*Managing Agents :*
**Karumuttu Private Ltd., Madurai.**

*BEST FOR*

SOUTH INDIAN DISHES

★

## MADRAS HOTEL

HOTEL & RESTAURANT

★

***Connaught Circus,***
***NewDelhi-1.***

Phone : 40595

Phone : Office : 33533
Res : 72767

Grams : Safeguard
Madras.

## S. NARAYANAN

*Importer, Exporter & Stockist.*
19, Venkatachala Mudali Street,
MADRAS-3.

*Stockist & Agent :-*

All Screw products of G.K.W. Ltd., Bombay.

Builders Hardware Mfd. by Diamond Steel Corporation, Calcutta and

Purushottam Ramji & Sons Private Limited, Calcutta.

Industrial Mineral, Raw Material, Oils, Paints, Colours, Varnish, Turpentine etc., All kinds of Paint Brushes.

# குடும்பக் கட்டுப்பாடு

# என்றால்

# என்ன தெரியுமா?

★

இதன் மூலம் கிடைக்கும் நன்மைகள்:

★ எப்பொழுது, எவ்வளவு குழந்தைகள் வேண்டும் என்று தீர்மானிக்கலாம்.

★ உங்கள் மனைவியின் உடல்நிலையை சரியாக வைத்துக் கொள்ளலாம்.

★ உங்கள் குழந்தைகளின் தேக ஆரோக்கியத்தை நன்கு கவனித்து நல்ல கல்வி அளித்து, வளர்க்கலாம்.

★ பயம், கிலேசம் இல்லாமல் மணவாழ்க்கையை இன்பமாக வாழத்தெரிந்து கொள்ளலாம்.

★

குடும்பக்கட்டுப்பாட்டிற்கு பல முறைகள் உள்ளன.
ஏதாவதொன்றை நீங்கள் தேர்ந்தெடுக்கலாம்.

இலவச ஆலோசனைக்கு குடும்பக்கட்டுப்பாடு நிலையத்திற்கு சென்று விசாரியுங்கள்.

வரவேற்பு அறையின்
எழில்மிக்க தோற்றம்



கோ-ஆப்டெக்ஸ் கைத்தறி
துணிகள்

ஆடைக்கும், அலங்காரத்திற்கும்
எல்லா விற்பனை நிலையங்களிலும் கிடைக்கும்

தமிழ் நாடு கைத்தறி நெசவாளர் கூட்டுறவு சங்கம் லிமிடெட்.
34/1-A, பாந்தியன் சாலை, எழும்பூர் சென்னை-8.
ELEGANT/CO/-1



# பொற்கிழி பெற்ருர் புரட்சிக் கவிஞர்

- ப. கண்ணன் -

கவியரசர் பாரதியார் வாழ்ந்தபோது தமிழுணர்ச்சி தழைக்காத காரணத்தால், அவரது நினைவு மண்டபத்திற்குத்தான் நிதி சேர்க்க முடிந்தது.

"தமிழனென்று சொல்லடா! தலை நிமிர்ந்து நில்லடா!" என்று முழக்கிய நாமக்கல் கவிஞருக்கு நல்லுணர்வோடு காங்கிரஸ் கட்சியினர் நிதி சேர்த்துக் கொடுத்தனர். அதேபோல் புரட்சிக் கவிஞர் பாரதிதாசன் அவர்களின் வாழ்விலும் வளம் சேர்க்க வேண்டும், அவர் நிம்மதியாகக் கவிதைகள் எழுதிக் குவிக்க வேண்டும் என்று பலர் கருதினர். செயல் பட முனைந்தனர்.

நண்பர்கள் நல்லிபாளையம் செல்லப்பனும், நாமக்கல் கருப்பண்ணனும் அந்த முயற்சியில் இறங்கினர். நல்லிபாளையம் திரு. என். கிருஷ்ணராசு அவர்கள் தலைமையில் நிதிக்குழுவொன்று நிறுவப்பட்டது. ரூபாய் ஏழாயிரம் வரை நிதி சேர்த்தனர். என்ன முயன்றும் அதற்கு மேல் வண்டி ஓடவில்லை! 'நாமக்கல்லார்க்குப் பன்னீராயிரம் கொடுத்தனர். அதினும் குறைவாகவா புரட்சிக் கவிஞர்க்குத் தருவது?" எனக் குமுறினர். இயக்கம் இப்பணியினை ஏற்க வேண்டும் என்று விரும்பினர்.

திருச்சியில் நடைபெற்ற திராவிடக் கழக மாநாட்டில் "கவிஞர் நிதிக்குப் பொருளுதவி செய்ய வேண்டும்" என்ற தீர்மானம் ஒன்றினை நிறைவேற்றினோம். பெரியார் இராமசாமி அவர்களும் ஏற்கனவே 100 ரூபா கொடுத்திருந்தார்கள், என்ருலும் நிதி பெருகவில்லை. ஏதனுலோ ஆதரவு துளிர்க்காமல் கருகி நின்றது. நானும், நண்பர் செல்லப்பனும்

கவிஞரோடு இதுபற்றிக் கலந்து பேசினோம். நிதி முயற்சிக்கு அறிஞர் அண்ணாவின் ஆதரவைப் பெறவேண்டும் என்ற முடிவுக்கு வந்தோம். சேலத்திலிருந்து நானும் நண்பரும் சென்னைக்குப் புறப்பட்டுச் சென்றோம்.

* * *

சோதரர் திருவாரூர். டி. என். இராமன் அவர்களிடம் நிலைமையை விளக்கினேன். ஒத்துழைக்க முன்வந்தார். அவரோடு சென்று அறிஞர் அண்ணாவைச் சந்தித்தோம். எங்களுடையவும் கவிஞருடையவும் விருப்பத்தை எடுத்துச் சொன்னோம். புரட்சிக் கவிஞர்க்குப் பொற்கிழியளிப்பதில் அண்ணா தனியார்வம் கொண்டிருந்தார்கள். என்றாலும், ஏனோ சற்று யோசித்தார்கள்.

நிதிக்குப் பெரியாரின் எதிர்ப்பையறிந்தும் கவிஞரிடம் இருக்கும் பாசத்தின் காரணமாக, இறுதியில் அண்ணா எங்கள் விருப்பத்திற்கு இசைந்தார்கள். அவர் கருத்துப்படியே செயற்பட்டோம் நாங்கள்.

நாமக்கல்லில் அமைந்த நிதிக்குழுவின் கூட்டத்தை அதன் தலைவர் திரு. என். கிருஷ்ணராசு அவர்கள் தலைமையிலேயே 18-2–46 இல் சென்னையில் கூட்டினோம். குழுவில் மேலும் பல பிரமுகர்கள் உறுப்பினராகச் சேர்க்கப்பட்டனர். நானும், திரு. டி. என். இராமண்ணாவும் செயலாளர்களாகவும், அறிஞர் அண்ணா பொருளாளராகவும் தேர்ந்தெடுக்கப்பட்டுப் பொறுப்பேற்றோம். கவிஞர் நிதிக்குழுவுக்குப் புதிய வலுவும் வனப்பும் நிதி திரட்டுவதற்குப் புதிய வழியும் வகையும் பிறந்தன!

பிஷப் ஹீபர் உயர்நிலைப்பள்ளியில் 16–3–46இல் பேராசிரியர் இருதயராஜ் அவர்கள் தலைமையில் கவிஞர் நிதி ஆதரவுக்கூட்டம் நடைபெற்றது. சகல கட்சிப் பிரமுகர்களோடு நாடகக் கலைஞர் எஃப். ஜி. நடேசய்யர், திருலோக சீதாராமன் போன்றவர்களும் கலந்துகொண்டு புரட்சிக் கவிஞரின் அருமையும் பெருமையும் குறித்து விளக்கிப் பேசினர். மக்களின் கருத்திலே கவிஞர் நிலை மேலும் உயர்ந்தது.

* * *

கவிஞர்க்கு நிதி திரட்டும் செய்தியறிந்த சிங்கப்பூர் 'தமிழ்முரசு' ஆசிரியர் திரு. கோ. சாரங்கபாணி அவர்கள் சிங்கைத் தமிழர்களின் அன்புக் காணிக்கையாகக் கணிசமான தொகையொன்றை அனுப்பி வைத்தார். நேரிலும் வந்து பார்த்து. கவிஞரைக் கௌரவித்தார்.

பல வழியாலும் நிதித்தொகை எங்கள் இலட்சிய அளவையும் மிஞ்சியது. விழாவை நடத்திவிட நிதி சேர்ப்பதில் பெரியாரின் போக்குப் புரிந்தாலும், "சேர்ந்துவிட்ட நிதியை அவர் கையால் கொடுக்க வேண்டும். விழாவுக்குப் பெரியார்தான் தலைமை தாங்கவேண்டும். தகுதியும் உரிமையும் படைத்தவர் அவர்தான்," என்றார்கள் அறிஞர் அண்ணா. ஒப்பினோம் நாங்களும்.

பெரியார் ஈ. வெ. ரா அவர்களைச் சந்திக்க நானும் திரு. டி. என். ஆர். என். வி. என், காரைக்குடி இராமசுப்பையா ஆகியோரும் சென்றோம். விழாவுக்குத் தலைமை தாங்கி, கவிஞர்க்கு நிதியளிக்குமாறு வேண்டினோம்.

கவிஞர் நிதி பற்றிக் கழக மாநாட்டில் ஆதரவுத் தீர்மானம் போட்டது, அவரே நிதி கொடுத்திருப்பது பற்றியெல்லாம் நான் கூறினேன். திட்டும் வசவும் கிடைத்ததேயொழிய அவரது இசைவு கிடைக்கவில்லை.

அறிஞர் அண்ணா எங்களுக்கு ஆறுதல் கூறினார்கள். விழாத் தலைமைக்கு நாவலர் சோமசுந்தர பாரதியாரை நாடினோம். மகிழ்வோடு ஒப்பினார்கள்.

* * *

கழகத் தலைமையில் வெறுக்கப்பட்ட காரியத்தை எடுத்துக் கொண்டு, மொழிப் பற்றையும் கவிதைப் பெருமையையும் முன்நிறுத்தி, பொது நோக்கில் எங்களைச் செயற்படுத்தி வெற்றி கண்டவரும், ஏழாயிரத்தில் பெயராது நின்ற நிதியை இருபத்தாறு ஆயிரத்தில் இழுத்து நிறுத்தியவரு மான அறிஞர் அண்ணாவின் திருக்கரத்தாலேயே நிதியளிப்பு நிகழ வேண்டும் என்று நாங்கள் விரும்பினோம். கவிஞரும் அதனையே விரும் பினார்கள். வேறுமொழி வயின்றி அண்ணாவும் ஒப்பினார்.

பொற்கிழியளிப்பது போலவும் பெறுவது போலவும் நிழற்படம் பிடிக்க விரும்பினோம். கவிஞரையும் அண்ணாவையும் போட்டோ நிலயத்திற்கு அழைத்துச் சென்றோம். பண முடிப்பை அண்ணா கையில் வைத்துக் கொண்டு எதிரே நிற்கும் கவிஞரிடம், "எடுத்துக் கொள்ளுங் கள்," என்றார். "நீங்கள் கொடுக்க நான், பெறவேண்டும்," என்றார் கவிஞர். "கொடுக்கத் தகுதி வேண்டாமோ?" என்றார் அண்ணா. "தகுதியிருப்பதாலேயே கொடுக்கிறீர்கள். கொடுப்பவர் கை மேலும் பெறுவோர் கை கீழுமாக இருப்பதே முறை." என்றார் கவிஞர்.

* * *

குறிப்பிட்ட பச்சையப்பன் மைதானத்தில் 28–7–46-இல் புரட்சிக் கவிஞர்க்குப் பொன்னாடை போர்த்திப் பொற்கிழி அளிக்கும் நற்றமிழ் விழா மிகச்சிறப்பாக நடைபெற்றது. திரு. ம. பொ. சி. ப. ஜீவானந்தம், செங்கல்வராயன், மு. வரதராசனார் போன்ற தமிழ் மறவர்கள் பாராட் டுரை வழங்கினர்.

"வெள்ளம் போல் தமிழர் கூட்டம் வீறு கொள் கூட்டம்," என்று அறிஞர் ரா.பி. சேதுப்பிள்ளை அவர்கள் கவிதையாலேயே வியந்துரைத்தது இன்னமும் செவியில் ஒலிக்கிறது.

திரு. கி. வா. ஜகந்நாதன் பேசுகையிலே: "வீதியிலே வேகமாக நடந்து சென்றேன். காலில் என்னவோ பலமாக இடித்தது. பொறுக்க முடியாத வலி. கல்லோ, என்று குனிந்து பார்த்தேன். கிடந்ததோ தங்கக்கட்டி

பறந்தது என் வலி. எடுத்துக் கண்களிலே ஒற்றிக் கொண்டேன்'' என்றார்.

கொங்குநாட்டில் தொடங்கப்பெற்ற கவிஞர் பிறந்தநாள் விழா இடையில் பல ஊர்களில் — பல ஆண்டுகள் எண்ணற்ற மோதல்கள் பல கடந்து, இவ்வாறாகத் தொண்டைநாட்டில் நிறைவு பெற்றது.

['குமுதம்'–17–9–64 மலரில் இருந்து தொகுத்தது]

## கவிஞர் பதில்

### "கண்டு உவந்தோன்"

எனக்கு இன்று அளித்த கௌரவத்திற்கு என் நன்றியைத் தெரிவித்துக் கொள்ளுகிறேன். இது எனக்கு அளித்த கௌரவமல்ல; தமிழுக்கு அளித்த கௌரவம்.

செய்யத் துணிபவனுக்கு, எண்ணத் துணிபவனுக்குத்தான் வெற்றி கிட்டுகிறது. தன்னுடைய செயல் முறையும், கொள்கையும் சரியானதென்று நம்புபவன், எந்த எதிர்ப்புக்கும் அஞ்சி கொள்கையினின்றும் பிறழக்கூடாது. இவனுக்கு என்றாவது ஒரு நாள் வெற்றி வந்தே தீரும். என் வாழ்நாள் முழுவதும் இதுவே என் கொள்கையாக இருந்து வந்திருக்கிறது. சுயேச்சையான மனோபாவத்திடம் எனக்கிருந்த அசைக்க முடியாத நம்பிக்கையின் பலன்தான், நான் இன்று பெற்றிருக்கும் இந்த பண முடிப்பு.

இன்று, தமிழகத்தில் பழமையின் சிறப்பைப் பற்றிப் பேசிக் கொண்டிருந்தால் போதும் என்னும் மனோபாவம் பொதுவாகப் பரவியிருக்கிறது. இது முன்னேற்றத்துக்கு வழி காட்டாது. பழமையை உதறித் தள்ளி, புது வழியை மேற்கொள்ளுபவன்தான் உண்மையான சேவை செய்தவன்.

தமிழுக்குச் சிறந்த எதிர்காலம் இருக்கிறது. மக்களின் தமிழ்க் காதல் நாளுக்கு நாள் வளர்ந்து வருகிறது. கறையான் அரித்த பழைய துறையிலிருந்து மெல்ல மெல்ல விலகிப் புரட்சிகரமான புதுத்துறையில் செல்ல ஆரம்பித்திருக்கிறார்கள் இன்றைய நவயுக எழுத்தாளர்களும் கவிகளும். தமிழ் நாட்டின் எதிர்காலம் சிறப்படைய வேண்டுமானால், அதற்கு உண்மையாகவே புத்துயிர் பிறக்க வேண்டுமானால், இத்தனை எழுத்தாளர்களும் கவிகளும், குறுகிய சாதி வேறுபாடுகளைத் தகர்த்து எறியக் கங்கணங்கட்டிக் கொண்டு புறப்பட வேண்டும். அடிமை மனப்பான்மையை ஒழித்து, சுயேச்சையான எண்ணத்தையும், பரந்த நோக்கங்களையும் வளர்க்க முற்பட வேண்டும்.

"இந்த விஷயத்தைப் பற்றி எழுது!" என்று கவிஞனிடம் ஒப்பந்தம் பேசுவது நடக்காத காரியம். குறிப்பிட்ட ஒரு விஷயத்தைப் பற்றி,

இன்னொருவர் சொல்லி, கவி எழுதமுடியாது. ஒரு கொடுமையை அல்லது ஒரு காட்சியைக் கண்ட அளவில் உணர்ச்சி தூண்டக் கவி எழுத வேண்டும்.

என் இளைய நண்பர்களுக்கு நான் கூற விரும்புவது இதுதான்: தமிழ் படி; தமிழ் பேசு; தமிழ் எழுது. கொடுமை கண்டவிடத்து எதிர்த்துப் போராடு. யாரேனும் தமிழைப் பழித்தால் லேசில் விடாதே.

அச்சமின்மையை வளர். புரட்சி மனப்பான்மை என்னுள் புகுந்த பொழுது எனக்கு எவ்வளவோ எதிர்ப்புக்கள் ஏற்பட்டன. நான் அவைகளைக் கண்டு அஞ்சவில்லை. ஏனெனில், எதிர்ப்பிலிருந்து நன்மை பிறக்கிறது; அறிவு வளர்கிறது. பாரதியார் "அச்சம் தவிர்" என்றும் "போர்முனை விரும்பு" என்றும்தான் கூறியிருக்கிறார். தமிழ் வாழ்க!

**28-7-1946ல் சென்னையில் நடைபெற்ற புரட்சிக் கவிஞர் பாரதிதாசன் நிதியளிப்பு விழாவில் நிதியைப் பெற்றுக் கொண்டு கவிஞர் அவர்கள் ஆற்றிய சொற்பொழிவின் சுருக்கம்.**

—1946 ஆகஸ்டு "சக்தி" இதழினின்றும் எடுக்கப்பட்டது.





Grams: MURSOKS Phone: 51388

Regd. No. 141241

**WHITE HORSE SOAP**

*A Superfine Soap*
*For Silk and Linen Wash*

*MANUFACTURERS:*

**D. BANGARU CHETTY,**

NATIONAL INDUSTRIES
220, T. H. Road, Tondiarpet,
MADRAS-21.

WITH BEST COMPLIMENTS FROM

The Britannia Biscuit Co. Ltd.,
33, LAWRENCE ROAD,
DELHI-35

TELEPHONES : 568361 / 62 / 63

*With the best compliments from*

★

PRABHAT OVERSEAS AGENCIES
ENGINEERS & MANUFACTURERS REPRESENTATIVE EXPORTERS
& IMPORTERS
**18/19, W. E. A., — NEW DELHI-5.**

★

**Codes Bentl'y Second Phrase and
Bentl'y A. B. C. 6th Edition**

Phone : 5 6 8 6 8 2 Cables : " TRUTHFUL " Delhi.

# அதிர்வேட்டு!

— திரு. பொன்னடியான் —

அதிர்வேட்டுப் பெருங்கவிஞன்; பொங்கிச் சீறி
ஆர்த்தோடும் ஆற்றைப்போல் முழக்கம் செய்தோன்!
எதிர்படுவார் யாருமின்றி நிமிர்ந்து நின்றே
இடிமுழக்கம் செய்திட்ட கவிதைச் சிங்கம்!
புதிர்போட்டே எழுதாமல், இரண்டில் ஒன்றைப்
பிட்டுவைத்த குழப்பமிலாக் கொள்கைத் தங்கம்!
முதிர்கருத்தின் விதைவிதைத்தே; உணர்ச்சி வார்த்தே
முத்தான கவிதைமணி விளைத்துத் தந்தோன்!

பாவேந்தன் பாரதிதா சன்பேர் வாழ்க!
பைந்தமிழர் புகழ்வளர்த்தவன் சீர் வாழ்க!

அறிவிலிகள் மதக்கிறுக்கர் மடமைப் போக்கர்
அடங்காத பணப்பசப்பர் கொழுப்ப டக்கப்
பொறிகலங்கப் பாட் டெழுதிப் படைத்த செம்மல்!
புடைத்தெழவே நரம்புநா ளங்க ளெல்லாம்
வறியவர்க்காய் வாள்கவிதை தந்த அண்ணல்!
வம்பளப்புச் சோம்பேறிக் கும்பல் வீழ
சொறிநாயர் தரம்பிரித்தே ஏய்ப்பர் பல்லோர்
சுரண்டலுக்கு வழியடைக்கத் துடித்த கன்னல்

பாவேந்தன் பாரதிதா சன்பேர் வாழ்க!
பைந்தமிழர் புகழ்வளர்த்தவன் சீர் வாழ்க!

கூண்டடைந்து குமைந்திட்ட கிளியைப் போன்று
குலமழிக்கும் பிற்போக்கர் சூட்சி யாலே
மாண்பொழிந்து மழுங்கிட்ட பழைய மானம்
மறுபடியும் பூக்கும்வகை செய்த கோமான்!
"தீண்டுதற்கும் தகுதியிலார்" என்றார் வீழத்
திறல்மறவர் விழித்தெழவே உழைத்த வீரன்!
சீண்டிவிட்டோன்—நமையெல்லாம் சிரிக்க வைத்தோன்
செந்தமிழின் மணத்தாலே மகிழ வைத்தோன்!

பாவேந்தன் பாரதிதா சன்பேர் வாழ்க!
பைந்தமிழிர் புகழ்வளர்த்தவன் சீர் வாழ்க!

வான்நீந்தும் மேகம்போல் திரிந்திருந்த
வளர்கவிதைப் பரம்பரைக்குத் தலைவனாகி
ஊன்உருக்கி உள்ளொளியைப் பெருக்கி நம்மில்
உயிரூட்டி வழிகாட்டும் தலைவனாகி
தேன்மணக்கும் இன்படைப்பால் அறிஞனாகித்
தெளிந்தநல் பகுத்தறிவின் நெறியனாகி,
கூன்நிமிர்த்தும் பணிசெய்யும் பெரியார் போன்றே
குலப்பெருமை காப்பதற்கே வந்த செம்மல்—

பாவேந்தன் பாரதிதா சன்பேர் வாழ்க!
பைந்தமிழிர் புகழ்வளர்த்தவன் சீர் வாழ்க!

# வ. வே. சு. அய்யர்

புதுவை பாரதிதாஸன் பாடிய
சரமகவி

வ. வே. சு. ஐயர் மறைந்த சமயம், சென்னை தமிழ் "ஸ்வராஜ்யா" தினசரியில் குரோதன வூ ஆனிமீ 3-ஆம் தேதி வெளியானது.

எடுத்தளித்தவர்: ரா. அ. பத்மநாபன்

கேட்டீரோ தமிழர்களே, நம்மில் மிக்க
கீர்த்தி கொண்ட தமிழன் உயிர் நீத்த செய்தி?
'ஆட்பணிதல் கடவுளொருவனுக்கே யன்றி
அத்தனை பேரும் சமமே ஆகும்' என்னும்
மாட்சிமிகும் எண்ணத்தை நாட்டில் மீண்டும்
மலர்வித்த வீரர்க்குள் வீரன் கண்டீர்!
தாட்டிகஞ்சேர் சுப்ரமண்ய ஐயன் இந்தச்
சகம் நீத்தால் தமிழர் மனம் சகிப்பதுண்டோ?
பருவ மயக்கத் தாலே ஆங்கிலத்தில்
பல்கலை வல்லானுகி, இன்னும் கற்கக்
கருதி அந்த ஆங்கிலநாடு ஏக, அங்குக்
கண்ணெதிரே நகை காட்டிக் கருத்திற் பாய்ந்த
திருநுதலைச் சுதந்திர நற்றெய்வந் தன்னைச்
செங்கைகள் கூப்பித் தன் தெய்வ நாட்டை
ஒரு நொடியில் விடுவிப்பேன், ஒன்றும் வேண்டேன்,
உறுவன வந்துறுக எனும் உணர்ச்சியாலே
காய் தன்னை விபந்து கனி வெறுப்போராகும்
கடும் பகையால் கண்டதுயர் கொஞ்சமன்று.
தாய்நாடு திரும்பிவரும் போதில் அந்தச்
சமுத்திரத்துக் கப்பலில் ஓர் சமுத்திரம் போல்
பாயுந்தன் எண்ணங்கள் முன்னும் தோள்கள்
பாரதத்திற் பின்னருமாய்த் தொடர வந்து
காயத்தை நற்பொருளை உயிரை நாட்டின்
சதிக்களித்தோன் கதி நினைத்துக் கலங்காருண்டோ?
நன்னுட்டிற்கு அவன் தொண்டு பெரிது; வேரில்
அன்புடையது; இருள் கொண்ட நெஞ்சந் தன்னில்
அணை கடந்த வெள்ளம்போல் தேசபக்தி
நன்று வளர்விப்பது: நாம் என் செய்வோமால்!
நலம் விளைவிக்கும் கற்பகத்தைப் புது நினைப்புக்
குன்றத்தைக் குன்றஞ்சார் குளிர்புனல் தான்
கொண்டதுவோ! பகைவருளம் குளிர்ந்ததேயோ!

["தினமணி கதிர் 1-4-66-ல் இருந்து எடுத்தது.]

28—7—1966 தில்லித் தமிழ்ச் சங்கத்தின் சரித்திரத்தில் பொன்னால் பொறிக்கவேண்டிய நாள்,

இம்மே படத்தில், தமிழ் நாடு அரசாங்கத்தின் முதலமைச்சர் உயர்திரு எம். பக்தவத்சலம் ஒரு லட்ச ரூபாய்க்குக் காசோலை சங்கத் தலைவர் திரு. கே. வி வெங்கடாசலத்திடம் கொடுக்கிறார். உவகையுடன் அருகி லிருப்பவர்கள் மத்திய அரசாங்க அமைச்சர்கள் உயர்திரு. ஸி. ஆர். பட்டாபிராமனும், ஓ. வி. அளகேசனும்.




திறமைக்கு ஒரு கொடை

தமிழ்ச்சங்கக் கட்டிட நிதிக்கு ரூ ஒந இலட்சம் கொடையளித்துப் பேசுகையில் "தமிழ்ச் சங்கத்தின் ஆற்றலில் எனக்கு மிகவும் நம்பிக்கை இருப்பதாலேயே அவர்கள் கேட்டவுடன் இத்தொகை அளிக்கப்படுகிறது" என்று பக்தவத்சலம் கூறினார். கூடிய விரைவில் கட்டடத்தை எழுப்பித் தமிழரின் பெருமையும் தலைநகரில் சங்கம் ஓங்கச் செய்ய வேண்டும் இந்தப் பணி முடியும் வரை ஓயுதல் என்பது மறந்து விடக்கூடிய ஒன்றாகவே இருத்தல் வேண்டும். நம்பிக்கைக்குப் பாத்திரமாகும் நாங்கள் எங்கள் கடமையைச் செய்வோம் என்ற செயலாளர் உறுதிமொழியும் அன்றே முதல்வரிடம் கூறப் பட்டது. —சுதேசமித்திரன் ஆகஸ்ட் 9-10-1966.

# கவிஞரின் மறைவு

திரு கி. அரங்கசாமி

1964–ஏப்ரல் 10-ம் நாள் என்னை உடனே சென்னை வரும்படி எழுதினார் கவிஞர். நானும் உடனே சென்னை சென்று அங்கு தமிழ்ப் பணி ஆற்றிவரும் என் இளைய மகன் தயாநந்தனை அழைத்துக் கொண்டு அவரை சந்தித்தேன். சென்னை தியாகராய நகரில் இராமன் தெரு, 10-ம் எண்ணுள்ள இல்லத்தில் மாமர நிழலில் அழகிய சித்திரக் கூடக் கட்டிலில் கப்பிரத்தோடு சாய்ந்து கொண்டுள்ள நிலையில் என்னை வரவேற்றார் கவிஞர்.

என் மகன் சினிமாக் கதை எழுதும் விருப்பமுடையவனாதலின், அவனிடம் மகாகவி பாரதியார் கதையைக் காட்டி விரைவில். படமாக வெளிவர இருக்கிறது அரசாங்க உதவியும் கிடைத்துவிட்டது என்று மகிழ்ச்சியுடன் பேசிக் கொண்டிருந்தார். கவிஞர் இயக்கம் வளரும் முறையில் பல திறவழிகளைப் பேசி பொருள் சேர்க்கும் வழிகளையும் பேசினோம்.

ஒரு வாரத்திற்குள் சென்னையில் கவிஞர்கள் கூட்டம் ஒன்று சிறப்பாக நடத்தும்படி அவர் கூறினார். அதன்படியே கவிஞர் கூட்டத்தை சிறப்பாகவே நடத்தத் திட்டமிட்டு புலவர் மயிலை சிவமுத்து, பன்மொழிப் புலவர் அப்பாத்துரை, அ. சிதம்பரநாதஞ்செட்டியார், மு. வரதராசனார், போன்ற பலரையும் சந்தித்து நாள் உறுதி செய்து கவிஞர் குழுவைக்கூட்ட ஏற்பாடு செய்தேன்.

அந்த சமயம் கவிஞருக்கு உடல் நலம் சீர்கெட்டது 19-4-64 ல் அரசாங்க மருத்துவமனையில் அவரைச் சேர்த்தோம். 20-4-64 இல் சற்று மயக்கம் அதிகரித்தது. குமட்டலும் இருந்தது. உடனே செய்தித் தாளுக்கு செய்தி தந்தோம். தலைவர்கள் பலர் வந்து கவிஞரைக் கண்டு மகிழ்ச்சி ஊட்டினார்கள். டாக்டர்கள் அடுத்தடுத்து கண்காணித்து வந்தார்கள் என்றாலும் உள்ளுக்குள் தாங்கமுடியாத ஒரு நெஞ்சு வலி தொல்லை கொடுப்பதாககூறிக் கொண்டிருந்தார். பேசாமலும் அசையமலும் இருக்க டாக்டர்கள் எச்சரித்தும் அவரால் அமைதி காக்க முடியவில்லை.

எழுச்சியும் உணர்ச்சியும் மிகையாகி என்னுடன் பேசிக்கொண்டே



பாவேந்தர் இறுதி யாத்திரை — 22 - 4 - 1966

இருந்தார். அவர் சும்மா இருக்க நான் பல கருத்துக்களைக் கூறி அவர் எண்ணத்தை அமைதிபடுத்தினேன். என்றாலும் நிறைவான அமைதிக்கு அவர் உணர்ச்சி விடவில்லை. “வா, வீட்டுக்குப்போவோம் உடல் நன்றாகஇருக்கிறது. பொறுப்பற்ற மருத்துவர், சரிவர பணி நடைபெறவில்லை.” என்றார். நர்சுகள் அவரிடம் பேசுவதைத் தடுத்து என்னை தூரம் இருங்கள் என்றார்கள். கவிஞர் தடுத்து, என்னைவிட நீங்கள் மருத்துவம் கற்றுவிட்டீர்களா? நான் சொல்வதைக் கூர்ந்து கவனியுங்கள் அவர் பேசுவதால் தான் நான் சும்மா இருக்கிறேன். அவரை நீங்கள் தடுத்தால் நானே பேசுவேன், தடுத்து நிறுத்த நீங்கள் யார்?” என்றார். இப்படிப் பகல் இரவு கழிந்தது.

21–4–66 காலை நேரம் கவிஞரின் மகன் மன்னர்மன்னன், மருமகள் குழந்தைகள் வந்தனர். அளவளாவி மகிழ்ச்சியுடன் பேசினார்கள். நண்பர்களும் பலர் சூழ்ந்தனர். கவிஞர் ஏதோ சொல்ல வாயைத் திறந்தார். திறந்த வாயை நாங்கள் பிடித்து மூடினோம். உயிர் நின்றுவிட்டது.

உடல் வாட்டமோ முகமாற்றமோ ஒரு சிறிதுமின்றி தெளிவாகவே இருந்தது. *



புதுவை நகராட்சியினர் எழுப்பியிருக்கும்
பாரதிதாசன் நினைவு மண்டபம்

தமிழகத்திற்கு நம்பகமானதொரு
சரக்குப்போக்குவரத்து
நிறுவனம்

★




**ABT பார்சல் சர்வீஸ்**

(Prop: ஆனைமலைஸ் பஸ் டிரான்ஸ்போர்ட் பிரைவேட் லிமிடெட், பொள்ளாச்சி.)

டாக்டர் நஞ்சப்பா ரோடு, **கோயமுத்தூர்-1**



தந்தி: 'சஞ்சீவி' போன்: 3366 (3 லைன்)

கூடா ABT/OSR

# தில்லித் தமிழ்ச் சங்கம்

## 1966–ஆம் ஆண்டுச் செயற்குழு

★

| | |
|---|---|
| தலைவர் : | திரு. கே. வி. வேங்கடாசலம் |
| துணைத்தலைவர் : | ,, சிங்கார சுந்தரம் |
| நிருவாகத் துணைத்தலைவர் : | ,, ஆர். ரங்கராஜன் |
| பொதுச் செயலாளர் : | ,, சாலை இளந்திரையன் |
| இணைச் செயலாளர் : | ,, ஆர். எஸ். வேங்கடேசன் |
| பொருளாளர் : | ,, எஸ். குருசாமி |
| வட்டாரச் செயலாளர்கள் : | ,, சேது கிருஷ்ணமூர்த்தி (கரோல்பாக்) |
| | ,, பி. என். எஸ். மணியன் (விநயநகர்) |
| | ,, ஏ. என். நாகராசன் (லோதி ரோடு) |
| | ,, எம். பாலசுப்பிரமணியன் (இராமகிருஷ்ணபுரம்) |
| | ,, ஆர். விசுவநாதன் (மோதிபாக்) |
| உறுப்பினர்கள் : | ,, எஸ். சீனிவாசன் |
| | ,, தி. வை. நாராயணசாமி |
| | ,, ஜீவன்ராவ் |
| | ,, வே. பார்த்தசாரதி |
| | திருமதி இந்திராணி |
| நூலகர்கள் : | திரு. சி. என். ரங்கநாதன் |
| | ,, கே. ரகுநாதன் |
| | ,, எஸ். சுப்பிரமணியன் |
| | ,, ஆர். ஆர். சாரி |
| தணிக்கையாளர்கள் : | ,, எஸ். எஸ். வெங்கட்ராமன் |
| | ,, கே. கே. சுந்தரமூர்த்தி |
| ஆராய்ச்சி அரங்க அமைப்பாளர் : | ,, டாக்டர் க. ஆறுமுகம் |
| 'சுடர்' நிர்வாக ஆசிரியர் : | ,, தி. கோ. அனந்தசுவாமி |

## தமிழ்ச்சங்கம்............

1. காலஞ் சென்ற தேசபக்தர், திரு. எஸ். சத்தியமூர்த்தி அவர்களுடைய நினைவாக ஓர் இலவச வாசகசாலையை நடத்துகிறது. தமிழ், இந்தி, ஆங்கிலம் முதலிய பல மொழி பத்திரிகைகளும் சஞ்சிகைகளும் இங்கு கிடைக்கும்.

2. வட இந்தியாவிலேயே மிகப் பெரியதோர் நூலகத்தை, நிறுவியிருக்கிறது. உறுப்பினர்களுடைய வசதிக்காக கரோல் பாகில் ஓர் கிளை நூலகத்தையும் விநயநகரில் ஓர் நூலகத்தையும் நிறுவி திறமையாக நடத்தி வருகிறது.

3. பொங்கல், புத்தாண்டு முதலிய தமிழர் திருவிழாக்களையும், சுதந்திர தினம், குடியரசு தினம், காந்தி ஜயந்தி, பாரதி திருநாள் முதலிய தேசியத் திருவிழாக்களையும் கொண்டாடுகிறது.

4. தில்லிக்கு அவ்வப்போது விஜயம் செய்யும் தமிழ் பிரமுகர்களுக்கும் புலவர்களுக்கும் உபசரிப்பு அளிக்கிறது.

5. சுடர் என்றதோர் மலரை ஆண்டுதோறும் வெளியிடுகிறது,

6. தமிழ் இலக்கிய வகுப்புகளை நடத்துகிறது.

7. தமிழ் கற்க விரும்பும் பிறமொழி மக்களுக்கு தமிழ் வகுப்பு நடத்துகிறது.

8. தில்லியிலுள்ள பிறமொழி இலக்கியச் சங்கங்களுடன் தொடர்பு கொண்டு செயலாற்றுகிறது.

9. தில்லிவாழ் தமிழ்மக்களுக்கு சிறந்த தமிழ் நூல்களை வழங்குவதற்காக விற்பனைப் பிரிவு ஒன்றை நிர்வகிக்கிறது.

10. இலக்கிய நூல்களை அவ்வப்போது வெளியிடுகிறது. Kamba Ramayanam—A Study, Maxims of Tiruvalluvar, Kamban's Sita ஆகியவை சங்கத்தின் வெளியீடுகள்.

11. அவ்வப்போது இசை நிகழ்ச்சிகள், நாடகங்கள், கதாகாலட்சேபம் முதலியவற்றை ஏற்பாடு செய்கிறது. இதனால் தமிழ் மக்கள் ஓரிடத்தில் கூடி கலந்துறவாடும் வாய்ப்பு கிடைக்கிறது.

12. தமிழ் இலக்கிய பண்பாடு இவை சம்பந்தமான தகவல்களை மத்திய அரசாங்கத்திற்கும், தில்லி பொதுமக்களுக்கும் வழங்கும் கேந்திரமாகக் திகழ்கிறது.

உறுப்பினர் கட்டணம் :

புரவலர் ரூ. **251/-** ஆயுள் சந்தா ரூ. **101/-** ஆண்டுச் சந்தா ரூ. **10/-**

# நன்றி

நமது சுடரின் 15-வது மலர் இது. இதை பாவேந்தர் பாரதிதாசனின் நினைவாக வெளியிடுவதில் மகிழ்ச்சி அடைகிறோம். புரட்சிக் கவிஞரைப் பற்றியும் அவரது கவிதைத் தொண்டு பற்றியும் பல பெருமக்கள் எழுதியுள்ளார்கள். தலைநகரிலும் தமிழகத்திலும் உள்ள எழுத்தாளர்களின் வேறு சில படைப்புக்களையும் மலரில் சேர்த்திருக்கிறோம்.

செயற்குழு உறுப்பினர்களும் மற்றுஞ் சில அன்பர்களும் மலருக்கு விளம்பரங்கள் சேகரிப்பதில் தீவிரமாக உழைத்தார்கள். பல நிறுவனத்தினரும் வழக்கம்போல் விளம்பரங்கள் தந்து உதவியுள்ளார்கள்.

மலரில் இடம்பெற்றுள்ள படங்கள் பலவற்றைக் கவிஞரின் குமாரர், திருவாளர் மன்னர்மன்னன் அவர்கள் அன்புடன் கொடுத்து உதவினார்கள். மேலப்பாதி, திரு. வி. க. நூல் நிலையச் செயலாளர் திரு க. பாலகிருட்டிணன் அவர்கள் பாவேந்தரைப் பற்றிய பல அரிய செய்திகளைச் சேகரித்து அனுப்பி உதவினார்கள்.

திரு. தி. கோ. அனந்தசாமி அவர்களும் திரு. ஜம்புநாதன் அவர்களும் சுடருக்கான வேலைகளைச் சென்னையில் கவனிக்க, மலரைச் சிறப்பாக அச்சிட்டுத் தந்தவர் மைலாப்பூர் 'ஆர்ஜி' அச்சகத்தார்.

சுடர் வெளியீடு தில்லித் தமிழ்ச் சங்கத்தின் பணிகளிலே முக்கியமான ஒன்று. அதிலே துணைநின்று உதவிய அன்பர்கள் அனைவருக்கும் எங்கள் உளங்கனிந்த நன்றியையும் நல்வாழ்த்துக்களையும் தெரிவித்துக் கொள்கிறோம்.

13825
மகாமகோபாத்தியாய
டாக்டர். உ. வே. சாமிநாதையர்
நூல் நிலையம்,
சென்னை - 600090.

செயற்குழு,
தில்லித் தமிழ்ச் சங்கம்.

Edited and Published by Sri T. G. Anantaswami, for Delhi Tamil Sangam, New Delhi, Printed by Arjee Printers, Mylapore, Madras.

# ALL UNDER ONE ROOF

★

TEA

COAL

GLUE

FLOUR

YEAST

PAINTS

GUNNIES

AGENCIES

SHIPPING

STEATITE

TINPLATES

INSURANCE

FERTILISERS

AGRICULTURAL SPRAYERS

INSECTICIDES & AGROCHEMICALS

★

## SHAW WALLACE AND COMPANY LIMITED

CALCUTTA ★ BOMBAY ★ MA

NEW DELHI

# THE INDIAN ALUMINIUM CABLES LIMITED

F-40, N. D. S. E. (PART-1)

**NEW DELHI-3**

★

***Leading Manufacturers of :***

ALUMINIUM CABLES, STEEL REINFORCED CONDUCTORS AND ALL ALUMINIUM CONDUCTORS USED IN POWER TRANSMISSION LINES FOR RURAL AND URBAN ELECTRIFICATION PURPOSES.

***Playing its humble part towards the prosperity of the Nation.***

★

WORKS

DELHI-MATHURA ROAD,
12/1-MILESTONE,
AURANGPUR,
**FARIDABAD** (PUNJAB)

G. T. ROAD,
7/1-MILESTONE,
**GHAZIABAD** (U. P.)

★

...NIKKISAN

PHONES : 74291-92-93
( 3 Lines )


...INTERS. 126. R. H. ROAD. MADRAS 4.